வைதீகம் / சங்க காலம் ஒரு வரலாற்றுப் பார்வை



முனைவர் வி. தமிழ்மொழி

M.A., M.A., M.Phil., Ph.D.,

தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

வைதீகம் / சங்க காலம்
ஒரு வரலாற்றுப் பார்வை

முனைவர் வி. தமிழ்மொழி M.A., M.A., M.Phil.,Ph.D.,

உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
கிருஷ்ணசாமி மகளிர் அறிவியல் கலை மற்றும்
வேலாண்மையியல் கல்லூரி - கடலூர்.

புதுவை அரசு கலைப் பண்பாட்டுத் துறையின்
நிதியுதவியுடன் இந்நூல் வெளியிடப்படுகிறது.

தமிழ்நெஞ்சம்
59, rue des Entrechats , 95800 Cergy - France

நூல் விபரம்

தலைப்பு	: வைதீகம் / சங்க காலம்: ஒரு வரலாற்றுப் பார்வை
வகை	: ஆய்வு நூல்
ஆசிரியர்	: முனைவர் வி. தமிழ்மொழி
முகவரி	: எண். 67, மெயின் ரோடு அரும்பார்த்தபுரம் & அஞ்சல் புதுச்சேரி - 605 110
கைபேசி	: 9791564685
உரிமை	: ஆசிரியருக்கு
முதற்பதிப்பு	: ஜனவரி 2019
பக்கங்கள்	: 144
தாள்	: மெப்லித்தோ
அளவு	: டெம்மி 1/8
வெளியீடு	: தமிழ்நெஞ்சம் பதிப்பகம் 59, rue des entrechats, 95800 Cergy France
விலை	: 120 /-

வாழ்த்துரை

தமிழ் வாழ்வின் வாக்குமூலம் தமிழ்மொழி

முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி,

துணையாசிரியர்

தமிழ்நெஞ்சம் பதிப்பகம்

புதுச்சேரி.

சங்ககாலம் இனக்குழுச் சமூகத்தின் எச்சங்களையும் நிலவுடைமை சமூகத்தின் எழுச்சியினையும் தாங்கி வந்த காலம். அக்காலத்தில் தமிழகத்திலும் பிறப்பகுதிகளிலும் மக்கள் வாழ்க்கை பல்விதமான சமய,தத்துவார்த்தக் கோட்பாடுகளைக் கொண்டதாக விளங்கியது. சமணம் ,பௌத்தம் போன்ற பிற சமயங்களோடு வைதீகம் மக்களிடம் எங்ஙனம் வந்தடைந்தது என்பதை வரலாற்றுப் பூர்வமான ஆய்வை மேற்கொண்டுள்ளார் இந்நூலாசிரியர்.

தமிழ்மொழி தனித்துவமிக்கதொரு ஆய்வை மேற்கொண்டுள்ளார் என்றே சொல்லத் தோன்றுகிறது. "வைதீகம் / சங்க காலம் ஒரு வரலாற்றுப் பார்வை" எனும் தலைப்பிலான இவ்வாய்வு பண்டைத் தமிழகத்தின் தமிழரின் வாழ்வை எங்ஙனம் தலைகீழாக்கிப் போட்டிருக்கிறது என்பதை எடுத்தியம்புகிறது.

திணைக்குடிகளான தமிழ் மண்ணும் மக்களும் அரசர்களும் வைதீக மரபால், சமூகப் பொருளாதார மாற்றத்தையும், வழிபாட்டு முறைகளில் வழிபடு கடவுளர்களில், பண்பாட்டு இயங்கியலில் பெரும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டதன் விளைவுகளைத் தெளிவுறுத்துகின்றன. இக்கருத்துக்கள் மிக வலுவாக காலத்தின், அரசமைப்புகளின் படிநிலைகளில் ஒழுங்கமைவு செய்யப்பட்டு திடத்தன்மையோடு கொடுக்கப்பட்டுள்ளன.

தாய்த்தலைமை சமூகமாக விளங்கிய தமிழ்ச்சமூகம் மெல்ல மெல்ல, வளர்ந்து நிலவுடைமை சமூகமாக மாறியபோது, பெண்களின் நிலையிலும் பெரும் மாறுதல் ஏற்பட்டது. ஆம் ஆணுக்கு இணையாக

வாழ்ந்த பெண் வாழ்வு பின்னுக்குத் தள்ளப்பட்டது. அதுவும் வேத, வைதீக நெறிகள், பெண்கள் சமூகத்தில் உடைமைப் பொருளாகக் கருதும் மனோபாவத்தை வளர்த்தது. ஒருகட்டத்தில் மனுஸ்மிருதி காலத்தில் பெண்கள் வைதீக இலக்கியங்களைக் கற்றுக்கொள்ளக் கூடாது எனும் நிலையில் வாழ வேண்டி வந்தது. அது இன்றுவரை இலைமறைக் காயாகப் பின்தொடர்ந்து வந்து பெண்களை இரண்டாந்தர குடிமக்களாக ஆக்கி வைத்திருக்கும் பெருங்கொடுமை நிகழ்தேறியது என்றால் மிகையில்லை.

தமிழ்மொழி சிறந்த தமிழ்ப் புலவர்; தமிழ்மீது பற்றுக்கொண்டவர்; தேர்ந்த இலக்கியவாதி. தமிழ்த்தாய்க்குத் தானும் ஒர் அணிகலனை உருவாக்க முனைந்துள்ளார். அவரின் அரிய முயற்சியை ஆன்றோர் பெருமக்கள் போற்றவும், ஆய்வுள்ளம் கொண்டோர் பாராட்டவும் செய்ய விழைகிறேன். தமிழ்மொழி இவை போன்ற ஆய்வினைத் தொடர்ந்து நிகழ்த்தவும் தமிழ்த் தாய்க்கு அணி செய்யவும் மனமாறப் பாராட்டுகிறேன்.

முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி,

புதுச்சேரி.

21.1. 2019

முன்னுரை

நான்கு வேத நெறிப்படி நடப்பதே ‘வைதீகம்’ எனப்படும். நான்கு வேதத்தை ஏற்று அவற்றின் அடிப்படையில் உள்ள மதம் ‘வைதீக மதம்’ ஆகும். இது வடமேற்கு இந்திய கங்கைச் சமவெளியில் தோன்றியதாகும். மாந்தர் பிறந்தது முதல் இறக்கும் வரை செய்ய வேண்டிய கடமைகளையும் கர்மாக்களையும் (ஆசார, அனுஷ்டானங்கள்) வேதம் விதித்துள்ளது. அக்கடமைகளும் கர்மாக்களும் அவரவர் பிறப்பிற்கு ஏற்ப வேதத்தில் கூறப்பட்டுள்ளது. இக்கடமைகளையும் கர்மாக்களையும் உள்ளடக்கிய தருமம் ‘வைதீக தருமம்’ எனப்படும். வேதம் ஓதி, வேதத்திலும் அதன் வழி உருவான சாத்திரங்களிலும் கூறப்பட்டுள்ள ஆசாரத்தைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள் ‘வைதீகர்’ எனப்படுவர்.

வைதீகம் நான்கு வேதத்தையும், நான்கு வருணம் மற்றும் நான்கு ஆசிரமத்தையும், பல்வேறு யாகங்களையும், கடவுளர்களையும், பிராமண புரோகிதர்களையும் அடிப்படையாகக் கொண்டதாகும். வைதீகத்தின் அடிப்படை வேதமும் யாகமும்; அதன் அமைப்பு ஏற்றத்தாழ்வை அடிப்படையாகக் கொண்டது.

வைதீகம், சங்க காலத்து ஆளும் தமிழர் சமூகத்தோடு இரண்டறக் கலந்துவிட்டது. அச்சமூகம் பற்றிய தமிழ் இலக்கியங்களில் வைதீகத் தாக்கத்திற்கான பதிவுகள் பெருமளவில் காணப்படுகின்றன.

இனக்குழுச் சமுதாயம் அழிந்து நிலவுடைமைச் சமுதாயம் தோன்றிய நிலையில் ஒரு புறத்தில் உபரி உற்பத்தியால் வேளாண் பொருளாதாரமும்; இலாபத்தால் வணிகமும் பெருகிய சூழலில் உடைமைப் பாதுகாப்பிற்கான அரசும் அரசனும் உருவாயினர். இச்சூழலில், வைதீகமும் எல்லா நிலைகளிலும் தலைமை பூண்ட அதன் பிராமணியமும் வேந்தர்களோடு மிக அணுக்கமாய் உறவாடினர். அவர்களிடம் வேள்வி வேட்டலை வலியுறுத்தி வேள்விகள் பல செய்தனர். இனக்குழு மக்களின், பல்வேறு சமுதாயப் பிரிவினரின் வழிபாட்டு நெறிகளை எல்லாம் ஒரு தெய்வ, பெருந்தெய்வ வழிபாட்டுக்குள் கொணர முனைந்தனர். உடைமை நாகரிகத்தின்

கருத்தியலாகச் சங்க கால வேந்தர் சமுதாயத்தில் வைதீகம் வினைபுரியத் தொடங்கிற்று .

வைதீகத் தாக்கத்தின் பரவலுக்கான அரசியல் பொருளாதார மாற்றங்கள், அவற்றிற்குத் துணைநின்ற மூவேந்தர் அரசுகள், சங்ககாலத் தமிழகத்தின் வட அரசியல் எல்லை, மூவேந்தர்களின் அரசியல் வரலாறு, மூவேந்தர் அரசு தனித்த ஒற்றைப் பேரரசாக மாறாத நிலை ஆகியனவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. வடக்கிலிருந்த மகதப் பேரரசு (மௌரிய அசோக ஆட்சிக்குப் பின்) சுங்க வம்சத்தின் வைதீக சக்திகளின் ஆதிக்கமாகத் திகழ்ந்ததும், சமண-பௌத்த மதங்களின் ஆதிக்கம் முடிவடைந்ததும், வைதீக சாஸ்திரங்களின் எழுச்சிகளும், இதிகாசம், அவதாரப் புராணங்கள் இவற்றின் ஆதிக்கமும், கடவுளுக்கு அடுத்த படியாகப் பிராமணர்களுக்குத் தலைமையிடம் தோன்றியதும், சைவ, வைணவ சமயங்களின் மேல்நிலையும், வைதீக ஆதரவாளர்களான சாதவாஹனர் ஆதிக்கமும் வைதீகத் தாக்கத்தின் பரவலுக்கான வரலாற்றுக் காரணங்களாகத் தக்க சான்றுகளுடன் விளக்கமாக ஆராயப்பட்டுள்ளன. ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளின் அரசியல் -பொருளாதார பண்பாட்டுச் சூழல்களின் தாக்கம் இந்நூலின் கவனத்திற்குரியதாகிறது.

இந்நூலின் கண்ணுள்ள பொருண்மை எனது முனைவர் பட்ட ஆய்வேட்டிலிருந்து பெறப்பட்டு விரிவாக்கப்பட்டவை.அந்த ஆய்வில் என்னை நெறிப்படுத்திய காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையத் தமிழ்துறைப் பேராசிரியர் முனைவர் (திருமதி) க. பரிமளம், தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சூ.ராஜ்கௌதமன் ஐயா மற்றும் பேராசிரியப் பெருமக்களுக்கும் காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையத்திற்கும் எனது நன்றிகள்.

இந்நூல் வெளிவர காரணமாயுள்ளவர் முனைவர் ஆசிரியர் (திருமதி) பெண்ணியம் செல்வக்குமாரி அவர்கள். தமிழ் நெஞ்சம் பதிப்பகத்தின் துணை ஆசிரியராக மட்டுமின்றி வாழ்த்துரை நல்கியதோடு தோழமையுடன் பல உதவிகள் செய்த பண்பு அவருடைய சிறப்பியல்பு. அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். இந்த நூலாக்கத்தில் பங்குபெரும் ஒளியச்சு செய்து தந்த சு. சிவக்குமார் ஐயா அவர்களுக்கும் அச்சகத்தார்க்கும் ஊழியர்கட்கும் எனது நன்றிகள். சிறந்த முறையில் இந்நூலை வெளியிடும் தமிழ் நெஞ்சம் பதிப்பகத்தார்க்கும் என் நன்றிகள் பற்பல.

கல்லூரி ஆசிரியப் பணிகளுக்கும் வீட்டுப் பணிகளுக்கும் இடையில் ஒரு பெண்ணாக ஆய்வுப் பணிகளைச் செய்வது என்பது

எனக்கு அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. பல போராட்டங்களுக்கு மத்தியில் இக்கனவு சாத்தியமாகி இருக்கிறது. எமது எழுத்துப் பணியை ஊக்குவித்து வளர்ச்சிப் பாதையில் தடம் பதிக்க வைத்த பெரும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய எம் கல்லூரி முதல்வர் முனைவர் (திருமதி) G. நிர்மலா அம்மா அவர்களுக்கு இத்தருணத்தில் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

தவறு நேர்ந்திடின் இடித்துரைத்து என்னை நல்வழிப்படுத்தியும் சோரும்போதெல்லாம் தட்டியெழுப்பி ஊன்றுகோலாய் நின்று என்னை வழிநடத்தும் என் நலன் விரும்பியும் எமது நட்பு பாராட்டலுக்கு உரியவருமான பேராசிரியர் முனைவர் (திருமதி) சீ. மாலினி அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றியை நவில்கின்றேன்.

இந்நூலை செம்மைப்படுத்துவதில் பல்லாற்றானும் துணைநின்று எனக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்த என் கணவர் முனைவர் க. பாலதண்டாயுதம் மற்றும் என் மகள் பா. பாவகிக்கும் என் அன்பு. பொருளாதார உதவிகள் பல செய்து என்னைப் படிக்கத் தூண்டிய ராஜம் அத்தைக் குடும்பத்தார்க்கும் இவ்வமையத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

என்னை இப்படியாக இருக்கவிட்டுப் படிக்கவும் படித்ததை என் பாட்டுக்கு மீட்கவும் ஆய்வுக்குட்படுத்தவும் அனுமதிக்கும் - எனக்கான சுமைகளையும் சேர்த்து சுமக்கும் - எனை ஈன்றெடுத்து ஆளாக்கிய மண்ணில் வாழும் தெய்வங்களான தந்தையார் ஜெ.விஜயரங்கம் - தாயார் வி. கோகிலாம்பால் அவர்களுக்கு என்கோடான கோடி நன்றிகள் என்றும் உரித்தாகுக. இறுதியாக இந்த நூல் மீது ஆற்றல்சார் கருத்துக்களைக் கொண்டு வந்து சேர்க்கும் உங்களுக்கு நன்றிகளுடன்...

முனைவர் வி. தமிழ்மொழி

அரும்பார்த்தபுரம்.

என் பாசமிகு தந்தை, தாய்க்கு.....

இந்நூல்.......

சமர்ப்பணம்

பொருளடக்கம்

1. சங்ககால அரசுருவாக்கச் சூழல் 11

2. தமிழகத்தின் சங்ககால வட அரசியல் எல்லை 35

3. மூவேந்தர் அரசு ஒற்றைப் பேரரசாக மாறாமை 43

4. பாரதப் போரும் உணவு வழங்குதலும் 64

5. மூவேந்தரும் இமயமும் இலச்சினைப் பொறிப்பும் 79

6. வட இந்திய அரசியல் வரலாறு 87

7. மௌரியருக்கு முற்பட்ட வட இந்திய சமூக வரலாறு 95

8. மௌரியர் ஆட்சிக்காலச் சமூக வரலாறு 105

9. வடக்கிலிருந்த பேரரசுகள் - வைதீக சக்திகளின் ஆதிக்கம் 113

10. சாதவாஹனர்களின் ஆதிக்கம் (வைதீக ஆதரவாளர்கள்) 119

முடிவுரை 132

1. சங்ககால அரசுருவாக்கச் சூழல்

உலகின் மூத்த பண்பாடுகளில் ஒன்று இந்தியப் பண்பாடு. இது நான்காயிரத்து ஐந்நூறு (4500) ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பழைமை கொண்டது. சிந்துநதிப் பிரதேசத்தில் (இன்றைய பாகிஸ்தான் சார்ந்த பகுதிகளில்) நிகழ்ந்த அகழ்வாய்வுகளில், வெளிப்படுத்தப்பட்ட நகரங்களான 'மொஹஞ்சதாரோ', 'ஹரப்பா' முதலியன இப் பண்பாட்டின் பழைமைக்குச் சான்றாவன. நன்கு திட்டமிட்டுச் செழுமையுற அமைக்கப்பட்டனவாகப் புலப்படும் அந்நகரங்கள் கி.மு. எண்ணூற்றிலிருந்து கி.மு. எழுநூற்று ஐம்பதாம் ஆண்டுகட்கு முற்பட்ட தொன்மை வாய்ந்தவையாகக் கருதப்படுவன. அந்நகரங்களின் நாகரிகங்களை உருவாக்கியவர்களே இந்தியத் துணைக் கண்ட மண்ணின் தொல்குடிகள் என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்தாகும். இவர்களும் இவர்களைப் போன்று இம்மண்ணின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்திருந்த தொல்குடிகளும் கொண்டிருந்த பண்பாட்டுக் கோலங்களும், பிற்காலத்தில் இம்மண்ணில் அடியெடுத்து வைத்த ஆரியரின் பண்பாட்டுக் கூறுகளும் கலந்து உருவான ஒரு பண்பாட்டு வடிவத்தையே இன்று இந்தியப் பண்பாடு என்ற சுட்டாற் குறிப்பிடுகிறார்கள்.

ஆரியர்கள் கங்கைச் சமவெளியின் வடமேற்குப் பகுதியை அடைந்த காலத்தில் தொடங்கிய ஆரியமயமாக்கும் முயற்சி கி.பி. முதற் சில நூற்றாண்டுகள் கழியுங்வரை நடந்து வந்தது. விந்தியத்தைக் கடந்து தண்டகாரம் என்னும் பெருங்காட்டை ஊடுருவித் தென்னகம் அடைதற்கு ஆரியர்கள் செய்த முதல் முயற்சியை விளக்குகின்றது இராமாயணம் என்னும் இதிகாசம். வேதத்தின் ஒரு பகுதியான 'பிராம்மணங்கள்' காலத்திற்கு முன் ஆரியர் இலக்கியங்களில் தக்காணம், தென்னிந்தியா ஆகிய பகுதிகளைப் பற்றிய குறிப்புகள் காணகிடைக்கவில்லை. எனவே, கி.மு.1500-1000 ஆண்டுக்காலத்தின் இடைப் பகுதியில் பஞ்சாபை அடைந்த ஆரியர்கள் அங்குச்சில காலம் தங்கிவிட்டு, பிறகு கங்கைச் சமவெளியை அடைந்து, அங்கிருந்து பிற பகுதிகளிலும், தென்னிந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்திலும் பரவலாயினர் என்பது தெளிவாகும்.

இத்தகையதொரு சூழலில் தமிழ்ச் சமுதாயம், கி.மு.400 முதல் தொன்மையான இனக்குழு நிலையிலிருந்து நிலவுடைமையை நோக்கி மாற்றம் எய்திக் கொண்டிருந்தது. இக்காலக்கட்டத்தில் வட இந்திய அரசியற் சூழல் தொலை தூரத்திலுள்ள தமிழகத்தில் எவ்வித

குறிப்பிடத்தக்க தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. மாறாக, வட ஆரிய - வைதீகப் பண்பாட்டுக் கூறுகள் மட்டும் சிறிது சிறிதாகத் தமிழகத்துக்கு அறிமுகமாகிக் கொண்டிருந்தன.

தமிழர் பண்பாட்டில் வேதமரபின் வரவானது தெய்வ நம்பிக்கை, கிரியை முறைகள் என்பவற்றில் ஈடுபாட்டை அதிகரித்தது. வேத மரபு சார்ந்த வைதீக பிராமணர், வடநாட்டில் இனக்குழுக்கள் மத்தியில் நிலவிய பாரம்பரிய தெய்வநம்பிக்கை, வழிபாட்டு முறை என்பவற்றை வேதமரபுடன் பொருத்தமுற இணைக்க முயன்று வெற்றி பெற்றனர். அதே செயற்பாட்டைத் தமிழகத்திலும் அவர்கள் மேற்கொண்டனர். தமிழரின் பாரம்பரிய தெய்வங்களான முருகன், கொற்றவை ஆகியோர் முறையே புராண தெய்வங்களான ஸ்கந்தன், துர்க்கை ஆகியவர்களுடன் இணைத்துக் கருதப்படத் தொடங்கிய நிலை இதனை உணர்த்தும். இவ்வாறான சூழலில் வட ஆரிய வைதீக வருணாசிரம தர்மசிந்தனைகளும் படிப்படியாகத் தமிழகத்தில் செல்வாக்குப் பெறத் தொடங்கின. இவ்வாறு, வைதீகத் தாக்கத்தின் பரவலுக்கான செய்திகளை அவதானிப்பதற்கு, முதற்கண் இவை எழுவதற்குக் களமாயமைந்த அரசியல் - பொருளாதார - வரலாற்றுக் காரணங்களை நோக்குவது அவசியம். இவ்வகையில் வைதீகத் தாக்கத்தின் பரவலுக்கான அரசியல், பொருளாதார மாற்றங்கள் - அவற்றிற்குத் துணை நின்ற மூவேந்தர் அரசுகள் - சங்க காலத் தமிழகத்தின் வட அரசியல் எல்லை - மூவேந்தர்களின் அரசியல் வரலாறு - மூவேந்தர் அரசு ஒற்றைப் பேரரசாக மாறாமை - வடக்கிலிருந்த பேரரசுகள் - மௌரிய, அசோக ஆட்சிக்குப் பின் வைதீக சக்திகளின் ஆதிக்கம் ஆகியவற்றிலிருந்து தொடங்கி, சமண, பௌத்த ஆதிக்கம் முடிதல், வைதீக சாஸ்திர எழுச்சிகளின் ஆதிக்கம், கடவுளுக்கடுத்து பிராமணர்களுக்கு இருந்த தலைமையிடம், சைவ-வைணவ சமயங்களின் மேல்நிலை, வைதீக ஆதரவாளர்களான சாதவாஹனர் ஆதிக்கம் வரை ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளின் அரசியல்-பொருளாதார-பண்பாட்டுச் சூழல்களின் தாக்கம் இந்நூலின் கவனத்திற்குரியதாகிறது. இனி அவற்றை விரிவாகக் காணலாம்.

அ. தமிழக அரசியல் - பொருளாதார வரலாறு:

சங்ககாலம் ஒரு மாறுதல் நிலைக்காலம் என்பதால் பழைய இனக்குழுச் சமுதாய எச்சங்களையும் புதிய நிலவுடைமைச் சமுதாயத்தின் வளர்ச்சி நிலைகளையும் ஒருசேரக் காணமுடிகிறது. இனக்குழு சார்ந்த திணைநிலை மக்கள் வாழ்வோடு நகர, பட்டின வாழ்வையும் வெகுவாகக் காணமுடிகிறது. இனக்குழுச் சமுதாயத்

தலைமைகளை ஒருபுறத்தேயும் மறுபுறத்தே நிலவுடைமைச் சமுதாயப் பாதுகாப்பிற்கான அரசையும் அரசனையும் சங்கப்பாடல்கள் காட்டுகின்றன. அரசு தனக்குரிய இயல்புகளோடு உருவான காலமாகச் சங்ககாலம் உள்ளது. இன்மை - உடைமை இல்லோர் - உடைமையாளர்கள்; உழுதுண்போர் - உழுவித்துண்போர்; உழவு - கைத்தொழில்; ஆளுவோர் - ஆளப்படுவோர்; கலைஞர் - புலவர்; ஊர் - நகரம் என்னும் இருவேறு முரண்களுடன் சங்கச் சமூகம் நிலை கொள்ளத் தொடங்கியது. இவ்வகை இரு வேறுபட்ட சமூக அமைப்புகளுடன் அரசுக்குரிய படை, வேளாண் பெருக்கம், வருவாய், இலக்கிய உருவாக்கம், ஆட்சியாளர் என்னும் கூறுகளும் இருந்தன. இந்நிலையில், வைதீகத் தாக்கத்தின் பரவலுக்கான அரசியல் - பொருளாதார காரணங்களைச் சங்ககால அரசு உருவாக்கச் சூழலிலிருந்து விரிவாக இப்பகுதி ஆராய்கிறது.

I. அரசியல் - பொருளாதாரம்:

அந்தந்த நிலப்பகுதிகளோடு தம்மை இணைத்துக் கொண்டு வாழ்ந்த திணை நிலை மக்களின் வாழ்வை ஆற்றுப்படை பாடல்கள் விரிவாகக் காட்டியுள்ளன. குறிஞ்சியில் குறவர், குறத்தி, எயினர், எயிற்றியர்; முல்லையில் ஆயர் (இடையர், கோவலர்) ஆய்ச்சியர்; மருதத்தில் உழவர், உழத்தியர்; நெய்தலில் உமணர், உமட்டியர், பரதவர் என்னும் திணைமக்கள் வாழ்வு ஆற்றுப்படைகள், மதுரைக்காஞ்சி போன்றவற்றில் விரிவாகப் பாடப்பட்டுள்ளது. உழவு என்பது மையப்படுத்தப்பட்ட நிலையில் அரசு உருவான சூழலில் கைத்தொழில்கள் பல்கிப் பெருகின.

தச்சர், கொல்லர், குயவர், நெசவாளர், பருத்திப் பெண்டு, பொற்கொல்லர், செம்பு வினைஞர், மரவேலை செய்யும் கம்மியர் என்னும் பல்வேறு கைத்தொழிலாளரும் உடைமையாளர்க்குரிய பணியாளர்களாய் இருந்தார்கள்.[1] இவர்களோடு கட்டில் பின்னும் இழிசினன் (இழி பிறப்பாளன்), ஆடை வெளுப்போர் (காமியர் - வண்ணார்), புலைத்தி (துணி வெளுப்பவள்), பிணம் சுடும் புலையன், நீர் இறைக்கும் தொழுவர், நெல்லரியும் தொழுவர், உழவு வேலை செய்யும் கடைசியர், விறகு விற்போர், பாசவர் என்னும் ஆட்டு வணிகர், சாணை பிடிப்போர், எண்ணெய் ஆட்டும் செக்கர், சங்கை வளையலாக அறுப்போர், பொன்னை உரைத்துக் காணும் பொன் வணிகர், ஆடை விற்பவர், செம்பை நிறுத்துக் கொள்வோர், கச்சு முடிவோர், பூ சாந்து விற்போர், முத்து, சங்கு குளிப்போர், பூ சுண்ணம், வெற்றிலைப்பாக்கு போன்ற பண்டங்கள் விற்கும் பல்வேறு சிறு

வணிகர்கள் என்னும் பல்வேறு தொழிற் பிரிவினரையும் சங்கப்பாக்கள் காட்டுகின்றன.[2]

இத்தகைய பல்வேறு வினைஞர்களோடு பறையன், துடியன், பாணன், கடம்பன், கூத்தர், விறலியர், கட்டிடக் கலைஞர், ஓவியர் என்னும் பல்வேறு கலைஞர்களும் வாழ்ந்தார்கள்[3]. இவ்வாறு, சங்க கால நிலவுடைமைச் சமூகத் தோற்றம், சமூக மக்கள் பொருளாதார ஏற்றத் தாழ்வுடன் பல்வேறு தொழிற்பிரிவினராய்ப் பிரிந்து போவதற்குக் காரணமாய் இருந்தது. பொதுநிலையில் தமக்கெனத் தாமே உழைத்துக் கொண்ட இனக்குழுச் சமூக அமைப்பு மாறிப் பிறருக்கென உழைக்கும் நிலை ஏற்பட்டது.

உயர்ந்தோர், இழி பிறப்பாளர்; செல்வர், ஏழை எனச் சமூகம் வர்க்க வேறுபாடு உடைய சமூகமாக மாற்றம் அடைந்து போயிற்று. தொழில் ரீதியான இந்தப் பிரிவினைகளுடன் மேலோர் மூவர் எனப்பட்ட அந்தணர், அரசர், வணிகர் என்னும் இவர்களுடன் நிலவுடைமையாளரான உழுவித்துண்ணும் வேளாளர் இணைந்த நால்வருணச் சமூகமாகவும் சங்ககாலச் சமூகம் மாற்றம் அடைந்தது. அரசை மையமாகக் கொண்ட இந்த நால்வரைப் பற்றிய செய்திகள் தான் சங்கப்பாடல்களின் பாடுபொருட்களாய் உள்ளன. இத்தகைய பல்வேறுபட்ட சமூகப் பிரிவினைகள் பல்வேறுபட்ட படிநிலைகளைக் கொண்டு அமைந்தன. அன்றாட வாழ்வுக்காக உழைத்தோர், வாழ்வின் வளத்துக்காக வாழ்ந்தோர் எனச் சங்கச் சமூகம் இருவேறுபட்டதாக மாற்றம் அடைந்தது.

2. ஊர் - நகரம் - நாடு - மாற்றங்கள்:

குடி என்பது ‘சிறுகுடிப் பெருந்தொழுவர்’ (ம.கா.,122) என இருவேறு நிலைகளில் பாகுபடுத்தப்பட்டதைப் போல் ஊர் என்னும் பொதுப் பெயரும் சிற்றூர்[4], பேரூர்[5] என இரண்டாகப் பாகுபட்டுப் போனது. இந்தப் பேரூர்கள் பின்னர் நகரம் எனவும் பட்டினம் எனவும் பெயர் பெற்றன. ஆட்சியாளர்களும் ஊர் ஆண்டோர், பேரூர் அல்லது நகரம் ஆண்டோர் என வேறுபட்டனர். சீறூர் மன்னரும், முதுகுடி மன்னர்களும் ஊர் ஆண்டோராகவே காட்டப்பட்டுள்ளனர். சீறூர் மன்னரின் ஆட்சி எல்லை சீறூரைச் சார்ந்ததாகவே இருந்தது. ‘பருத்தி வேலிச் சீறூர்’, ‘சீறூர், ‘கரம்பைச் சீறூர்’, ‘அம்குடிச் சீறூர்’, ‘வன்புலச் சீறூர்’, ‘புன்புலச் சீறூர்’, சில்குடிச் சீறூர்’ எனச் சீறூர் எனவும் ‘பெருந்தகை ஊர்’, ‘நெடுந்தகை ஊர்’ என ஊர் எனவும் சீறூர்மன்னர் நிலப்பகுதி குறிப்பிடப்பட்டுள்ளது.[6]

இதைப் போலவே முதுகுடிமன்னர் ஆண்ட பகுதியும் ‘அருங்கடி மூதூர்’, ‘தண்பணை ஊர்’, ‘நெடுநல் ஊர்’, ‘வேர் துளங்கின நம் ஊருள் மரனே’, ‘அணங்கு ஆயினன் தான் பிறந்த ஊர்க்கு’, ‘கதுவாய் மூதூர்’, ‘பணைநல் ஊர்’, ‘ஊர் கவின் இழப்ப’, என ஊர் எனவே குறிப்பிடப்பட்டுள்ளது.[7] இவர்கள் ஆண்ட இடமும், வாழ்ந்த இடமும் நகர் என்னும் பெயரால் குறிப்பிடப்பெறவில்லை. ஊர், நகர் என்னும் இரண்டும் வேறுபாடு உடையனவாக ஆளப்பட்டதை,

பழனக் கம்புள் பயிர்ப்பெடை அகவும்
கழனி ஊர! நின் மொழிவல் என்றும்
துஞ்சு மனை நெடுநகர் வருதி[8]

என்றும்,

அன்னையும் அறிந்தனள் அலரும் ஆயின்று
நல்மனை நெடுநகர் புலம்புகொள உறுதரும்
இன்னா வாடையும் மலையும்
நும் ஊர்ச் செல்கம் எழுகமோ? - தெய்யோ[9]

என்றும் வரும் பாடலடிகளால் தெளியலாம். வேந்தரின் தலைமை இடங்கள் நகர் என்னும் பெயராலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்கு,

பொன்னுடை நெடுநகர்ப் பொதினி[10]

நல்நகர் மரந்தை[11]

நாடு பலதந்த பசும்பூட் பாண்டியன்
பொன்மலி நெடுநகர்க் கூடல்[12]

கடும்பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை
திருமா வியனகர் கருவூர் முன்றுறை[13]

பூதங் காக்கும் புகலருங் கடிநகர்[14]

நான் மாடக் கூடல் நகர்[15]

எனவரும் பாடலடிகள் சான்றாகின்றன.

மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்[16]

விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்[17]

எனச் சில இடங்களில் மதுரையும், கச்சியும் மூதூர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. கடற்கரை சார்ந்த நகரங்கள் பட்டினங்கள் எனப்பட்டன. இதற்குப் பின்வரும் பாடலடிகள் சான்றாகின்றன:

.... மதிலொடு பெயரிய
பனி நீர்ப் படுவின் பட்டினம்[18]

.... பொலம் பூண்கிள்ளி
பூவிரி நெடுங்கழி நாப்பண் பெரும்பெயர்க்
காவிரி படப்பைப் பட்டினம்[19]

முத்தவார் மணல் பொற்கழங்கு ஆடும்
பட்டின மருங்கு.......[20]

இந்நகரங்கள் அரசின் முக்கியமான மையங்களாக, பொருளாதார மூலங்களாக மாறின. நிலக்கொடை பெற்ற வீரர்களும் சீறூரைக் கொடையாகப் பெற மறுத்ததைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இந்நிலையில் மூவேந்தர்களில் சேரர் முசிறி (பட்டினம்), வஞ்சி (கருவூர்) ஆகியவற்றையும், சோழர் புகார் (பட்டினம்), உறையூர் ஆகியவற்றையும், பாண்டியர் கொற்கை (பட்டினம்), மதுரை ஆகியவற்றையும் மையங்களாகக் கொண்டு ஆண்டனர். நிலக்கொடை பெற விழைந்த வீரர்களும் சீறூரைப் பெற மறுத்த நிலையில் பொருளாதாரப் பெருக்கத்திற்கு மூலாதாரமான மருத ஊர்களே சிறப்பைப் பெற்றிருந்தன.

சிறுசிறு ஊர்களை ஆண்ட நிலைமைகள் மாறிப் படையெடுத்து பல்வேறு ஊர்களையும் கவர்ந்து ஆளும் நிலைகள் உருவாயின. மன்னர்கள் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி, கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை எனக் குறிப்பிட்ட ஊரால் சிறப்புற்ற நிலைகள் மாறிச் 'சோணாட்டு அண்ணல்' (புற.,337:1), சோழ நாட்டு பொருநன்' (புற.,382:3) என நாட்டை முதன்மைப்படுத்தி அழைக்கப்பெற்றனர். சீறூர் மன்னரும், முதுகுடி மன்னரும் ஆண்ட நிலப்பகுதிகள் ஊர்களாய் மட்டுமே இருந்த நிலையில் அவை நாடு என அழைக்கப் பெறவில்லை. மாறாக, குறுநில மன்னரும் மூவேந்தரும் ஆண்ட நிலப்பகுதிகளே நாடு என்று அழைக்கப்பட்டுள்ளன.

கடற் பல் தாரத்த நாடு கிழவோயே[21]

மென் புல வைப்பின் நல் நாட்டுப் பொருந![22]

பூத்தன்று பெரும நீகாத்த நாடே[23]

என வேந்தர் ஆண்ட நிலப்பகுதி நாடு என அழைக்கப்பட்டதைப் போல்,

பெருங்கல் நாடன் பேகன்[24]

நளிமலை நாடன் நள்ளி[25]

முந்நூறு ஊர்த்தே தண் பறம்பு நல்நாடு[26]

பொருநரும் உளரோ, நும் அகன் தலை நாட்டு[27]

பெண்ணை அம் படப்பை நாடு கிழவோயே[28]

.... ஆஅய்! நின் நாட்டு
இளம் பிடி ஒருசூல் பத்து ஈனும்மோ?[29]

நாடு இழந்ததனினும் நனி இன்னாது[30]

எனக் குறுநிலமன்னர் (பேகன், நள்ளி, பாரி, அதியன், காரி, ஆய், குமணன்) ஆண்ட நிலப்பகுதி நாடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாகக் குறிஞ்சிநிலத் தலைவனைச் சுட்டும் ‘நாடன்’ என்னும் பெயர்[31] ‘நாட்டையுடையவன்’ என்னும் பொருளில் பெருநிலப் பகுதிகளை ஆண்ட மன்னரைக் குறிப்பிடும் பெயராய் மாற்றம் பெற்றது. ‘பெருங்கல் நாடன் பேகன்’ (சி.ஆ.,87), ‘தண் கடல் நாடன்’ (ம.கா.524), ‘செல்வரை நாடன்’ (பெ.ஆ.103), ‘கானக நாடன்’ (புற.,5:3), ‘மலை கெழு நாடன்’ (புற.,135:13), ‘வன் புல நாடன்’ (புற.,172:8), ‘வேங்கட நாடன்’ (புற.,381:22) என அரசர் நாடன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

முல்லை, குறிஞ்சி முதலான நிலப்பகுதிகள், அந்த நிலப் பகுதிகளில் வாழும் திணைநிலை மக்கள், அவர்களைப் பாதுகாக்கும் தலைமை என்னும் நிலையில் இருந்த சமூக அமைப்பு ஒரு புறம் தொடர்ந்தாலும், மறுபுறத்தே நானிலத் தலைமை என்னும் நிலை உருவானது. சீறூர் மன்னர் முல்லை நிலப் பகுதிகளிலும், முதுகுடி மன்னர் மருதநிலப் பகுதிகளிலும் இருந்த நிலைகளுக்கு மாறாக வேந்தர், குறுநிலமன்னர் நானிலத்தன்மை உடையவராக உயர்ந்தனர். இந்நான்கு நிலத் திணை வாழ் மக்களும் குறிப்பிட்டதொரு தலைமையின் கீழ் வந்ததை ஆற்றுப்படை இலக்கியங்களும், மதுரைக் காஞ்சியும் காட்டுகின்றன.

பெரும்பாணாற்றுப்படையில் பாலைக் கானவர் (106-117), குறிஞ்சி நில மக்கள் (134-146), முல்லை நிலக் கோவலர் (148-168), முல்லை நில உழுதுண்போர் (185-195), மருத உழவர் செயற்பாடு - உணவு (207-255), மருத வலைஞர் (263-282), மருதநில அந்தணர் (297-310), திமிலர் வாழும் பட்டினம் (320-336), பட்டின மக்கள் (337-345), தென்னந் தோப்புகளில் வாழும் தண்டலை உழவர் (352-362) எனப் பல்வேறு குடிகளின் - மக்களின் குடியிருப்புகள் பற்றிப் பேசப்பட்டுள்ளது. முல்லை, மருதம் போன்ற நிலப்பகுதியில் திணை

மக்களோடு வேறு பிற குடிகளும் இருந்தமை காட்டப்பட்டுள்ளது. "பிரதேசம் அப்படியே தான் இருந்தது. மக்கள்தான் அங்கேயும் இங்கேயும் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். எனவே, பிரதேசப்படி பிரிப்பது என்பது தொடக்க ஏற்பாடாகக் கொள்ளப்பட்டது. எங்கெல்லாம் பிரஜைகள் குடி தங்கினார்களோ அங்கு அவர்கள் தமது பொது உரிமைகளையும் கடமைகளையும் ஆற்ற அனுமதிக்கப் பட்டார்கள். எந்தக் காலம் எந்தக் குலம் என்று பார்க்கப்படவில்லை"32 என எங்கெல்ஸ் குறிப்பிட்டுள்ளதைப்போல் மருதம், நெய்தல் முதலான நிலப்பகுதிகள் பல்வேறு இனமக்கள் வாழும் நிலப்பகுதிகளாய் மாறின.

மதுரைக்காஞ்சியில், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் நாடு ஐவகைத் திணையும் அமைந்திருந்தமை பாடப்பட்டு நாட்டின் நடுவில் தலைநகராகிய மதுரை அமைந்திருந்தமை காட்டப்பட்டுள்ளது (328-331). மதுரை மாநகர் அமைப்பு, நாளங்காடி, நாளங்காடியில் பல்வேறு விலைஞர்கள் சுற்றித் திரிந்து விற்றல், செல்வர்களின் மாளிகை, பௌத்தப் பள்ளி, அந்தணப் பள்ளி, சமணப் பள்ளி, பல்வேறு தொழிலாளர் கூட்டம், பரத்தையர் வாழ்க்கை எனும் பலவும் விரிவாகப் பாடப்பட்டுள்ளன (393-589). இவ்வாறே, பட்டினப்பாலையில் பூம்புகார் நகரச்சிறப்பு பாடப்பட்டுள்ளது (29-59). பல்வேறு மொழிபேசும் மக்களும் கலந்து உறவாடிய நிலையும் காட்டப்பட்டுள்ளது (213-218). இவ்வாறு, ஆற்றுப்படை இலக்கியங்களும் பத்துப்பாட்டின் பிற பாடல்களும் நானிலப் பகுதிகளோடு பல்வேறு மக்களும் கலந்து வாழும் நகரை மையமாகக் கொண்ட நாடு என்னும் அமைப்பு உருவானதைக் காட்டுகின்றன.

2. மூவேந்தர் அரசும், சிற்றரசும்:

'வம்ப வேந்தன்' (வேந்தர்) (புற.,287:13.345:7) என அழைக்கப்பட்ட மூவேந்தர் கொடி, முடி, முரசு (புற.,38:3.35:4.75:12), வெண்கொற்றக் குடை (புற.,3:1.31:3.75:11), ஆணைச் சக்கரம் (புற.,3:4), பனம் பூ, வேப்பம் பூ, அத்திப் பூ என்னும் அடையாளப் பூக்கள் (புற.,45:1-3) என்னும் இவற்றை உடையவராகவும், ஏனைய குறுநில மன்னர்களைத் தம் கீழ்ப்படுத்தி ஆள முயன்றவராகவும்,

வேந்து மேம்பட்ட பூந்தார் மாற [33]

என மூவேந்தர்களுக்குள் மேம்பட்டவராகவும் உயரவிரும்பி,

சிறு சொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படே என் ஆயின்[34]

என எஞ்சிய இரு வேந்தர்களை அடக்கி ஆள விரும்பியவராகவும் காட்டப்பட்டுள்ளனர்.

சங்க காலத்தைப் பொறுத்த வரையில் மேல்நிலையில் இருந்த அரசர்கள் மூவேந்தர்களே. சில குறுநிலமன்னர்கள் இவர்களின் கீழிருந்து இவர்களுக்குக் கட்டுபட்டும் உதவி செய்தும் ஆண்டுள்ளனர். சான்றாக, மலையமான் திருமுடிக் காரி- மூவேந்தர்க்கும் உதவியாய் இருந்தவன் (புற.,122:5-7). நாஞ்சில் வள்ளுவன் - சேரர் கீழிருந்த சிற்றரசன் (புற.,139:11-12). ஏனாதி திருக்குட்டுவன் - சோழ நாட்டுக் குறுநில மன்னன் (புற.,167). பிட்டங்கொற்றன் - சேரமான் கோக்கோதை மார்பன் படைத்தலைவன் (புற.,172:8-11). சிறுகுடிகிழான் பண்ணன் - சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனுடன் நட்பு கொண்டவன் (புற.,70). மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் - சோழர்க்குத் துணையானவன் (புற.,174:14-16). பாண்டியன் கீரஞ்சாத்தன் - பாண்டியர் கீழிருந்த குறுநிலமன்னன் (புற.,178). நாலைகிழவன் நாகன்- பாண்டியர் கீழிருந்த குறுநிலமன்னன் (புற.,179:5). ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன் - சோழர்க்குத் துணை புரிந்தவன் (புற.,120). நம்பி நெடுஞ்செழியன் - பாண்டியர்க்கு உதவியவன் (புற.,239:10). மேற்கூறியவற்றிலிருந்து பல குறுநில மன்னர்கள் மூவேந்தர் கீழிருந்து ஆண்டு அவர்களுக்குத் துணையாக இருந்தார்கள் என்பது தெளிவாகிறது.

மூவேந்தர்களின் கீழ் இருந்து ஆண்டு அவர்களுக்கு உதவியாய் நண்பர்களாய் இருந்து பேருதவியாற்றிய இந்தக் குறுநில மன்னர்களைப் போலன்றி, மூவேந்தர்களுக்கு அடங்கியாண்டு அவர்களுக்குத் திறை செலுத்திய குறுநில மன்னர்களும் இருந்தார்கள். இதனை,

> பலி கொண்டு பெயரும் பாசம் போல
> திறை கொண்டு பெயர்தி வாழ்க நின் ஊழி[35]

என்றும்,

> ஒடிவி றெவ்வ ரெதிர்நின் றுரைஇ
> இடுக திரையே புரவெதிர் தோற்கென
> அம்புடை வலத்த ருயர்ந்தோர் பரவ
> அனையை யாகன் மாறே பகைவர்" [36]

என்றும்,

> பிணிக்கதிர் நெல்லின் செம்மன் மூதூர்
> நுமக்குரித் தாகல் வேண்டிற் சென்றவற்
> கிறுக்கல் வேண்டுந் திறையே மறுப்பின்
> ஒல் வானல்லன் வெல்போ ரான் [37]

என்றும்,

செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய
செல்வ........[38]

என்றும்,

பணியார் தேஎம் பணித்துத் திறை கொண்மார்
பருந்து பறக் கல்லாப் பார்வற் பாசறை[39]

என்றும் வரும் பாடலடிகளால் அறியலாம். இப்பாடலடிகள், பகைவரிடம் வேந்தர் திறை பெறும் செயற்பாட்டைக் காட்டுகின்றன.

“தமிழகத்தில் முடிமன்னர் மூவர் சங்ககாலத்தில் ஆண்டு வந்தனர். இம்மூவர் தவிர பல குறுநில மன்னர்கள் நாட்டின் ஆட்சியைப் பகிர்ந்து கொண்டனர். சிற்றரசர்கள் ஒவ்வோரமயம் முடிமன்னர்தம் அடி சாராது சுதந்திரமாக ஆட்சி புரிந்தனர். ஆயினும், கொள்கையளவிலேனும் அவர்கள் மூவரில் ஒரு மன்னர்க்குக் கீழ்ப்படிந்தவராகக் கருதப்படுவார். அத்தகைய சிற்றரசர்களின் தொகை நூற்றிருபது என்று ஸ்மித் கணக்கிடுகிறார்”[40] *என்னும் ந.சுப்ரமண்யன் அவர்களின் கூற்று இந்தப் படிநிலை ஆட்சி முறையைக் குறிப்பிடுகிறது. மதுரைக்காஞ்சி,*

தென்குமரி வட பெருங்கல்
குணகுட கடலா எல்லைத்
தொன்று மொழிந்து தொழில் கேட்ப
வெற்றமொடு வெறுத்து ஒழுகிய
கொற்றவர்தம் கோன் ஆகுவை **(70-74)**

எனத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைத் தமிழகம் முழுவதற்குமான ‘கோன்’ ஆக வேண்டும் என வாழ்த்துவதும் பேரரசாக உயர விழைந்த மன்னர்தம் எண்ணத்தையும் காட்டுகிறது. இம்மன்னனே,

ஒரு தாம் ஆகிய உரவோர் உம்பல் **(புற.,18:4)**

எனவும் புகழப்பட்டுள்ளான். மேலும்,

தென்குமரி, வட பெருங்கல்,
குண குட கடலா எல்லை,
குன்று, மலை, காடு, நாடு
ஒன்று பட்டு வழிமொழிய,
கொடிது கடிந்து, கோல் திருத்தி,
படுவது உண்டு, பகல் ஆற்றி,
இனிது உருண்ட சுடர் நேமி
முழுது ஆண்டோர் வழி காவல! **(புற.,17-:1-8)**

என வரும் புறநானூற்றுப் பாடலடிகளில், தமிழகம் முழுவதையும் ஆண்டோர் வழிவந்தவனாக யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை புகழப்பட்டுள்ளான். மன்னர் மன்னராய் உயர முயன்ற வேந்தரின் நிலையை இவை காட்டுகின்றன.

3. அரசும், படையும்:

தங்களுக்குள் முட்டிமோதிக் கொண்டு அரசுகள் உயரத் தலைப்பட்ட சங்ககாலம் போர்கள் மலிந்தகாலம்.

ஒருவனை ஒருவன் அடுதலும், தொலைதலும்,
புதுவது அன்று. இவ்உலகத்து இயற்கை (புற.,76:1-2)

எனப் போர் இயற்கைச் செயற்பாடாய்க் கருதப்பட்ட காலம். சான்றோன் (வீரன்) ஆக்குதலே தந்தையின் கடமையாகவும் களிறு எறிந்து பெயர்வது வீரரின் கடமையாகவும் (புற.,312) குறிப்பிடப்பட்ட காலச் சூழலில் போர் முக்கியத்துவம் வாய்ந்த சமூகச் செயற்பாடாக இருந்தது. அரசுகள் உருவான சங்ககாலச் சூழலில் 'படை' என்பது அரசின் அடிப்படையான அங்கமாக அமைந்தது.

இந்தப் படையைத் திரண்ட படை, நிலைத்த படை என இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம். மாடுபிடி சண்டைகளில் ஈடுபட்ட படையைத் திரண்ட படை எனக் கொள்ளலாம். மீட்ட நிரைகளை ஊரார் பாதிட்டுக் கொண்டனர் என்பதால் ஊரார் திரண்டு மீட்டு வந்ததை அறியலாம். நிலங்கவர் போர்களில் ஈடுபட்ட அரசுகள் உருவான நிலையில் நிலையான படைகள் இருந்திருத்தலே இயல்பு. இதற்கான குறிப்புகளும் சங்கப்பாக்களில் ஓரளவு காணப்படுகின்றன.

முரசு முழங்கு தானை மூவர் (பொ.ஆ.,54)

தெறலருந் தானைப் பொறையன் (நற்.,18:5)

சினம் மிகு தானை வானவன் (புற.,126:14)

கடந்தடு தானைச் சேரலாதன் (புற.,8:5)

சினம் கெழு தானைச் செம்பியன் மருக (புற.,37:6)

அரவக் கடல் தானை அதிகன் (சி.ஆ.103)

என வரும் பாடலடிகளில், அரசர்கள் படையுடையோர் எனப் புகழப்பட்டுள்ளார்கள். இத்துடன் படைக்கலக் கொட்டில்கள் இருந்ததை, 'இவ்வே பீலி அணிந்து' (புற.,95:1) என்னும் பாடல் அடி காட்டுகிறது. இத்துடன் போர்க்களத்தே படைகள் சென்று தங்கிய பாசறை பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன. இக்குறிப்புகளுடன்

நால்வகைப்படை குறித்த செய்திகளும் இடம்பெற்றுள்ளன. சான்று:

கடுஞ் சினத்த கொல் களிறும்; கதழ் பரிய கலி மாவும்,
நெடுங் கொடிய நிமிர்தேரும், நெஞ்சு உடைய புகல் மறவரும், என
நான்குடன் மாண்டது ஆயினும், மாண்ட
அற நெறி முதற்றே, அரசின் கொற்றம். (புற.,55:7-10)

இப்பாடலடிகள், 'நால்வகைப் படைகொண்ட பெருமை உடையது அரசு' எனக் குறிப்பிடுகின்றன. 'அரசின் பெரிய அரண்களை அழிக்கும் வலிமையும் முயற்சியும் உடைய பெரும்படை உடைய பாண்டியன்' எனப் பட்டினப்பாலை (277-279) நால்வகைப் படைகளைப் பற்றிப் பாடுகிறது.

களிறுகள் சினம் மிகுந்து களத்தில் வீரரைக் கொல்லவும், குதிரைக் கூட்டம் பகைவர் மேற் செல்லுதலால் உண்டான புழுதிப் புகை ஆகாயத்தில் வெயிலை மறைக்கவும், தேர்கள் காற்றைப் போல் சுழன்று திரியவும், வாட் போரில் திறமை உடைய வீரர் தோள் வலிமையால் வெற்றி பெறவும் நால்வகைப் படை செயல்பட்டதை மதுரைக்காஞ்சி (43-54) பாடியுள்ளது. மதுரை மாநகரில் நால்வகைப் படைகளின் இயக்கம் இருந்தமையும் (375-394) பாடப்பட்டுள்ளது.

அதியமானைப் பற்றிய புறப்பாடலில் (98) 'நின் யானைப் படை செலக் கண்ட பகை அரசர், தம் மதில் வாயில்களுக்குப் புதுக்கதவு அமைத்தனர். குதிரைப் படை கண்டு காவற்காட்டை வேலமுள்களை இட்டு அடைத்தனர். வேல் படை கண்டு தம் கேடகங்களைச் சீர் செய்தனர். மறவரது பெரும்படை கண்டு தத்தம் அம்பறாத்தூணிகளில் அம்பை நிரப்பினர்' எனப் படை பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. மேலும்,

ஞாலம் நெளிய ஈண்டிய வியன்படை (புற.,23:15)
கடல் கண்டன்ன ஒண் படைத் தானை (புற,197:3)
கடல் அன்ன தாங்கரும் தானை (பதி.பத்து.,90:31)

எனவும் படைப்பெருமை பாடப்பட்டுள்ளது. இத்துடன் முதலில் சென்றவர் நுங்கை உண்ணவும், இடையில் சென்றவர் பனம்பழம் உண்ணவும், இறுதியில் சென்றவர் பனங்கிழங்கு உண்ணவும் நீண்ட பெரும்படை (புற.,225:1-5) எனவும் படைகள் மிகையாகப் புகழப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் படை, அரசர் தம் ஆற்றலுக்கு ஏற்ப நிலைத்த படைகளாய், அரசின் அங்கமாய் இருந்தன எனக் கருதலாம். மேலும், செல்வ வளம் வாய்ந்த உடைமையாளர்கள் தேரேறி வர அவர்கள் வரும் வழியில் காலாட் படைகள் காவல்

காத்ததை மதுரைக்காஞ்சி (431-442) காட்டுவதும் அரசுக்கு நிலைத்த படை இருந்தது என்பதை உறுதிப்படுத்தும் சான்றாயுள்ளது.

இங்ஙனமாக, "பழமையான கூட்டுச் சமுதாயத்தில் இளையர் முதியர் வேறுபாடின்றி எல்லோரும் ஆயுதம் வைத்திருக்கும் சமூக உரிமை பெற்றிருந்தனர். ஆனால், வர்க்க வேறுபாடுகள் பெருத்துவிட்ட சமூகத்தில் - அரசு சரியானபடி நிறுவனமான பிற்காலச் சமூகத்தில் ஆயுதங்கள் வைத்திருப்பதற்கான சமூக உரிமை அனைவருக்குமில்லை. ஒரு குறிப்பிட்ட குழுக்களே ஆயுதந்தரித்தன.....செல்வாக்குப் பெற்ற குழுவினர் ஆயுதந்தரித்ததை இலக்கியம் (மதுரைக்காஞ்சி) கூறும்"[41] எனக் கோ.கேசவன் குறிப்பிடுகிறார். இவரது கூற்று, ஆயுதங்களும் தனியுடைமை ஆக்கப்பட்டதைக் காட்டுகிறது.

4. உடைமைப் பாதுகாப்பில் மதில்கள்:

தனியுடைமைகளின் தோற்றுவாய்க்குப் பின்னர் அவ்வுடைமை களைப் பாதுகாக்கும் நிலைகளும் தேவைப்பட்டன. மதில்களும், கிடங்குகளும், ஞாயில் எனப்பட்ட மதில் உறுப்புகளும், அரண்களும் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் மிகுதியாக இடம் பெற்றுள்ளன.

உடைமை அற்ற சீறூர் மன்னர் சமூகத்தில் உடைமைப் பாதுகாப்பிற்கான மதில்களும் இல்லை. மதில் போர்களும் இல்லை. குறுநிலமன்னர், வேந்தர் பற்றிய பாடல்களிலும், முதுகுடிமன்னர் பற்றிய பாடல்களிலும் மதில் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.[42] வேந்தர் பற்றிய பாடல்களில் மதிற்போர் பற்றிய குறிப்புகள் வந்துள்ளன.[43] எயில் என்னும் சொல் வரும் இடங்களிலும் குறுநிலமன்னரும், வேந்தரும் மதிற்போரில் ஈடுபட்ட செய்திகள் பாடப்பட்டுள்ளன.[44]

அரசு உருவாக்கம் பற்றிப் பேசும் எங்கெல்ஸ், "அரண் செய்யப்பட்ட நகரங்களைச் சுற்றிலும் பெரிய பெரிய சுவர்கள் எழுப்பியது சும்மா விளையாட்டுக்காக அல்ல, அவற்றின் விரிந்த அகழிகள் கணமுறையின் சமாதிகளாகும். அவற்றின் கொத்தளங்கள் நாகரிக நிலையை எட்டித் தொட்டுக் கொண்டிருந்தன"[45] எனக் குறிப்பிடுவதைப் போல் இந்த மதில்கள் எல்லாம் இனக்குழுச் சமுதாய அழிவின் மீது எழுப்பப்பட்டனவாகவே உள்ளன. அரசின், அரசனின் உடைமையாளரின் பாதுகாப்புக்கான அரண்களாகவும் உள்ளன.

5. அரசும், பொருளாதாரமும்:

உழவு, வணிகம் ஆகிய இரண்டும் அரசின் வருவாய்க்கான ஆதாரங்களாகும். நிலவரி, அரசர் தந்த திறை, வணிகத்தால் பெற்ற சுங்கவரி என்பன அரசுக்கான வருவாய்களாக இருந்துள்ளன.

(i) நிலவரி:

பாண்டியன் அறிவுடை நம்பியிடம் பிசிராந்தையார், அறிவு சான்ற வேந்தன் முறை அறிந்து வரி திரட்டுவானாயின் நாடு கோடிப் பொருளை ஈட்டித் தந்து வளம் உடையதாயத் தழைக்கும்' (புற.,184: 5-6) என அறிவுறுத்துகிறார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனிடம் வெள்ளைக் குடி நாகனார், 'நின் படை தருகின்ற வெற்றி உழுகின்ற கலப்பை நிலத்தே விளைவித்த நெல்லின் பயன்' எனப் போர் வெற்றியை உழவின்மேல் வைத்துக் கூறி 'மழை பெய்யவில்லை என்றாலும் விளைச்சல் குறைந்தாலும் இயற்கையல்லன செயற்கையில் தோன்றினாலும் அரசரையே இவ்வுலகம் பழிக்கும்; எனவே நீ நொதுமலாளர் (புதியவர்) புறங் கூற்று மொழியைக் கேளாது எருதுகளைப் பாதுகாப்பவராகிய வேளாளர் குடியைப் பாதுகாப்பாயாக' என அறிவுறுத்திப் பழைய நிலவரியை நீக்குமாறு வேண்டியுள்ளதைப் புறநானூற்றுப் பாடல் (35) காட்டுகிறது.

'புரவு' எனும் காவல் வரியும் அரசால் திரட்டப்பட்டுள்ளது. 'புரவிற்கு ஆற்றாச் சீறூர்' (புற.,330:6) என்னும் பாடலடிக்குப் 'புரவு வரி செலுத்துவதற்கும் ஆற்றாத வருவாயையுடைய சீறூர்' என உரை கூறப்பட்டுள்ளது. 297-ஆம் பாடலில் வரும் 'சீறூர்க் கோளிவன் வேண்டேம்' என்பதற்கு, 'சிறிய ஊர்களைப் புரவாகக் கொள்வதை இவண் வேண்டேம்' எனப் பழைய உரையும் "புரவாவது விளைநிலம். இதற்கு அரசிறையுண்டே யன்றிப் புரவு வரி கிடையாது. இறையிலியாவது அரசிறையன்றி யேனைப் புரவு வரி முதலியன உளப்பட வழங்கும் நிலம்"[46] என விளக்க உரையும் கூறப்பட்டுள்ளது. புரவுவரி என்னும் நிலவரியும் அரசின் வருவாயாக இருந்ததை இச்சான்றுகள் காட்டுகின்றன. 'புரவு' என்பதே வரி என்னும் பொருளிலும் ஆளப்பட்டுள்ளது. 'குடி புரவு இரக்கும் கூரிலாண்மை' (புற.,75:4) என்னும் சோழன் நலங்கிள்ளியின் கூற்று 'குடிகளிடமிருந்து மிகுதியாக வரி பெறுவது அரசனுக்கு ஏற்ற செயல் அல்ல' என்கின்றது.

(ii) திறை:

வேந்தரின் ஆளுமைக்கு உட்பட்டு ஆண்ட பகைவர்கள் அளித்த கப்பமும் (திறை) அரசுக்கான வருவாயாக இருந்தது. இதனை,

வந்து வினை முடித்தனன் வேந்தனும் பகைவரும்
தம்திறை கொடுத்துத் தமர் ஆயினரே (அக.,44:1-2)

அருந்திறை கொடுப்பவும் கொள்ளான் சினம் சிறந்து
வினைவயின் பெயர்க்கும் தானை
புனைதார் வேந்தன் பாசறையேமே (அக.,84:15-17)

என்னும் பாடலடிகளால் தெளியலாம். பகைவரிடம் வேந்தர், அதியன் போன்ற குறுநில மன்னர் ஆகியோர் திறை பெற்ற நிகழ்வும் சங்கப் பாடல்களில் பாடப்பட்டுள்ளது.[47] ரா.பூங்குன்றன் குறிப்பிடுவதைப் போலத் திறை காணிக்கைப் பொருள் மட்டும் அல்ல.[48] இது பெரும்பாலான இடங்களில் அரசருடன் இணைத்தே கையாளப் பட்டுள்ளதுடன் ஓர் அரசனுக்குக் கீழிருந்த வேறோர் அரசன் திறை கொடுத்ததும் (பதி.பத்து.,59:12), அரசன் படையெடுத்துச் சென்று பகைவரை அடக்கித் திறை பெற்றதும் (ம.கா.230) திறை காணிக்கைப் பொருள் மட்டுமே அல்ல. அது அரச மேலாண்மையை நிலை நிறுத்துவதற்கான அடையாளம் என்பதைக் காட்டுகின்றன. இவ்வாறு, பகைமன்னர் தந்த திறை பொருட்களும் அரசின் வருவாயைப் பெருக்கின.

(iii) உல்கு (சுங்கம்) வரி:

வணிகம் பெரிய அளவில் நடைபெற்ற நிலையில், ஏற்றுமதி இறக்குமதி மிகுதியாக நடைபெற்ற சூழலில் அப்பொருட்களின் மீது அரசு விதித்த உல்கு எனப்படும் சுங்க வரியும் அரசுக்குப் பெரும் வருவாயைத் தேடித்தந்தது. கடலருகில் இருக்கும் பரதவருடைய அகன்ற தெருவிடத்தில் உள்ள காவல் நிறைந்த பண்ட சாலையில் எல்லை அறியாதபடி வந்து திரண்ட பொருட்களைக் கடலில் கப்பலில் ஏற்றுவதற்காகவும், கப்பலில் வந்த பொருட்களை நிலத்தில் இறக்கவும் புலிச் சின்னத்தை அடையாளமாக இட்டுச் சுங்கம் கொள்ளுதலைப் பட்டினப்பாலை (116-131) காட்டுகிறது.

நல் இறைவன் பொருள் காக்கும்
தொல் இசைத் தொழில் மாக்கள் (ப.பா.,120-121)

என்பதில், ‘அரசனின் பொருளைப் பிறர் கொள்ளாதபடி காக்கும் பழமையான புகழை உடையவர்’ எனப்பட்ட சுங்கங்கொள்வோர் ஒரு பொழுதும் சோம்பியிராமல் நாள்தோறும் சுங்கங் கொண்டமை குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரில் சுங்க அதிகாரிகள் இருந்ததை இது காட்டுகிறது.

வம்பலர்கள் முதுகில் மிளகு மூட்டைகள் ஏற்றப்பட்ட கழுதைக் கூட்டத்தோடு செல்லும் காட்டு வழியில் விற்படையினர் சுங்கம் திரட்டும் சுங்கச்சாவடி இருந்ததைப் பெரும்பாணாற்றுப்படை (75-82)

காட்டுகிறது. உள்ளூர் வணிகத்தின் மூலமும் சுங்கம் வருவாயாக வந்ததை இது காட்டுகிறது.

"ஆயுதமேந்திய படையாகத் தம்மை திரட்டிக் கொண்டிருக்கின்ற மக்களோடு இப்போது நேரடியாக ஒன்றியிராத பொது அதிகாரத்தை நிலை நிறுத்துவது, வர்க்கங்களாகப் பிளவு ஏற்பட்டுப் போன பிறகு சுயமாகவே இயங்குகிற மக்களின் ஆயுத மேந்திய ஸ்தாபனம் என்பது சாத்தியமற்றுப் போயிற்று என்ற காரணத்தால் இந்த விசேஷமான பொது அதிகாரம் அவசியமாயிற்று; இந்தப் பொது அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்குப் பிரஜைகளிடமிருந்து கட்டணங்கள் வசூலிப்பது அவசியப்பட்டது. அவைதான் வரிகள்"[49] என்னும் நிலையில், வரிகளே அரசின் வருவாய் ஆதாரங்களாகவும், அதிகார நிலை நிறுத்தலுக்கான வழிகளாகவும் இருந்துள்ளன என்பதை அவதானிக்க முடிகிறது.

6. அரச மேலாண்மை:

"சமுதாயத்திலிருந்து தோன்றிய, சமுதாயத்திற்கு மேலாகத் தன்னை உயர்த்தி வைத்துக்கொண்டு, சமுதாயத்திலிருந்து மேலும் மேலும் தன்னை வேறாகப் பிரித்துக் கொண்டு செல்லும் இந்தச் சக்தியே அரசு என்பது"[50] என எங்கெல்ஸ் குறிப்பிடுவதைப் போல், சமூகத்திற்கு மேலாகத் தன்னை உயர்த்தி வைத்துக் கொண்ட அரசு அதன் தலைவனான அரசனை எல்லாம் வல்ல ஆற்றல் வாய்ந்தவனாகக் காட்டிக் கொண்டது. இந்தப் பணியைச் சங்ககாலப் புலவர்கள் சிறப்பாகவே செய்தார்கள். நெல்லும் நீரும் உயிரன்று மன்னனே உயிர் (புற.,186) என்னும் நிலையில், அரசனே உலக நல்வாழ்வுக்கு அடிப்படையானவன் என்னும் கருத்தை முன்வைக்கும் 'பொருண் மொழிக் காஞ்சிப்' பாடல்கள் அரசரின் மேன்மையைப் பாடியுள்ளன. இத்துடன் அரசனைத் தெய்வங்களுடன் இணைத்துப்பாடும் 'பூவை நிலைப்' பாடல்களும் பரப்புரையாளர்களான புலவர்களால் பாடப்பட்டுள்ளன.

நீ, உடன்று நோக்கும்வாய் எரி தவழ,
நீ, நயந்து நோக்கும்வாய் பொன் பூப்ப,
செஞ் ஞாயிற்று நிலவு வேண்டினும்,
வெண் திங்களுள் வெயில் வேண்டினும்,
வேண்டியது விளைக்கும் ஆற்றலை ஆகலின்[51]

என்னும் பாடலடிகளில், அரசன் ஞாயிற்றில் குளிர்ச்சியையும் திங்களுள் வெயிலையும் விளைவிக்கும் ஆற்றல் வாய்ந்தவன் எனப் புகழப்பட்டுள்ளான். மேலும்,

கால் பார் கோத்து, ஞாலத்து இயக்கும்
காவற் சாகாடு கைப்போன் மாணின்,
ஊறு இன்றாகி ஆறு இனிது படுமே[52]

என்பதில், காப்பாகிய சகடத்தைச் (வண்டியைச்) செலுத்துபவன் மாட்சிமைப்பட்டவனாக இருக்க வேண்டும் எனக் கூறுவதோடு, 'மன்னன் உயிர்த்தே மலர்த் தலையுலகம்' (புற 186:2) என மன்னன் உயிராகவும் காட்டப்பட்டுள்ளான். உடலியக்கத்திற்கு ஆதாரமானது உயிர் என்பதைப் போல் இவ்வுலக இயக்கத்துக்கு ஆதாரமானவன் மன்னன் என அரசனின் மேன்மை வலியுறுத்தப்பட்டுள்ளது.

நகரமயமாகிப்போன வாழ்க்கைச் சூழலில் சங்ககாலத் திணைநிலைத் தெய்வங்கள், தம் திணைச் சமூக இயல்புகளுடன், வட ஆரிய - வைதீக - பார்ப்பனப் பண்பாட்டு நெறியின் தாக்கத்தால் உள் நுழைந்த வடபுலப் புராண - இதிகாசங்களுடன் இணைக்கப்பட்டு ஆற்றல் வாய்ந்த தெய்வங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. எதையும் படைக்கவல்ல ஆற்றல் வாய்ந்தனவாகக் காட்டப்பட்ட தெய்வங்களுடன் மன்னர் இணைத்துப் பேசப் பெற்றனர். அதனால்தான் மன்னர் 'இறைவன்' என அழைக்கப்பட்டனர்.

கூற்று ஒத்தீயே, மாற்று அருஞ்சீற்றம்.
வலி ஒத்தீயே, வாலியோனை;
புகழ் ஒத்தீயே, இகழுநர் அடுநனை;
முருகு ஒத்தீயே, முன்னியது முடித்தலின்.
ஆங்கு ஆங்கு அவர் அவர் ஒத்தலின், யாங்கும்
அரியவும் உளவோ, நினக்கே?[53]

என்னும் பாடலடிகளில், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் கோபம், வலிமை, புகழ், எண்ணியது முடித்தல் என்னும் இயல்புகளால் சிவன் (கூற்றுவன்), பலதேவன், மாயோன், முருகன் இவர்களோடு ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளான். திருமால் போல் செல்வம் உடையவன் எனவும் இவ்வேந்தன் புகழப்பட்டுள்ளான் (புற 198:9).

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி முருகனைப் போன்று சீற்றம் உடையவன் (புற.,16:12) எனப் பாடப்பட்டுள்ளான். சோழன் குராப்பள்ளித்துஞ்சிய நன்மாறனும், பாண்டியன் வெள்ளியம் பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் பலராமனுடனும் திருமாலுடனும் (புற.,58:14-18) உவமித்துப் புகழப்பட்டுள்ளனர். பல்யானைச் செல்கெழு குட்டுவன் (பதி.,பத்து.,26:12), செல்வக்கடுங்கோ வாழியாதன்

(புற.,14:19) என்னும் இருவர் வீரமும் முருகனின் வீரத்துடன் ஒப்பிட்டுப் பாடப்பட்டுள்ளது.

தெய்வங்களுடன் இணைத்துப் பேசப்பட்டுள்ளதைப் போல் மூவேந்தர்களின் ஆற்றலையும் உயர்வையும் காட்டும் நோக்கில் சில புராணக்கதைகள் அவர்களுடன் இணைத்துக் காட்டப்பட்டுள்ளன.

சத்திரியரை வென்ற பரசுராமன் வென்ற நிலப் பகுதிகளைப் பிராமணருக்குக் கொடுத்த பின் அவர்களால் வெளியேற்றப்பட்ட நிலையில், கடலில் தன் பரசாயுதத்தை எறிந்து கடலைப் பின்னுக்கு ஓடச் செய்து நிலப் பகுதியை உருவாக்கிக் கொண்ட புராணக் கதை சேரன் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனுடன் இணைத்துப் பாடப்பட்டுள்ளது.[54]

கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்
டுடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய
வெல்புகழ்க் குட்டுவன் (பதி. பத்து., 46:11 - 13)

என இவ்வேந்தன் புகழ்ப்பட்டுள்ளான்.

பருந்திடமிருந்து தப்பி வந்து தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவைக் காப்பாற்ற வேண்டி, புறாவின் எடைக்கு எடை தன் தசையை அரிந்து கொடுக்க முயன்று எடை சீர்ப்படாமையால் தானே தராசுத் தட்டில் ஏறி நின்ற 'சிபி' மன்னன் கதை சோழ அரசர்களுடன் இணைத்துப் பேசப்பட்டுள்ளது. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் (புற.,39:1-3. 46:1-2), நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான் (புற.,43: 4-8) ஆகியோருடன் சிபியின் கதை இணைத்துப் பாடப்பட்டுள்ளது. சோழ அரசர் சிபி மரபுவழி வந்தோராகக் காட்டப்பட்டுள்ளனர்.

இவற்றைப் போலவே, சிவன் முப்புரம் அழித்த புராணக் கதையும் சோழ மன்னர்களுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளது. 'தூங்கெயில் எறிந்த நின் முன்னோர்' (புற.,39:6) எனச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் தூங்கெயில் எறிந்த முன்னோர் வழி வந்தவனாகப் புகழப்பட்டுள்ளான். சிறுபாணாற்றுப்படையில்,

குணபுலம் காவலர் மருமான் ஒன்னார்
ஓங்குஎயிற் கதவம் உருமுச் சுவல் சொறியும்
தூங்குஎயில் எறிந்த தொடிவிளங்கு தடக்கை,
நாடா நல்இசை, நல்தேர்ச் செம்பியன்
ஓடாப் பூட்கை உறந்தை...... (79 - 83)

எனச் சோழன், 'உருமேறு தன் தினவெடுத்த கழுத்தை மதிலின் தலையிலே தேய்த்துக் கொள்ளும் தூங்கெயிலை அழித்த செம்பியன்' எனப் புகழப்பட்டுள்ளான்.

இவ்வாறு, தெய்வங்களுடனும், புராண - இதிகாசக் கதைகளுடனும் மூவேந்தர் இணைத்துப் பேசப்பட்டிருப்பது அரசு உருவாக்கச் சூழலின் ஒரு பகுதியாக அரசரின் பேராற்றலையும் மேலாண்மையையும் உயர்த்திக் காட்டுவதற்கான, வைதீகத்தாக்கத்தின் பரவலுக்கான ஓர் உத்தியாய் உள்ளது.

7. அரசும் இலக்கிய உருவாக்கமும்:

சங்ககால அகம், புறம் என்னும் இருவகை இலக்கியங்களில் புற இலக்கியங்கள் (புறநானூறு, பதிற்றுப்பத்து) முழுக்க முழுக்க அரசர்களை மையப்படுத்தியனவாகவே உள்ளன. குறிப்பிட்ட அரசனைக் குறிப்பிட்ட சில பாடல்களில் பாடும் புறநானூற்று மரபில் மாற்றம் ஏற்பட்டுக் குறிப்பிட்ட சேர அரசர்களைப் பத்துப் பத்துப் பாடல்களில் பாடும் மரபு ஏற்பட்டதைப் பதிற்றுப்பத்து காட்டுகின்றது.

இந்த மரபிலும் மாற்றம் ஏற்பட்டதைப் பத்துப்பாட்டின் நெடும் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. “பத்துப்பாட்டினுள் இடம்பெறும் முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகிய பாடல்களில் அகத்திணை புறத்திணை இயைக்கப்பட்டுள்ள முறையில் நியமமான திணை, துறை மரபில் இல்லாத ஒரு நெகிழ்ச்சியை அவதானிக்கலாம்”[55] என்கிறார் கா. சிவத்தம்பி. குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை மூன்றும் அகம் சார்ந்தவை என்றாலும், குறிஞ்சிப்பாட்டு எஞ்சிய இரண்டிலும் அரசனது வீரமே பெரிதும் பாடப்பட்டுள்ளது. முல்லைப்பாட்டில் பாசறை இயல்பு (24- 28), வீரர் தங்கும் படைவீடுகள் (37-42), அரசனது பாசறை (43 - 44), மெய்காப்பாளர் காவல் புரிதல் (50-54), கண்துஞ்சா வீரர், செஞ்சோற்றுக் கடன் செய்த வீரர் ஆகியோருடன் போரில் புண்பட்ட யானை, குதிரை ஆகியவற்றையும் நினைந்து அரசன் இருத்தல் (68-75), வெற்றி (77-89), அரசன் வெற்றியுடன் திரும்புதல் (90-92) ஆகியவை பாடப்பட்டுள்ளன. பட்டினப்பாலையில் சோழ நாட்டு வளமும் கரிகாலனின் ஆற்றலும் நாட்டைச் சிறப்புறச் செய்த செயலும் பாடப்பட்டுள்ளன. அக இலக்கியங்கள் பலவற்றில் வரலாற்றுச் செய்திகள் பலவும் உவமையாக ஆளப்பட்டுள்ளன. இவ்வாறு, சங்கப் பாடல்கள் பலவும் அரசன், அரசு பற்றிய தகவல்களைக் கொண்டனவாகவே உள்ளன.

தனிப்பாடல்களாய்ப் பாடப்பட்டவற்றை இலக்கியமாக்கித் தொகையாக்கம் செய்வித்தவர்கள் அரசர்களேயாவர். அகநானூற்றைப் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும், குறுந்தொகையைப் பூரிக்கோவும், ஐங்குறுநூற்றினை யானைகட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையும் தொகுப்பித்துள்ளனர். திட்டமிட்டுப் பாடப்பட்டுள்ள பதிற்றுப்பத்து

முழுக்க முழுக்கச் சேரர் பற்றிய பாடல்களாகவே இருப்பதாலும், புறநானூற்றின் முதல் பாடல் சேரர் பற்றியதாய் இருப்பதாலும் இவ்விரண்டையும் சேரர் சார்பில் தொகுக்கப்பட்டனவாகக் கொள்ளலாம்.

"பாடுநர் காலத்துக்குரிய இப்பாடல்களைத் தொகுத்தது, அதற்கு முன்னிருந்த காலத்து இலக்கியத் தேட்டத்தை நிலை பேறுடையதாக்கி, அதன் மூலம் மன்னர் பரம்பரைகளின் தொடர்ச்சியை நிச்சயப் படுத்துவதற்காக விருக்கலாம்"[56] எனக் கா.சிவத்தம்பி சங்கஇலக்கியத் தொகையாக்கத்தை அரசருடன், அரசுடன் இணைத்து நோக்குகிறார். இந்த வகையில் இத்தொகையாக்கம் அரசு உருவாக்கத்தின் ஒரு கூறாகவே இருந்துள்ளதை இவை காட்டுகின்றன.

பதிற்றுப்பத்திலிருந்தும், புறநானூற்றுப் பாடல்களிலிருந்தும் பத்துப்பாட்டின் பாடல்கள் வேறுபட அமைந்துள்ளன. சிறு காப்பியங்களைப் போல இவை நாட்டு வளமும் நகர வளமும் பாடுவனவாக உள்ளன. பொருநராற்றுப்படையில் சோழநாட்டின் வளம் (178 - 213), நில மயக்கமும் நல்லாட்சியும் (214 - 231), காவிரியின் வெள்ளச் சிறப்பு (232-241), சோழ நாட்டு வயல் வளம் (242-248) ஆகியன பாடப்பட்டுள்ளன. சிறுபாணாற்றுப்படையில் எயிற்பட்டினத்தின் பொருள் வளம் (143 - 163), வேலூரின் வளம் (164 - 173), ஆமூர் வளம் (178 - 188) ஆகியனவும், பெரும்பாணாற்றுப் படையில் நானில வளம் (46 - 345), திருவெஃகாவின் சிறப்பு (372-392), காஞ்சி நகரின் சிறப்பு (494-500) ஆகியனவும் பாடப்பட்டுள்ளன.

மதுரைக்காஞ்சி மதுரை நகரின் அமைப்பையும் சிறப்பையும் பலபடப் பாடியுள்ளது. அகழியும் மதிலும் உடைய மாடங்கள் பல்வகைக் கொடிகளுடன் விளங்குதல் (342 - 359), நால்வகைப் படைகளின் இயக்கம் (375 - 394), நாளங்காடி (395 - 423), செல்வர் நிலை (431-452), பௌத்த, சமண, அந்தணர்ப் பள்ளிகள் (461 - 488), அறங்கூறவையம் (489-492), காவிதி மாக்கள் (493-499), நாற்பெருங்குழு (507-510), அந்திக் கடைகளில் எழும் ஓசை (536 - 544), பரத்தையர் வாழ்வு (559 - 589), விடியற்காலத்து மதுரை (654 - 686), மதுரையின் சிறப்பு (687-699) என நகர் வளம் மிக விரிவாகப் பாடப்பட்டுள்ளது. "இந்த விரிவான வர்ணனை முறை, திணை துறை முறைமையின் செறிவை உடைத்து ஒரு நீட்சியை ஏற்படுத்துகின்றது எனலாம். இத்தகைய நீட்சி புரவலரைப் பரவுதலிலும் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்துகின்றது"[57] எனக் கா.சிவத்தம்பி குறிப்பிடுவதைப் போல் அரசனது தோற்றங்களும், கொடைப் பண்புகளும் விரிவாகப் பாடப்பட்டுள்ளன. இவ்வாறு, நெடும் பாடல்களாய் அமைந்த பத்துப்பாட்டுப் பாடல்களின் உருவாக்கம் முழுக்க முழுக்க அரசு சார்ந்த நிலையில் தனிப்பட்ட இலக்கிய வகைகளாக உருப்பெற்றுள்ளது.

பல்வேறு பட்ட அரசர்களும் குறிப்பிட்ட நில எல்லைகளுக்கு உட்பட்டு ஒருகாலத்தில் ஆங்காங்கே ஆண்டிருந்த போதிலும், அரசு தனக்குரிய எல்லா இயல்புகளுடனும் முழுப் பரிமாணத்தோடும் உருவாகி வந்ததை மேலே ஆராயப்பட்ட எல்லா சான்றுகளும் உறுதிசெய்கின்றன. மருத வேளாண் பொருளாதாரமும் நெய்தல்நிலப் பகுதியின் வணிகப் பொருளாதாரமும் வேந்தர்களால் மிகுதியும் கவனத்தில் கொள்ளப்பட்டன. இவ்விருவகைப் பொருளாதாரக் கவனத்துடன் நில எல்லைப் பெருக்கத்திற்கான, மருத நில விளைவயல் பெருக்கத்திற்கான போர்களில் ஈடுபட்டு வைதீக நெறிக்கும் அந்தணர்க்கும் முக்கியத்துவம் அளித்த மூவேந்தர் சமூகங்களில், வைதீகத் தாக்கத்தின் பரவலுக்கான அரசியல் - பொருளாதார காரணங்களுள் ஒன்றான அரசு உருவாக்கச் சூழலை அழுத்தமாகக் காணமுடிகின்றது.

திணைநிலைத் தெய்வங்கள் திணை எல்லைகளைக் கடந்து நானிலங்களிலும் செல்வாக்கைப் பெரும் நிலையில் ஊர், நகரம், நாடு என்னும் படிநிலை அமைப்பு உருவானது. நானில இணைப்பு வேந்தர் சமூகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றது. பட்டினப்பாலையும், மதுரைக் காஞ்சியும் இதற்குச் சான்றுகளாய் அமைந்துள்ளன. “சங்க கால அரசு மூவேந்தர்களின் வளர்ச்சியுடன் இணைந்தது”[58] எனவும் “இது வேளாண் சமுதாய வளர்ச்சியுடன் தொடர்புடையது”[59] எனவும் கா.சிவத்தம்பி கூறுவது மேற்காட்டிய சான்றுகளால் உறுதிப்படுகின்றது.

மூவேந்தர்களும் அவர்களின் அரசுகளும் பேரரசுகளாக உருப்பெறவில்லை. அரசாட்சிக்கென ஒரே குடிக்குள்ளும் நில எல்லைப் பெருக்கத்திற்கென மூவேந்தர்கள் இடையேயும் நடைபெற்ற போராட்டங்கள் பேரரசு உருவாகத் தடையாய் இருந்தன. சேரமான் கருவூரேறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரல் இரும்பொறை, கொற்கைப் பொருநன், வெள்வேல் நெடுஞ் செழியன், பெருஞ்சோற்று உதியன் சேரலாதன், உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னி, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் போன்றோர் காலம் தொடங்கி மெல்ல மெல்ல வளர்ந்த அரசு கரிகாற் சோழன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் போன்றோர் காலங்களில் வலுவுடன் வளர்ந்து உயர்ந்ததைப் பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி போன்றவை காட்டுகின்றன. சங்க காலத்தின் இறுதிப் பகுதியில் மூவேந்தர் அரசுகள் வீழ்ச்சியடைந்ததைச் சிறுபாணாற்றுப் படை போன்ற இலக்கியங்கள், மூவேந்தர்கள் ஒருங்கு இருந்ததைக் காட்டும் ஔவையார் பாடல் (புற. 367) போன்றவை காட்டுகின்றன.

சங்ககால இறுதிப் பகுதியைச் சார்ந்த சிறுபாணாற்றுப்படையில் 'இயல் தேர்க் குட்டுவன், வருபுனல் வஞ்சியும் வறிதே' (49-50), 'கடுஞ்தேர்ச் செழியன் தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே' (65-67), 'தூங்கெயில் எறிந்த தொடிவிளங்கு தடக்கை, நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன், ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே' (81-83) என வஞ்சி, மதுரை, உறந்தை மூன்றும் வறிதாகப் போய் விட்ட நிலை காட்டப்படுவது மூவேந்தர்களின், அவர்தம் அரசுகளின் நிலைகுலைவைக் காட்டுகின்றது.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து வைதீகத் தாக்கத்தின் பரவலுக்கான தமிழக அரசியல் - பொருளாதார வரலாற்றில் சங்ககாலத்தில் நிலவிய அரசியல் - பொருளாதார -சமூக மாற்றங்களையும், அவற்றோடு தொடர்புடைய ஊர், நகரம், நாடு அடைந்த மாற்றங்களையும், மூவேந்தர் அரசு சிற்றரசோடு கொண்டிருந்த உறவு நிலைகள் பற்றியும், அரசமைப்பில் படையும், மதில்களும், பொருளாதாரமும் பெற்றிருந்த நிலை பற்றியும், அரசு மேலாண்மை குறித்தும், அரசும் இலக்கிய உருவாக்கமும் பற்றியும் அறியமுடிகின்றது.

அடிக்குறிப்புகள்:

1. குறு.,61:1. பெ.ஆ.,248; நெ.வா., 118-119; புற., 87:3; 206:1; 290:4; புற., 170:15; 180:13;312:3; அக., 202:5; நற்., 13:5; பெ.ஆ.,207. 437; புற., 228:1; ம.கா., 521; புற., 125:1; 326:5; நற்., 313:2; 394:3, புற,353:1; நற்., 153:2; நெ.வா.,85.
2. புற., 82:3:அக., 89:7; புற., 311:2; அக.,387:6; நற்., 90:3; கலி., 72:14; புற., 360:19; ம.கா., 89; புற., 24:1; 209:2; 379:3; 61:1; 70:17; பதி.பத்து., 21:9., 67:16; அக., 1:5; 356:9: நற்., 328:3-9; ம.கா., 511-515; 135-136; 395-401.
3. புற., 335:7-8; 28:13; பதி.பத்து., 18:6; புற., 170:11; சி.ஆ., 31; பெ.ஆ., 486; பொ.ஆ., 110; ம.கா., 218; நெ.வா., 76-78; 110-114; ம.கா.,516-518.
4. பெ.ஆ., 191; நற்., 3:5; குறு., 41:3; அக., 52:7.
5. பொ.ஆ., 1; பெ.ஆ., 254; நற்., 132:1; குறு., 223:1., ஐங்., 77:2; அக., 382:11; புற., 57:7.
6. புற., 299:1; 297:4; 330:6; 302:7; 306:2; 324:8; 314:4; 328:2; 329:1; 318:3; 325:15.
7. புற., 336:7; 341:19; 345:20; 343:17; 347:12; 349:7; 350:2; 351:12; 354:7.
8. ஐங்., 60:1-3.

9. மேலது., 236.
10. அக., 61:16.
11. மேலது., 127:6.
12. மேலது., 253:5-6.
13. மேலது., 93:20-21.
14. ப.பா., 57.
15. பரி., 7:4.
16. நெ.வா., 29.
17. பெ.ஆ., 411.
18. சி.ஆ., 152-153.
19. அக., 205:10-12.
20. பெ.ஆ., 335-336.
21. புற., 30:15.
22. புற., 42:18.
23. பதி.பத்து., 13:28.
24. சி.ஆ., 87.
25. மேலது., 107.
26. புற., 110:13.
27. மேலது., 89:3.
28. மேலது., 126:23.
29. மேலது., 130:1-2.
30. மேலது., 165:11.
31. நற்., 304:4; அக., 272:19; குறு., 379:3.
32. பி.எங்கெல்ஸ், குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், ப.264.
33. புற., 55:6.
34. மேலது., 72:7-9.
35. பதி.பத்து., 71:23:24.
36. மேலது., 80:9-12.
37. புற., 97:18-21.
38. பொ.ஆ., 120.
39. ம.கா., 230-231.
40. ந.சுப்ரமண்யன், சங்ககால வாழ்வியல், ப.51.
41. கோ.கேசவன், மண்ணும் மனித உறவுகளும், ப.59.

42. சி.ஆ., 152; பெ.ஆ., 451; ம.கா., 66; பதி.பத்து., 15:3; 20:18; 22:25; புற., 18:11; 31:8; 36:10; 40:15; அக., 335:11; புற., 343:16; 355:1.
43. பதி.பத்து., 15:3; 45:7; 58:6; அக., 24:11; 45:18; 159:18; 164:12; ஐங்., 78:1-2; 444:2-4; புற., 31:8; 92:5:97:2; 387:5.
44. புற., 3:9; 6:14; 15:3; 33:8; பதி.பத்து., 29:13; 37:9; 62:4; 68:5; 71:13.
45. பி.எங்கெல்ஸ், குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், ப.254.
46. புறநானூறு, தொகுதி II, ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை உரை, ப.195.
47. அக., 124:2; 127:7; 334:3; பொ.ஆ., 120; ம.கா., 210; பதி. பத்து., 17:3; 53:2; 59:12; 62:12; 66:7; 71:24; 80:10; புற., 22:26; 97:20; 387:12.
48. ர.பூங்குன்றன். பண்டைத் தமிழகத்தில் அரசு உருவாக்கம், ப.118.
49. பி.எங்கெல்ஸ், குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், பக். 264-265.
50. மேலது., ப.264.
51. புற., 38:5-9.
52. மேலது., 185:1-3.
53. மேலது., 56:11-16.
54. பதி.பத்து., 45:22; 46:11-13; அக., 212:16-20.
55. கா.சிவத்தம்பி, சங்க இலக்கியம் கவிதையியல் பின்புலம் (க.த.), ப.73.
56. மேலது., ப.71.
57. மேலது., ப.77.
58. மேலது., ப.49.
59. மேலது., ப.51

2. தமிழகத்தின் சங்ககால வட அரசியல் எல்லை

தமிழரது வரலாற்றுத் தொடக்கக் காலத்துச் செய்திகளில் முந்தியவற்றை முதன்முதலில் தருவது தமிழகத்திற்குப் புறத்தேயெழுந்த சான்றுகளேயாகும். இராமாயணத்தில் வடக்கேயிருந்து இலங்கைக்குப் போகும் வழியில் அமைந்திருப்பது பாண்டிய நாடு என்று கூறப்படுகிறது. மகாபாரதத்தில் அர்ஜுனன் பாண்டி நாட்டு அரசியான அல்லியை மணந்த செய்தி கூறப்படுகிறது. மெகஸ்தனிஸும் (கி.மு.4-ஆம் நூற்றாண்டு), கௌடில்யரும் (கி.மு. 4-ஆம் நூற்றாண்டு) முக்கியமாகப் பாண்டிய நாட்டைக் குறிப்பிடுகின்றனர். பிறகு அசோகர் கல்வெட்டுக்கள் சேர, சோழ, பாண்டியர்களையும், சிங்களத்தையும், சதியபுத்ரர்களையும் (துளுநாட்டினர்) குறிக்கின்றன. ஆகவே, கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டியர்களே அன்றிச் சேர, சோழ வேந்தர்களும் அரசு நிறுவி ஆட்சி செலுத்தி வந்தனர் என்பது பெறப்படுகிறது. அசோகருக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு கலிங்கத்தை ஆண்ட காரவேலரது கல்வெட்டு ஒன்றில் பிந்துசாரர் காலத்தில் தமிழர் அரசுகள் ஒரு கூட்டுப் பாதுகாப்புப் படையை அமைத்திருந்தனர் என்று குறிக்கின்றது. ஆகவே, குறைந்தது அசோகர் காலத்திலிருந்து தமிழர் சமூகம் நாகரிக முறையில் அமைக்கப்பட்டு நல்ல வலுவுள்ள அரசுகளுக்கு உட்பட்டு வந்தது என்பது பெறப்படும்.

சங்க இலக்கியத்தில் ‘மோரியர்’ என்று ஒரு கூட்டத்தார் குறிப்பிடப்படுகின்றனர்.[1] சிலர், இவர்களை மேலை இந்தியாவில் இருந்த மோரியர் என்னும் ஓரினத்தாராகக் கருதுவர். ஆயினும், பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு மகதத்தை ஆண்ட மௌரியர்களே இவர்கள் என்று கொள்ளுதலே பொருத்தமுடையதாகும். பிந்துசாரர் காலத்தில் மௌரியப் படைகள் தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்து கருநாடகத்தின் தென் கோடிவரையில் வென்று தமது பேரரசில் இணைத்துக் கொண்டது வரலாற்று உண்மை. ஆதலால், சங்க இலக்கியம் இயற்றப்பட்ட காலத்தில் மௌரியர்களைப் பற்றித் தமிழகம் நன்றாக அறிந்திருக்க வேண்டும்.

அசோகர் கல்வெட்டுக்களில் (2,13-ஆம் பாறை கல்வெட்டுக்கள்) கூறப்படும் சதிய புத்திரர் என்பவர்கள் அம்மன்னர் கல்வெட்டுக்களில் சேர, சோழ, பாண்டியர்களுக்குப் பிறகு குறிக்கப் பெறுகின்றனர். இவர்கள் யார் என்று நிர்ணயம் செய்வதில் வரலாற்றாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. பர்ரோ என்னும் ஆங்கில அறிஞர் ‘சதிய புத்ரர்’ களை ‘அதியமான்’ களோடு இணைப்பார்.

'அதிய' என்பது 'சதிய' என்றாகி, மகன் என்று பொருள்படும் மான் என்னும் சொல் புத்ரர் என்று மொழிபெயர்க்கப்பட்டது என்று கருதுவர்.[2]

அதியமான்கள், தற்காலத்தே தருமபுரி என்றழைக்கப்பெறும் தகடூரைத் தலைநகராகக் கொண்டு சேரநாட்டில் ஆட்சி புரிந்து வந்த சிற்றரசர்களாவர். அதியமான்கள் தான் அசோகர் கல்வெட்டுக்களில் காணப்பெறும் சதியபுத்ரர்கள் என்று முதன்முதலில் கூறியவர் கே. ஜி.சேஷ ஐயர் என்பவராவர்.[3] இவ்வதியமான்கள் சேர நாட்டின் வட பகுதியான கொங்கு நாட்டில் ஆண்டவர்கள். வி.ஏ.ஸ்மித் சதியபுத்ரர்களைக் கோசர் என்று கருதுவார்.[4] இக்கோசர்கள் துளுநாட்டவர். கோசரைச் சங்க இலக்கியம் 'மெய்ம்மலி கோசர்' என்று கூறுகிறது. இம் 'மெய்ம்மலி' என்னும் அடைமொழிதான் 'சதிய' என்று மொழிபெயர்க்கப்பட்டு 'சதியபுத்ரர்' என்னும் பெயரையாக்கிற்று என்று கருதுவதுண்டு. அது எவ்வாறாயினும், இச்சதியபுத்ரர்கள் சேரநாட்டின் வடமேற்குப் பகுதியினர் என்று கொள்ளலாம்.

கோசர் துளுநாட்டினர் என்பது அகநானூற்றால் விளங்கும். இக்கோசருரைய அரசப் பிரதிநிதிகள் கொங்கு நாட்டின் ஒரு பகுதியில் ஆண்டனர். அவர்கள் கொங்கிளங்கோசர் எனப்படுவர். ஏதோ ஒரு மௌரியர் படையெடுப்பில் கோசர் தொடர்பு அகநானூற்றுப்பாடல் (251) ஒன்றில் குறிக்கப்பெறுகின்றது. கோசர் நாட்டிற்குத் தென்கிழக்கே அமைந்துள்ள மோகூர் என்னுமிடத்தை மௌரியர் கைப்பற்றுவதற்குக் கோசர் உதவினர். இக்கூற்றுக்களால், பிந்துசாரர் தென்னாட்டைப் படையெடுத்தமை வலியுறுத்தப் பெறுகிறது.

அசோகர் தம் ஆட்சிக் காலத்தில் (கி.மு.272-232) பௌத்த தர்மக் கொள்கைகளைப் பாறைகளிலும் கல்தூண்களிலும் பொறித்து வைத்தார். அவை இன்றும் நின்று நிலவுகின்றன. இரண்டு மற்றும் பதின்மூன்றாம் பாறை கல்வெட்டுக்களில் சங்ககாலத் தமிழகம் குறிப்பிடப்படுகிறது.

இரண்டாம் பாறை கல்வெட்டில் அசோகர் கூறியிருப்பது பின்வருமாறு:

"கடவுளரால் விரும்பப்படும் பிரியதர்சி மன்னன் தன் நாடெங்கிலும் இரண்டு வகையான மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தான்: அதாவது, மனிதருக்கான மருத்துவ சிகச்சை, விலங்குகளுக்கான மருத்துவ சிகிச்சை. தன் நாட்டைப் போலவே, அண்டை நாடுகளான சோழ, பாண்டிய நாடுகளிலும்; சதியபுத்ர, கேரள புத்ர நாடுகளில் தெற்கே தாம்ரபர்ணி வரையிலும்; யவன

மன்னன் அண்டியோகாவின் நாட்டிலும்; அண்டியோகாவை அடுத்துள்ளோர் நாடுகளிலும்; எல்லாவிடங்களிலும் இருவகையான மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தான்.''[5]

பதின்மூன்றாம் பாறை கல்வெட்டில், அசோகர் தான் கலிங்கத்தை வென்றதையும், கலிங்கப் போரில் இறந்தோரையும், காயம் உற்றோரையும், அடிமைப்பட்டோரையும் கண்டு மனம் வருந்தி பௌத்த தர்மத்தை மேற்கொண்டதையும், தம் அண்டை நாடுகளிலும் பௌத்தமதப் பிரசாரத்தை வெற்றிகரமாக நடத்தி வருவதையும் கூறுவது பின்வருமாறு:

''தர்மத்தின் மூலமாகப் பெறும் வெற்றி எதுவோ அதையே சிறந்த வெற்றியாகக் கடவுளரால் விரும்பப்படுவோன் கருதுகிறான். அத்தகைய வெற்றியைக் கடவுளரால் விரும்பப்படுவோன் தனது நாட்டில் மட்டுமின்றி, தனதுநாட்டை அடுத்துள்ள நாடுகளிலும் அடைந்துள்ளான். அறுநூறு யோசனை (9 மைல் அல்லது 14.4.கிலோ மீட்டர்) தூரத்தில் அண்டியோகா என்ற யவன மன்னன் ஆளும் நாட்டிலும், அந்நாட்டிற்கு அப்பால் துரமாயா, அந்திகினி, மகா, அலிக சுந்தரா என்ற பெயருடைய நான்கு வேறு மன்னர்கள் ஆளும் நாடுகளிலும், தெற்கிலே சோழர்களும் பாண்டியர்களும் வாழும் தாம்ரபர்ணி வரையிலான இடங்களிலும் கடவுளரால் விரும்பப்படுவோன் தர்ம வெற்றியை அடைந்துள்ளான்.''[6]

மேற்கூறிய பாறை கல்வெட்டுப் பொறிப்புகளிலிருந்து மூன்று செய்திகள் தெரியவருகின்றன. அவை பின்வருமாறு:

1. தமிழக அரசுகள் மௌரியப் பேரரசுக்கு உட்படாத சுதந்திர நாடுகளாக இருந்தன.
2. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் சோழர், பாண்டியர், சதிய புத்ரர், சேரர் ஆகிய நான்கு அரசுகள் தமிழகத்தில் சிறப்புற்று விளங்கின.
3. சோழ, பாண்டிய நாடுகளில் பௌத்த மதம் பரவத் தொடங்கியது.

தமிழகத்தின் சங்ககால வட அரசியல் எல்லை அசோகர் பேரரசின் தென் எல்லை எதுவென்று நிர்ணயிப்பதன் மூலமாகவே அறியப்படும். அசோகர் பேரரசின் தென் எல்லை மேற்கே மங்களூரில் தொடங்கி குடகு வழியே, மைசூர் வழியே, திருப்பதி மலைகள் வழியாக வந்து புழலேரியருகில் கீழைக் கடலைச் சேர்ந்தது. இக்கோட்டிற்குத் தெற்கேயுள்ள பகுதிகள் முழுவதும் தமிழ்நாடாகவே

இருந்தது. வடமேற்கே மங்களூரைச் சுற்றியுள்ள துளுநாட்டைச் சதியபுத்ரர் ஆண்டு வருகையில் எஞ்சிய பெரும் பகுதியை மேற்கே சேரரும், தெற்கே பாண்டியரும், கிழக்கே சோழரும் என்று பிரித்துக் கொண்டு ஆண்டு வந்தனர். தொண்டை மண்டலத்தின் ஒரு பகுதி அசோகர் பேரரசில் அடங்கியிருந்தது என்று கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார் கருதுகின்றார். அவர் இதற்குக் கூறும் காரணம், 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர் செப்பேடு ஒன்றில் (வேலூர் பாளையம் செப்பேடுகள்) காஞ்சியையாண்ட ஆதிப் பல்லவர்களில் அசோகவர்மர் என்பவரும் ஒருவர்[7] என்பதாகும். இவ்வாறு இவர் கூறும் கருத்து ஆய்விற்குரியது.

அசோகர் இறந்த பிறகு, தக்காணத்தில் அரசு நிறுவிய சாதவாஹனர்கள் கிழக்கிலும், தெற்கிலும் தமது அரசை விரிவுபடுத்த முயன்றனர். இம்முயற்சி, கிழக்கே கலிங்கத்தை எதிர்த்தும், தெற்கே தமிழக அரசுகளை எதிர்த்தும் மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் கலிங்கத்தை வெற்றிபெறக் கருதிக் கிழக்கு நோக்கிப் படைகொண்டு சென்றமை காரவேலரின் ஹத்திகும்பா கல்வெட்டால் தெரியவருகின்றது.

தெற்கு நோக்கிச் சாதவாஹனர்கள் படையெடுத்து முன்னேறியமைக்கு வெளிப்படையான சான்றில்லையாயினும் அதனை எளிதில் ஊகித்துக்கொள்ளலாம். சில ஆந்திர சாதவாஹன இருமொழிக் காசுகள் தொண்டை மண்டலத்தில் கிடைக்கின்றன. இதனால், சாதவாஹனர் தமிழ் நாட்டோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது பெறப்படும். சாதவாஹனர் அவைக்களத்தில் குணாட்டியர் என்று ஒரு பண்டிதர் இருந்தார். அவர் மகாராட்டிரத்தை விட்டு நீங்கித் தமிழ் நாட்டிற்கு வந்து வடமொழி அல்லது பிராகிருதங்கள் யாதுமில்லாத பைசாசி என்னும் ஒரு மொழியில் 'பிருகத்கதா' என்னும் நூலை இயற்றினார். இதுவே, பெருங்கதை என்று கொங்கு வேளிரால் தமிழில் செய்யப்பட்டது. இவ்வாறாகச் சாதவாஹனர்க்கும் தமிழர்க்கும் பண்பாட்டு நிலையில் பலவகைத் தொடர்புகள் இருந்து வந்தமை புலனாகும்.

சாதவாஹனர் காசுகள் சில தொண்டை மண்டலத்திற் கிடைப்பதால் அவர்கள் தமிழகத்தில் தொண்டை மண்டலத்தையேனும் வென்று ஆண்டார்கள் என்று சிலர் கருதுவதற்குச் சான்று போதுமானதன்று. ஏனெனில், ஒரு நாட்டில் வெளியிடப்பட்ட காசுகள் கிடைக்குமிடம் எல்லாம் அந்த நாட்டால் ஒரு காலத்தில் வென்று ஆளப்பட்டிருக்கும் என்று கருதுதல் தவறானதாகும். அன்றியும் ரோமானியப் பேரரசுக் காசுகள் தமிழகத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளமையால் தமிழகம் ரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாக

ஒரு காலத்தில் விளங்கிற்று என்று கருதுதல் எவ்வளவு தவறு என்று எளிதில் விளங்கும்.

சாதவாஹனர் தமிழகத்தையும் படை கொண்டு வெற்றிபெறக் கருதியிருந்தமை சில சான்றுகளால் வெளிப்படுகிறது. கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகளில் சங்க காலம் தமிழகத்தில் நிகழ்வுற்றது. அதே காலத்தில்தான் சாதவாஹனர் ஆட்சியின் பிற்பகுதி தக்காணத்தில் நடைபெற்றது. சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்தில் நூற்றுவர் கன்னர் என்று குறிக்கப்பெறுபவர்கள் சதகர்னிகளாகிய சாதவாஹனரே (சதம் - நூறு) ஆவர். சேரன் செங்குட்டுவன் சேர நாட்டினை ஆண்டு வந்த காலத்தில், அதாவது கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சாதவாஹனப் பேரரசினை ஆண்டவர் ஸ்ரீயஜ்ஞ சாதகர்னி என்பவராவார். இவர், சேர மன்னரோடு நட்புரிமை பூண்டவர் என்பது சிலப்பதிகாரத்தால் புலனாகும்.

இனி, அசோகர் இறந்து பட்டதற்கு உடனடியாகவே சாதவாஹனர் ஆட்சி தக்காணத்தில் ஏற்பட்டு நிலைத்துவிட்டது. அதாவது கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதி எனலாம். இத்தகைய சூழலில், சாதவாஹனர் தமிழகத்தையும் வென்று கைப்பற்ற முயன்றமை பற்றிப் பண்டைத் தமிழ் இலக்கியத்தில் ஒரு முக்கியமான சான்று கிடைக்கின்றது என்றும், இதனை மறைமுகமான சான்று என்று சிலர் கருதுவர் என்றும், ஆயினும் சற்று ஊன்றிக் காணுங்கால் அதனை நேரடிச் சான்று என்றே கொள்ளலாம் என்றும் கூறுவர் ந.சுப்ரமணியன். அவரது கூற்று பின்வருமாறு:

"அஃதாவது புறநானூற்றில் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய (இரண்டாம்) பாடலில் கீழ்க் கண்டவாறு கூறப்படுகிறது: "அலங்கு உளைப் புரவி ஐவரொடு சினைஇ, நிலம் தலைக்கொண்ட பொலம் பூந் தும்பை, ஈர்-ஐம்பதின்மரும் பொருது, களத்து ஒழிய, பெருஞ்சோற்று மிகு பதம் வரையாது கொடுத்தோய்!" - இதன் பொருள், "நூற்றுவரை ஐவர் வென்ற போரில் 'பெருஞ்சோறு' அளித்தவனே" என்பது. ஐந்து, நூறு என்னும் எண்களைக் கண்ணுற்றதும் இவர்களைப் பாண்டவர் என்றும் கௌரவர் என்றும் கருதி இக்கதை பாரதப் போரோடு தொடர்புடையது என்று கருதிவிட்டனர் சிலர். ஆனால், நூற்றுவர் என்பது சதகர்னிகளையும் ஐவர் என்பது தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐம்பெரும் வேளிரையும், குறிப்பதாகக் கொள்ள வேண்டும்."[8]

இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு நோக்கினால், சாதவாஹனர் தமிழ்நாட்டின் வடபகுதி மீது படையெடுத்து வந்தபோது

சேர மன்னர் தலைமையில் ஐம்பெரும் வேளிர் ஒன்று சேர்ந்து அத்தாக்குதலைத் தவிர்த்தனர் என்பது பெறப்படும். மேலும், இந்நிகழ்ச்சி கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்திருத்தல் கூடும்.

பிந்துசாரர் காலத்திலேயே மௌரியப் படையெடுப்பினைத் தடுத்து நிறுத்தத் தமிழர் செய்து கொண்டிருந்த தற்காப்பு முயற்சிகள் சாதவாஹனர் தாக்குதலை முறியடிக்கப் பயன்பட்டன. இக்காரணத்தால் தான், தக்காணம் முழுவதையும் தமது அடிக்கீழ்ப்படுத்திய சாதவாஹனரும் தமிழகத்தை வென்று ஆளவில்லை. தமிழ் வேந்தரது பேராற்றலை உணர்ந்திருந்த சாதவாஹனர் கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் செங்குட்டுவனோடு நட்புப் பூண்டிருந்தது இயல்பான ஒன்று என்பது எளிதில் புலப்படும்.

கி.மு.இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கலிங்கத்தை ஆண்ட காரவேலர் என்னும் வல்லரசர் ஒருவர் ஹத்திகும்பா என்னும் இடத்தில் ஒரு பாறையில் முக்கியமான கல்வெட்டு ஒன்றினைச் செதுக்கி வைத்துள்ளார். இக்கல்வெட்டு சுமார் கி.மு. 175-இல் செதுக்கப்பட்டது என்று கொள்ளலாம்.[9] இக்கல்வெட்டில் சில மிக முக்கியமான செய்திகள் கூறப்பட்டுள்ளன:

1. காரவேலர் பாடலிபுத்திரம் வரை படை கொண்டு சென்று வென்று மீண்டவர்.
2. கிழக்கு நோக்கி முன்னேறி வந்த சாதவாஹனர் படைகளை முறியடித்து விரட்டினவர்.
3. இக்கல்வெட்டுச் செதுக்கப்படுவதற்கு 113 ஆண்டுகளுக்கு முன்பு தமிழக வேந்தர் அமைத்துக் கொண்டிருந்த இராணுவத் தற்காப்புக் கூட்டமைப்பினைத் தகர்த்து எறிந்தவர்.

இவையேயன்றி வேறு சில செய்திகளும் இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளன. என்றாலும், இவையே இவ்வாய்விற்குப் போதுமானவையாகும்.

கி.மு. 175-இல் செதுக்கப்பட்ட இக்கல்வெட்டின் படி, 113 ஆண்டுகளுக்கு முன்பு தமிழக வேந்தர் தம்மிடையே ஒரு கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்திருப்பார்களேயானால் அது கி.மு. 288-ல் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும். அது மௌரியப் பேரரசில் பிந்துசாரர் ஆட்சிக் காலமாகும். பிந்துசாரர் தென்னாட்டின் மீது படையெடுத்து மைசூர் வரையில் வென்று தமது பேரரசில் சேர்த்துக் கொண்டமை வரலாறறிந்தது. அப்போது அம்மௌரியர்

தாக்குதலைச் சமாளிக்கவே தமிழக வேந்தர் கூட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது என்பது தெளிவு. இக்கூட்டணியின் தலைவர்களாகவே சேரன் செங்குட்டுவனும், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் வடவர்களோடு போர் செய்தார்கள் என்று கருதலாம். இக்கூட்டணி தொடங்கியபோது அதில் சேர, சோழ, பாண்டியர், சதிய புத்ரர் (அதியர்) ஆகிய நால்வர் இருந்திருக்க வேண்டும். காலப்போக்கில் சதிய புத்ரர் செல்வாக்குக் குன்றி, பாண்டியருக்கு அடங்கி வாழவே, கூட்டணியில் சேர, சோழ, பாண்டியராகிய மூவரே அங்கம் வகித்தனர். இம்மௌரியர் படையெடுப்பையும், மூவேந்தரும் தமிழகத்தின் எல்லையைக் காத்து வந்ததையும் மாமூலனார் பின்வரும் அகநானூற்றுப் பாடலடிகளின் வழி குறிப்பிட்டுள்ளார்:

முரண் மிகு வடுகர் முன்னுற, மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனி இருங் குன்றத்து,
ஒண் கதிர்த் திகிரி உருளிய குறைத்த
அறை இறந்து, அவரோ சென்றனர் (281:8-12)

சென்றார் என்பு இலர் - தோழி! - வென்றியொடு
....
தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழி பெயர் தேஎத்த பல் மலை இறந்தே (31:12.14-15)

இப்பாடலடிகள், நிகழ் காலத்தில் தமிழக வேந்தர் கூட்டணியைக் குறிப்பிடுவதால், மாமூலனார் காலத்தில் கூட்டணி இருந்தது என்று கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மாமூலனார் காலம் கி.மு. மூன்றாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டு என்று அறியலாம். மேலும், இக்கூட்டணியின் வலுவைத் தகர்த்த தற்பெருமையைக் காரவேலர் பாராட்டிக்கொள்கிறார். இதனை ஹத்திகும்பா கல்வெட்டினால் அறியமுடிகின்றது.

ஆகவே, சங்க இலக்கியத்திலிருந்து அறியக்கூடிய விளக்கமான அரசியல் செய்திகளுக்கு முற்பட்ட தமிழகத்தில் நிகழ்ந்தவற்றை சுருக்கமாகக் காணலாம். 1.கி.மு.4-ஆம் நூற்றாண்டில் மெகஸ்தனிஸும், கௌடில்யரும் பாண்டியர் அரசைப் பற்றி அறிந்திருந்தனர்; 2. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் பிந்துசாரர் தென்னகத்தைப் படையெடுத்துத் தாக்கிய காலத்தில் தமிழ் வேந்தர்கள் ஒரு தற்காப்பு ஒப்பந்தம் செய்து கொண்டு ராணுவ ஒற்றுமையால் மௌரியர் படையெடுப்பை முறியடித்தனர்; 3. கி.மு. மூன்று அல்லது இரண்டாம் நூற்றாண்டில்

சாதவாஹனர் தமிழ்நாட்டின் மீது தாக்குதல் நடத்தியபோது சேரமன்னர் தலைமயில் ஐம்பெரும் வேளிரும் சேர்ந்து அத்தாக்குதலை முறியடித்ததோடு சாதவாஹனரையும் தோற்கடித்தனர்; 4.கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காரவேலர் தமிழக வேந்தரது தற்காப்புக் கூட்டணியைத் தகர்த்துவிட்டார்.

சாதவாஹனரைத் தோற்கடித்த ஐம்பெரும் வேளிருக்கும் தலைமை பூண்ட உதியன்சேரல், பெருஞ்சோற்று உதியன் சேரல் என்ற புகழ்ப்பெயர் கொண்ட சேரமன்னன். இவன் வேறு; பதிற்றுப்பத்து இரண்டாம் பத்துப் பதிகத்தில் இமயவரம்பனின் தந்தையாகப் பேசப்படும் உதியன் சேரல் வேறு. இமயவரம்பனின் தந்தை, பெருஞ்சோற்று உதியன் சேரலுக்கு ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிந்தியவன். இனி, மூவேந்தர் அரசு ஒற்றைப் பேரரசாக மாறாமைக்குரிய காரணத்தை அறிய சங்ககாலச் சேர, சோழ, பாண்டியர்களின் அரசியல் வரலாற்றினைக் காணலாம்.

அடிக்குறிப்புக்கள்:

1. அக., 69:10-12; 251:10-14; 281:8-12; புற., 175:6-10.
2. எடுத்தாளப்பட்டது, கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு (தொகுதி I), ப.138.
3. மேலது., ப.138.
4. எடுத்தாளப்பட்டது, ந.சுப்ரமண்யன், தமிழக வரலாறு, ப.40.
5. எடுத்தாளப்பட்டது, வி.பி. புருஷோத்தம், சங்க கால மன்னர் கால நிலை வரலாறு, ப.50.
6. மேலது., பக். 50-51.
7. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு (தொகுதி I), ப.140.
8. ந.சுப்ரமண்யன், தமிழக வரலாறு, ப.43.
9. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு (தொகுதி I), ப.183.

3. மூவேந்தர் அரசு ஒற்றைப் பேரரசாக மாறாமை

1. மூவேந்தர்களின் அரசியல் வரலாறு:

தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டு பழம்பெரும் மன்னர்களான முடியுடை மூவேந்தரைச் சேர, சோழ, பாண்டியர் என்று குறிப்பிடுதல் ஒரு மரபாதலின் முதற்கண் சேர வேந்தரது அரசியல் வரலாற்றினைக் காணலாம்.

(i) சேர வேந்தரது அரசியல் வரலாறு:

சேரரது அரசியல் வரலாற்றைப் பற்றிய செய்திகள் சோழ, பாண்டியர்களைவிடச் சற்று அதிகமாகவே கிடைத்துள்ளன. இதற்கு முக்கியமான காரணம் சங்கத் தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து முற்றிலுமாக சேரமன்னர்களது வெற்றி, கொடை என்பவற்றைப் பற்றியே பேசுகின்றது. அத்தொகை நூலில் பத்துப் பாடல்களைக் கொண்ட பத்துப் பிரிவுகள் இருக்கின்றன. ஆக அதில் நூறு பாடல்கள் இருத்தல் வேண்டும். ஆயினும், முதல் பத்தும் இறுதிப் பத்தும் நீங்கலாக இடைப்பட்ட எட்டுப் பத்துக்கள் மட்டும் கிடைத்துள்ளன. ஒவ்வொரு பத்தும் வெவ்வேறு புலவர்களாற் பாடப்பட்டன. அப்புலவர்கள் அப்பத்துக்களில் தங்களை ஆதரித்த சேர வேந்தர்களைப் புகழ்ந்து பாடியுள்ளனர். அன்றியும், இப்பத்துக்களை வரிசைப் படுத்தியுள்ள முறையைக் காணும்போது அம்மன்னர்களிடையே இருந்த உறவும் புலப்படுகின்றது. சேரர் குலத்தின் பிற கிளைகளின் வரலாறு இன்னும் அறிய இயலாமலேயே உள்ளது. பதிற்றுப்பத்தின் உதவி கொண்டு சேரர் வரலாற்றினை முற்றிலும் எழுதிவிடமுடியாது. சிலப்பதிகாரத்திலும் சேரர் வரலாறு கூறப்பட்டுள்ளது. என்றாலும், அவ்விவரங்களை வைத்துக்கூட சேரர் வரலாற்றை இடையீடு இன்றி அறிந்து கொள்ளுதல் கடினமே.

வஞ்சியில் ஆண்ட உதியன் சேரல் மகன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பவன் தாய் வெளியன் வேண்மாள் நல்லினி என்பவள். அவள் வேளிர் குலத்தைச் சேர்ந்தவள். இதனால் சங்ககாலத்து முடியுடை வேந்தரும் வேளிரிடையே மகட்கொண்டனர் என்பது விளங்கும். வேளிர் சிற்றரசராயிருத்தலே மரபாயினும், முடியுடை வேந்தரோடு மண உறவு கொண்ட காரணத்தினால், அவர்களது அரசியல், சமூக நிலை உயர்ந்தே விளங்கிற்று எனலாம். இமயவரம்பவன்

இமயம்வரை படையெடுத்துச் சென்று, ஆரியரை வென்று இமய முகப்பில் சேரர்க்குரிய விற்கொடியைப் பொறித்து, யவனர்களைப் போரில் வென்று சிறைப் பிடித்து வந்து அவர்களை விடுவிக்கப் பொன்னும் மணியும் பெற்றான். பகைவரிடம் அவன் கைப்பற்றிய பொருள்களை தன் தலைநகரத்திலிருந்த எளியோர்க்குப் பகிர்ந்தளித்தான். அவன் போர்க்கள வெற்றியில் சிறந்தவன். இச்சேரலாதன் சோழ வேந்தன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளி என்பவனோடு பெரும் போர் புரிந்து பகைவனையும் கொன்று தானும் போர்க்களத்தே இறந்து போனான். இறந்து போன இரு வேந்தருடைய மனைவியரும் போர்க்களத்திலேயே கணவரோடு உடன் உயிர் நீத்தனர். இச்சேரல், ஐம்பத்தெட்டு ஆண்டு ஆட்சி புரிந்தான்.

இவ்விமயவரம்பன் ஒரு சோழ மன்னன் மகளான நற்சோணை என்பாளை மணந்து இரு புதல்வர்க்குத் தந்தையானான். கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனும், இளங்கோவடிகளுமே அவ்விரு புதல்வர்களாவர். ஒருமுறை இமயவரம்பனது அவைக்களத்திற்கு வந்த ஒரு சோதிடன், தம்பியான இளங்கோதான் அரசனாவான் என்று கூறினான். இதுகேட்டு மூத்தவனான செங்குட்டுவன் கனன்று நோக்கவே, இளையவன் இளவரசுப் பதவியையும் துறந்து துறவு மேற்கொண்டு இளங்கோவடிகள் என்னும் பெயரை ஏற்று குணவாயிற் கோட்டத்தில் தங்கியிருந்தான். அவனே, பிற்காலத்தில் சிலப்பதிகாரத்தை இயற்றியவன். உதியன் சேரலுக்கு இமயவரம்பனே அல்லாமல் வேறொரு மகனும் இருந்தான். அவன் பெயர் பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்பதாகும். இச்செல்கெழுகுட்வன் இமயவரம்பனையடுத்துச் சேரமன்னன் ஆனான். அவன் உம்பற் காட்டைக் கைப்பற்றி அரசில் சேர்த்துக் கொண்டான். அகப்பா என்னும் கோட்டையைப் பிடித்தான். தனது அரசைத் தன் குலத்தில் பிறந்தவரிடையே பகிர்ந்து கொண்டான். கீழைக் கடலிலிருந்தும் மேலைக் கடலிலிருந்தும் களிறுகள் கொண்ர்ந்த நீரில் ஒரே நாளில் குளித்தவன். அயிரை என்னும் மலைமீது எழுந்தருளியிருந்த இறைவியை வணங்கினான். அவனது புரோகிதர் நெடும்பாரதாயனார் என்பவனைப் பின்பற்றி அவனும் தவம் செய்யக் கானகம் சென்றான். அவன் இருபத்தைந்து ஆண்டுகள் ஆண்டான்.

இமயவரம்பனை அடுத்து, அவன் மகன் செங்குட்டுவனுக்குப் பதிலாக தம்பி செல்கெழுகுட்வன் எவ்வாறு அரசு கட்டில் ஏறினான் என்பது விளங்கவில்லை. சிற்றப்பனான செல்கெழுகுட்டுவன் ஆட்சி புரிந்து இறந்து போகும் வரையில் காத்திருந்து செங்குட்டுவன் ஆட்சிக்கு வந்தான் என்று கருதுதல் வேண்டும். ஒருவேளை செல்கெழுகுட்டுவன் சேர அரசைத் தன் குலத்தாரோடு பகிர்ந்து கொண்டான் என்று

கூறப்படுதலின் அவன் அரசுகட்டில் ஏறியவுடனேயே வஞ்சிப் பகுதியைச் செங்குட்வனுக்கே பகிர்ந்து விட்டு இரு அரசர்களும் சேர நாட்டில் வெவ்வேறு பகுதிகளை ஏறத்தாழ ஒரே சமயத்தில் ஆண்டிருக்கவும் கூடும்.

இமயவரம்பனுக்கும் தேவி என்னும் வேறொரு மனைவியால் இரு புதல்வர் இருந்தனர். இம்மனைவியின் பெயர் தேவி என்பதாகும். வேளாவிக் கோமான் பதுமன் என்று ஒரு வேளிர் தலைவன் இருந்தான். அவனுக்கு இரண்டு பெண்கள். அவ்விருவருக்குமே தேவி என்பது பெயர். அதில் ஒருத்தி இமயவரம்பனையும், மற்றொருத்தி செல்வக் கடுங்கோ வாழி ஆதன் என்பானையும் மணந்தனர். இமயவரம்பனுக்குத் தேவியிடம் பிறந்த புதல்வர்கள் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்பவர்களாவர். இவ்விருவரில், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்பவன் பூமி நாட்டினை வென்று கடம்பில் பெருவாயில் என்னுமிடத்தில் தனது பழைய பகைவனான நன்னன் என்பானை வென்று அவனது கடிமரமான வாகை மரத்தை அடியோடு வெட்டி வீழ்த்தினான். போர்க்கள வேள்விகள் செய்தான். இவன் முடிசூட்டு விழாவின்போது வழக்கமான கண்ணியும் முடியும் கிடையாமையின், களங்காய்க் கண்ணியை அணிந்து நாராலான முடியைத் தரித்ததனாலேயே இப்பெயர் பெற்றான். இவன் இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.

கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், இமயவரம்பனக்கும் மணக்கிள்ளி என்னும் ஒரு சோழ மன்னன் மகளுக்கும் பிறந்தவன் ஆவான். இவன், சங்ககாலச் சேரமன்னர் அனைவருள்ளும் பெரும் புகழ் பெற்றவன். அவன் தந்தையையும் விஞ்சிய வெற்றிகளை அடைந்தான். அவன் வட இந்தியாவிற்குச் சென்று பத்தினிக்கடவுளான கண்ணகிக்குக் கோயில் எடுப்பித்து, அதில் நிறுவ ஒரு கல் கொணர வேண்டி, வடநாடு சென்றான். அங்கு நூற்றுவர் கன்னர் நட்போடு கனக விசயர் என்னும் சிற்றரசர்களை வென்றான். இடும்பில் என்னுமிடத்தில் சில வேட்டுவரை வென்றான்; கொடுகூரை வென்றான்; பழையன் என்பானது கடிமரமான வேம்பினை வேரொடு தகர்த்தான்; அவன் மகளிரது கொய்த கூந்தலைக் கயிறாகத் திரித்து, அவ்வேம்பினை வண்டியில் வைத்து இழுத்து வந்த யானைகளைப் பிணிக்கப் பயன்படுத்தினான்; நேரி வாயிலில் சோழர் குலத்தைச் சேர்ந்த ஒன்பது இளவரசர்களை ஒருங்கே வென்றான்; கடலில் ஆதிக்கம் செலுத்தி வந்த கடம்பரைக் கடற்போரில் வென்று விரட்டினான். ஆதலால், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்னும் பெயரும் பெற்றான். இவன் இளங்கோ வேண்மாள் என்னும்

வேளிர்குலப் பெண்ணை மணந்தான். இவன் ஐம்பத்தைந்தாண்டுகள் ஆட்சி புரிந்தான். சேரன் செங்குட்டுவனது இமயச்செலவும் கண்ணகிக்குக் கோயில் எடுப்பித்ததும் சிலப்பதிகாரத்திலும் பதிற்றுப்பத்தின் பதிகத்திலும்தான் குறிக்கப்பட்டிருக்கிறன. ஆனால், பரணர் இயற்றிய பதிற்றுப்பத்துப் பாடல்கள் ஒன்றிலும் குறிப்பிடப் படவில்லை.

இச்செங்குட்டுவனுக்குக் குட்டுவன் சேரல் என்று ஒரு புதல்வன் இருந்தான். அவன் தாய் இளங்கோ வேண்மாள். பரணர் இயற்றிய பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்தின் பதிகத்தில் செங்குட்டுவன் தன் மகன் குட்டுவன் சேரலைப் பரணருக்கு அளித்தான் என்று கூறப்படுகிறது. பரணர், குட்டுவன் சேரலை ஏற்றுக் கொண்டார் என்றும் அப்பதிகம் கூறுகிறது; அதாவது அவ்விளங்கோவினைத் தமது மாணவனாக ஏற்றுக்கொண்டார் என்பது கருத்து. குட்டுவன் சேரலுக்குப் பிறகு சேரநாட்டினை யார் ஆண்டார் என்னும் குறிப்புப் பதிற்றுப்பத்தில் கிடைக்கவில்லை. குட்டுவன் சேரல் மீது பதிற்றுப்பத்தில் எந்தப் பத்தும் பாடப்படவில்லை யாதலால், அவன் அரசாண்டானா என்பதே தெரியாது. இமயவரம்பனிலிருந்து ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் வரை ஆண்ட ஆறு அரசர்கள் பதிற்றுப்பத்துச் செய்யுட்கள் அமைக்கப் பட்டுள்ள முறையில் அரசு கட்டில் ஏறினர் என்று கொள்வதில் பல இடையூறுகள் இருப்பதால் பதிற்றுப்பத்து அமைப்பிற்கும், சேர மன்னர்கள் அரசு கட்டில் ஏறிய முறைக்கும் தொடர்பு யாதொன்றும் இல்லையென்று விடுத்தலே நன்றாகும்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் சில மலை ஆடுகளைத் தண்ட காரண்யத்துக் கள்வரிடமிருந்து திரும்பக் கைப்பற்றினான். அவற்றை மேலைக் கரையிலுள்ள தொண்டியிற் சேர்ப்பித்தான்; பசுக்களைத் தம்மவரிடையே பகிர்ந்தான்; குடநாட்டிலுள்ள ஓரூரைப் பார்ப்பார்க்குப் பகிர்ந்தான்; வானவரம்பன் என்னும் பட்டத்தை மேற்கொண்டான். மழவரை வென்றான்; அவன் முப்பெத்தெட்டு ஆண்டுகள் அரசு புரிந்தான். இம்மன்னன் தண்ட காரண்யத்திலிருந்து ஆடுகளைக் கொண்டமையின் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்னும் பெயர் பெற்றான் என்று சிலர் கருதுவர். ஆயினும், பதிற்றுப்பத்து ஆறாம் பத்துப்பாடல்களிலிருந்து அவன் நாட்டியக்கலையில் பெரிதும் ஈடுபாடுடையன் என்பது விளங்குதலாலும் ‘ஆடு’ என்னும் சொல் ‘ஆட்ட’ த்தையும் குறிக்குமாதலாலும் அப்பெயர் பெற்றிருக்கக் கூடும்.

வேள்ஆவிக் கோமான் பதுமனின் மற்றொரு மகளான தேவி என்பாள் சேரமன்னன் செல்வக் கடுங்கோவாழியாதன் என்பானை மணந்தாள். ஒரு தந்தை என்பானுடைய மகள் பொறையன் பெருந்தேவியை மணந்த அந்துவன் என்பானது மகனே இச்செல்வக்கடுங்கோ.

செல்வக்கடுங்கோ தன் நாட்டில் பல ஊர்களை நிர்மாணித்து, பகைவரை வென்று, வேத வேள்விகள் பல புரிந்து, திருமாலிடம் பக்தி பூண்டிருந்து அக்கடவுளுக்கு ஓகந்தூர் என்னும் கிராமத்தை மாணியமாக விட்டுச் செங்கோல் செலுத்தியவன். அவன் தந்தையான அந்துவன் சேரல் இரும்பொறையும் சோழன் பெருநற்கிள்ளியும் பகைவர்கள். செல்வக்கடுங்கோ சிக்கற்பள்ளி என்னும் ஊரில் இறந்தான். அவன் ஆண்டது இருபந்தைந்து ஆண்டுகள்.

செல்வக்கடுங்கோவிற்குத் தேவியிடம் பெருஞ் சேரல் இரும்பொறை என்றொரு மகன் பிறந்தான். இவன் சேரரில் இரும்பொறைக் குடியைச் சேர்ந்தவன். இவனையே தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்பர். இவன் தகடூரில் அரசு புரிந்து வந்த அதியமான் நெடுமான் அஞ்சியை வென்று அக்கோட்டையை அழித்துப் பெரும் புகழ் எய்தியவன். இச்செய்திகள் அரிசில் கிழார், பொன் முடியார் முதலிய சங்கப் புலவர்கள் சேர்ந்து எழுதிய தகடூர் யாத்திரை என்னும் காப்பியத்திற் காணப்படும்; இவன் கொல்லி மலையில் ஏனைய முடியுடை வேந்தர் இருவரையும் வென்று போர் முரசையும், குடையையும் கைப்பற்றினான். அரிசில் கிழார் பெருஞ்சேரல் இரும் பொறையைப் பதிற்றுப்பத்தில் பாடியுள்ளார். இவரே தகடூர் யாத்திரையில் சில பகுதிகளையும் இயற்றியுள்ளார். ஆதலால் அக்காப்பியம் தகடூர் வீழ்ச்சியடைந்த காலத்திலேயே இயற்றப்பட்டது என்பதில் ஐயமில்லை. செல்வக் கடுங்கோ, மையூர்கிழான் மகள் வேண்மாள் அந்துவன் செள்ளை என்பாளை மணந்து புத்திரகாமேஷ்டி என்னும் வேத வேள்வியை இயற்றி, இளம் சேரல் இரும்பொறையைப் பெற்றான். இவன், கழுவுள் என்னும் இடையர் தலைவனுடைய கோட்டையைத் தகர்த்து அவனை வென்றான். இவன் அறிவுரை கேட்டு இவனது புரோகிதனான பாரதாயனார் (பாரத்துவாசனார்) என்பார் உலகு துறந்தார்; அவரைப் பின்பற்றி மன்னனும் உலகு துறந்தான். இவன் பதினேழு ஆண்டுகள் அரசு கட்டிலில் வீற்றிருந்தான்.

இவன் மகன் இளஞ்சேரல் இரும்பொறை சோழ, பாண்டிய மன்னர்களை வென்றான்; விச்சிமலைத் தலைவனை வென்று ஐந்து கோட்டைகளைக் கைப்பற்றினான். பொத்தி என்னும் புலவரை ஆதரித்த கோப்பெருஞ்சோழன் வஞ்சியில் வென்றான். வித்தை என்னும் புலவரை ஆதரித்த இளம்பழையன் மாறன் என்பவனையும் வென்றான். இவன் மந்திர மரபில் கடவுள் வழிபாடு நடத்தும் முறையை ஏற்படுத்தினான்; தனது புரோகிதனான மையூர் கிழானினும் மிக்குக் கல்விச் சிறப்புடையவன். இவன், வஞ்சி நகரில் பெருஞ் சதுக்கத்துப் பூதத்திற்கு வழிபாடு நிறுவினான். பதிற்றுப்பத்தின்

இறுதிப்பத்தான எட்டாம் பத்தில் பெருங்குன்றூர்கிழார் என்னும் புலவர் இளஞ்சேரல் இரும்பொறையைப் புகழ்ந்துள்ளார்.

ஐராவதம் மகாதேவன் போன்ற தொல்பொருளியலார் பதிற்றுப்பத்திற் கிடைக்கும் சேரர் குலமுறை புகளூரில் காணப்படும் ஒரு தமிழ் - பிராமிக் கல்வெட்டுச் செய்திகளால் வற்புறுத்தப் பெறுகின்றது என்பார். புகளூர் கல்வெட்டுக் கூறுவதாவது: "யாற்றூரைச் சேர்ந்த சமணமுனி செங்காயபனது இருக்கை: இக்கல் ஆதன் செல் இரும்பொறையின் மகன் பெருங்கடுங்கோவின் மகன் இளங்கடுங்கோ என்பானால் அவன் இளங்கோப் பதவி எய்திய போது வெட்டப்பட்டது."[1] இக்கல்வெட்டிலிருந்து கீழ்க்கண்ட குலமுறை விளங்கும்:

1. ஆதன்செல் இரும்பொறை
2. பெருங்கடுங்கேர்
3. இளங்கடுங்கோ.

பதிற்றுப்பத்தில் கீழ்க்கண்ட குலமுறைத் தோன்றுகிறது:

1. செல்வக்கடுங்கோவாழி ஆதன்
2. பெருஞ்சேரல் இரும்பொறை
3. இளஞ்சேரல் இரும்பொறை

இக்கல்வெட்டு கி.பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர் தொல்பொருளியலார். அரசியல் வரலாற்றுக் கணக்குப்படி இம்மன்னர்கள் கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆண்டிருக்க வேண்டும்.

பதிற்றுப்பத்தின் பதிகங்கள் அப்பத்துக்கள் எழுதப்பெற்ற சூழ்நிலையை விளக்குவதோடு மன்னர் பெயர், புலவர் பெயர், மன்னரது வெற்றிகள், அவர் ஆண்ட ஆண்டுக் கணக்கு, புலவர் பெற்ற பரிசில் என்பன கூறப்படுகின்றன. இப்பதிகங்களால் அறிந்து கொள்ளும் விவரங்களைக் கீழ்வரும் பட்டியலில் காணலாம்:

	சேரன் பெயர்	பு. பெயர்	ஆட்சிக் காலம்	பாடிப்பெற்ற பரிசில்
1.	உதியன் சேரல்	-	-	-
2.	இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்	குமட்டூர்க் கண்ணனார்	58 ஆண்டுகள்	உம்பர்காட்டில் வரி இல்லாமல் பிரம்மதாயமாக 500 ஊர்கள் (38 ஆண்டுகளுக்கு) தென்னாட்டு வருவாயில் பகுதி (உம்பற்காடு - யானைமலைப்பகுதி)
3.	பல்யானைச் செல் கெழு குட்டுவன்	பாலைக்கௌதமனார்	25 ஆண்டுகள்	ஒன்பது பெருவேள்வி வேட்டபின் புலவரும் அவர் மனையாளும் மறைந்தனர்.
4.	களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்	காப்பியாற்றுக் காப்பியனார்	25 ஆண்டுகள்	நாற்பதாயிரம் பொற் காசுகள். அரசில் பகுதி.
5.	கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்	பரணர்	55 ஆண்டுகள்	உம்பற்காட்டு வருவாயும், இளங்கோகுட்டுவன் சேரலும் (மாணவனாக).
6.	ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்	காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்	38 ஆண்டுகள்	அணிகலனுக்காக ஒன்பது காப்பொன். நூறாயிரம் காணம் பொன். மன்னன் அருகில் வீற்றிருக்கும் உரிமை.
7.	செல்வக்கடுங்கோ வாழி ஆதன்	கபிலர்	25 ஆண்டுகள்	சில்லறைச் செலவுக்காக நூறாயிரம் காணம் பொன். நன்றா என்னும் குன்றின் மீது மன்னனும் புலவரும் ஏறி நின்று கண்ட நாடு முழுவதும்.
8.	பெருஞ்சேரல் இரும்பொறை	அரிசில் கிழார்	17 ஆண்டுகள்	அரசனும் அரசியும் அரண்மனையை விட்டு வெளியே வந்து அரசைப் புலவருக்குக் கொடுத்தது நூறாயிரம் காணம் பொன். புலவர் அரசு துறந்து மன்னனுடைய மந்திரியானார்.
9.	குடக்கோ இளஞ் சேரல் இரும்பொறை	பெருங்குன்றூர்க் கிழார்	16 ஆண்டுகள்	முப்பத்தீராயிரம் காணம் பொன்னும்; புலவர் அறியாமல் அவருக்கு வீடும் செல்வமும் அளவிறந்த அணிகலனும்.

இப்பரிசில்களின் செய்திகளைக் காண்போர் ஒரு வேளை அவை மிகைக் கூற்றுக்களாயிருக்கலாமோ என்று ஐயுறக்கூடும். ஆயினும், அவை உண்மையாகவே இருந்திருத்தல் கூடும். பொது வரிப்பணத்தை மன்னன் அல்லது அரசு எவ்வகையில் எவ்வளவு செலவிடுகின்றது என்பதைக் கண்காணிக்க அக்காலத்தில் தணிக்கை முறையொன்று இல்லை என்பதை நினைவு கூர்தல் வேண்டும்.

பதிற்றுப்பத்தில் கூறப்பட்டுள்ள சேர மன்னர்களில் கீழ்க்காணப் படுவோர் ஆண்டிருக்கக் கூடிய காலவரையறையை ஏறத்தாழக் குறிக்கலாம்:

(சுமார் கணக்கீடு)

உதியன் சேரல்	கி.பி.27 (ஏறத்தாழ)	
இமயவரம்பன்	27-85	”
பல்யானைச் செல்கெழு குட்டுவன்	85-110	”
களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்	110-135	”
செங்குட்டுவன்	135-190	”

இக்காலவரையறை செங்குட்டுவன் - கயவாகு உடன் காலக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பெறுகின்றது. கயவாகு காலம் தெரிவதால் செங்குட்டுவன் காலம் நிர்ணயிக்கப் படலாம். பரணர் செங்குட்டுவன் காலத்தவர். அவர் நெடுநாள் வாழ்ந்த புலவர். செங்குட்வன் இமயச் செலவு, கண்ணகிக்குக் கோயில் எடுப்பித்தல் முதலியன செய்தற்கு முன்பே இறந்துபட்டவர். அவர் காலத்தை ஏறக்குறைய கி.பி. 100-180 என்று கொள்ளலாம். கபிலர் பரணரின் சம காலத்தவர். அவர் செல்வக்கடுங்கோ அவைக்களத்தில் பாரி இறந்த பிறகு சென்றிருந்தவர். ஆகையால் அவர் கி.பி.175-200-இல் அச்சேரன் அவைக்களத்திருந்ததாகக் கொள்ளலாம். அச்சேரன் மகன் பெருஞ்சேரல் இரும்பொறை ஏறக்குறைய கி.பி. 200-217 லும், இளஞ்சேரல் இரும்பொறை ஏறக்குறைய கி.பி.217-233 லும் ஆட்சி நடத்தியதாகக் கொள்ளலாம்.

சேரமன்னர்கள் இரண்டு தலைநகரங்களில் இருந்து ஆண்டனர். வஞ்சி (இன்றைய திருச்சி மாவட்டத்திலுள்ள கரூர்) உள்நாட்டுத் தலைநகரமாகவும், தொண்டி துறைமுக (மாற்று)த் தலைநகராகவும் விளங்கின. சேரர் வஞ்சி இன்றையக் கரூர்தானா என்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார் போன்றோர் வஞ்சி என்பது மேலைக் கரையில் உள்ள கிராங்கனூர் (திரு அஞ்சைக்களம்) தான் என்பர்.[2] கே.ஏ.நீலகண்டசாஸ்திரி போன்ற

அறிஞர்கள் வஞ்சி கரூர் தான் என்பர்.[3] பிந்தையோர் கூற்றே வலுவுடையதாகக் காணப்படுகின்றது. ஏனெனில், கிராங்கனூரை வஞ்சி என்போர் திருஅஞ்சைக்களத்தைத் திருவஞ்சைக்களம் என்று மயங்கினர். கரூர் அருகே ரோமானியக் காசுகள் கிடைப்பதும், தாலமி என்னும் கிரேக்க புவியியலார் சேரர் தலைநகரைக் ‘கொரூரா’ என்றதும், கரூர்தான் வஞ்சி என்று நிறுவப் போதுமான சான்றுகளாகும்.

சேரர் குலத்தில் இரும்பொறை என்னும் வமிசத்தைச் சேர்ந்த பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆகிய இருவரும் பதிற்றுப்பத்தில் குறிக்கப்பட்டுள்ளமை வெளிப்படை. இவர்களைத் தவிர வேறு இரு இரும்பொறைகளும் அரசு செலுத்தியுள்ளனர். அவர்கள் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை, கணைக்கால் இரும்பொறை என்பவர்கள். யானைக்கட்சேய் ஏறக்குறைய கி.பி. 200-275 இல் ஆட்சி செலுத்தியிருக்கலாம். இவ்விரும்பொறை ஒரு முறை பாண்டியன் தலையாலங்கானத்து நெடுஞ்செழியனோடு போர் புரிந்து பகைவராற் கோட்பட்டுச் சிறையிலிருந்தான். ஆயினும், சிறையிருந்த அவ்விரும்பொறை சிறையினின்றும் தப்பிப்போய் மறுபடியும் சேரர் அரசினை மேற்கொண்ட செய்தியும் கூறப்படுகின்றது. கூடலூர்க் கிழார் என்னும் புலவர் யானைக்கட்சேய் இறந்தநாள் செய்திகளை குறிப்பிட்டுப் பாடியுள்ள பாடலில் (புற.,229) அம்மன்னன் இறந்துபட்டமைக்குப் பெரிதும் வருந்துகின்றார்.

அப்பாடலில், கூடலூர்க்கிழார் கூறியுள்ள செய்திகளை மட்டும் கொண்டு அம்மன்னன் இறந்த நாளை நிர்ணயித்துவிட முடியாது. யானைக்கட்சேய் தொண்டியிலிருந்து ஆண்டிருத்தல் கூடும். அவனைக் கொல்லிமலைத் தலைவன் என்று புலவர்கள் போற்றுவதால் அவன்நாடு அகன்று விரிந்ததாயிருத்தல் வேண்டும் என்பது விளங்கும். ஒருமுறை அவன், விளங்கில் என்னுமிடத்தைப் பகைவர்களிடமிருந்து கைப்பற்றினான். அம்மன்னன், சோழன் ராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியோடு பொருதான். அவன், ஐங்குறுநூறு என்னும் சங்கத் தொகை நூலைக் கூடலூர்க் கிழாரைக் கொண்டு தொகுப்பித்தான். அவன் கபிலரையும் ஆதரித்தான்.

கணைக்கால் இரும்பொறை என்னும் சேரமன்னன் சோழன் செங்கணானோடு கழுமலம் என்னுமிடத்தில் பொருது தோற்றுப் பகைவனால் சிறைப் பிடிக்கப்பட்டுக் குடவாயிலில் சிறையிருந்தான். பொய்கையார் என்னும் புலவர், சோழன் பெருமைகளைப் புகழ்ந்து களவழி நாற்பது என்னும் நூலைப் பாடிக் கணைக்கால் இரும்பொறையைச் சிறைமீட்டார். இச்சோழன் செங்கணான்தான்

பெரியபுராணத்தில் சேக்கிழாரால் பாடப்பெற்ற கோச்செங்கட் சோழன் என்பவன். ஆனால், பொய்கையார் என்னும் இப்புலவர் பொய்கையாழ்வார் அல்லர். இக்கணைக்கால் இரும்பொறைதான் கடைசி இரும்பொறை மன்னன்; இவன் கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆண்டவன் கழுமலத்து நிகழ்ந்த போரைப் பற்றிய பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன.

ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரன் சங்ககாலத்தில் முன்னதாகவே அரசு செலுத்தியவனாதல் வேண்டும். பிற சேரமன்னர்களில் குட்டுவன் கோதை, சேரமான் கோக்கோதை மார்பன், பாலை பாடிய பெருங்கடுங்கோ, சேரமான் மாரிவெண்கோ, சேரமான் வஞ்சன் என்போரைக் குறிப்பிட வேண்டும். இவர்களில் பாலைபாடிய பெருங்கடுங்கோ கலித்தொகையில் பாலைக்கலி பாடியவன்; சேரமான் மாரி வெண்கோ பாண்டியன் உக்ரப் பெருவழுதி, ராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பவர்களின் உடன் காலத்தவன். சேரமான் பெருஞ்சேரலாதன் இமயவரம்பன் உடன் காலத்தவன்; இவன் சோழன் கரிகாலனோடு பொருது புறப்புண்பட்டு நாணித் தற்கொலை செய்து கொண்டான்.

முடியுடை மூவேந்தரான சேர, சோழ, பாண்டியர்க்கு உட்பட்டுச் சிற்றரசர்களாக ஆங்காங்கு ஆட்சி புரிந்து வந்தவர்களில் வேளிர் என்னும் கூட்டத்தார் முக்கியமானவர்கள். தொல்காப்பியத்திற்கு உரைவகுத்த நச்சினார்க்கினியர், இவ்வேளிர் என்போர் அகத்தியரோடு தமிழ்நாட்டிற்கு வந்தவர்கள் என்று ஒரு வரலாறு கூறுவார். இவர்கள் தமிழகத்தில் பல இடங்களிலும் பரவி ஆங்காங்குச் சிற்றரசுகளை அமைத்துக் கொண்டு கோட்டைகளைக் கட்டிக்கொண்டு ஆட்சி செலுத்தி வந்தனர். இவர்கள் போரிலும், ஈகையிலும் மூவேந்தரையும் விஞ்சிப் புகழ் பெற்றனர். இவர்கள் தம்மிடையேயும் ஒவ்வொரு சமயங்களில் வேந்தர்களோடும் கூடப் போரிட்டவாறு இருந்தார்கள்.

சேரநாட்டில் ஆண்டு வந்த வேளிரில் ஆய் என்பான் ஒருவன்; அவன் மதுரைக்குத் தெற்கேயுள்ள பொதியில் மலைப் பக்கத்தில் ஆட்சி செய்தவன். அவன் நாட்டைக் கிரேக்க எழுத்தாளர் தாலமி, ஆய் (*Aioi*) என்பானைக் குமரியாண்ட மன்னன் என்பார்.[4] ஆவி என்னும் சொல் ஆய் என்று மருவிற்று எனலாம். வேளாவிக் கோமான் பதுமன் ஆவியர் குலத்தைச் சார்ந்தவன். பழனியை ஆவிநன்குடி என்பர். இடையர் சாதியைக் குறிக்கும் ஆயரும், ஆவியரும் தொடர்புடையவராக இருக்கலாம். ஆயை அண்டிரன் என்றும் அறிவர்; அவன் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் புலவரை ஆதரித்தவன். ஒரு நாகர் தலைவன் தனக்களித்த நீலத்துகில் ஒன்றை

இவன், சிவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்துவிட்ட செய்தி பேசப்படுகிறது. ஆய் அண்டிரன், கொங்கர் கோனை வென்று மேல் கடற்பக்கம் ஓட்டினான். அவன், ஆய் குடியிலிருந்து ஆண்டவன். அவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். கடையெழு வள்ளல்கள் ஆய், பேகன், பாரி, காரி, அதியன், நல்லி, ஓரி என்பவர்களாவர்.

ஔவையாரால் புகழ்ந்து பாடப்பெற்ற அதியமான் நெடுமானஞ்சி தகடூரையும், குதிரை மலையையும் ஆண்டவன். அவன் மழவர் கோமான். ஒரு முறை இவ்வள்ளல் சாகாவரம் அளிக்க வல்ல ஒரு நெல்லிக்கனியைத் தான் உண்ணாது ஔவைக்கு அளித்த பெருமையுடையவன். இவன் மகன் பொகுட்டெமினி என்பவன். அதியமான் சேரர்க்கு உட்பட்டு ஆண்ட சிற்றரசனாயினும், கோவலூரையாண்ட மலையமானைப் போரில் வென்றவன். காஞ்சியில் ஆண்ட தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையார் அதியமானைப் புகழ்ந்து பேசித் தொண்டைமான் படைக்கலக் கொட்டிலிலுள்ள படைக்கலங்கள் பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டினார். பெருஞ்சேரல் இரும்பொறை தகடூர் மீது படையெடுத்துச் சென்று அதியமானை வென்று கொன்று தகடூரை அழித்த செய்தி தகடூர் யாத்திரையில் கூறப்படுகின்றது.

வையாவிக் கோப்பெரும் பேகன் மலைநாட்டிலுள்ள நல்லூர் என்னும் தலைநகரிலிருந்து ஆண்டவன். இவனும் ஆவியர் குடியைச் சார்ந்தவனே. இவன் ஒருமுறை குளிரால் நடுங்கிய மயில் ஒன்றிற்குத் தனது போர்வையை அளித்து வள்ளல் என்று பெயர் பெற்றவன். இவன் தனது மனையாள் கண்ணகி என்பவளைத் துறந்திருந்தான். கபிலர் முதலிய பெரும் புலவர்கள் இரந்தும் இவன் மனம் இரங்கியதாகத் தெரியவில்லை.

கடையெழு வள்ளல்களில் ஓரி அல்லது ஆதன் ஓரி என்பவனும் ஒருவன். இவன் கொல்லிமலைப் பகுதியின் தலைவன். இவன் குதிரைக்கும் ஓரி என்று பெயர். இவன் வில் வித்தையில் சிறந்தவன். ஆதலால், வல்வில் ஓரி எனவும் அழைக்கப்பட்டான். கோவலூரச் சிற்றரசனான காரி என்பவனால் போரில் கொல்லப்பட்டான்.

சங்க காலத்தில் நன்னன் என்னும் பெயரைக் கொண்ட சிற்றரசர்கள் பலர் இருந்தார்கள். சேரநாட்டின் வட மேற்குப் பகுதியில் ஆண்டு கொண்டிருந்து களங்காய்க்கண்ணியால் தோற்கடிக்கப்பட்டவன் ஒரு நன்னன். கொங்காணத்தை ஆண்ட நன்னன் ஒருவன்; அவன் புன்னாட்டின் மீது படை எடுத்தவன். புன்னாட்டினர்க்கு உதவியாக வந்தவன் ஆய் எயினன் என்பான்; நன்னனுக்கு ஆதரவு தந்தவன்

மிஞிலி (அல்லது ஞிமிலி); பாழி என்னுமிடத்தில் இவர்கள் போரிட்டார்கள். இப்போரில் ஆய் இறந்துபோனான். நன்னன் வெற்றி பெற்றான். தனது அரண்மனைத் தோட்டத்தில் பழுத்து விழுந்து கிடந்த ஒரு மாங்கனியை எடுத்துத் தின்ற குற்றத்திற்காக ஒரு சிறு பெண்ணைக் கொன்ற கொடியோன் ஒரு நன்னன். இவனை இகழ்ந்து பாடியோர் பல சங்கப் புலவர்கள். தொண்டை மண்டலத்திலுள்ள பல்குன்றக் கோட்டத்தை ஆண்ட நன்னன் வேறொருவன் இவனே மலைபடுகடாம் என்னும் பாடலின் தலைவன்.

கண்டீரக்கோப் பெருநள்ளி தொட்டி மலையை ஆண்டவன். அவனைப் பெரும்பாலும் நள்ளி என்பர். அவனால் ஆதரிக்கப்பட்ட புலவர் வன்பரணராவார். நள்ளி வறியவரின் நண்பன்; கற்றோரை ஆதரித்தவன்.

குதிரை மலையை ஆண்ட வள்ளல் பிட்டன் கொற்றன். அவன் சேரர் படைத்தலைவன். கொங்கர் கொங்கு நாட்டவர். அவர்கள் வலிமையான வீரர்கள். ஏனைய சிற்றரசர்களோடும் சேரர்களோடும் அவர்கள் அடிக்கடிப் போரிட்டார்கள்.

துளுநாட்டைச் சேர்ந்த கோசர்கள் (இவர்கள்தாம் அசோகர் கல்வெட்டுக்களில் கண்ட சதியபுத்ரர் என்று முன் பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளது). சேரநாட்டின் வடபகுதியைப் பல காலம் தங்கிச் சில பகுதிகளைத் தங்கள் ஆளுகைக்குள் அடக்கியவர்கள். இவர்கள் சார்பில், கொங்கு நாட்டையாண்ட கோசர்கள் கொங்கிளங்கோசர் எனப்பட்டார்கள். செங்குட்டுவன் காலத்தில் இவர்கள் சேர நாட்டின் ஒரு பகுதியை ஆண்டார்கள்.

கடம்பர் என்பார் புறநானூற்றில் தமிழகத்து நான்கு இராணுவக் குடிகளில் ஒருவர் என்று கூறப்படுவார்கள். அவர்கள் கடம்ப மரமாகிய 'தோற்ற'த்தை வழிபட்டார்கள். முருகன் கடம்பன் எனப்படுவான். முருகன் கடம்பரின் குல தெய்வம். இவர்கள், மைசூருக்குத் தெற்கேயுள்ள பகுதிகளில் வாழ்ந்தவர்கள். இவர்கள், மேலைக் கடற்கொள்ளைக்காரரர்கள். இவர்களைச் செங்குட்டுவன் கடற்போரில் வென்றான். தமிழக வரலாற்றின் இடைக்காலத்தில் கல்வெட்டுக்கள் வாயிலாக அறியப்படும் மயூரசர்மனின் குடியாகிய கதம்பர்கள், இக்கடம்பர்களின் வழிவந்தோரே என்பதில் ஐயமில்லை.

இதுகாறும் கூறிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சேர வேந்தர்களின் அரசியல் வரலாற்றை ஒருவாறு அறியமுடிகின்றது.

(ii) சோழ வேந்தரது அரசியல் வரலாறு:

சங்ககாலச் சோழர் வரலாறு அசோகர் கல்வெட்டுக்களிலும், சங்க இலக்கியத்திலும், பிற்காலச் சோழர் வரலாறு கலிங்கத்துப்பரணி, மூவருலா முதலிய நூல்களாலும் எண்ணிறந்த கல்வெட்டுக்களாலும் புலனாகின்றது. சிங்களத்து மகாவமிசமும் இடைக்காலப் பேரரசுச் சோழர் வரலாற்றை அறிய உதவுகின்றது.

சோழர் தம்மைச் சூரிய குலத்தவர் என்று கூறிக் கொண்டனர். தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன், காகந்தன், கவேரன், மனுநீதிகண்ட சோழன், காற்றை ஆடல் கொண்டவன், சமுத்ரஜித் என்போர் வரலாற்றுத் தொடக்ககாலச் சோழர்கள் ஆவர். சோழர்கள், தம்மைச் சிபி வமிசத்தினர் என்று கொள்வர்; சிபி வமிசத்தினர் செம்பியர் என்று அழைக்கப் பெறுவர். மனுச்சோழனைப் பற்றிப் பெரியபுராணம் கூறுகிறது. இவன் திருவாரூரிலிருந்து ஆண்டதாகவும், ஒரு கன்றினைத் தேரேற்றிக் கொன்றுவிட்ட காரணத்திற்காகத் தன் மகனையே அவ்வாறு தண்டிக்கத் துணிந்த நீதிவான் என்றும் புகழப்பட்டவன். மகாவமிசம், இலங்கையில் ஆண்ட ஏலாரா என்னும் தமிழ் மன்னன் ஒருவன் இத்தகைய நீதிச் செயலைப் புரிந்ததாகக் கூறுகிறது. இவ் ‘வாரூர’ (ஆலூரர) னே ஏலாராவாதல் கூடுமா என்பது ஆய்விற்குரியது. காகந்தன் பெயரால் காவிரிப்பூம்பட்டினம் காகந்தி நகரம் எனப்பட்டது. கவேரன் சோழ நாட்டிற்குக் காவிரியைக் கொணர்ந்தவன் என்பது ஒரு கதை.

சங்ககால வரலாற்று நிலையிலிருந்து பார்க்கும்போது சோழ நாட்டை ஆண்ட முதல் சோழமன்னன் உருவப்பஃறேர் இளம் சேட் சென்னி என்பதை அறியமுடிகின்றது. இவனை இளையோன் என்றும் கூறுவர். இவன் உறையூரிலிருந்து ஆண்டவன்; அழும்பில் வேளிரிடை மகட்கொண்டவன். இவன் காலத்தில் சோழ அரசு உறையூருக்குச் சற்று மேற்கேயிருந்து கீழைக்கடல் வரையில் பரவியிருந்ததே அன்றி, காவிரிக்கு வடபால் தொண்டை மண்டலம் முதலிய பகுதிகளை உள்ளடக்கவில்லை.

இவன் மகனான கரிகாலனே சங்ககாலச் சோழ மன்னர்களில் தலைசிறந்தவன். பிற்காலத் தமிழ்ச் சோழர்களும் தெலுங்குச் சோழர்களும் தங்களைக் கரிகாலனின் வழித்தோன்றல்கள் என்று கூறிக்கொள்வதில் பெருமையடைந்தனர். சிறுவயதில் எக்காரணத்தாலோ இவன் தனக்குரிய அரசினையிழந்து தன் மாமனான இரும்பிடர்த் தலையார் பாதுகாப்பில் மறைந்து வாழ்ந்து வரவேண்டியிருந்தது. சிறையிலிருந்து ஒருமுறை தப்பியோடிய போது நெருப்புப் பற்றிக்

கொண்டதால் கால் கரிந்து விடவே இவன் பெயர் கரிகாலன் என்றாயிற்று. இவன் தனது மாமனது உதவி கொண்டு மறுபடியும் உறையூரைக் கைப்பற்றி ஆண்டான். அப்போது அவனுக்கு வயது ஐந்து. ஆயினும் அவன் ஆட்சி, நீதியிலும் திறமையிலும் வழுவாது இருந்தது.

கரிகாலன் தொண்டை மண்டலம் வரை அக்காலத்தில் அடர்ந்திருந்த காடுகளை அழித்து மக்கள் வாழத்தகுந்த நாடாக்கினான். இம்முயற்சியில், அவன் சிங்களத் தீவின் மீது படையெடுத்துச் சென்று வென்று வந்தபோது, சிறைப்பிடித்து வந்த போர்க் கைதிகளைப் பயன்படுத்தினான். இவன் சிறந்த போர்வீரன். தஞ்சாவூரின் அருகிலுள்ள கோவில் வெண்ணி என்று இப்பொழுது அறியப்படும் வெண்ணி என்னும் ஊரில், இவன் இருபெரும் போர்களில் வெற்றி கண்டான். முதல் வெண்ணிப் போரில் பெருஞ்சேரலாதன் என்னும் சேர மன்னனையும், ஒரு பாண்டியனையும், பதினொரு வேளிரையும் புறங்கண்டான். இப்போரில்தான் புறப்புண் நாணிய பெருஞ்சேரலாதன் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான். அப்போது இவனைப் பாடியவர் வெண்ணிக் குயத்தியார் என்னும் புலவர். மற்றொரு வெண்ணிப் போரில் இவன் கண்ட வெற்றியால் தமிழகம் முழுவதும் இவன் ஆட்சியின் கீழ் வந்தது. வேறொரு சமயத்தில், வாகைப் பறந்தலை என்னுமிடத்தில் ஒன்பது சிற்றரசர்கள் இவனால் வெல்லப்பட்டனர்.

இவன், புகார் என்னும் காவிரிப் பூம்பட்டினத்தைப் பெரிய துறைமுகமாக அமைத்துச் சோழ அரசின் மாற்றுத் தலைநகராக அமைத்தான். வடக்கேயிருந்த அருவாளரும், தெற்கேயிருந்த ஒளியரும் இவன் ஆட்சிக்குட்பட்டனர். சிலப்பதிகாரம் முதலிய நூல்கள், இவன் இமயம் வரை படையெடுத்துச் சென்று இமய முகப்பில் புலிக் கொடியைப் பொறித்து வந்ததாகக் கூறுகின்றன. உருத்ரன் கண்ணனார் என்னும் புலவர் இவன் மீது பட்டினப்பாலையைப் பாடினார். அதற்கு அவர் பதினாறு லட்சம் பொற்காசு பெற்றதாக ஒரு கதை கூறும். கரிகாலனுக்குத் திருமாவளவன் என்பதும் ஒரு பெயர்.

கரிகாலனுக்குப் பின் சோழர் வரலாறு மறுபடியும் குழப்பமடைகிறது. அவனை அடுத்துச் சோழ அரசை ஆண்டவர்களைப் பற்றி உடனடியாக அறியமுடியவில்லை. ஆயினும், அடுத்துக் காணும் சோழர் குலமுறை, சங்ககாலச் சோழர் ஆட்சி வரன்முறையை ஒருவாறு விளக்கும். இவ்வரன் முறை சிலப்பதிகாரம், புறநானூறு முதலிய சங்கநூல்களிற் காணப்படும் குறிப்புக்களிலிருந்து பெறப்படுகிறது.

இமயவரம்பன் தந்தையான உதியன் சேரலுக்கு உடன் காலத்தவன் கரிகாலன். அவனுக்கு மணக்கிள்ளி, வேற்பஃறடக்கைப்

பெருவிறற்கிள்ளி என்று இருபுதல்வர் இருந்தனர். இவர்களில் முந்தியவன், உறையூரில் இருந்து ஆண்டவன். அவனுக்கு நெடுங்கிள்ளி என்று ஒரு மகனும், நற்சோணை என்றொரு மகளும் இருந்தனர். இந்நற்சோணை, இமயவரம்பனை மணந்து செங்குட்டுவனையும் இளங்கோ அடிகளையும் பெற்ற செய்தி முன்பே கூறப்பட்டது. நெடுங்கிள்ளியின் மகன் பெருநற்கிள்ளி என்பவன் ராசசூயம் என்னும் பெருவேள்வி இயற்றியவன். கரிகாலனது இரண்டாவது மகன் வேற்பஃறடக்கை என்பான் புகாரிலிருந்து ஆண்டான். அவனுக்குக் கிள்ளி வளவன், நலங்கிள்ளி சேட்சென்னி, மாவளத்தான் என்று மூன்று புதல்வர் இருந்தனர். கரிகாலன் இறந்தபோது நாட்டிற் குழப்பம் மிகுந்தது. அவன் இருமக்களில் மூத்தவனான மணக்கிள்ளி உறையூரி லிருந்தும், இளையவன் புகாரிலிருந்தும் ஆண்டனர். நெடுங்கிள்ளியும், நலங்கிள்ளியும் பெரியப்பன் மகனும், சிற்றப்பன் மகனுமாயிருப்பினும் ஒருவரோடொருவர் பகைத்துப் போரிட்டு நாட்டில் உள்நாட்டுப் போரை உண்டாக்கித் தீங்கு விளைவித்தனர். நெடுங்கிள்ளியைவிட நலங்கிள்ளி போரிற் சிறந்தவன். அவன் பலமுறை உறையூரை முற்றுகை யிட்டான். ஒருமுறை நெடுங்கிள்ளி தங்கியிருந்த ஆவூர்க் கோட்டையையும் அவன் முற்றுகையிட்டான். இச்சமயங்களி லெல்லாம் கோவூர்க்கிழார் என்னும் புலவர் இவர்களிடையே சந்து செய்விக்க முயன்றார். இளந்தத்தன் என்னும் ஒரு தலைவன், புகாரிலிருந்து உறையூர் வந்தானாக, அவனை ஒற்றன் என்று தவறாக எண்ணி யானையால் இடற முற்பட்டபோது நெடுங்கிள்ளியின் சினந்தணிவித்துப் புலவரைக் காத்தவர் கோவூர்க் கிழாரேயாவார். காரியாறு என்னுமிடத்தில் இவ்விரு கிள்ளிகளும் இறுதியாகப் பொருதனர். அப்போரில் நெடுங்கிள்ளி இறந்தான். அதனால், அவனைக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி என்பர். இப்போரில் கிள்ளிவளவன் சார்பில் நலங்கிள்ளி போரிட்டான்.

நெடுங்கிள்ளியை அடுத்து உறையூரை ஆண்டவன் அவன் மகன் ராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி. அவன் காலத்தில் சேர நாட்டில் மாரி வெண்கோவும், பாண்டிய நாட்டில் உக்கிரப் பெருவழுதியும் ஆட்சி புரிந்தனர். இவர்கள் யாவரும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்கள். தேர்வண்மலையன் என்னும் பெயர் பெற்ற மலையமான் திருமுடிக்காரி கோவலூரரையும் முள்ளூர் மலையையும் ஆண்டவன். ஒருமுறை இத்திருமுடிக்காரி பெருநற்கிள்ளிக்கு ஆதரவாகப் போரில் ஈடுபட்டு, மாந்தரன் சேரல் இரும்பொறையைத் தோற்கடித்தான். அதன் பிறகு தேர்வண்மலையன் இறந்துபோனான். அவன் மகன் திருக்கண்ணன் கோவலூரர்ச்

சிற்றரசனானான்; பிறகு ஒரு சமயம், பெருநற்கிள்ளி தனது பகைவர்க்கு அஞ்சித் தனது சிற்றரசனான திருக்கண்ணனிடமே தஞ்சம் புக வேண்டியதாயிற்று. இந்நிலையில்தான் செங்குட்டுவன் நேரிவாயில் போரில் ஒன்பது சோழர்களை வென்று பெருநற்கிள்ளிக்கு உதவினான். பெருநற்கிள்ளி செங்குட்டுவனிடம் நட்புப் பூண்டான்; அது மட்டும் அல்லாமல், உறையூரில் பத்தினிக் கடவுளுக்குக் கோவிலும் எடுப்பித்தான்.

புகாரில் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியை அடுத்துக் கிள்ளிவளவன் மன்னனானான். அவன் போரிலும் கொடையிலும் சிறந்தவன். அவன் பாடிய பாடல்கள் தொகை நூல்களிற் காணப்படுகிறது. வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர் வேண்டியபடி அவர்க்குச் செய்க்கடன் வீடு செய்தான். இவனே ஈழத்து நாகவாணிகனான வளைவணன் என்பானுடைய மகள் பீலிவளையை மணந்தவன்; இவன் அப்பீலிவளையால் பிறந்த இளந்திரையன் தொண்டை மண்டலத்தைக் காஞ்சியிலிருந்து ஆண்டான். மணிமேகலை கூறும் கதையினால் சோழருக்கும், தொண்டை மண்டலத்தை ஆண்ட திரையர்க்கும் மணவுறவினால் ஏற்பட்ட தொடர்பு அரசியலில் நீடித்தது என்று கருதலாம். இவன் தம்பி நலங்கிள்ளி, நெடுங்கிள்ளியைக் காரியாறு என்னுமிடத்தில் நடந்த போரில் வென்று கொன்றான். கிள்ளி வளவன் அரசாண்டு வந்த காலத்திலேயே நலங்கிள்ளி இவ்வெற்றியை எய்தினான் என்று கருத இடமேற்படுகிறது. நலங்கிள்ளி ஒருமுறை பாண்டிய நாட்டில் ஏழு கோட்டைகளைக் கைப்பற்றினான். அவனுக்குப் ‘புட்பகை, ‘சேட்சென்னி’ என்னும் பெயர்களும் உண்டு. அவனது நண்பரான உறையூர் முதுகண்ணன் சாத்தன் என்பவர் அவனைப் போர்ச் செயல்களில் ஈடுபடாமல் அமைதியாக ஆட்சி புரியுமாறு அறிவுறுத்தினான். இவன் தம்பியான மாவளத்தான் அரசு கட்டில் ஏறி ஆண்டானா என்பது பற்றி அறியமுடியவில்லை. அவன் கவறாடலில் விருப்பம் உடையவன் என்பது ஒரு புறநானூற்றுச் (43) செய்யுளால் விளங்குகிறது.

பிற்காலச் சோழர்களில் தொடக்ககாலத்தில் ஆண்ட தித்தன் தன் மகன் போரவைக் கோப்பெருநற்கிள்ளி என்பவனோடு பகைத்தான். நாடு கடத்தப்பட்ட போரவைக்கோ, முக்காவனாட்டு ஆமூர் மல்லன் என்பவனோடு மற்போர் புரிந்து அவனை வென்றான். அவனைக் காதலித்த நக்கண்ணையார் என்னும் பெண்பாற் புலவர் அவனைப் புகழ்ந்து பாடியுள்ளார். கோப்பெருஞ் சோழர் என்னும் இன்னொரு சோழ மன்னர் தனது இரு புதல்வர்களோடு பிணங்கிப் போரிட்டுத்

தோற்று வடக்கிருந்து உயிர்நீத்தார். இவரது உயிர் நண்பரான பிசிராந்தையார் என்பவர் அச்சோழனை நேரில் கண்டறியாராயினும் தாமும் பாண்டி நாட்டிலிருந்து சோழன் வடக்கிருந்த இடத்திற்கு வந்து வடக்கிருந்து உயிர்நீத்தார். இச்சோழ மன்னர் ஒரு காலத்தில் இளஞ்சேரல் இரும்பொறையால் தோற்கடிக்கப்பட்டவர்.

சங்ககாலத்துச் சோழமன்னர்கள் அனைவருள்ளும் கடைசியில் இருந்தவன் செங்கணான் என்பவன். இவன் சேரன் கணைக்கால் இரும்பொறையைக் கழுமலம் போரில் வென்று சிறையிருத்திப் பிறகு பொய்கையார் களவழி நாற்பது பாடித் தன்னைப் புகழவே அச்சேரற்குச் சிறை வீடு செய்தான். இவன்தான் கோச்செங்கட் சோழன் என்பவன். இவன் வரலாறு பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இவன் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் அரசு புரிந்திருக்க வேண்டும். சிலர், இவன் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இருந்ததாகக் கூறுதல் பொருந்தாது.

கோவலூரையாண்ட மலையமான்கள் சோழர்கட்குட்பட்ட சிற்றரசர்கள். இவர்கள், கரிகாலன் காலத்தில் இந்நிலையை எய்தியிருக்க வேண்டும். இவர்கள் பெரும்பாலும் சோழர்படைத் தலைவர்களாய் இருந்தனர்; ஆதலால், சோழிய ஏனாதி என்னும் பட்டம் பெற்றார்கள். இவர்களில், கடையெழு வள்ளல்களில் சேர்ந்த திருமுடிக்காரி ஒருவன். இக்காரி, அந்தணரை ஆதரித்துப் புலவரைப் போற்றியவன்; இவன் குதிரையும் காரி என்னும் பெயரைக் கொண்டிருந்தது. இவன், கொல்லி மலைத்தலைவனான ஓரியிடம் போரிட்டு அவனைக் கொன்றான். இவனை வென்றவன் தகடூரையாண்ட அதியமான். இவன் மக்களிருவரைக் கிள்ளி வளவன் பிடித்து இடரும்படி, யானைக்கு இடும்போது கோவூர்க் கிழார் குறுக்கிட்டு அம்மக்களைக் காத்தார். காரிக்குப் பின் கோவலூரை அவன் மகன் திருக்கண்ணன் ஆண்டான்.

தொண்டை மண்டலத்தில் மாமல்லபுரத்தைச் சுற்றியுள்ள நாடு ஓய்மானாடு எனப்படும். இந்நாட்டையாண்ட நல்லியக்கோடன் ஒரு வள்ளல். பேகனும் பிறசங்க கால வள்ளல்கள் எழுவரும் இவனுக்கு முன்பே இறந்தனர். இவன் குடியைச் சேர்ந்த ஓய்மான் நல்லி ஆதன், ஓய்மான் வில்லி ஆதன் என்னும் இருவரில் பிந்தியவன். மாவிலங்கை என்னும் மாமல்லபுரத்தை ஆண்டவன்.

தொண்டை மண்டலத்தைக் காஞ்சியிலிருந்து ஆண்ட இளந்திரையர்க்கும், சோழவமிசத்திற்கும் தொடர் உண்டு என்று நினைக்க இடம் தருவது மணிமேகலையில் கூறப்படும் ஒரு கதை. ஆயினும், திரையர் என்போர் வேங்கடத்திற்கு அருகில் வாழ்ந்த ஒரு சிற்றரசர் குழாம். இவர்களில் சிலர் காஞ்சியில் இளந்திரையராக

அரசோச்சினர். தொண்டையர் ஆண்ட நாடு தொண்டை மண்டலமாகும். இவர்களைச் சேர்ந்த தொண்டைமான் ஒருவனை ஔவையார் பாடினார். சங்ககால இறுதியில் ஆண்ட சோழன் செங்கணானுக்கு நல்லடி என்னும் மகன் ஒருவன் இருந்தான் என்று சுந்தர சோழனின் அன்பில் பட்டயம் கூறுகிறது.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து சோழ வேந்தர்களின் அரசியல் வரலாற்றை ஒருவாறு அறிந்துகொள்ள முடிகின்றது.

(iii) பாண்டிய வேந்தரது அரசியல் வரலாறு:

இவர்களே முடியுடை மூவேந்தருள் மிகவும் தொன்மையானவர் என்று சிலர் கருதுவர்; மெகஸ்தனிஸ், கௌடில்யர் என்போர் பாண்டியரையே குறிப்பிடுகின்றனர். பாண்டியர்கள் தமிழ்ச் சங்கத்தை நிறுவிப் புலவர்களை ஆதரித்தனர். இச்சங்கம் முதலில் தென் மதுரையிலும், பிறகு கபாடபுரத்திலும், அதன் பிறகு வைகைக்கரை மதுரையிலும் இருந்ததாகக் கூறுவது மரபுவழிச் செய்தி.

முதற் சங்கத்தைப் போற்றிய பாண்டியன் வடிம்பலம்ப நின்ற பாண்டியன். இவனை மாகீர்த்தி, நெடியோன், நிலந்தரு திருவிற் பாண்டியன் என்றும் அழைப்பர். இவன் அவைக்களத்தில்தான் தொல்காப்பியம் அரங்கேறிற்று. இறையனார் அகப்பொருள் உரை காய்சின வழுதி என்னும் பாண்டியனே முதல் சங்கத்தை நிறுவினான் என்று கூறுகிறது. அவ்வுரையால் கேள்வியுறும் பாண்டியர்கள் வெண்தேர்ச் செழியன், முடத்திரு மாறன், உக்கிரப் பெருவழுதி, கடுங்கோன் என்னும் அரசர்கள் ஆவர். இவ்வுரைக் கூற்றுப்படி, தென் மதுரையை விட்டு நீங்கிய பாண்டியர், கபாடபுரத்திலிருந்தும் அக்கபாடபுரம் கடல் கோளால் அழிந்துபடவே அதன் பிறகு வைகைக்கரை மதுரையிலிருந்தும் ஆண்டனர் என்பதும் தோன்றுகிறது. சிலர், கபாடபுரத்தை விட்டு நீங்கிய பாண்டியர் மணலூரில் சிலகாலம் தங்கி ஆண்டபின், மதுரைக்கு வந்தனர் என்று கருதுவர். மணலூர் என்னுமிடம் பாண்டியர் தலைநகரமாக மகாபாரதத்தில் பேசப்படுகின்றது.

வரலாறறிந்த முதல் பாண்டிய மன்னர் வைகைக் கரை மதுரையிலிருந்தே ஆண்டவர். அவர்களில் காலத்தால் முந்தியவன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பவன். அவன் பெருவீரன், கொடையாளி, வேள்வி பல புரிந்தவன், சைவன், அந்தணர்க்கு வேள்விக்குடி என்னும் கிராமத்தைத் தானமாகக் கொடுத்தவன் என்று வேள்விக்குடிச் சாசனம் கூறும். நாடக நூல் இயற்றிய மதிவாணன், நீதிதவறாத பொற்கைப் பாண்டியன், செய்யுளியற்றுதலில் வல்லுநனான கடலுள் மாய்ந்த

பெருவழுதி ஆகியோர் பண்டைக்காலப் பாண்டிய மன்னர்களாவர். இவருள் கடைசியில் கூறியவன் கடல் கடந்து செல்லும் போது கப்பல் மூழ்கி இறந்திருக்கலாம்.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் சிலப்பதிகாரத்தில் கூறப்படுபவன். இவன் ஏதோ ஓர் ஆரியப்படையை வென்றான். இவனே, கோவலனைக் கொல்ல ஆணையிட்டவனாக அக்காப்பியம் கூறுகிறது. இவன் இறந்தபின் மதுரை தீக்கிரையாயிற்று. அதன்பின் கொற்கையில் இருந்து ஆண்டு வந்த இவன் தம்பி வெற்றிவேர் செழியன் மதுரையிலிருந்து ஆண்டான். இவன் காலத்தில் பாண்டிய நாட்டிலும் பத்தினிக் கடவுள் வழிபாடு தொடங்கிற்று. இவனே சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்பவனாவான்.

சங்ககாலப் பாண்டியர்களுள் மிக முக்கியமானவன் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பவனாவான். இவன் மிகச் சிறு வயதிலேயே பட்டத்திற்கு வந்தவன். சேரன் மாந்தரன் சேரல் இரும்பொறை, திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன், ஒரு சோழன் என்பாரோடு தலையாலங் கானத்தில் இவன் இட்ட போரில் முற்றிலும் வெற்றியடைந்து இரும்பொறையையும் சிறைப்பிடித்தான். வேளிருக்கு உரிய மிழலைக் கூற்றம், முத்தூற்றுக் கூற்றம் என்னும் இடங்களைத் தன் நாட்டோடு இணைத்துக்கொண்டான். இவனது வெற்றிகள் சின்னமனூர், வேள்விக்குடி போன்ற பிற்காலப் பட்டயங்களில் குறிப்பிடப்படுகின்றன. இவனது அவைக்களப் புலவர் மதுரைக்காஞ்சியை இயற்றிய மாங்குடி மருதனார் ஆவார்.

புகாரில் கரிகாலன் ஆண்டபொழுது மதுரையைக் கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதி என்பவன் ஆண்டான். நல்வழுதி, கூடகாரத்துத்துஞ்சிய மாறன் வழுதி, பன்னாடு தந்த மாறன் வழுதி (இவன் நற்றிணை என்னும் தொகைநூலைத் தொகுப்பித்தவன்), இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன், குறுவழுதி, வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, நம்பி நெடுஞ்செழியன் என்னும் சில சங்ககாலப் பாண்டியர்களைப் பற்றி அறியமுடிகின்றது. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் அவன் மனையாள் பெருங்கோப் பெண்டு இருவருமே புலமை மிக்கவர்கள். மாவன், ஆந்தை அந்துவன் சாத்தன், ஆதன் அமிசி, இயக்கன் என்போர் அவன் நண்பர்களாவர். பூதப்பாண்டியன் இறந்துபோன அன்று பெருங்கோப் பெண்டு தீப்பாய்ந்து உயிர் நீத்தாள்.

சங்ககாலத்தின் இறுதியில் ஆண்ட பெரிய பாண்டிய அரசன்

கானப்பேர் கடந்த உக்கிரப் பெருவழுதி என்பான். அவனும் புலமை சான்ற புரவலனே. அவன் தலையாலங்கானத்து நெடுஞ்செழியனின் மைந்தன் என்று சிலர் கருதுவதற்குச் சான்று இல்லை. மாரி வெண்கோ என்னும் சேரனும், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் அவன் காலத்தவர்கள், நண்பர்கள். அகநானூறு என்னும் தொகை நூலை உருத்ரசன்மன் என்பவரால் அவன் தொகுப்பித்தான். இறையனார் அகப்பொருள் உரை அவனே கடைசி சங்ககாலப் பாண்டிய மன்னன் என்று கூறுகிறது. அவன் கானப்பேர் (காளையார் கோவில்) என்னுமிடத்தில் வேங்கை மார்பன் என்னும் சிற்றரசனை வென்று அக்கோட்டையைக் கைப்பற்றினான்.

பாண்டியரின் சிற்றரசர்களில் தலையாயவன் பாரி. கடையெழு வள்ளல்களிலும், வீரத்தாலும், கொடையாலும், விடா நட்பாலும் புகழ் பெற்றவன். கபிலர் என்னும் புலவர் பெருமானை ஆதரித்தவன். மதுரைக்குக் கீழ்பாலுள்ள பறம்பு மலையையும் அதைச் சேர்ந்த முன்னூறு ஊர்களையும் ஆண்டவன். ஒரு முல்லைக் கொடி தனக்குப் பற்றுக்கோடு இன்றி வாடியபோது தன் தேரை அங்கு நிறுத்திவிட்டு வந்த வள்ளன்மையுடையவன். பாரியின் புகழால் பொறாமை கொண்ட முடியுடை மூவேந்தரும் பறம்பினை முற்றினர். அப்போரில் கபிலர் பாரிக்குப் பெரிதும் உதவினார். மூவேந்தரும் பாரியைப் போரில் வெல்ல இயலாமல் உபாயத்தால் கொன்றனர். கபிலர் அவன் மகளிர் இருவரையும் உடன் கூட்டிச் சென்று தக்கார்க்கு மணம் செய்து வைத்தார். பிறகு அப்புலவர் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னும் சேரன் அவைக்களத்திற்குச் சென்று அங்கு அவனால் ஆதரிக்கப்பெற்றார்.

நாலடியாரில் கூறப்படும் முத்தரையர், வடகிழக்குப் பகுதியில் ஆண்ட அருவாளர், தென்பாலிருந்த ஓவியர், திரையர், கள்வர், பரதவர், கொங்கர், கோசர், ஆயர் என்போரும் பிறரும் அக்காலத்து மற்ற சிற்றரசுக் குழுக்களாகும். சிறு குடிவாணன், மாவலிவாணன் என்போர் மாவிலங்கைப் பகுதியில் ஆண்டவர்கள். தமிழகத்திற்குப் புறம்பேயிருந்த பல அரச வமிசங்களையும், கூட்டத்தாரையும் சங்ககாலத் தமிழர் அறிந்திருந்தனர்.

கங்கர், துளுவர், வடுகர், கலிங்கர், வத்தவர், மாளுவர், நூற்றுவர் கன்னர், மோரியர், மராட்டர் என்போரை அவர்கள் அறிந்திருந்தார்கள். உத்தரகுரு என்னுமிடம் ஒழிவிலா இன்பத்திற்குப் பெயர் பெற்றது. நாகர்கள் கீழை நாட்டவர். மிலேச்சர் கடல் கடந்த புறத்தார்; கிரேக்கர், ரோமானியர் முதலியவர்களை யவனர், சோனகர் என்றெல்லாம் அறிந்தனர். பாடலிபுத்திரத்தில் ஆண்ட மௌரியரது வலுவும் வன்மையும் அக்காலப் புலவரால் பேசப்பட்டன.

மேற்கூறியவற்றிலிருந்து பாண்டிய வேந்தர்களின் அரசியல் வரலாற்றை ஒருவாறு அறிந்துகொள்ள முடிகின்றது. மேற்கூறிய காரணங்கள் அனைத்தும் மூவேந்தர் அரசு தனித்தப் பெரும் ஒற்றைப் பேரரசாக மாறாத நிலையைக் குறிக்கின்றன. மேலும் சில வரலாற்றுக் காரணங்களைச் சான்றுகளாகக் கொண்டு மூவேந்தர் அரசு ஒற்றைப் பேரரசாக மாறாமையைப் பின்வரும் பகுதியில் விளக்கமாகக் காணலாம்.

அடிக்குறிப்புகள்:

1. இராவதம் மகாதேவன், சங்க காலத் தமிழ் - பிராமிக் கல்வெட்டுகள், பக். 94-95.
2. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், சேரன் வஞ்சி, ப. 98.
3. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு (தொகுதி I), ப.196.
4. மேலது., ப.192.

4. பாரதப் போரும் உணவு வழங்குதலும்

பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நடந்த பாரதப்போரில் உணாக்கொடை வழங்கிய மேன்மைக்குரிய சேரவேந்தனாகப் புகழப் பட்டுள்ளவன் உதியஞ்சேரல் என்பவனாவான். இவனே பதிற்றுப்பத்து முதலாம் பத்தின் பாட்டுடைத்தலைவன் என்கின்றனர் அறிஞர்.[1] இரண்டாம் பத்தின் பதிகத்தில்,

இன் இசை முரசின், உதியஞ்சேரற்கு
வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்ற மகன்
(பதி. பத்து.2:பதிகம்.2-3)

என இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவனான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தந்தையாக உதியஞ்சேரல் குறிப்பிடப்படுவதால் இவன் தந்தையான உதியஞ்சேரலே முதற்பத்தின் பாட்டுடைத் தலைவன் என்கின்றனர். பெருஞ்சோறு வழங்கிய இயல்பால் இவன் பெருஞ்சோறு உதியன் சேரலாதன் எனப் புகழப்பட்டான். இவனை முரஞ்சியூர் முடிநாகராயர், மாமூலனார், இளங்கீரனார், கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் ஆகிய புலவர்கள் பாடியுள்ளார்கள். இவன் பெருஞ்சோறு வழங்கிய செய்தியை,

அலங்கு உளைப் புரவி ஐவரொடு சினைஇ,
நிலம் தலைக் கொண்ட பொலம் பூந் தும்பை
ஈர்-ஐம் பதின்மரும் பொருது, களத்து ஒழிய,
பெருஞ் சோற்று மிகு பதம் வரையாது கொடுத்தோய்
(புறம்., 2:13-16)

என முடிநாகராயரும்,

மறப்படைக் குதிரை, மாறா மைந்தின்,
துறக்கம் எய்திய தொய்யா நல் இசை
முதியர்ப் பேணிய, உதியஞ்சேரல்
பெருஞ் சோறு கொடுத்த ஞான்றை, இரும்பல்
கூளிச் சுற்றம் குழீ, இருந்தாங்கு,
குறியவும் நெடியவும் குன்று தலைமணந்த
சுரன்.......................... (அக., 233:6-12)

என மாமூலனாரும் பாடியுள்ளனர்.

இவ்விருவருள் முரஞ்சியூர் முடிநாகராயரே இவ்வேந்தன் பாரதப் போரில் உணவு வழங்கியதாகக் குறிப்பிடுகின்றார். ஆனால்,

மாமூலனாரோ முதியோர்க்குரிய அறக்கடமை செய்த காலத்தே அவன் பெருஞ்சோறு வழங்கியதாகக் குறிப்பிடுகிறார். "தமது ஆற்றல் காரணமாக விழுப்புண் ஏற்று மேனிலை உலகம் எய்திய அழியாத நல்ல புகழை உடைய தம் முன்னோர்களுக்குத் தான் செய்யும் அறக்கடமைகளைச் செய்து அவர்களைப் பேணுதற் பொருட்டு உதியஞ்சேரல் என்னும் மன்னன் மிக்க சோற்றினைத் தானம் கொடுத்த பொழுது அவ்விடத்தே கரிய பலவாகிய பேய்களின் சுற்றம் கூடி இருந்தாற்போல"[2] எனப் பொ.வே.சோமசுந்தரனார் உரை எழுதினாலும், விளக்கக் குறிப்பில் "மறப்படை.... முதியர் என்றது பாண்டவர்களை எனக் கோடலுமாம்"[3] என்னும் செய்தியையும் குறிப்பிடுகின்றார். இது முரஞ்சியூர் முடிநாகராயர் கருத்தைத் தழுவி நிற்றலை உணர முடிகின்றது. ஆனால், இவ்விரு பாடல்களின் ஆசிரியர் இருவரும் உதியன் பெருஞ்சோறு வழங்கிய சூழலை இருவேறுபடக் குறிப்பிட்டுள்ளனர் என்பதே உண்மை. மேலே குறிப்பிட்ட இருபாடல்களோடு,

> **நல் ஆன் பரப்பின் குழுமூர் ஆங்கண்-**
> **கொடைக் கடன் ஏன்ற கோடா நெஞ்சின்**
> **உதியன் அட்டில் போல ஒலி எழுந்து,**
> **அருவி ஆர்க்கும் பெரு வரைச் சிலப்பின் (அக.,168:5-8)**

என்னும் பாடலையும் இணைத்தே எண்ணவேண்டும். அவன் கொடைக் கடன் மேற்கொண்ட இயல்பும் வறியவர்க்கு உணவளிக்கும் உணவுச் சாலை அவன் நாட்டில் இருந்த செய்தியும் இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளன. உதியஞ்சேரல் பெருஞ்சோறு கொடுத்த செய்தியை இம்மூன்று பாடல்களும் குறிப்பிடுகின்றன. என்றாலும், இம்மூன்று பாடல்களும் பெருஞ்சோறு கொடுத்த சூழலை இடமாகக் காட்ட, மாமூலனாரோ பிதிர்க்கடன் செய்த சூழலில் உணவு வழங்கியதாகக் குறிப்பிடுகின்றார். அகநானூற்றின் **168**-ஆம் பாடலைப் பாடிய கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமானோ இவ்விருவரிலும் மாறுட்டு வறியவர்க்கு உணவளித்த அறக்கொடையாகக் காட்டுகின்றார். சுருங்கக் கூறினால், அவன் பெருஞ்சோறு கொடுத்த செய்தி உண்மையென்றாகின்றது.

பெருஞ்சோறு வழங்குதல் என்பது பண்டைய தமிழ்மரபு. போர்க்காலத்தே பெருஞ்சோறு வழங்குவது தொல்காப்பியரால் ஒரு துறையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தொல்காப்பியர் இத்துறையை வஞ்சித் திணையுள் ஒன்றாக,

> **பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்**
> **(தொல்.,புறத்.,7:9)**

எனக் குறிப்பிடுகின்றார். இதற்கு “வேந்தன் போர் தலைக் கொண்ட பிற்றைஞான்று தானே போர் குறித்த படையாளருந்தானும் உடனுண்பான் போல்வதோர் முகமன் செய்தற்குப் பிண்டித்து வைத்த உண்டியைக் கொடுத்தன் மேயின பெருஞ்சோற்று நிலை”[4] என நச்சினார்க்கினியர் பொருள் கூறியுள்ளார். தொல்காப்பிய மூலவரிகள் உணர்த்தும் அடிப்படைப் பொருள் தெளிவுபடவில்லை; என்றாலும், இவ்வுரையில் மேற்கோளாகக் காட்டப்பட்ட பதிற்றுப்பத்துப் பாடல் சில ஐயப்பாடுகளைத் தெளிவாக்குகின்றது.

அருந் திறல் மரபின் கடவுட் பேணியர்,
உயர்ந்தோன் ஏந்திய அரும் பெறற் பிண்டம்,
கருங் கட் பேய்மகள் கை புடையூஉ நடுங்க,
நெய்த்தோர் தூஉய நிறை மகிழ் இரும் பலி,
எறும்பும் மூசா இறும்பூது மரபின்,
கருங் கட் காக்கையொடு பருந்து இருந்து ஆர்
ஓடாப் பூட்கை, ஒண் பொறிக் கழற் கால்,
பெருஞ் சமம் ததைந்த, செருப்புகல், மறவர்
உருமு நிலன் அதிர்க்கும் குரலொடு, கொளை புணர்ந்து,
பெருஞ் சோறு உகுத்தற்கு, எறியும் -
கடுஞ் சின வேந்தே!-நின் தழங்கு குரல் முரசே
(பதி.பத்து.30:34-44)

இப்பாடலுக்கு ‘பெருஞ்சோற்று நிலை’ என்பதே துறையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தம்பியான பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பற்றியது இப்பாடல். இரத்தம் கலந்த உணவு பிண்டமாக ஏந்தப்படுதல், காக்கையும் பருந்தும் அதை உண்ணுதல், வீரர்க்குப் பெருஞ்சோறு கொடுத்தற்கு முரசு முழங்குதல் ஆகிய செய்திகள் இப்பாடலில் உரைக்கப்பட்டுள்ளன. இங்கே இது சேரனின் போர்ச்செயல் நிகழ்வாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடலோடு, மாமூலனாரின் அகப்பாடலடிகளையும் (233) இணைத்துப் பார்க்கின்ற பொழுது இரண்டும் ஒத்துப்போவதை உணர முடிகின்றது. தம் முன்னோர் பொருட்டுப் பிதிர்க் கடனாகப் பெருஞ்சோறு படைத்த செய்தியும் பேய்க் கூட்டம் அங்கே கூடியிருந்த நிலையும் மாமூலனாரின் பாடலிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, இவ்வகைப்பாடலும் போர்க்களச் சூழலையே முன்வைக்கின்றது. ஆகவே சேரர் மரபின் முன்னோனான உதியன் செய்தது போன்றதோர் செயலைத்தான் பின்னர் வந்த பல்யானைச் செல்கெழு குட்டுவனும் செய்துள்ளான் என்பது இவற்றால் தெளிவுபடுகின்றது. எனவே,

உதியஞ்சேரல் பெருஞ்சோறு கொடுத்தான் என்பதும் தமிழ்ப் போர் மரபில் இடம்பெற்றதோர் செய்தியே ஆகும். மாமூலனாரின் இந்நிலையினின்றும் வேறுபட்டு முரஞ்சியூர் முடிநாகராயர் உதியன் பெருஞ்சோறு கொடுத்த செயலைப் பாரதப் போரோடு இணைத்துக் கூறுகின்றார்.

(i) பாரப் போரும் உதியஞ் சேரலின் பெருஞ்சோறும்:

உதியஞ் சேரலாதன் பெருஞ்சோறு கொடுத்தான் என்பது பண்டைத் தமிழ்ப் போர் மரபில் இடம்பெற்றதோர் நிகழ்வேயாகும். உதியஞ் சேரலாதன் என்னும் மன்னனும் பெருஞ்சோறு கொடுத்த செயலும் ஒத்திருந்த போதிலும் முரஞ்சியூர் முடிநாகராயரும் மாமூலனாரும் இருவேறு காலத்தவர் என்பதால், உதியஞ் சேரலையும் இருவேறு மன்னராகக் கொள்வர் ஆய்வறிஞர்.[5] இவ்வாறு இரண்டு அரசர்களாய்க் கொள்வதற்கான அடிப்படைக் காரணம் இரண்டு. அவை வருமாறு:

1. முரஞ்சியூர் முடிநாகராயர் இறையனார் களவியல் உரையில் கடைச்சங்கப் புலவராகக் காட்டப்படுதல்.
2. முடிநாகராயர் உதியனின் பெருஞ்சோறு கொடுத்த செயலைப் பாரதப் போரில் நடந்ததாகக் குறிப்பிடல்.

இவ்விரு காரணங்களின் அடிப்படையில்தான் பெருஞ்சோற்று உதியன், மாமூலனார் பாடிய உதியஞ்சேரலிலிருந்து வேறுபடுத்தப் படுகின்றான். மாமூலனார் பிற்பட்ட காலத்தவர் என்பதால் மட்டுமே பெருஞ்சோறு கொடுத்த செயலைப் பாரதப்போர் நடந்த காலத்தே நிகழ்ந்ததெனக் கூறமுடியாது. மாமூலனார் தன் காலத்தே நடந்த நிகழ்ச்சியாகக் குறிப்பிடாமல் உவமையாகப் பயன்படுத்தும் நிலையிலேயே குறிப்பிட்டுள்ளார். இப்படிப்பட்ட முன் நிகழ்வுகள் பல மாமூலனார் பாடல்களில் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். அவ்வரலாற்றுச் செய்திகள் அனைத்தும் மாமூலனார் காலத்தில் நிகழ்ந்தவை எனக் கருதாததைப் போல இதையும் மாமூலனார் காலத்திற்கு முந்தைய செய்தியாகக் கொள்ளவேண்டும் செவிவழிச் செய்தியான இதனை அவர்தம் பாடலில் உவமைவழி குறிப்பிட்டுள்ளார் என்பதால், இவர் சுட்டும் உதியஞ்சேரலாதனும் முரஞ்சியூர் முடிநாகராயர் குறிப்பிடு பவனும் ஒருவரே எனக் கொள்வதில் தடையேதும் இல்லை.

பாரதப்போர் நடந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டும் இறையனார் களவியல் உரையில் கடைச்சங்கப் புலவராக முடிநாகராயர் சுட்டப்பட்டிருப்பதைக் கொண்டும், இப்புறநானூற்றுப் பாடல் குறித்து இருவேறுபட்ட ஆய்வுக் கருத்துகள் வெளிவந்துள்ளன.

பாரதப் போர் நடந்த காலம் பழமையானது. இறையனார் களவியல் உரை குறிப்பிடும் சங்கச் செய்திகள் உண்மையானவை என்னும் அடிப்படைகளில் தமிழிலக்கியத்தின், தமிழரசர்களின் பழமையைக் காட்ட வேண்டும் என்ற நோக்கில் முரஞ்சியூர் முடிநாகராயர் சுட்டும் செய்தியை உண்மை எனக் கொள்வர் சில ஆய்வறிஞர். இதற்கு மறுதலையாகப் பாரதப்போர் நடந்த காலம் தமிழ் அரசர்க்கு மிகத் தொன்மையானது. இறையனார் களவியல் உரை சுட்டும் செய்தி உண்மையல்ல, அது ஒரு கற்பனை என்னும் கருத்துக்களின் அடியாக வரலாற்று அறிஞர் சிலர் பெருஞ்சோறு கொடுத்த செய்தி உண்மையில் மரபு பற்றிக் கூறப்பட்ட ஒரு கற்பனைச் செய்தியே என்கின்றனர்.

செந்தமிழ்ச் செல்வியின் பதிப்பாசிரியர் (1910), மு.இராகவையங்கார் (1947), சு.அ.இராமசாமிப் புலவுர் (1950), மா.இராசமாணிக்கனார்(1957), புலவர் கா.கோவிந்தன் (1989) ஆகியோர் உதியஞ்சேரல் பாரதப்போரில் உணவு வழங்கிய செய்தியை உண்மையென வலியுறுத்துகின்றனர். மேலும், முரஞ்சியூர் முடிநாகராயரும் பாரதப் போர் நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்தவரே என்ற கருத்தையும் முன்வைக்கின்றனர்.

உதியஞ்சேரல் உணவளித்த செய்தியைச் சுட்டிக்காட்டி “இவற்றால் தமிழரசர்கள் பாண்டவர்க்குத் தக்க சமயங்களிளெல்லாம் உணவளித்து உதவியவரென்ற விசயமும் கவனிக்கற்பாலதாம்”[6] என்கிறார் செந்தமிழின் பதிப்பாசிரியர். இதைப் போலவே, சு.அ.இராமசாமிப் புலவரும்,

“உதியஞ் சேரலன் எந்தப் பக்கத்திலுஞ் சேர்ந்து போரில் ஈடுபடவில்லை அவன் மிகுதியான உணவுப் பொருட்களைத் திரட்டிக் கொண்டு வடநாட்டிற்குச் சென்றான்; இரு பக்கத்துப்போர் மறவர்களுக்கும் உணவளித்தான். சேரன் உணவளித்த சீரிய செயலால் அவனுடைய பெயர் ‘சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்’ என நீண்டு நின்றது. பாரதப்போரில் உணவளித்த காலையில் இப்புலவர் பெருமானும் உடனிருந்து உணாக்கொடையைக் கண்டுகளித்தார்”[7]

என்னும் கருத்தைத் தெரிவிக்கின்றார். உணவை இங்கிருந்து நீண்ட நெடுந்தொலைவு எடுத்துச் சென்று இருதிறப் படையினருக்கும் உணவளித்ததாக உண்மை நிகழ்வினதாகச் சுட்டுவது வியப்பளிப்ப தாகவே உள்ளது. மா.இராசமாணிக்கனாரும் இதே சிந்தனைப் போக்கில் இச்செய்தியை உண்மை என்கிறார்.

“புறநானூற்றில் கூறப்பெற்ற நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார் இளங்கோவடிகள் தமக்குப் பல நூற்றாண்டுகளுக்கு

முன்பு வாழ்ந்த செயற்கரும் செயலைச் செய்த தமது முன்னோனை உளமாரப் பாராட்டியுள்ளார். எனின் பாரதப் போர் நிகழ்ந்த காலத்தில் உதியன் சேரலாதன் செய்த செயற்கரும் செயல் (பெருஞ்சோறு வழங்கியமை) சேரமரபினராலும் சேரநாட்டுக் குடி மக்களாலும் வழிவழியாகப் போற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று கருதுதல் பொருத்தமாகும்''[8]

எனப் பாரதப்போரில் பெருஞ்சோறு கொடுத்தது செயற்கரிய செயல் என்பதையும் அது சேரமரபில் சேரநாட்டில் மரபாகப் போற்றப்பட்டு வந்ததையும் சிலப்பதிகாரச் செய்தி வலியுறுத்துகிறது என்கிறார் அவர். இவர், தமக்கு முன்வந்த பி.டி.சீனிவாச ஐயங்கார், கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி ஆகியோர் கருத்துகளை (இது உண்மை நிகழ்வன்று என மறுத்த அவர்தம் கருத்துகளை) ஏற்றுக் கொள்ள வில்லை. இவரைப் போலவே, புலவர் கா.கோவிந்தனும் ''இப்பாட்டு காலத்தால் பிற்பட்ட புலவர்களுள் ஒருவராய மாமூலனாரால் பாடப்பட்டுள்ளது. ஆகவே, உதியஞ் சேரலாதனின் காலம் நனிமிகப் பழைய காலத்தது ஆதல் இயலாது''[9] என்னும் பி.டிசீனிவாச ஐயங்கார் கருத்தை மறுத்துப் பிற்காலப் புலவராகக் கருதப்படும் மாமூலனாரை உதியஞ்சேரலின் காலத்தவர் என்கிறார்.

''மாமூலனார், தமிழகம் மூவேந்தர் ஆட்சிக்கீழ் முழுமையாக இருந்த காலத்தில் வாழ்ந்தவர்தாம். அதனால் தான், தமிழகத்துக்கு அப்பாற்பட்ட வேற்றுமொழி வழங்கும் நாட்டைக் குறிப்பிடும் போது, 'தமிழ்கெழு மூவர்காக்கும் மொழிபெயர் தேஎம்' (அக.,31) எனக் குறிப்பிட முடிந்ததது. இவ்வாறு பொதுவகையால் கூறியதோடு அமையாது தன் நாட்டு எல்லையை விரிவுபடுத்தி மறைந்த தன் முன்னோர் நினைவாகப் பெருஞ்சோறு அளித்து, கடம்பரை வென்று இமையத்தே வில் பொறித்து அக்காரணங்களால், பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என அழைக்கப் பெற்ற சேரர் குலப் பெருவேந்தன் ஒருவனைப் பாராட்டியுள்ளார்.''[10]

என்னும் புலவர் கா.கோவிந்தன், உதியஞ்சேரல் பாரதப் போரில் பெருஞ்சோறு கொடுத்ததைக் குறிப்பிடவில்லை. இவன் முன்னோர் நினைவாகவே பெருஞ்சோறு கொடுத்தான் என்பதைக் குறிப்பிட்டாலும், மாமூலனாரை உதியஞ்சேரலின் காலத்தவராக அவர் கொள்கின்றார். மேலும், இவர் மாமூலனார் குறிப்பிடும் மோரியப் படையெடுப்பை அவரின் சமகால நிகழ்வாகக் காட்டி, ''மாமூலனாரும், பிறரும் கூறும் மோரியர் படையெடுப்பு, கி.மு.மூன்றாம் நூற்றாண்டில், பிந்துசாரன் மேற்கொண்ட தென்னாட்டுப் படையெடுப்பையே குறிக்கும் என்பதும், ஆகவே, மாமூலனார் அப்படையெடுப்பு நிகழ்ந்த காலத்தை அடுத்து

வாழ்ந்தவரே"[11] எனக் கூறும் கருத்து உதியஞ் சேரலாதனின் காலத்தை மிகமிகப் பழமையானதாகக் காட்டுகின்றது.

உதியஞ்சேரலின் காலம் இத்தனைப் பழமை வாய்ந்ததல்ல என்பதுதான் வரலாற்றறிஞர் எண்ணம். இவன் காலம் பிற்பட்டது என்பதால் தான் இவ்வறிஞர் இவன் பெருஞ்சோறு கொடுத்த செயல் பாரதப்போரில் நடந்ததன்று என்கின்றனர். உதியஞ்சேரலை மிகப் பழங்காலத்தவன் எனக் காட்டும் புலவர் கா.கோவிந்தனின் கருத்து பெருஞ்சோறு கொடுத்த செயலைப் பாரதப் போருடன் மறைமுகமாக இணைத்துக் காட்டும் நோக்கத்தை உள்ளீடாகக் கொண்டதோ என்னும் ஐயப்பாட்டையும் எழுப்புகின்றது.

மரபாய் ஆய்ந்த இவ்வறிஞர் அனைவரும் சங்க இலக்கியம் மிகப் பழமையானது, மூவேந்தர் தமிழகத்தின் மிகப் பழங்குடிகள், தமிழ் இனமே இந்தியத் துணைக் கண்டத்தின் முதல் இனம் என்னும் கருத்துப் பின்னணியின் அடியாகத் தோன்றிய, இயல்பான வரலாற்றுப் போக்கிற்குப் புறம்பான கருத்துகளை முன்வைத்துள்ளனர். பிறரால் அறிவியல் அடிப்படையிலான சிந்தனைகள் முன்வைக்கப்பட்டிருந்தாலும் இவர்கள் அவற்றைப் பழமையான மரபுகாட்டல் என்னும் அடிப்படையில், உண்மைக்குப் புறம்பான ஆய்வுகளாகக் கருதி மறுத்துள்ளனர்.

மரபான இக்கருத்துகளினின்றும் வேறுபட்ட நிலையில் பி.டி.சீனிவாச ஐயங்கார் (1929), கே.என்.சிவராஜபிள்ளை (1932), எஸ்.வையாபுரிப்பிள்ளை (1947) போன்றோர் பெருஞ்சோறு கொடுத்தது பாரதப் போரில் நடந்த நிகழ்வன்று என மறுத்துள்ளனர்.

"உதியன் இருதிறப் படையினர்க்கும் உணவளித்தான் எனக் கூறுவதன் மூலம் இந்தியாவின் தென்கோடி முனையைச் சேர்ந்த ஓர் அரசன் கோதுமை உணவுண்ணும் துரியோதனன் யுதிஷ்டிரர் படை வீரர்களுக்கு உணவு படைக்க அரிசியையும் அறுசுவையூட்டும் உணவுப் பொருட்களையும் குருஷேத்திரத்திற்குச் சுமந்து சென்றான் எனக் கூறுவதில் உள்ள பொருத்தமின்மையை உணராமலே உரையாசிரியர் அம்மூலவரிகளில் குறிப்பாக உணர நின்ற ஒன்றை வேறுவகையில் விரித்துணர வைத்துள்ளார்"[12]

என பி.டிசீனிவாச ஐயங்கார் வடநாட்டவர், தென்னாட்டவர் உணவுப்பழக்க வேறுபாட்டையும் அரிசி போன்ற உணவுப் பொருட்களை இங்கிருந்து எடுத்துச் செல்வதன் இயலாமையையும் எடுத்துக் காட்டி உரையாசிரியர் தரும் கருத்தை மறுத்துள்ளார். மேலும் இவரே இது கௌரவர் இறந்தநாள் கொண்டாட்டமாகச் சேரநாட்டில் நடத்தப்பட்ட பாரதப்போர் குறித்த நாடகத்தின்

இறுதியில் நடத்தப்பட்ட விருந்தையே குறிக்கும் என்கிறார். மேலும், பாரதப் போர் நடைபெற்ற காலமும் பெருஞ்சோறு கொடுத்த காலமும் வெவ்வேறு காலங்கள் எனவும் கூறி மறுக்கின்றார்.[13]

இவருக்குப் பின்னர் இக்கதைக் குறிப்பை ஆராய்ந்த கே.என். சிவராஜபிள்ளையும் இது உண்மைக்குப் புறம்பான செய்தி என்பதைக் குறிப்பிட்டுள்ளார். இது உதியன் மீது ஏற்றிக் கூறப்பட்ட புகழ்க்கதை என்கிறார் இவர். மேலும் கி.மு.1000-இல் பாரதப்போர் நடைபெற்றது எனவும் கி.மு.1 கி.பி.25-இல் வாழ்ந்த உதியஞ்சேரலாதன் பாரதப் போரில் உணவளித்தான் என்பது பொருந்தாது எனவும் மறுத்துரைக்கின்றார்.[14]

இவ்விருவருக்குப் பின்னர் தமிழ் ஆராய்ச்சி உலகில் புதுவகைச் சிந்தனைப் போக்குகளை அறிவியல் அணுகுமுறைகள் சிலவற்றின் மூலம் முன் வைத்த எஸ்.வையாபுரிப்பிள்ளை, இது மரபு பற்றிக் கூறப்பட்ட செய்தியே அன்றிப் பாரதப்போர்க் காலத்தே நடந்த சமகால நிகழ்வல்ல என மறுத்துரைக்கின்றார்.

“உதியஞ் சேரலின் காலம் கி.பி. 100 என்று கொள்ளுதல் வேண்டும். இக்காலத்திற்கும் பாரதயுத்தம் நிகழ்ந்ததாகக் கணிக்கப்படும் காலத்திற்கும் எத்துணையோ நூற்றாண்டுகள் இடைப்பட்டன ஆதல் வேண்டும். ஆதலால் பாரதப் படைகளுக்கு இவன் சோறளித்திருத்தல் இயலாது. மேலும் தென்னாட்டிலிருந்த அரசனொருவன் பாரதயுத்தம் நிகழ்ந்த குருஷேத்திரத்திற்கு உணவுப் பொருள்களை யெல்லாம் எடுத்துச் சென்று அங்கே பொரக் கூடியிருந்த படைகளுக்கெல்லாம் உணவளித்தான் எனல் சரித்திர முறையில் ஒப்புக் கொள்ளக் கூடியதன்று. அன்றியும் சேரர்கள் இவ்வாறு உணவளித்தார்கள் என்ற செய்தி வியாச பாரதத்தில் கூறப்படவில்லை”[15]

எனக் கால வேறுபாட்டையும் நடைமுறையோடு ஒத்துப்போகாத இயல்புக்கு முரணான நிலையையும், மகாபாரதத்தில் இந்நிகழ்ச்சி சுட்டப்படாமையையும் எடுத்துக்காட்டி இது உண்மைச் செய்தி அன்றெனக் கூறுகின்றார். மேலும்,

“உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ எனக் கருதி அதனினும் மேம்பட்ட கொடை இல்லை என்று உணர்ந்து அன்னதானம் செய்து வந்த இவ்வரசன் வரலாற்றில் பாரதப் படைகளுக்குப் பெருஞ் சோறளித்தான் என்ற புகழும் சேர்தல் இயற்கைதானே ஆகவே, இப்பெருஞ்சோற்று வரலாறு ஒரு புகழ்ச்சி மரபென்றே நாம் துணிதல் வேண்டும். இது பற்றித் தமிழ் இலக்கியத்தின் தொன்மையைத் திட்டமாய் அளத்தல் கூடாது”[16]

எனக் கூறி இது புகழ் மரபு, பழமை பாராட்டும் மரபு என்பதையும், இது தமிழிலக்கிய வரலாற்றைத் தீர்மானிக்கும் ஆதாரமன்று என்னும் கருத்தையும் வற்புறுத்துகின்றார்.

"வீரத்தாலும் கொடை முதலிய பிற தகுதிகளாலும் பெயர் சிறந்து விளங்கிய தேசிய வீரர்களோடு தொடர்புடையராக அரசர்களைக் கூறுதல் உலகம் முழுதும் வழங்கிய ஒரு மரபாகும். ஐரோப்பிய அரசர்கள் துரோஜன் யுத்தத்தில் போர் புரிந்தவராகக் கருதும் வீரர்களோடு தொடர்புடையவராகத் தம்மைக் கூறிக்கொண்டனர். இது போன்ற ஒரு மரபினை மனத்துள் கொண்டே முடிநாகராயர் தமது அரசனைப் பாடினார் என்று நாம் கொள்ளுதல் வேண்டும்"[17]

என இவ்வாறு, அரசர்கள் புகழப்படுவது உலகப் பொதுப்போக்கு என்பதையும் காட்டிப் பெருஞ்சோற்று நிகழ்வையும் இம்மரபினுள் ஒன்றாக அடக்குகின்றார். மேலும் புறநானூறு (9), கலித்தொகை (104), சிலப்பதிகாரம் (11:17-22) போன்றவற்றுள் கூறப்பட்டுள்ள பஃறுளி யாற்றையும் அது கடலால் கொள்ளப்பட்ட செய்தியையும் எடுத்துக்காட்டிப் பழமை போற்றும் மரபு நம் இலக்கிய மரபாக வந்துள்ளமையை எடுத்துக்காட்டிப் பாரதப்போரில் பெருஞ்சோறு கொடுத்தான் என்பதையும் அம்மரபு வழிப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார்.[18]

இவ்வறிஞர் மூவரும் தரும் கருத்துகளை எல்லாம் ஒருங்கிணைத்து காணும் பொழுது தமிழ் மரபின் 'பெருஞ்சோறு கொடுத்தல்' என்னும் இயல்பான செயல் பாரதப் போருடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளது என்பதும், இது பழமை போற்றல் என்னும் மரபு வழிப்பட்ட பாடல் உத்தி என்பதும் தெளிவுபடுகின்றன. எனவே இதை வரலாற்று நிகழ்வாகக் கொள்ளாமல் பழமைபோற்றும் மரபுக் கதையாகக் கொள்வதே பொருத்தமானது.

இவ்வறிஞர்களின் விவாதங்களை அடிப்படையாகக் கொள்வதோடு சங்க கால அரசு உருவாக்கச் சூழலையும், தமிழக ஆட்சியின் நில எல்லையையும், வேந்தர் தம் ஆற்றலையும், பாரதப் போர் நடந்த காலம், உதியஞ்சேரலின் காலம், குருஷேத்திரத்திற்கும் தமிழகத்திற்கும் இடைப்பட்ட தொலைவு, வடநாட்டில் அன்று நிலவிய பேரரசுகள் என்னும் இவற்றுடன் இணைத்துப் பார்ப்பதும் இக்கதைச் செய்தி வெளிப்படுத்தும் பழமை போற்றும் புகழ் மரபு உத்தியையே மட்டுமல்லாது மூவேந்தர் அரசு தனித்தப் பெரும் ஒற்றைப் பேரரசாக மாறாத நிலையையுமே வலியுறுத்தும்.

(ii) மூவேந்தரும் அரசு உருவாக்கச் சூழலும்:

சங்க காலம் அரசுகள் தோன்றி உருவாகத் தலைப்பட்ட காலம். இனக்குழுச் சமூக வாழ்வு முறைகளிலிருந்து மாறி நில எல்லையை அடிப்படையாகக் கொண்ட தலைமைகள் உருவாகி வளரத் தலைப்பட்ட காலம். இனக் குழுச்சமூகத் தலைமையிலிருந்து அரசர்கள் உருவான காலம். மூவேந்தர் மரபிலும் இதே சூழலைக் காணலாம். இத்தகையை சங்க காலச் சூழலில் உதியன் சேரல் சேரர் மரபினுள் முதலாம் தலைமுறையைச் சார்ந்தவன். இவன் குழுமூரிலிருந்து அரசாண்டவன். இது சேரர்களின் பழைய தலைநகரம் என்கிறார் கே. என்.சிவராஜபிள்ளை.[19] இதற்கு முன்பே சேரர் மரபில் சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரலிரும்பொறை என்பவன் கருவூரைக் கைப்பற்றி ஆண்டு வந்ததாக அறிஞர் குறிப்பிடுகின்றனர்.[20] அவனுக்குப் பின் குழுமூரிலிருந்து ஆண்டவன் உதியஞ்சேரல். இக்காலத்தே கருவூரிலிருந்து அந்துவஞ்சேரல் இரும்பொறை என்பான் ஆண்டு வந்தான் என்பதை சு.வித்தியானந்தன்,

"இச்சேர அரசனுக்குப் பின் அந்துவஞ்சேரல் இரும்பொறை கருவூரிலிருந்தும் (புறநானூறு:13), உதியன் சேரல் குழுமூரிலிருந்தும் (புறநானூறு:2), ஆட்சி செலுத்தி வந்தனர். இவ்வாறு இருவழிச் சேர அரசர் ஒரே காலத்தில் ஆண்டு வந்தமை, உறந்தையிலும் அழுந்தூரிலுமிருந்து கிள்ளி பரம்பரையினரும் சென்னி பரம்பரையினரும் சோழ நாட்டை ஆண்டு வந்தமையோடு ஒப்பிட்டு நோக்கற்பாலது"[21]

எனக் குறிப்பிடுகின்றார். இதே கருத்தை மு.இராகவையங்காரும் சேரவேந்தர் தாய வழக்கு பற்றிய தன் கட்டுரையில் வேறு வகையில் குறிப்பிடுகின்றார்.

"பதிற்றுப்பத்துக் கூறும் சேரரையெல்லாம் ஓரிடத்தாட்சி செய்து வந்த ஒரு கிளையினராகவே கொண்டு இம்முறை கூறுவதாயின் அது சிறிது சிந்தித்தற்குரியதாம். அவ்வாறன்றி, ஈரிடத்தாண்டு வந்தவராகப் பகுத்துக் கொள்ளுமிடத்து பலவிடத்துப் பலகிளையினராய் ஆண்டு வந்தவராகவும் நாம் அவரைப் பகுத்துக் கொள்ளுவதால் நேருந் தடையென்னே."[22]

எனக் குறிப்பிடும் அவர் சேர வேந்தருள் தலைமையரசன் ஒருவன் பொதுவான தலைநகரிலிருந்தும், கோக்கிளையினர் வேறு பகுதிகளில் இருந்தும் அரசாண்டு வந்தனர் எனக் கொள்கின்றார். இதை அவர் கூறுவது வேறு ஒரு கருத்தை நிலைநாட்ட என்றாலும், இவ்வாறு இரு மரபினராகச் சேரர் ஆண்டு வந்தனர் என்னும் செய்தியை இக்கருத்து முன்வைக்கின்றது. இதைப் போலவே சோழ அரச மரபிலும் இரு குடியினரைக் காணலாம் என்னும் சு.விந்தியானந்தன்,

“இருவழிச் சோழ அரசினர் தொடக்கத்தில் உறந்தையிலும் அழுந்தூரிலும் இருந்து ஆண்டு வந்தனரெனக் கூறலாம். உறந்தை அரசர் கிள்ளி என்ற பெயரையும் அழுந்தூர் அரசர் சென்னி என்ற பெயரையும் பூண்டிருந்தனர். சென்னி அரசர் நெய்தல் நிலப் பிரதேசத்தையே ஆண்டு வந்தனர். இதிலிருந்து ஆதிக்காலத்திற் சோழ அரசர் ஒரு தலைவனுக்கு உட்பட்டு வாழாத இருபிரிவினராக வாழ்ந்தனரென அறியலாம்”[23] எனக் குறிப்பிடுகின்றார்.

இதுகாறும் கண்ட கருத்துகளை ஒருங்கிணைத்துப் பார்க்கின்ற பொழுது சேரர், சோழர் ஆகிய இருகுடி மன்னரும் வளரத்தலைப்பட்ட காலம் சங்ககாலம் என்பதையும், இவர்களும் ஏனைய அரச மரபினரைப்போல் குழுத் தலைமையிலிருந்து உயர்ந்தனர் என்பதையும் உணரமுடிகின்றது. சங்க காலத்தில் ஒரே குடிக்குள்ளேயும் (நலங்கிள்ளி - நெடுங்கிள்ளி), மூவேந்தர்களுக்குள்ளும், மூவேந்தர் குறுநில மன்னர்களுக்குள்ளும் (மூவேந்தர் x அதியன், பாரி, ஓரி) ஏராளமான போராட்டங்கள் நடைபெற்றதைச் சங்கப் பாக்கள் காட்டுகின்றன. எனவே, சங்ககாலம் என்பது பல தலைமைகள் தங்களுக்குள் மோதிக் கொண்டு ஒன்றன் அழிவில் பிறிதொன்று வளரத் தலைப்பட்ட காலம். இச்சூழலில் மிகப்பெரிய பேரரசுகள் ஏதும் நிலவவில்லை. தமிழக நிலப்பரப்பிற்குள்ளேயே பலவித அரசுகள் நிலவிய சூழலில் மூவேந்தர் பலபடப் பாராட்டப்பட்டுள்ளனர். பொதுவாக வேந்தர், குறுநில மன்னர் ஆகியோரின் கொடை, வீர மாண்புகள் மிகைப்படப் பாராட்டப்பட்ட நிலை சங்கப் பாக்களின் இயல்பான பொதுத்தன்மை. இந்நிலையில் கொடை போற்றும் பாடல் உத்தியாக உதியன் சேரலின் பெருஞ்சோற்றுக் கொடை பாரதப் போருடன் இணைத்துப் பாடப்பட்டுள்ளது. இங்கேயே பலவிதப் போராட்டங்கள் நிலவிய காலச் சூழலில் தமிழக எல்லைக்குள் பல அரசுகளையும், வடபுலத்தே பல அரசுகளையும் கடந்து சென்று கொடுத்தல் என்பது இயல்புக்கு முரணான ஒன்று. எனவே, இது எஸ்.வையாபுரிப் பிள்ளை குறிப்பிட்டதைப்போல் பாடல் மரபேயாகும்.

(iii) பாரதப் போரும் அது நிகழ்ந்த காலமும்:

பாண்டவர் காலத்தையும், பாரதப் போர் நடந்த காலத்தையும் அறிஞர் பலர் ஆராய்ந்துள்ளனர். இவர்கள் முரண்பட்ட நிலையில் காலத்தைக் குறிப்பிடுகின்றார்கள். செந்தமிழ்ச் செல்வியின் பதிப்பாசிரியர் பாண்டவர் காலம் 3100க்கு முற்பட்டது என்கிறார்.[24] அ.முத்துத்தம்பிப்பிள்ளை இன்றைக்கு 4500 வருடங்களுக்கு முற்பட்டதெனவும் கூறுகின்றார்.[25] ஆர்.சி.தத் (Dutt) என்பார்

கி.மு.1400-800 எனவும்[26], ஆர்.சத்தியநாதஐயர் கி.மு.1000 எனவும்[27] குறிப்பிடுகின்றனர். இவற்றுள் கி.மு.1000 என்னும் கருத்து பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கே.என்.சிவராஜபிள்ளையும்[28], மா. இராசமாணிக்கனாரும் இதை ஏற்றுக் கொண்டுள்ளனர். மா. இராசமாணிக்கனார்,

"பாரத நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலம்....வேறுசில வரலாற்று ஆசிரியர் ஏறத்தாழ கி.மு.1000 என்பர். எனவே பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் காலமும் ஏறத்தாழ கி.மு. 1000 என்று கூறலாம்."[29]

என்கிறார். உதியஞ் சேரலின் பழமையைக் காட்டும் நோக்கில் இவர் இக்கருத்தைக் குறிப்பிட்டு ஏற்றுள்ளார். ஆனால், உதியனின் காலம் அத்துணைப் பழமையானதன்று. முன்னர்ச் சுட்டிய சங்க கால அரசு உருவாக்கச் சூழல்களைக் கருத்திற் கொண்டு பார்த்தால் இது மிகைப்படுத்தப்பட்ட செய்தியாக இருப்பது புலனாகின்றது. தமிழக அரசு வரலாற்றை ஆராய்ந்த கே.என்.சிவராஜபிள்ளை உதியன் சேரலின் காலத்தை 1 A.D.[25] A.D.[30] எனவும், கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார் கி.பி.130[31] எனவும் குறிப்பிடுகின்றனர். சு.வித்தியானந்தன் கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சங்க காலத்தின் தொடக்க காலமாகக் குறிப்பிடுகின்றார். அவரின்,

"பசும்பூண் பாண்டியன் ஆய்நாட்டைக் கைப்பற்றியது ஏறக் குறைய கி.பி.எழுபதாம் ஆண்டிலாகும். இவனுக்கு முன்பும் பின்பும் ஆண்ட அரசர் ஒவ்வொருவருக்கும் இருபத்தைந்து ஆண்டுகள் வரை ஆண்டனர் எனக் கொண்டு கணக்கிட்டால் கி.மு.ஐம்பது தொடக்கம் கி.பி. இருநூறு வரையுள்ள காலப்பகுதியைச் சங்க காலம் எனக் கொள்ளலாம். எனவே, பொதுவாகக் கூறுமிடத்துச் சங்க நூல்களைக் கி.மு.முதலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி வரையுள்ள நூற்றாண்டுகளுக்கு உரியன என வரையறுக்கலாம்."[32]

என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், கருவூரேறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரலுக்குப் பின் குழுமூரிலிருந்து ஆண்ட உதியன்சேரலின் காலத்தைக் கி.மு.முதலாம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம். இவ்வாறு, கி.மு.முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த இவனை கி.மு.1000-இல் நடந்த பாரதப்போர்க் காலத்தவனாகக் காட்டுவது எவ்வகையிலும் பொருந்தாது. இக்கால முரணும் இக்கதைச் செய்தி பழமை பாராட்டும் பாடல் மரபே என்பதையும், இக்கதையின் வழி மூவேந்தர் அரசு ஒன்றைப் பேரரசாக மாறாத நிலையையும் வலியுறுத்துகின்றது.

(iv) குருஷேத்திரமும் தமிழகமும்:

பாரதப்போர் நடந்த குருஷேத்திரம் என்பது இன்றைய டெல்லிப் பகுதியை அடுத்த ஹரியானாவைச் சார்ந்தது. இப்பகுதிக்கும் தமிழகத்திற்கும் இடைப்பட்ட தொலைவு மிக அதிகமானது. இன்றைய சூழலில் அப்பகுதிக்குச் செல்லவே பல நாட்கள் பிடிக்கும் நிலையில் எவ்வித எளிய போக்குவரத்து வசதியும் இல்லாத பண்டைக் காலச் சூழலில் ஏறத்தாழ 2000 கி.மீ.தொலைவிலுள்ள அவ்விடத்திற்கு இச்சேர வேந்தன் சென்றான் என்பது நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட செய்தியாகவே உள்ளது. மேலும், இவன் உணவுப் பொருட்களுடனும் வேண்டிய ஆட்களுடனும் அங்குச் சென்றான் என்னும் உரையாசிரியர் கருத்து இயல்புக்கு முரணாக உள்ளது.

இத்துடன் மட்டுமின்றி மூவேந்தர் தமிழகத்தை ஆண்ட அக்காலத்தேயும் அதற்கு முன்பும் வடக்கில் பல பலம் வாய்ந்த அரசுகள் தொடர்ந்து ஆண்டு வந்துள்ளன. கி.மு.269 முதல் கி.மு.232 வரை அசோகன் பேரரசு செலுத்தினான். அதன் பின்னர் ஐம்பது ஆண்டுகள் மகத நாட்டை ஆண்டவர் மோரிய மன்னர். இவர்களின் இறுதிக் காலக்கட்ட அரசனான பிரஹத்திரதன் என்பான் ஆட்சியோடு மௌரியர் ஆட்சிக் காலம் கி.மு.183-இல் முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் குஷாணர்கள் வட இந்தியப் பெரும்பரப்பில் ஒரு சில நூற்றாண்டு காலம் ஆட்சி செலுத்தினர். இவ்வாறு, வட இந்தியாவில் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு முதல் பல்வேறு அரச இனங்களும் ஆண்ட காலச் சூழலில் இப்பேரரசுகளைக் கடந்து உதியன்சேரல் சென்றான் என்பது நடப்புக்கு முரணானது. தமிழ் நாட்டிலேயே தம் ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்திக் கொள்ள இயலாத, பல்வகைப்பட்ட உட்போராட்டங்கள் நிலவிய சூழலில் ஒரு மன்னன் வடநாடு வரை சென்று வந்தான் என்பது இயல்பான செயலன்று.

இதுவரை ஆராய்ந்த செய்திகளை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்ற பொழுது, பாரதப்போர் நடந்த காலம் மிகப் பழமையான காலம் என்பதாலும், சேர, சோழ, பாண்டியர் தம் ஆரம்பகாலம் அப்பாரதப்போருக்குப் பல நூற்றாண்டுகள் பிறப்பட்டது என்பதாலும், தமிழகத்தே அன்று நிலவிய பல்வகைப்பட்ட உட்போராட்டங்களுக்கு இடையே தலையெடுக்க ஆரம்பித்த மூவேந்தர் மரபில் முதல் மரபைச் சார்ந்த ஒரு வேந்தன், பேராற்றல் வாய்ந்தவனாக மிக நெடுந் தொலைவிலுள்ள குருஷேத்திரத்திற்குச் சென்றான் என்பது நடப்பு நிலைக்கு முரணானது என்பதாலும் பாரதப்போரில் பெருஞ்சோறு கொடுத்த செயல் உண்மையன்று

என்பதை உணரலாம். இது வேந்தனின் பழமை போற்றும் நடப்பல்லாத ஒரு புகழ்ச் செய்தியாகும். எனவே, உதியனும் முரஞ்சியூர் முடிநாகராயரும் பாரதப் போர் நடந்த காலத்தே வாழந்தவர் அல்லர் என்பதையும், பாரதப்போரில் பெருஞ்சோறு கொடுத்தமை ஒரு புகழ்க்கதையே என்பதையும், இதன்வழி மூவேந்தர் அரசு ஒற்றைப் பேரரசாக மாறாத சமூக - அரசியற் காரணங்களையும், அதன் மாற்றங்களையும் உணலராம்.

அடிக்குறிப்புகள்:

1. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு (தொகுதி I), ப.518.

மு.இராகவையங்கார், சேர வேந்தர் செய்யுட் கோவை, முதல் தொகுதி, ப.V. IX.

2. அக., மணிமிடைப் பவளம், பொ.வே.சோமசுந்தரனார் உரை, ப.349.
3. மேலது., ப.349.
4. தொல்.பொருள்., நச்சி., உரை, ப.167.
5. மு.இராகவையங்கார், சேர வேந்தர் செய்யுட் கோவை, முதல் தொகுதி, ப.V.IX.
6. பத்திராதிபர், அருச்சுனனும் பாண்டிய மரபும், செந்தமிழ். 8:10, ப.488.
7. சு.அ.இராமசாமிப் புலவர், உணாக்கொடை வழங்கிய உதியஞ்சேரல், செந்தமிழ்ச் செல்வி, 24:10; ப.447.
8. மா.இராசமணிக்கனார், கால ஆராய்ச்சி, ப.7.
9. பி.டி.சீனிவாச ஐயங்கார், தமிழர் வரலாறு, தொகுதி இரண்டு, ப.240.
10. மேலது., ப.297.
11. மேலது., பக. 306-307.
12. மேலது., ப.237.
13. மேலது., ப. 241.
14. K.N.sivaraja Pillai, The Chronology of the Early Tamils, p.104.
15. எஸ். வையாபுரிப் பிள்ளை, இலக்கியச் சிந்தனைகள், ப.36.
16. மேலது., ப.38.
17. மேலது., ப.37.
18. மேலது., பக.38-39.

19. K.N.sivaraja Pillai, The Chronology of the Early Tamils, p.81.
20. மேலது., ப.83, சு.வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப.26.
21. மேலது., ப.26.
22. மு.இராகவையங்கார், சேர வேந்தர் தாய வழக்கு, செந்தமிழ்ச் செல்வி. 27:10; பக். 349-350.
23. சு.வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப.25.
24. பத்திராதிபர், பாண்டவர் காலம், செந்தமிழ்ச் செல்வி, 3:10; ப.371.
25. மேலது., 3:10; ப. 371, மற்றும் 3:12, ப.402.
26. R.C.Dutt, Ancient India, pp. 15-20.
27. R. Sathianathaier, A political and cultural History of India, volume 1, p.51.
28. K.N.sivaraja Pillai, The Chronology of the Early Tamils, p.104.
29. மா.இராசமாணிக்கனார், கால ஆராய்ச்சி, ப. 7.
30. K.N.sivaraja Pillai, The Chronology of the Early Tamils, in the synchronistic Tables, p. 518.
31. மேலது., ப.518.
32. சு.வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப.42.

5. மூவேந்தரும் இமயமும் இலச்சினைப் பொறிப்பும்

சங்க இலக்கியத்தில் இமயம் பற்றிய செய்திகள் பரவலாகப் பேசப்பட்டுள்ளன. சங்கப் பாக்களில்,

பொற்கோட்டு இமயமும், பொதியமும், போன்றே
(புற.,2:24)

இமயத்து ஈண்டி, இன் குரல் பயிற்றி (புற.,34:21)

இமயச் செவ் வரை மானும் கொல்லோ (அக.,265:3)

வடதிசை எல்லை இமயம் ஆக (பதி.பத்து.,43:7)

வட புல இமயம் (சி.ஆ.,48)

என்றாற் போல் பல இடங்களில் இமயம் குறிப்பிடப்பட்டுள்ளது. நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, பரிபாடல் போன்ற பிற இலக்கியங்களிலும் இச்சொல் இடம் பெற்றுள்ளது. இமயம் என்னும் சொல் ஏறத்தாழ பதினெட்டு இடங்களிலும், இமையம் என்னும் சொல் கலித்தொகையில் மூன்றிடங்களிலும் காணப்படுகின்றன. இவ்வாறு இமையம் பற்றி நன்கறிந்த தமிழ்ப் புலவர்கள் இமயம் பற்றிய செய்திகளை மட்டுமே கூறுவதோடு நில்லாமல் அதைத் தமிழ் வேந்தர்களுடனும் இணைத்துக் கூறியிருப்பதையும் சங்கப் பாடல்களில் காணலாம். இதை ஒருவித மரபாக அவர்கள் கைக்கொண்டுள்ளனர்.

வட திசையதுவே வான் தோய் இமயம்,
தென் திசை ஆஅய் குடி இன்றாயின்,
பிறழ்வது மன்னோ, இம் மலர் தலை உலகே
(புற.,132:7-9)

கழை வளர் இமயம் போல,
நிலீஇயர் அத்தை, நீ நிலம் மிசையானே (புற.,166:33-34)

எனப் புகழும் நோக்கில் பலபட இமயத்துடன் அரசர்களை இணைத்துக் கூறுகின்றனர். இச்செய்தி பின்னாளில்,

கடவுள் நிலைய கல் ஓங்கு நெடு வரை
வட திசை எல்லை இமயம் ஆக,
தென்அம் குமரியொடு ஆயிடை அரசர்

முரசுடைப் பெருஞ் சமம் ததைய, ஆர்ப்பு எழ,
சொல் பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போர் அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ!
(பதி.பத்து.,43:6-11)

ஆரியர் துவன்றிய, பேர் இசை இமயம்
தென்அம் குமரியொடு ஆயிடை
மன் மீக் கூறுநர் மறம் தபக் கடந்தே (பதி.பத்து.,11:23-25)

என்றெல்லாம் தமிழ் வேந்தர் இந்திய அரசர் பலரின் ஆற்றலை அழித்து அவர்தம் நாட்டைப் பாழ்படுத்தியதாகப் பாடும் நிலைக்கு மாற்றம் பெற்றது. இவ்வாறு, தமிழக வேந்தரின் போர் மாண்புகள் பலபடப் பாராட்டப்பட்ட நிலையில், இமயத்தில் சின்னம் பொறித்ததான செய்திகளும் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு பலபட வளர்ந்த இமயச் சிந்தனையின் உச்ச நிலை சேரன் செங்குட்டுவன் இமயத்திலிருந்து கண்ணகி சிலைக்குக் கல்லெடுத்து வந்தமையே எனலாம். இச்செய்தி பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தின் பதிகத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளது.

ஆரியர் அலறத் தாக்கி, பேர் இசைத்
தொன்று முதிர் வட வரை வணங்கு வில் பொறித்து,
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி................[1]

வலம் படு முரசிற் சேரலாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பு அறுத்து, இமயத்து
முன்னோர் மருள வணங்குவில் பொறித்து,
நல் நகர் மரந்தை முற்றத்து ஒன்னார்
பணி திறை தந்த பாடுசால் நன்கலம்[2]

வட புல இமயத்து, வாங்கு விற் பொறித்த
எழு உறழ் திணி தோள், இயல் தேர்க் குட்டுவன்[3]

அடு களத்து உயர்க, நும் வேலே; கொடுவரிக்
கோண்மாக் குயின்ற சேண் விளங்கு தொடு பொறி
நெடு நீர்க் கெண்டையொடு பொறித்த
குடுமிய ஆக, பிறர் குன்று கெழு நாடே[4]

மலி திரை ஊர்ந்து தன் மண் கடல் வெளவலின்,
மெலிவு இன்றி, மேல் சென்று, மேவார் நாடு இடம்பட,

புலியொடு வில் நீக்கி, புகழ் பொறித்த கிளர் கெண்டை,
வலியினான் வணக்கிய, வாடாச் சீர்த் தென்னவன்[5]

மேற்சுட்டிய ஐந்து பாடலடிகளிலும் மூவேந்தர் தம் இலச்சினையைப் பொறித்த செய்திகள் பாடப்பட்டுள்ளன. இவ்வைந்து பாடல்களும் இலச்சினை பொறிக்கப்பட்ட இடத்தைச் சுட்டுதலால் இருவகைப்படுகின்றன. முதல் மூன்று பாடலடிகளுள் இமயத்தில் சேர வேந்தர் இலச்சினை பொறித்ததைக் குறிப்பிடுகின்றன. ஏனைய இரண்டில், புறநானூற்றுப் பாடல் சோழனையும் பாண்டியனையும் இணைத்து இருவருடைய இலச்சினைகளான புலியும் மீனும் பொறிக்கப்பட குன்றுகளை உடையனவாகட்டும் பிறர் நாடு எனப் புகழ்கின்றது. இதில், இமயத்தில் இவ்விலச்சினைகள் பொறிக்கப் பட்டதான செய்தி குறிப்பிடப்படவில்லை. இதைப்போலவே, கலித்தொகையும் பிறர் நாட்டைக் கைப்பற்றிய பாண்டிய மன்னன் ஒருவன் அந்நாட்டில் முன்னமே பொறிக்கப்பட்டிருந்த புலி, வில் இலச்சினைகளை நீக்கி விட்டு மீன் இலச்சினை பொறித்த செய்தியைத் தருகின்றது. இவ்விரு பாடல்களிலும் இலச்சினை பொறிக்கப்பட்ட இடம் தமிழகமாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பாடல்கள் தரும் செய்திகளின் அடியாகப் பார்க்கின்ற பொழுது தமிழகச் சூழலில் பிறர் நாட்டை, ஊரை வென்ற மன்னர்கள் தம் அரச இலச்சினையைப் பிறரை வென்றதன் அறிகுறியாக அந்நாட்டு மலைகளில் பொறித்தலை வழக்கமாகக் கொண்டிருந்தது புலனாகின்றது. இவ்வாறு தமிழக அளவில் நிலவிய இம்மரபை விரிவுபடுத்தி இமயத்தில் பொறித்ததாகக் காட்டியிருப்பது வைதீகத் தாக்கத்தால் எழுந்த புகழ்மரபு பற்றிய ஒரு பாடல் மரபே எனலாம். முன் பக்கங்களில் பார்த்ததைப்போல, அசோகனுக்குப் பின் வடபுலத்தே பல அரசுகள் வலிமையுடன் திகழ்ந்தன. இத்தகைய அரசுகளை எல்லாம் வென்று வடநாடு சென்று இமயத்தே இலச்சினை பதிக்கும் அளவுக்கு வலிமை வாய்ந்த பேரரசுகள் இங்கே (தமிழகத்தில்) நிலவியிருக்கவில்லை.

மருத விளைவயல் பெருக்கத்தின் காரணமாகவும், பன்முகப்பட்ட போர்களின் காரணமாகவும், தலைமைகள் பலவும் தங்களுக்குள் முட்டிமோதிக் கொண்டு அரசுகள் வளரத்தலைப்பட்ட காலம் சங்ககாலம். இக்காலச் சூழலில் இமயம் வரை படையெடுத்துச் சென்று பல அரசுகளையும் வென்று இமயத்தில் இலச்சினை பொறித்து வரும் நிலையில் ஆற்றல் வாய்ந்த படை இருந்ததற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் இல்லை. சங்க காலப் பாடல்கள் குறிப்பிடும் போர் முறைகளைப் பார்த்தாலே அது போர்க்காலத்தே மக்கள் திரண்டெழுந்து போர் செய்த நிலையைத்தான் பெரும்பாலும் காட்டுகின்றன.

கெடுக சிந்தை கடிது இவள் துணிவே (புற.,279:1)

என்னும் புறநானூற்றுப்பாடல், மறக்குடி மகளொருத்தி தமையன், கணவன், மகன் மூவரையும் அடுத்தடுத்த போர் நாட்களில் போருக்கு அனுப்பிய செய்தியையே காட்டுகின்றது.

படைக்கலக் கொட்டில் இருந்தமையைப் புறநானூற்றின் 95-ஆம் பாடல் காட்டுகின்றது. இதைப்போலவே நெடுநல் வாடையும் (177-187), முல்லைப்பாட்டும் (24-28), பதிற்றுப்பத்தும் பாசறை பற்றிய செய்திகளை முன்வைக்கின்றன. இவையெல்லாம் மிகப்பெரிய, நிலையான படையமைப்பு இருந்தமைக்கான சான்றுகளாகக் கொள்ள இயலாதவை.

சங்க காலம் போர்கள் மலிந்த காலம். தலைமைகள் ஒவ்வொன்றும் தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டு வளரத் தலைப்பட்ட நிலையில் குறுநில மன்னர் மூவேந்தர்க்குள்ளும், மூவேந்தர்கள் இடையேயும், குறுநில மன்னரிடையேயும் போர்கள் பல நிகழ்ந்துள்ளமை இயல்பே. “தமிழ் நாட்டு மூவேந்தரும் ஓயாது தம்முள்ளும் குறுநில மன்னருடனும் நிகழ்த்திய போர்களை நோக்கின், தம் படைவலி, தம் செங்கோல், தம் ஆணை முதலியவற்றை யாவரும் ஒப்புக்கொண்டு தமது ஆட்சிக்கு உட்பட்டிருக்கத் தாம் அரசருக்கு அரசராகத் திகழ வேண்டும் என்ற உட்கோளே அக்கால அரசரின் போர்கள் பலவற்றிற்குக் காரணமாக இருந்ததென அறியலாம்”[6] என, சு.வித்தியானந்தன் குறிப்பிடுவது தமிழகத்தில் நிகழ்ந்த பல்வகைப் போர்களையும் அவற்றின் நோக்கங்களையும் விளக்குகிறது.

பண்டைத் தமிழகப் போர்களுள் ஒரே குடிக்குள் நடந்த போர்களையும் காணமுடிகின்றது. நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இருவரும் ஆட்சி உரிமை வேண்டிப் போர் நடத்தியுள்ளனர் (புற., 44;45). கோப்பெருஞ்சோழனுடன் அவன் மக்களே மாறுபட்டு ஆட்சி வேண்டிப் போர் தொடுத்துள்ளனர்(புற.,213). இதற்கு அப்பாற்பட்ட நிலையில் மூவேந்தர்களுக்குள்ளும் பல போர்கள் நடந்துள்ளன. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையோடும் (புற.,17), யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடும் (புற.,125), சோழன் செங்கணான் சேரமான் கணைக்கால் இரும்பொறையோடும் (புற.,74) மோதிய நிலையை அப்பாடற் கொளுக்கள் காட்டுகின்றன.

கரிகாலன் பெருஞ்சேரலாதனொடு மோதிய வெண்ணிப் போரையும் (புற.,65;66), செழியன் ஏனைய இருபெரு வேந்தரொடு மோதிய கூடற்பறந்தலைப் போரையும் (அக.,116), கிள்ளிவளவன்

கோதை மார்பனொடு மோதிய கூடல் போரையும் (அக.,346), வேல்பல் தடக்கை பெருவிறற்கிள்ளி, சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் இருவருக்கும் இடையே நடைபெற்ற போரையும் (புற.,62;63) சங்கப்பாக்கள் காட்டுகின்றன.

இவற்றிற்கு மாறாக ஒரு மன்னனைப் பலரும் ஒன்று சேர்ந்து எதிர்த்த நிலைகளையும் காணமுடிகின்றது. பாரி, மூவேந்தரால் எதிர்க்கப்பட்டதைப் புறப்பாடல்கள் (109-112) காட்டுகின்றன. கரிகாலன், பதினோரு (11) வேளிரோடும் இருபெரு வேந்தரோடும் போரிட்டதையும் (அக.,196;246) அவனே வாகைப்பறந்தலையில் ஒன்பது மன்னருடன் மோதியதையும் (அக.,125) சங்கப்பாடல்களில் காணலாம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் சேர, சோழருடன் திதியன், எழினி, எருமையூரன் இருங்கோ வேண்மான், பொருநன் எனும் ஐவருடனும் போரிட்டதையும் (புற.,19;76), ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் மாவன், ஆதன் அழிசி, அந்துவஞ் சாத்தன், ஆந்தை, இயக்கன் என்னும் மன்னர்களோடு மோதியதையும் (புற.,71), சேரன் செங்குட்டுவன் ஒன்பது மன்னருடன் போரிட்டதையும் (பதி.பத்து.5-ம் பத்துப் பதிகம் 19;20) சங்கப்பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இவற்றுடன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனின் கருவூர் முற்றுகையும் (புற.,36), வஞ்சி முற்றுகையையும் (புற.,39), இம்மன்னன் காரியுடன் போரிட்ட திருக்கோவில் போரையும் (புற.,46) காணலாம். சேரன் பொருட்டு காரி ஓரியைக் கொன்றதையும் அகநானூற்றுப் பாடலும் (209), நற்றிணையும் (320) காட்டுகின்றன. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை அதியனுடன் போரிட்ட வாகைப் பறந்தலைப் போரையும் (அக.,125.குறு.,393), அதியமான் எழினியுடன் போரிட்ட தகடூர்ப் போரையும் (புற.,230), ஆய் எயினனுடன் மிஞிலி மோதிய பாழிப்பறந்தலைப் போரையும் (அக.,208), வெளியன் தித்தன் x சேந்தன் (குறு.,258), ஆமூர் மல்லன் x வெளியன் தித்தன் (புற.,80), பழையன் x தித்தன் வெளியன் (போர்வைக் கோப்பெருநற்கிள்ளி) (அக.,186), பழையன் x நன்னன் (அக.,44), அதியன் (புள்ளூநாடு) x நன்னன் (அக.,396), பிண்டன் x நன்னன் (அக., 152) ஆகியோரிடையே நடைபெற்ற போர்களையும் சங்கப் பாக்களில் காணலாம்.

இத்தகைய பல்வகைப்பட்ட போர்களும் அன்றைய தமிழக எல்லைக்குள் நடந்தவை. தமிழக எல்லைக்குள்ளேயே இத்தகு பல்வகைப் போர்களும், தமிழகத்தில் ஒரு நிலையான தனித்த ஒற்றைப் பேரரசு நிலவவில்லை என்பதையே வலியுறுத்துகின்றன. ‘‘இமயமுதல்

குமரி வரை ஆண்ட முதற் பேரரசன் மட்டுமல்ல ஒரே பேரரசன் நெடியோன் என்ற இந்த நிலந்தரு திருவிற் பாண்டியனே யாவான்..... இந்தியா அல்லது பாரத கண்டம் முழுவதும் ஒரு குடைக்கீழ் ஆண்டதாக இதிகாசங்களில் கூறப்படும் பரதன் இவனே என்று பண்டித சவரிராயன் போன்ற அறிஞர் கருதியுள்ளனர்"[7] என ஆய்வாளர் கருதும் நிலைக்கு மாறாகத் தமிழக வேந்தர்கள் தமிழக எல்லைக் குள்ளேயே ஒரு பெரும் பேரரசு அமைக்க இயலாதவராக இருந்துள்ளனர்.

இத்தகைய போராட்டச் சூழல்களில் வலிமை வாய்ந்த பேரரசு இருந்திருக்க வாய்ப்பே இல்லை. எனவே, இச்சூழலில் வேந்தர் இமயம் சென்று இலச்சினை பொறித்தனர் என்பதும் நடப்புநிலை பற்றிய பாடல் மரபாக இருக்க வாய்ப்பேதும் இல்லை என்றும் அவதானிக்கலாம்.

"இந்தியத் தென்கோடியிலிருந்து இமாலயத்தின் உச்சி வரையான ஒரு நெப்போலியப் படையெடுப்பு இந்திய வரலாற்றின் எந்தக் காலத்திலும் எண்ணிப் பார்க்கவும் இயலா ஓர் அருஞ்செயலாகும். மேலும், பிற்காலக் கட்டுக்கதை ஒன்றின்படி தம்முடைய பாட்டுக்குப் பதினாறு நூறாயிரம் பொற்காசுகள் பரிசளிக்கப் பட்டவரும் தம் தலைவனின் அருஞ்செயல்களை மிகைப் படுத்திக் கூற முழுஉரிமை பெற்றவரும் ஆன கரிகாலன் புகழ் பாடிய, அவன் சமகாலப் புலவரான உருத்திரங் கண்ணனார் இதைக் குறிப்பிடவில்லை..... இமயம் வரைப் படையெடுத்துச் சென்றான் என்பது தெளிவாக ஒரு பிற்காலக் கட்டுக் கதையே அல்லது வேறன்று"[8] எனச் சிலப்பதிகாரம் கூறும் கரிகாலனின் இமய வெற்றிக்கு பி.டி.சீனிவாச ஐயங்கார் அளித்த கருத்து விளக்கமே சேரர் இமயத்தில் இலச்சினை பொறித்ததாகக் கூறப்படும் சங்கச் செய்திக்கும் பொருந்தும். அரசுகள் வளரத் தலைப்பட்ட அக்காலச் சூழலில் மூவேந்தர்களின் புகழையும் வீரத்தையும் மேம்படுத்திக்காட்ட வைதீகத் தாக்கத்தால் புலவர்கள் கையாண்ட ஒருவகைப் பாடல் உத்தியே இது. எனவே இதுவும் வைதீகத் தாக்கத்தின் பரவலால் எழுந்த புகழ்மரபுக் கதையே ஆகும். மேலும்,

"சேரர், சோழர், பாண்டியர் முதலியோர் தங்கள் முன்னோர்களில் சிலர் செயற்கரிய செயல்களைச் செய்ததாகக் கூறுகின்றனர். அவற்றில் பல வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவுறுத்துகின்றன. சில கற்பனையாகவும் உள்ளன.கற்பனையாக உள்ளவையும் ஏதோ ஒரு வரலாற்று நிகழ்ச்சியை முதலில் உவமை போல் மிகைபடக் கூற அதையே பின்னர் உவமை என எடுத்துக்கொண்டுள்ளார்கள் என்று ஊகிக்க இடமுண்டு. இமயத்தில் சின்னம் பொறித்தது போன்றவை மூவேந்தருக்கும் பொதுவானவை"[9] என்னும் இரா.நாகசாமியின் கூற்றும்

இமய இலச்சினைப் பொறிப்பு கற்பனையாக உருவாக்கப்பட்ட ஒரு புகழ் மரபே என்பதை வலியுறுத்துகின்றது.

“பகைப்புலத்தைத் தமதாக்கி நாட்டெல்லைகளை விரிவாக்கி, நிலைபெற அந்நாடுகளை ஆளுதலைக் காண்பது அரிதாகவே இருக்கிறது. இமயம் வரை படையெடுத்துச் சென்ற பண்டைத் தமிழ் மன்னர்கள் இமய வெற்பில் புலி விற்பொறி பதித்து மீள்கின்றனரேயன்றித் தாம் வென்ற பகுதிகளைத் தம் பொறுப்பில் வைத்துக்கொள்பவராக இல்லை”[10] என, கு.வே.பாலசுப்பிரமணியன் சுட்டும் கருத்து சங்ககால வாழ்வியல் சூழலுக்கு வேறுபட்டதாக உள்ளது. போருக்கான காரணங்களுள் மண்ணாசை, இடஞ்சிறிது என்னும் ஊக்க மேலீடு எனச் சிலவற்றையும் காட்டும் இவரே மேற்கருத்தையும் சுட்டுவது முரணாக உள்ளது. இத்தகு மண்ணாசைகள் இல்லையெனில் மூவேந்தர் நாட்டு எல்லைப் பரப்பு வளர்ந்து இருக்காது. மூவேந்தர் மரபும் தோன்றியே இருக்காது.

நீயே, பிறர் நாடு கொள்ளும்காலை, அவர் நாட்டு
இறங்கு கதிர்க் கழனி நின் இளையரும் கவர்க (புற.,57:5-6)

மாற்று இரு வேந்தர் மண் நோக்கினையே (புற.,42:24)

பிறர் மண் உண்ணும் செம்மல் (புற.,20:13)

ஆர் எயில் தோட்டி வௌவினை (பதி.பத்து.71:13)

முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல் இசை நிறுத்த வல் வில்
ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயம் கெழு கொல்லி

(அக.,209:12-15)

என்றெல்லாம் புலவர் பாடுவது வேந்தர் மண்ணாசையின் பொருட்டுப் போர்புரிந்த நிலையையே காட்டுகின்றது. அரசு உருவாக்கத்தின் அடிப்படைக் கூறு நிலப் பெருக்கமே ஆகும். எனவே, பலப்பல உட்போராட்டங்கள் நிலவிய சங்கச் சூழலில் இமயப் படையெடுப்பு என்பதற்கான சாத்தியக் கூறுகள் சிறிதும் இல்லை என்று கூறலாம்.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து சங்ககாலத் தமிழகத்தின் வட அரசியல் எல்லை குறித்தும், மூவேந்தர்களது அரசியல் வரலாறு பற்றியும், மூவேந்தர் அரசு ஒற்றைப் பேரரசாக மாறமுடியாத நிலைகள் குறித்தும் சான்றுகளுடன் விரிவாக அறிய முடிகின்றது. இனி, வைதீகத் தாக்கத்தின் பரவலுக்கான வரலாற்றுக் காரணங்களைக் காணலாம்.

அடிக்குறிப்புகள்:

1. அக., 396:16-19.
2. மேலது., 127:3-7.
3. சி.ஆ., 48-49.
4. புற., 58:29-32.
5. கலி., 104:1-4.
6. சு.வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப. 35.
7. கா.அப்பாதுரையார், தென்னாட்டுப் போர்க்களங்கள், பக். 26-27.
8. பி.டி.சீனிவாச ஐயங்கார், தமிழர் வரலாறு, தொகுதி I, பக். 43-44.
9. இரா.நாகசாமி, யாவரும் கேளிர், ப.4.
10. கு.வே.பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் புறப்பொருள், ப.78.

6. வட இந்திய அரசியல் வரலாறு (கி.மு. 6-4 ஆம் நூற்றாண்டு)

இதிகாசங்கள், புராணங்கள் ஆகியவற்றோடு இந்திய வரலாற்றில் இருண்டகாலம் ஓரளவு முடிவுறுகிறது என்று கூறலாம்.1 கி.மு.ஆறாம் நூற்றாண்டில் கங்கைச் சமவெளியில் பல பேரரசுகள் தோன்றுவதற்கேற்ற சூழ்நிலை உருவாகி வந்தது. அவற்றைப் பற்றிப் பௌத்த இலக்கியங்களும், சமண இலக்கியங்களும் நன்கு எடுத்துக்காட்டுகின்றன. இந்நூல்களின் மூலமாகவே வட இந்திய அரசியல் நிலைமையைப் பற்றி ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது. வைதீகத் தாக்கத்தின் பரவலுக்கான வரலாற்றுக் காரணங்களை அறிந்து கொள்வதற்கும், இந்தியாவின் வரலாற்றை முறையாக எழுதுவதற்கும் இது முதல் (கி.மு. ஆறாம் நூற்றாண்டு முதல்) சாத்தியமாகிறது.

I. மௌரியருக்கு முற்பட்ட வடஇந்தியா:

கி.மு.ஆறாம் நூற்றாண்டிலிருந்துதான் வட இந்திய அரசியலின் தொடர்ச்சியான வரலாறு கிடைக்கிறது. அவ்வரலாற்றினை அறிவதற்குத் தேவையான சான்றுகள்: (1) புராணங்கள், (2) பௌத்த, சமணர்களுடைய (பாலி) சமய இலக்கியங்கள், (3) பாரசீக, கிரேக்க வரலாற்று ஆசிரியர்களுடைய சில குறிப்புக்கள் முதலியவற்றினின்றும் கிடைக்கின்றன. இவற்றில் புராணங்களில் அளவிறந்த கட்டுக்கதைகள் உள்ளன (புராணம்:பழமையானது). என்றாலும், ஒவ்வோரிடங்களில் சில அரசகுல விவரங்கள் காணப்படுகின்றன. புராணங்களிற் பழமையானது விஷ்ணு புராணம் என்பது பெரும்பாலான ஆசிரியர்களது கருத்து: மத்ஸ்ய, வாயு புராணங்களில் உண்மை வரலாறும் கட்டுக்கதைகளும் கலந்து காணப்பெறுவதால் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்துக் காண்பது கடினமாயினும் அவையும் தேவைப்படுவனவாகவே உள்ளன. குப்தர் ஆட்சிக் காலம் வரையில் உள்ள மன்னர்கள் வரலாற்றை ஓரளவு உணர்த்துவது மத்ஸ்ய புராணமாகும். புராணங்கள் வரலாற்று மறையைப் பின்பற்றுவனவல்ல... ஆதலால், பார்ஜிதர் என்னும் அறிஞர் வேண்டுவது போல அவற்றை முற்றிலும் நம்பிவிடுதல் தகுதியன்று. வரலாற்று நூல்களாக அவை பயன்பட வேண்டும் என்று கருதி இயற்றப்படவில்லை. எனவே, வரலாறு கற்போர்க்கு இவை அதிகம் பயன்படாதெனலாம்.

சூரிய குலம், சந்திர குலம் என்ற குலமுறை கூறும் புராணங்களால் வரலாற்றிற்கு மிகுதியாகப் பயன் இருக்க முடியாது என்பது

வெளிப்படை. பரீட்சித்திற்கு முற்பட்ட அப்புராணங்கள் கூறும் வரலாறு பௌராணிகரது கற்பனையைச் சார்ந்ததாக இருக்கக் கூடும். அதற்குப் பிற்பட்ட வரலாறு ஆங்காங்குச் சில மாறுதல்களோடு வரன்முறைக்கு ஒத்ததாக இருக்கலாம். மகாபாரதப் போருக்கு 36 ஆண்டுகளுக்குப் பிறகு பரீட்சித் ஆட்சி புரிந்ததாக ஒரு கோட்பாடு. பாரதப் போரே கி.மு.3200 லிருந்து கி.மு.950-க்குள்ளாக எப்போதேனும் நடந்திருக்கக் கூடும் என்று பலரால் பலவிதமாகக் கணக்கிடப்படுகிறது. பொதுவாக வரலாற்றுச் சூழ்நிலையை ஆராயுமிடத்து அப்போர் கி.மு.1000-ஐச் சார நடந்திருக்கலாம் என்று கருதுவது மரபு. அப்போருக்குப் பின் புருமன்னர்களும், இஷ்வாகுக்களும், மகத மன்னர்களும் ஆரியாவர்த்தத்தின் ஒவ்வொரு பகுதியில் ஆண்டனர்.

மகத வம்சாவளியைப் பற்றிய விவரங்கள் புராணங்களில் ஓரளவு நம்பத்தக்க முறையிலும் வரலாற்று முறையைப் பின்பற்றியும் அமைந்துள்ளன. சைசுநாக வம்சத்திற்குப் பிற்பட்ட புராண விவரங்கள் வடஇந்திய வரலாற்றிற்கு முக்கியமான சான்றுகளாக விளங்குகின்றன. சிசுநாகருக்கும் மகாபத்ம நந்தருக்கும் இடையே 421 ஆண்டுகள் சென்றதாகப் புராணங்கள் கூறும்; ஆனால், சிங்கள பௌத்தக் குறிப்புகள் (சான்றாக மகாவம்சம்) பிம்பிசாரருக்கும் நவநந்தர்களுக்கும் இடையே 222 ஆண்டுகள் கழிந்ததாகக் கூறும். சிசுநாகருக்கும் பிம்பிசாரருக்கும் இடையே இரண்டு நூற்றாண்டுகள் கழிந்திருக்க முடியாது. இங்ஙனம் இச்சான்றுகளிடையே வேறுபாடு காணப்பட்டாலும், சிங்களக் குறிப்புக்களை விடக் கங்கைச் சமவெளியில் இயற்றப்பெற்ற புராண வரலாறு போற்றத்தக்கது என்று கொள்ளப்படும். அன்றியும், புராணங்கள் தரும் செய்திகள் விரிவாக அமைந்துள்ளன. அச்சான்றுகளால் வட இந்திய அரசியல் வரலாற்றின் முதற் பகுதி சிசுநாகர் காலத்தில் தொடங்கி சந்திரகுப்த மௌரியரால் தோற்கடிக்கப்பட்ட மகாபத்ம நந்தர் காலம் வரையுள்ள காலமேயாகும்.

சந்திரகுப்தர் கி.மு. 325-இல் பட்டமெய்தியதாகக் கருதப்படுவர்: அதாவது அவர் மகா அலெக்ஸாந்தர் இந்தியாவை விட்டு நீங்கிய உடனே பட்டமெய்தியதாகக் கொள்வதால் இந்நிலை பெறப்படுகின்றது. சிசுநாகருக்கும் மகாபத்ம நந்தருக்கும் இடையே பதினொரு மன்னர்கள் பெயர்கள் காணப்படுகின்றன: 1.சிசுநாகர்; 2.காகவர்ணர்; 3.ஷேமதர்மர்; 4.ஷத்ரஜ்ஞர்; 5.பிம்பிசாரர்; 6.அஜாதசத்ரு; 7.தர்சகர்; 8.உதயணன்; 9.நந்திவர்த்தனர்; 10.மகாநந்தி; 11.மகாபத்மநந்தி. முதல் நான்கு மன்னர்களுக்கும் மொத்தமாக 75 ஆண்டுகளும் ஏனையோர் ஒவ்வொருவருக்கும் 25 ஆண்டுகளும் ஆட்சிக் காலம் என்று கொண்டால், பதினொருவருக்கும் மொத்தமாக

250 ஆண்டுகள் ஆகும். இதோடு மகாபத்ம நந்தரின் 8 பிள்ளைகளின் கூட்டு ஆட்சிக் காலத்தை 25 ஆண்டுகளாகக் கொண்டால் மொத்தம் 275 ஆண்டுகளாகின்றன. சந்திர குப்தர் பட்டமெய்திய கி.மு.325-ஒடு 275-ஐச் சேர்க்க, சிசுநாகர் பட்டமெய்திய காலம் கி.மு.600 என்று கொள்ளலாம்.

பௌத்தர்களுடைய பிடக நூல்களினின்று புத்தரைப் பற்றியும், பௌத்தத்தைப் பற்றியும் அறியமுடிகின்றது. அவற்றால் பிம்பிசாரர், அஜாதசத்ரு, புத்தர் ஆகியோர் ஒரே காலத்தவர் என்று அறியலாம். வெளிநாட்டவருடைய வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து இந்தியாவின் உள்நாட்டுச் செய்திகள் மிகுதியாகத் தெரியவில்லை; அன்றியும் புறத்தார் இந்தியா மீது படையெடுத்து வென்ற விவரங்கள் இந்திய அகச்சான்றுகளால் புலனாவதில்லை. பாரசீகர்களும் கிரேக்கர்களும் வடமேற்கு இந்தியா மீது படையெடுத்த செய்தியை இந்திய நூல்கள் குறிப்பிடுவதில்லை.

1. ஆரியரின் அரசுகள்:

கி.மு.ஏழு அல்லது ஆறாம் நூற்றாண்டில் ஆரியரின் அரசுகள் இந்தியாவில் எந்தெந்த இடங்கள் வரை பரந்து கிடந்தன என்பதை அயிதரேயப் பிராமணம் (Aitareya Brahmana) அறிவிக்கிறது. இமயமலைக்கு அப்பால் உத்தர குரு (uttara Kurus), உத்தர மத்ரா (uttara madras) ஆகிய அரசுகள் முதல் யமுனைக்கும் சம்பல் நதிக்கும் தெற்கில் சத்வத் (Satvats) அரசு வரையிலும், மேற்கில் நீச்யர்கள் (Nichyas), அபாச்யர்கள் (Apachyas) ஆகியோர் வாழ்ந்த பிரதேசம் முதல் கிழக்கில் பிராச்யர்கள் (Prachyas) வாழ்ந்த பிரதேசம் வரையிலும் ஆரியர்கள் பரவியிருந்தனர் என்கிறது அந்நூல். நீச்யர்கள், அபாச்யர்கள் ஆகியோர் யார், அவர்கள் எப்பகுதியில் வாழ்ந்தார்கள் என்பதைப் பற்றி அறியமுடியவில்லை. ஆனால், பிராச்யர்கள் என்போர் கிரேக்கர்களால் பிராசி (Prasii) என்று அழைக்கப்பட்ட மக்களே என்பது தெரிகிறது. மகதத்திலும் அதைச் சுற்றியிருந்த பிரதேசங்களிலும் வாழ்ந்தவர்களே பிராசிகள். மகதத்துக்கு அப்பால் வடக்கு வங்காளத்தில் புந்திரர்களும் (Pundras); அவர்களுக்கும் அப்பால் மத்திய வங்காளத்திலும் கிழக்கு வங்காளத்திலும் வங்கர்களும் (Vangas) வாழ்ந்தார்கள். (பிராமணத்தில் வங்கர்களைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை; ஆனால், அதனுடன் சேர்ந்த ஆரண்யகத்தில் அவர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.)

தெற்கில் போஜர்களான ஆரிய குலத்தினரும், அவர்களுக்கு அப்பால் விந்திய மலைக் காடுகளில் புராதனப் பழங்குடியினரும்,

தெற்கில் கோதாவரிச் சமவெளியில் ஆந்திரர்களும் வசித்தனர். அயிதரேயப் பிராமணத்துக்குப் பிந்திய இந்து இலக்கியங்களும் பௌத்த இலக்கியங்களும் மேலும் புதிய அரசுகள் சிலவற்றைக் குறிப்பிடுகின்றன. அவை கோதாவரி நதிக்கு வடக்கில் கிழக்குக் கடற்கரையை ஒட்டியுள்ள கலிங்க நாடு, கோதாவரி நதியின் மேற்புறத்தில் அஸ்மக நாடு, மூலக நாடு, மாளவத்தில் அவந்தி நாடு, கத்தியவாரில் சௌராஷ்டிர நாடு, தெற்குச் சிந்துச் சமவெளியில் (சிந்து மாநிலத்தில்) சிந்து-சௌவீர நாடு (Sindhu-Sauvira) எனப்படும் புதிய நாடுகளாகும். இதனால் கி.மு.7 அல்லது 6-ஆம் நூற்றாண்டு வாக்கில் காபூல் சமவெளியிலிருந்து பீகார் வரையிலும் தெற்கில் கோதாவரி நதி வரையிலும் ஆரியரின் பண்பாடும் ஆதிக்கமும் பரவியிருந்தன எனத் தெரிகிறது.

2. பதினாறு பெரிய அரசுகள்:

கி.மு.ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கங்கைச் சமவெளியில் பல சிறு முடி அரசுகளும் சில குடியரசுகளும் ஆண்டு வந்தன. கோசலமும், மகதமும், அவந்தியும் ஒன்றன்பின் ஒன்றாகப் பேரரசு நிலையில் இருந்து வந்தன. இறுதியில் அந்நூற்றாண்டில் மகதம் ஏனையவற்றைவிட அதிக வலுவெய்தி வட இந்தியாவிலேயே முக்கிய அரசாகிப் பல நூற்றாண்டுகள் தொடர்ந்து அந்நிலையில் இருந்தது. பொதுவாக ஒவ்வொரு அரசும் அருகிலுள்ள பிற அரசுகளை வென்று தன் ஆட்சிக்குட்படுத்த முயன்றது; இதுவே கௌடல்யர் தமது அர்த்த சாத்திரத்தில் கூறும் ஏகசக்ராதிபத்யக் கோட்பாடாகும். அக்காலக் குடியரசுகளைப் பற்றிய விவரங்களையறிந்து கொள்ள சான்றுகள் அதிகமாக இல்லை. குடியரசுத் தலைவர்கள் அவர்களுடைய அரசுகளில் ‘தலைவர்’களாக விளங்கினர்; ஆனால், அவர்கள் எங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பது தெரியவில்லை; இவ்வரசுகளில், அனுபவம் மிக்க மூத்தோர் அவை(சபை)கள் அவ்வப்போது கூடி அரசியல், சமூகப் பிரச்சினைகளை ஆராய்ந்து, தலைவனுக்கு ஆட்சியில் உதவினர். அக்காலத்து மூத்தோர் அவைகளைத் தற்காலப் பாராளு மன்றங்களோடு சிலர் ஒப்பிடுவர்; இது வரலாற்று ஆராய்ச்சியாற் பெறப்படாத முடிவு என்றே கொள்ள வேண்டும்.

கி.மு.ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆர்யா வர்த்தத்தில் பதினாறு பெரிய அரசுகள் இருந்ததாகத் தெரிகிறது; அவற்றிற்கு மகா ஜனபதங்கள் (பெரிய அரசுகள்) என்று பெயர். அவற்றில் மகதம் (தெற்குப் பீகார்), கோசலம் (இன்றைய ஔக் பகுதி), வத்ஸம் (அலகாபாத் பகுதி), அவந்தி (மாளவம்-சர்மணவதி, சம்பல் ஆகிய நதிகளின் பள்ளத்தாக்குகள்), குரு (தானேஸ்வரம்,டெல்லி,மீரட் ஆகிய

மாவட்டங்கள்), பாஞ்சாலம் (பரேலி, பதாவூன், பரூக்காபாத் மாவட்டங்கள்), காசி (இன்றைய வாரணாசியும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும்), மத்ஸ்யம் (ஜெய்ப்பூரைச் சுற்றியுள்ள பகுதி) என்பவை முக்கியமானவை; சில மகாபாரதத்தில் கூறப்பெற்றுள்ளன.

சுதந்திரக் குடிகளில் மிதிலையைச் சேர்ந்த விரிஜ்ஜிகளும், கபிலவாஸ்துவைச் சேர்ந்த சாக்கியர்களும், குசீநகரத்தைச் சேர்ந்த மல்லர்களும் சிலர். வைசாலியைச் சேர்ந்த லிச்சாவிகளும் விரிஜ்ஜிகளுடன் சேர்ந்து ஒரு கூட்டாட்சி ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வரசுகளை ஆண்ட பண்டைய மன்னர்களில் அவந்தி மன்னரான பிரத்யோதர், அவரது மருமகனான கௌசாம்பி மன்னர் உதயணர், காசியை வென்ற கோசல மன்னர் பிரசேனஜித் என்பவர்கள் புகழ்பெற்ற சிலர். மகத மன்னரான பிம்பிசாரர் அங்க நாட்டை வென்றமையும், அவர் மகனான அஜாதசத்ரு வைசாலியை வென்றமையும் அறியலாம். இம்மன்னர்கள் அனைவரும் ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். பிம்பிசாரருக்குப் பிறகு மகதத்தின் அரசியல் ஆதிக்கம் ஓங்கிற்று; அதன் விளைவாக வட இந்திய அரசியல் ஐக்கியம் ஓரளவு இயலுவதாயிற்று.

3. மகதப் பேரரசின் தோற்றமும் வளர்ச்சியும்:

புராணங்களும், பௌத்த வரலாறுகளும் முதல் மகத அரசியல் வம்சத்தைப் பற்றி வெவ்வேறு கருத்துக்களைக் கூறுகின்றன. பிம்பிசாரர் ஆண்ட அரசகுல முதல்வர் சிசுநாகர் என்றும், அவர் குலம் சைசுநாககுலம் என்றும் புராணங்கள் கூறுகின்றன; ஆனால் அஜாதசத்ருவுக்குப் பிறகு உதயணர் என்னும் மன்னர் கி.மு.475-இல் பட்டமெய்தினார் என்று பௌத்த வரலாறுகள் கூறுகின்றன. அவ்வரலாற்றின் படி, உதயணர் பாடலீபுத்ர நகரத்தை நிருமாணித்தவர். அவர் காலத்திற்குப் பிறகு அந்நகரமே மகதத்தின் புகழ் பெற்ற தலைநகரமாயிற்று. பாடலீபுத்ரத்திற்கு முன் ராஜக்ருஹம் (இப்போது பாட்னா மாவட்டத்தைச் சேர்ந்து ராஜ்கீர் என்னும் பெயரோடு விளங்கும் இடிகரைகள்) என்னும் ஊர் தலைநகராயிருந்தது. சிலர் பாடலீகிராமம் என்னும் ஊரை அஜாதசத்ரு நிருமாணித்தார் என்றும், அந்நகரம் கங்கையும் சோணையும் சேருமிடத்தில் இருந்தது என்றும், அந்நகரமே உதயணர் ஆட்சிக் காலத்தில் பாடலீபுத்ரம் என்னும் பெயரோடு விளங்கிற்று என்றும், அவ்வுதயணரே அஜாதசத்ருவுக்குப் பின் அரசெய்திய தர்சகருக்கு அடுத்த மகத மன்னர் என்றும் கூறுவர்.

உதயணருக்குப் பிறகு மகதத்தையாண்ட மன்னர்கள் நந்த குலத்தவர்கள் எனப்படுவர். சைசு நாககுலம் முடிவுற்றதும் மன்னராக

வந்த நந்தி வர்த்தனரே நந்த வம்ச முதல்வர்; அவ்வம்சம் மகத வரலாற்றில் கொடுங்கோன்மைக்கும் அளவிலாச் செல்வச் செருக்கிற்கும் நிகரற்று விளங்கிற்று. நந்தர்கள் அனைத்து இந்தியப் புகழ் எய்தினர். அவர்களில் மகாபத்ம நந்தர் பெரிய போர் வீரர். கோதாவரிக் கரையில் உள்ள நவநந்ததேரா என்னும் பண்டைய ஊர், தக்காணத்தில் நந்தர்கள் ஆட்சியைப் பற்றிக் குறிப்பிடும் மைசூர்க் கல்வெட்டுக்கள், அர்த்த சாத்திரம், நந்தர்களைப் பேரரசர்கள் என்று குறிப்பிடும் முத்ரா ராட்சசம் ஆகிய சான்றுகள் நந்தர்கள் காலத்திலேயே மகதத்தை மையமாகக் கொண்ட பேரரசாட்சி தொடங்கி விட்டது என்பதைக் குறிக்கின்றன. மகா அலெக்ஸாந்தர் காலத்துக் கிரேக்கக் குறிப்புக்கள், கிழக்கு இந்தியாவில் மிக வலுப்பெற்ற பேரரசு ஒன்று ஆட்சி செலுத்தி வந்தமையைக் குறிப்பிடுகின்றன; கலிங்கத்தை நந்தர்கள் வெற்றியோடு படையெடுத்தமை காரவேலரின் ஹாதிகும்பா கல்வெட்டில் கூறப்படுகின்றது; தமிழ்ச் சங்கப் புலவரான மாமூலனார் பாடலியில் ஆண்ட நந்தர்களின் அளப்பரும் செல்வத்தைப் பற்றி அகநானூற்றில் குறிக்கின்றார்.[2]

ராய்சௌத்ரி என்னும் வரலாற்றாசிரியர் பௌராணிகர்கள் கூறும் மகத வம்சாவளியையும், சிங்கள பௌத்தக் குறிப்பான மகாவம்சத்தில் காணும் மகதவம்சாவளியையும் ஒப்பிட்டுக் கீழ்க்கண்ட குலமுறையை ஏற்றுக் கொள்ளத் தக்கதாகக் கூறுகின்றார்[3]:

			கி.மு.	கி.மு.
1.	பிம்பிசாரர்	-	545	493
2.	அஜாதசத்ரு	-	493	461
3.	உதயணர்	-	461	445
4.	அனுருத்தமுண்டர்	-	445	437
5.	நாகதர்சகர்	-	437	413
6.	சிசுநாகர்	-	413	395
7.	காலாசோகர்	-	395	367
8.	காலாசோகரின் பத்து மக்கள்	-	367	345
9.	(நவ) நந்தர்கள்	-	345	323

ஆர்.ஸி.மஜூம்தார் மேற்கூறிய வம்சாவளியைப் பொதுவாக ஏற்றுக் கொள்கிறார்.[4] இவ்வம்சாவளி பிம்பிசாரர், சிசுநாகர், நந்தர் ஆகிய மூன்று குலங்களையும் ஒன்றாகப் பிணைத்து ஒரு குலமாக்கிக் கூறுகிறது; அன்றியும் மகத அரசின் முதல்வர் சிசுநாகர் என்னும்

பெரும்பான்மைக் கருத்துக்கு மாறாகவும் இது அமைகிறது. புராண வம்சாவளியை மட்டும் ஏற்றுக் கொண்டால் கீழ்க்கண்ட குலமுறை ஏற்படும்:

			கி.மு.	கி.மு.
1.	சிசுநாகர்	-	600	525
2.	காகவர்ணர்			
3.	ஷேமதர்மர்			
4.	ஷேத்ரஜ்ஞர்			
5.	பிம்பிசாரர்	-	525	500
6.	அஜாதசத்ரு	-	500	475
7.	தர்சகர்	-	475	450
8.	உதயணர்	-	450	425
9.	நந்திவர்த்தனர்	-	425	400
10.	மகாநந்தி	-	400	375
11.	மகாபத்மநந்தர்	-	375	350
12.	மேற்கூறியவரின் எட்டு மக்கள் (மகாபத்ம நந்தரின்)	-	350	325

இக்குலமுறை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது. பழைய ராஜக்ருஹமான (ராஜ்கீர்) கிரிவ்ராஜத்திலிருந்து (தலைநகரம்) ஆண்ட முதற் பெரு மன்னர் பிம்பிசாரர் ஆவர். (மகதத்தின் ஆரம்பக் காலத் தலைநகரம் ராஜ்கீரில் அமைந்திருந்தது; அது அந்நாட்களில் கிரிவ்ராஜா என அழைக்கப்பட்டது) அவர் தொடங்கிய அரசியல், மணமுறை உறவுகளால் லிச்சாவிக் குடியரசும், காசி அரசும் மகதத்தோடு இணைந்தன. அவர் அங்கநாட்டை வென்று தம் மகன் அஜாதசத்ருவை அம்மாகாணத்தை ஆள நியமித்தார். இவரைச் சந்திரகுப்த மௌரியரின் பிற்காலப் பேரரசாட்சிக்கு முன்னோடியாகக் கருதலாம். சைன வரலாறுகள் அவரைச் சைனர் என்று கொண்டாடுகின்றன. அவருக்குப் பின் பட்டமெய்திய அஜாதசத்ரு 'பிதாஹத்தி' (தந்தையைக் கொலை) செய்தவர் என்று பௌத்தக் குறிப்புக்கள் கூறும். அஜாதசத்ரு காலத்தில்தான் புத்தரும் மகாவீரரும் தங்கள் சமயங்களைப் பரப்பினர். அவர் ஆட்சிக் காலத்திலேயே புத்தரது பரிநிர்வாணம் நிகழ்ந்து முதல் பௌத்த சங்கக் கூட்டமும் கூடிற்று. அஜாதசத்ருவுக்குப் பின் மன்னர்களான தர்சகரும், உதயணரும்

அத்துணை முக்கியமானவர்கள் அல்லர். குஸு மபுரம், புஷ்பபுரம் அல்லது பாடலீபுரம் என்று பெயர் பெற்ற தலைநகரம் நிறுவப் பட்டமையே உதயணர் ஆட்சிக் காலத்து முக்கியமான நிகழ்ச்சி. நந்தவர்த்தனர் நிறுவிய மகத வம்சத்தின் மிகச் சிறந்த மன்னர் மகாபத்ம நந்தர் என்பவர். அம்மன்னர்கள் கொடுங்கோலராயினும் செல்வச் சிறப்பு எய்தியவர்கள். அவர்களுடைய படைபலம் மிகுந்தது; அவர்களுடைய படைகள் அலெக்ஸாந்தர் அவற்றைப் பற்றிக் குறிப்பிடும் அளவிற்கு வலுப்பொருந்தியிருந்தன. நந்தர்கள் படையில் 2,00,000 காலாட் படைகள் தவிர, 60,000 குதிரைப் படைகளும், 2,000 தேர்ப் படைகளும், 6,000 யானைகளும் இருந்தன. இவற்றை எல்லாம் கருத்திற் கொண்டுதான் நந்தர்களுக்கு எதிராக அலெக்ஸாந்தர் படையெடுப்பு மேற்கொள்ளவில்லை என்று கருதவும் இடமேற்படுகிறது. ஆனால், பிற்கால நந்தர்கள் பலவீனமானவர்களாகவும், செல்வாக்கு அற்றவர்களாகவும் இருந்தார்கள். மகதத்தில் அவர்களது ஆட்சியைத் தொடர்ந்து அதாவது கி.மு.325-இல் நந்தர் குலத்தை வேரறுத்துச் சந்திரகுப்த மௌரியர் மகதநாட்டு பட்டமெய்தி மௌரிய அரசகுலத்தை நிறுவினார். இனி, வட இந்திய சமூக வரலாற்றைப் (கி.மு. 6-4. நூற்றாண்டு) பின்வருமாறு காணலாம்.

அடிக்குறிப்புகள்:

1. இர.ஆலாலசுந்தரம், இந்திய வரலாறு, முதல் தொகுதி, ப.151.
2. அக., 251:4-6; 265:22-23.
3. ந.சுப்ரமண்யன், இந்திய வரலாறு, ப.65.
4. மேலது., ப.65.

7. மௌரியருக்கு முற்பட்ட வட இந்திய சமூக வரலாறு

இந்தியாவில் கங்கைச் சமவெளியில் மட்டுமின்றி அதற்கு அப்பாலுங் கூட முடியரசுகளே வளர்ச்சியுற்று வந்தன. கங்கைச் சமவெளியில்தான் வலிமை மிக்க மகதப் பேரரசு உருவாகி வந்தது. மற்றப் பகுதிகளிலும் கூட, குறிப்பாகச் சிந்து சமவெளி, மாளவம் போன்ற பகுதிகளில், முடியரசுகள் நிறைந்து காணப்பட்டாலும் குடியரசு முறையைப் பின்பற்றிய பல்வேறு குலங்களோடு அவை போரிட வேண்டியிருந்தது. கிழக்கு இந்தியாவில் 'சாம்ராஜ்யங்கள்' என்று அக்கால இலக்கியங்களால் அறியப்பட்ட பேரரசுகள் வளர்ந்து வந்தன. அவற்றை ஆண்ட அரசர்கள் 'ஏக்ராட்' டுகள் (Ekrat) என்று தம்மை கூறிக்கொண்டார்கள். அதே சமயத்தில் சிந்து நதியின் கழிமுகப் பகுதியில் இருந்த அரசுகளில் ஒரு புதுமையைக் காணமுடிகின்றது. போர்களில் தலைமை தாங்குவதற்கென்று மட்டுமே அங்கு அரசர்கள் இருந்தார்கள். நிர்வாகத்தை 'முதியோர் அவை' (council of Elders) ஒன்று நடத்தி வந்தது. சில இடங்களில், ஸ்பார்ட்டா நகரில் இருந்ததைப் போல இரண்டு இணை அரசர்கள் ஒரே சமயத்தில் ஆட்சி புரிந்தார்கள். சிந்துவின் கழிமுகப் பகுதியில் பிராமணர்களும் அரசியலில் பெரும் பங்கு வகித்தார்கள் என்று தெரிகிறது. சிந்து சமவெளிப் பகுதியில் சத்திரியர்களே அரசர்களாக இருந்து வந்தார்கள். ஆனால், கங்கைச் சமவெளியிலோ சூத்திரரும் அரச பதவியில் இருந்து வந்தனர்.

1. நான்கு வருணங்கள்:

வருண வேறுபாடுகள் வேரூன்றி விட்டன. எனவே, மனிதர்கள் அனைவரும் பிரம்மாவால் தோற்றுவிக்கப்பட்டவர்கள் என்றும், எனவே அவர்களுக்கிடையில் சாதி வேற்றுமைகள் இருக்கக் கூடாது என்றும், அவரவர் செய்யும் செயல்களால் மட்டுமே அவர்கள் வேறு வேறு சாதியராகப் பிரிந்திருக்கிறார்கள் என்றும் இதிகாசங்களில் கூறப்பட்டன. ஆயினும், சாதிகளுக்கிடையில் திருமண உறவுகள் தடை செய்யப்பட்டிருந்தன என்று கிரேக்க எழுத்தாளர்கள் எழுதுகின்றனர். தொழில்களுங்கூட வருண அடிப்படையிலேயே வகுக்கப்பட்டுவிட்டன. ஒரு வருணத்தைச் சேர்ந்தவர் மறு வருணத்தாரின் தொழிலைச் செய்வது தவறானதாகக் கருதப்பட்டது. மேல்வருணத்தினர் சிற்சில உணவு வகைகளை அருந்தக் கூடாது என்றும் விதிக்கப்பட்டது.

சாதிகளுக்கும் வருணங்களுக்கும் இடையில் இவை போல் பலவிதமான தடைகளும் வேறுபாடுகளும் உண்டாக்கப்பட்டன.

இருப்பினும் அன்றைய சமூகத்தில் இத்தடைகள் எண்ணற்ற வேளைகளில் மீறப்பட்டன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இந்திய அரசர்களுக்கும் கிரேக்க அரசர்களுக்கும் இடையில் திருமண உறவுகள் இருந்து வந்ததை அறியமுடிகின்றது. சத்திரிய அரசர்கள் சூத்திரப் பெண்களை மணந்து கொண்டதையும், சூத்திரர்கள் அரசர்களாக இருந்து ஆட்சி புரிந்ததையும் புராணங்களே கூறுகின்றன. சிந்து மாநிலத்தில் பிராமணர்கள் ஆட்சியிலும் போரிலும் ஈடுபட்டதைக் கிரேக்கர்கள் வாயிலாக அறியமுடிகின்றது. பிராமணர்கள் போர்த் தொழிலை நன்கு பயின்று மகாபாரதப் போரில் படைகளுக்குத் தலைமை தாங்கினர் என்பதையும் அறியமுடிகின்றது. சத்திரிய அரசர்கள் கீழ்ச்சாதியினரால் அளிக்கப்பட்ட உணவையும் உண்டனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. பிராமணர்கள் அரச குடும்பத்துப் பெண்களை மணந்து கொண்டது, அரசர்களும் பிராமணர்களும் சாதாரண வியாபாரிகளும் (வணிகர்) ஒன்றாக அமர்ந்து உணவு உண்டது, பிராமணர்களும் சத்திரியர் ஈடுபட்டது போன்ற பலவற்றைப் பற்றியும் பௌத்த இலக்கியங்கள் கூறுகின்றன. இதன்மூலம், தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் நிறைய வேறுபாடு இருந்தது என்பது தெரியவருகிறது.

2. பெண்களின் நிலை:

ஆரியர்களது பண்பாடு இக்காலக்கட்டத்தில் கிட்டத்தட்ட இந்தியா முழுவதிலும் பரவி இருந்தது. ஆங்காங்கே நிலவியிருந்த மற்ற பண்பாடுகளுடன் இது கலந்தது. எனவே, இடத்துக்கு இடம் பண்பாட்டில் பல வேறுபாடுகள் காணப்பட்டன. குறிப்பாகத் தென்னிந்தியாவில் இந்த வேறுபாடுகள் அதிகம் காணப்பட்டன. வட இந்தியாவில் பெண்களின் நிலையில் எவ்வித மாறுபாடும் இல்லை. கணவருக்கும் ஆண்களுக்கும் அடங்கியவர்களாகவே அவர்கள் அங்கே இருந்து வந்தார்கள். தென்னிந்தியாவிலோ அவர்களது நிலை ஓரளவு நல்ல முறையில் இருந்தது. வடக்கில், கணவனின் சொத்துகளின் ஒரு பகுதியாகவே மனைவி கருதப்பட்டாள். உடன்கட்டை ஏறும் வழக்கம் அங்குமிங்கும் இருந்து வந்தது என்று தெரிகிறது. மகாபாரதமும் கிரேக்கரின் குறிப்புகளும் இதை நிரூபிக்கும் பல நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டுகின்றன. என்றாலும், இது அதிகமாக வழக்கிலில்லை என்பதும் தெரிகிறது. விதவைகள் மறுமணம் செய்து கொள்ளும் வழக்கம் அதிகமாகக் காணப்படவில்லை. கீழ் வகுப்புகளைச் சேர்ந்த

பெண்கள் செல்வமிக்க வகுப்புப் பெண்களை விட அதிக சுதந்திரத்தை நுகர்ந்து வந்தார்கள். வடமேற்கு இந்தியாவில் அலெக்ஸாந்தரது படைகளுக்குகெதிராகப் பெண்களும் ஆயுதமேந்திப் போரிட்டார்கள் என்பதை அறிய முடிகின்றது.

பெண்களை வைதீக வினைகளிலிருந்து விலக்கி விடும் மரபு சிறிது சிறிதாக உறுதிப்படலாயிற்று. சமூகத்தில் பெண்களின் நிலைமை மேலும் மேலும் சீர்கெடலாயிற்று. அவர்கள் வேதங்களை ஓதுதலினின்றும், பூணூல் அணிந்து கொள்ளுதலினின்றும் விலக்கப் பட்டனர். அக்காலத்தில் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய சில பெண்கள் பொது விதிக்கு விலக்கு என்று கொள்ள வேண்டும். இந்நிலையிலிருந்து மநுஸ்மிருதி காலத்தில் பெண்கள் வேதங்களைக் கற்றல் கூடாது என்னும் நிலைமை வந்தெய்தியது.

3. பொருளாதார நிலைமை:

அரசுகள் பேரரசுகளாக வளர்ச்சியுற்றுப் பலவிதமான தொழில்களும் வாணிபமும் வளர்ந்து வந்த காரணத்தால் தான் நகரங்களும் வளர்ச்சியுற்றன. தொழில்கள் அதிகம் வளர்ச்சியுறாத அக்காலத்தில் ஒரு சில நகரங்கள் மட்டுமே தோன்ற முடிந்தது. பெருவாறியான மக்கள் கிராமப் புறங்களிலேயே வாழந்தனர்.

(i) நிலமும் விவசாயமும்:

கிராமங்களில் நிலமானது எல்லாக் குடும்பங்களுக்கும் இடையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதனால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் சிறிய அளவு நிலமே கிடைத்தது. நிலத்துக்கு உரிமையுடையவர்களாக அவர்கள் இருந்தார்களா என்பதும், ஒருவர் நிலத்தை வேறொருவருக்கு விறக்கவோ மாற்றவோ அவர்கள் அதிகாரம் பெற்றிருந்தார்களா என்பதும் தெரியவில்லை. பிரபுக்களும் பிராமணர்களும் பெரிய பண்ணைகளைப் பெற்றிருந்தனர். இவர்கள் தம் நிலங்களை விற்கும் உரிமை பெற்றிருந்தார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. சிறு சிறு நிலங்களைப் பெற்ற குடியானவர்கள் ஏரிகள் வெட்டுதல், வாய்க்கால்கள் அமைத்தல் போன்ற பொதுக் காரியங்களில் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்தனர் என்று தெரிகிறது. ஏழைக் குடியானவர்களின் வாழ்க்கை வறுமை மிகுந்ததாகவே இருந்தது. அரசர்களுடைய மாடுகளையும் பிரபுக்களின் மாடுகளையும் மேய்ப்பதற்கென்று தனி ஆட்கள் இருந்தனர். குயவர், நெசவர், தச்சர், கருமார், வாணியர் போன்ற பல்வேறு தொழிலாளரும் கிராமங்களில் இருந்தனர்.

(ii) வணிகர்களும், இருவகை வணிகமும்:

வணிகர்கள் தங்கள் தொழிலுக்கேற்ற குழுக்களை அமைத்துக்கொண்டு அவற்றின் விதிகளுக்கடங்கி ஒழுகினார்கள். இக்குழுக்களுக்கு 'சிரேணிகள்' *(Sreni)* என்று பெயர். கொல்லர், ஓவியர், தச்சர் முதலிய பதினெண்வகை சிரேணிகள் நாட்டில் இருந்தன. நெய்வோர், தட்டார், குயவர், தந்தத் தொழிலாளர்கள், மாலை கட்டிகள் முதலியோர் தங்கள் தொழில்களில் சிறந்து விளங்கினர். இந்தியக் கப்பல்கள் சுவர்ண பூமி (பர்மா, மலேயா), தாமிரவருணி (இலங்கை), பவேரு (பாபிலோன்) ஆகிய தூரத்து நாடுகளுக்கெல்லாம் சென்று வந்தன. இந்தியாவுக்குள்ளேயும் சிந்து, கங்கை, யமுனை முதலிய நதிகளில் வாணிபக் கப்பல்கள் போக்குவரத்தும் செய்தன. இந்தியாவுக்குள் தரை மார்க்கமாவும் வாணிபம் நடைபெற்றது. தட்சசீலம் வழியாக மத்திய ஆசியாவுக்கும் கங்கைச் சமவெளிக்கும் இடையில் வாணிபம் நடைபெற்று வந்தது. பண்ட மாற்று முறையிலும் வாணிபம் நடைபெற்று வந்தது. அதே சமயம் கார்ஷபணம் *(Karshapana)* என்ற செப்புக் காசு ஒன்றும் வணிகர்களால் அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்தது. வெள்ளி நாணயங்களுங் கூடப் புழக்கத்திலிருந்து வந்தன.

4. சமயநிலை:

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தொடங்கிய சமயப் புரட்சியின் விளைவாகப் பௌத்த சமயம், சமண சமயம் ஆகியவை தோன்றி வளர்ச்சியுற்றன. அதே சமயத்தில் வைதீக சமயத்திலும் மிகவும் அடிப்படையான மாறுதல்கள் ஏற்பட்டு வந்தன. இனி அவற்றைப் பற்றிப் பின்வருமாறு காணலாம்.

(i) வைதீக சமய கலப்பு:

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்கனவே மக்களால் பின்பற்றப்பட்டு வந்த பல்வேறு புராதனக் கடவுள்கள், வழிபாட்டு முறைகள், சமயக் கோட்பாடுகள் முதலியவற்றோடு வேதங்களில் காணப்படுகிற வைதீக சமயம் இக்காலக்கட்டத்தில் கலந்தது. இதனால் புதிய தெய்வங்கள் வழிபாட்டுக்கு வந்தன. புதிய சமயக் கருத்துகள் தலைதூக்கின. புதிய தத்துவங்களும் வளரலாயின. அதாவது, ஆரியருக்கு முற்பட்ட புராதன சமயம் ஆரியரின் புதிய சமயத்தில் பல்வேறு மாறுபாடுகளைத் தோற்றுவித்தது. வைதீக சமயத்தை ஏற்றுக்கொண்டிருந்த மேல் வகுப்பினரும் அதற்கு முந்தியவையான புராதன தெய்வங்களையும் சமயக் கோட்டுபாடுகளையும் சிற்சில

மாறுபாடுகளோடு ஏற்றுக் கொள்ள முன்வந்தனர். உபநிடதங்களில் கூறப்பட்ட வறண்ட தத்துவ விளக்கங்களால் மக்களைக் கவர முடியவில்லை என்பதை அனைவரும் உணர்ந்தனர். கிட்டத்தட்ட இதே சூழ்நிலையில் இதே காரணங்களால் தோன்றிய பௌத்த, சமண சமயங்களும் வைதீக சமயத்தில் மாற்றங்கள் அவசியம் என்பதை அச்சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கு உணர்த்தின. ஆயினும், வைதீக சமயத்தில் இக்காலத்தில் ஏற்பட்டு வந்த இம்மாறுதல்கள் இந்தியா முழுவதிலும் ஒரே மாதிரியாக இருக்கவில்லை. இடத்திற்கு இடம் அவை மாறுபட்டன.

பிந்திய வேத காலத்திலும் அதற்குப் பின்னரும் சிந்துச் சமவெளிக்குப் பதிலாக யமுனை-கங்கைச் சமவெளியின் மேற்குப் பிரதேசமே வைதீக சமயத்தின் மையமாக ஆகிவந்தது. இதுதான் ‘மத்திய தேசம்’ என்று அழைக்கப்பட்டது. (இதற்கு அப்பாலிருந்த கிழக்கு இந்தியா, இமய மலையின் அடிவாரப் பகுதி ஆகிய இடங்களிலேயே பௌத்த, சமண சமயங்கள் தோன்றின என்பதை இங்கு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.) இந்நிலையில், சிந்து சமவெளியில் வேத காலத்துக் கடவுளான இந்திரன் இன்னமும் வழிபடப்பட்டு வந்தான். இந்திரனைப் போல், இடிக்கும் மழைக்கும் தெய்வமான சக்கரன் (*Sakra*) என்பது வடகிழக்கு இந்தியாவில் வழிபடப்பட்டு வந்தது. மத்திய தேசத்தில் வைஸ்ரவணன் (குபேரன்), குமரன் (கார்த்திகேயன்) போன்ற ஆண் தெய்வங்களும், உமா, ஹைமாவதி, வசினி போன்ற பெண் தெய்வங்களும், மக்களால் அதிகம் வழிபடப்பட்டு வந்தன. இப்பெண் தெய்வங்கள் சிவனுடைய மனைவியான துர்க்கையின் அவதாரங்களே என்று கருதப்பட்டன. மரம், செடி, நீர், நெருப்பு, பலவித உயிர்கள் ஆகியவையும் தெய்வங்களாக வழிபடப்பட்டு வந்தன.

(ii) உருவ வழிபாடு:

உருவ வழிபாடு அல்லது விக்கிரக வழிபாடு வேகமாகப் பரவி வந்தது. சிந்து சமவெளியில் வேதகாலத்திலும் விக்கிரக வழிபாடு இருந்திருக்கக் கூடும் என்பது உணரப்படுகிறது. ஆயினும், அது அங்குமிங்கும் ஒரு சில சமயங்களிலேயே நடைபெற்றது. ஆனால், வேதகாலத்தின் பின் விக்கிரக வணக்கம் பரவலாக நடைமுறைக்கு வந்தது. அதுவும் மனித உருவில் விக்கிரகங்கள் அமைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. மனிதன் கடவுளைத் தன் உருவில் வடித்து, தன் உடையையும், தன் உணவையும், பேச்சையும், பழக்கவழக்கங் களையும் அதற்குப் புகுத்தினான். அந்த விக்கிரகங்களை வைத்து வழிபடுவதற்கெனக் கோயில்களும் இக்கால முதல் கட்டப்பட்டன.

இதிகாசங்கள் இத்தகைய கோவில்களைப் பற்றி நிறையக் குறிப்பிடு கின்றன. அலெக்ஸாந்தரை எதிர்த்துப் போருக்குப் புறப்பட்ட பௌரவப் படைக்கு முன்பு ஹெர்க்குலிஸ் போன்ற தெய்வம் ஒன்றின் விக்கிரகம் எடுத்துச் செல்லப்பட்டது என்று கிரேக்க நூலாசிரியரான கர்ட்டியஸ் (*Curtius*) எழுதினார்.[1] மௌரிய மன்னர்கள் சிவன், ஸ்கந்தன், விசாகன் போன்ற தெய்வங்களின் விக்கிரகங்களைச் செய்து விற்பனை செய்தனர் என்று பதஞ்சலி எழுதுகிறார்.[2]

(*iii*) உயிர்ப்பலி, இறைச்சி:

தெய்வங்களுக்கு உயிர்ப்பலி இட்டு வழிபடும் வழக்கம் இக்காலத்திலுந் தொடர்ந்தது. பறவைகள், விலங்குகள் மட்டுமின்றி, மனிதர்களுங் கூடப் பலியிடப்பட்டனர். அதே சமயம் 'உயிர்ப்பலி' யைச் சிலர் கண்டிக்கவும் செய்தனர். இரக்க உணர்வும், அகிம்சை மனப்பாங்கும் கூடவே வளர்ந்தன. உயிருடனான பறவைக்கும் விலங்குக்கும் பதிலாக அதே வடிவில் உணவுப் பண்டங்களைச் செய்து பலியிடலாம் என்று சமய நூல்களே கூறின. குறிப்பாகப் பிராமணர்களி டையில் மாமிசம் உண்ணும் வழக்கம் சிறிது சிறிதாகக் குறைந்து, முற்றிலும் நின்று போயிற்று என்பது பல சான்றுகளாலும் தெரிய வருகிறது.

(*iv*) வைதீக பக்தி மார்க்கம்:

சமயத் தத்துவமும் கோட்பாடுகளும் நம்பிக்கைகளுங் கூட மாறுதலுக்கு உள்ளாயின. உயிர்களுக்கு மறுபிறவி உண்டு என்ற நம்பிக்கை பரவியது. உலகில் எல்லா உயிர்களுக்கும் பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு ஆகியவை உண்டு என்ற கோட்பாடு தோன்றியது. ஒரு பிறவியில் ஒருவன் செய்யும் நற்செயல், தீச்செயல் ஆகியவற்றைப் பொருத்தே அவனது மறுபிறப்பு அமைகிறது என்ற கர்ம தத்துவம் (*Marma Theory*) பேசப்பட்டது. கடவுளிடத்தில் பக்தி செலுத்துவதன் மூலம் தன்னுடைய தீச் செயல்களிலிருந்து ஒருவன் விடுபடலாம் என்று கூறப்பட்டது. இந்தப் புதிய பக்திக் கோட்பாட்டைப் பற்றிப் பேசியவர்கள் பின்னர் வாசுதேவகர்கள் என்றும், பின்னர்ப் பாகவதர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள். இவர்கள், வாசுதேவனிடத்தில் பக்தி செலுத்தியவர்கள் ஆவர். விஷ்ணு, நாராயணன், வாசுதேவன், கிருஷ்ணன் ஆகிய அனைத்துத் தெய்வங்களும் ஒன்றே என்று கூறப்பட்டன. மகாபாரதத்தில் உள்ள 'பகவத்கீதை' இந்தப் பக்தி நெறியை உணர்த்துவதற்கென்றே எழுதப்பட்டது.

இந்த வாசுதேவகர்களுக்குப் போட்டியாகச் சிவனை வழிபட்டோர் திரண்டனர். இவர்கள் சிவ-பாகவதர்கள் என்றும், மாகேஸ்வரர்கள்

என்றும், பாசுபதர்கள் என்றும் பின்னர்ப் பெயர் பெற்றனர். இவ்வாறு, வைதீக சமயத்தில் விஷ்ணுவைப் பின்பற்றியவர் என்றும், சிவனைப் பின்பற்றியவர் என்றும் இரு கிளைகள் முளைத்தன.

(v) சைவ, வைணவ சமயங்களின் மேல் நிலை:

அசோகர் ஆட்சிக் காலத்திற்குப் பின் தொடர்ந்த சில நூற்றாண்டுகளில் விலங்குகளைக் கொன்று பலியிடும் வேத வேள்வி வழிபாடு மக்களிடையே செல்வாக்கிழந்தது. பக்தி அடிப்படையில் அமைந்த விக்கிரக வழிபாடு மக்கள் கவனத்தைக் கவர்ந்து பேராதரவைப் பெறத் தொடங்கியது. பௌத்த சமயமும் வேறு பல புற சமயங்களும் தொடுத்த தாக்குதல்கள் வேத நிறுவனங்கள் பிராமணர்கள் ஆகியோர் மதிப்பையும் அதிகாரத்தையும் சிதைத்தன. வேதச் சடங்குகளின் தேவை குறைந்ததனால் நிலை குலைந்த பிராமணர்கள் வேறு வேறு வழிகளில் பொருள் ஈட்டி வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இப்பொழுது பல இனக்குழு ஆரியரல்லாத தெய்வ வழிபாடுகளின் பால் தம் கவனத்தைச் செலுத்தலாயினர். இவ்வழிபாடுகளில் பிராமணர் ஊடுருவல் திடீரென நிகழ்ந்ததாக இருக்க முடியாது. பிராமணர்கள் சிலர் இதற்கு முன்பே இவ்வழிபாடுகளை நடத்துகின்ற புரோகிதர்களாக இருந்திருக்கலாம். ஆனால், புதிதாகத் தோன்றிய அரசியல், பொருளாதார நிலைமைகள், அன்றிருந்த பழைய சமுதாயத்தை அச்சுறுத்தத் தொடங்கியபோது இத்தெய்வ வழிபாட்டு முறைகளுக்கு வைதீக அங்கீகாரம் அளிக்கும் இயக்கம் தொடங்கியது.

கி.மு. 200-ஆம் ஆண்டு முதல் கி.பி. 200-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் புதிய கலைகள் தோன்றின. வாணிபமும் மிக்க முன்னேற்றம் அடைந்தன. இம்முன்னேற்றம் காரணமாக இத்தொழில்களில் ஈடுபட்டு வந்த கீழ்வருண மக்கள், குறிப்பாகச் சூத்திரர் நிலை தவிர்க்க முடியாதவாறு அதிக முன்னேற்றம் கண்டது. எண்ணிக்கையில் அதிகமாக வெளிநாட்டினர் வந்து குடியமர்ந்தது, பிராமணியச் சமூக முறையின் தலைகளை மேலும் தளர்த்திவிட்டது. கீழ்வருண மக்கள்பால் அளவுகடந்த பிற்போக்கு மனப்பான்மை கொண்ட வேத-வைதீக சமயம் புதிய சக்திகளுடன் ஈடுகொடுக்க ஏற்றதாக இல்லை. பௌத்தம் தீவர செல்வாக்குப் பெற்று வந்தது. பௌத்தத்தை எதிர்த்து வென்று பிராமணியச் சமூக ஒழுங்கமைப்பை அழிவிலிருந்து காக்கும் நோக்கத்தில் பிராமணர்கள் மிகப் பெரும்பாலான மக்களிடைச் செல்வாக்குப் பெற்றிருந்த வழிபாட்டு முறைகளைக் கவர்ந்து அகிம்சை, பக்தி உணர்வூட்டல், அதிகாரத்திற்கு

அடிப்பணிதல் என்னும் கொள்கைகளை இணைத்து அவற்றுக்குச் சமூக நிலைமைகளுக்கு ஏற்ப புது வடிவம் கொடுத்தனர். பெண்களிடமும், கீழ்சாதியினரிடமும் தாராளமான அணுகுமுறையைக் கைக்கொண்ட போதிலும் வருண அடிப்படையில் அமைந்த சமுதாயப் பிரிவுகளைப் பாதுகாப்பதில் அவர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொண்டனர்.

பாமர மக்களிடையே செல்வாக்குடைய வழிபாட்டு முறைகளைப் பிராமணிய மயமாக்கும் முயற்சியில் மக்கள் தெய்வங்களைப் பிராமணியக் கடவுளான நாராயண விஷ்ணுவுடன் ஒன்றாக்கியதனால் எவ்வாறு வைணவம் தோன்றியது, ருத்ரனுடன்-சிவன் இணைக்கப்பட்டு எவ்வாறு சைவம் தோன்றியது. உயர்சாதி வகுப்பினர் வருண அறநெறிகளைப் பரப்புவதற்கு எவ்வாறு சைவமும், வைணவமும் உதவிற்று, பெரும்பாலான மக்கள் கூட்டம் சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கு எவ்வாறு இசைந்து இயைந்து ஏற்று கொண்டனர் என்பவற்றை சைவ, வைணவ சமயங்களின் மேல் நிலை உருவாக்ககாலம் பற்றிய ஆராய்ச்சி தெள்ளிதின் புலப்படுத்துகிறது.

மக்களுடைய சமயக் கோட்பாடுகள், நம்பிக்கைகள் ஆகியவற்றைப் போதுமான அளவு தெரிவிப்பதற்கு ஆவணங்கள் எவையுமில்லை. ஆயினும், தெய்வத்தைப் பற்றிய கருத்துருவாக்கத்தில் செயல்படும் சில அடிப்படைக் கருத்துக்களும் சில புராணக் கதைகளும் கடவுளுடைய குணாதிசயம் வழிபட்டு வந்த மக்களுடைய சமூக - பொருளாதார நிலைமை ஆகியவற்றைப் பற்றி அறிய உதவுகின்றன.

மெகஸ்தனிஸ் என்ற கிரேக்க தூதர் பக்தி பற்றிக் குறித்துள்ளார். கடமையைச் செய்து கொண்டே கடவுளைத் தேடுவதுதான் சிறந்த வழி என்று கருதப்பட்டது. சைவர்களும், வைணவர்களும் இணைந்து வாழ்ந்தனர். வைதீக சமயத்தில் படித்தவர்களும், படிக்காதவர்களும் தம் விருப்பத்திற்குரிய ஒரே கடவுள் மீதே அதிகப் பற்று வைத்திருந்தனர்.

திருமால் உலகில் அவதரித்து மக்களைத் தீமைகளிலிருந்தும் காத்தார் என்றும் நம்பப்பட்டது. அதன் பொருட்டுப் பத்து அவதாரங்களை எடுத்தார் என்றும் கருதினர். கிருஷ்ணனை வழிபட்டவர்கள் தம்மை ‘பாகவதர்கள்’ என்று கூறிக் கொண்டனர். அவர்களுடைய பிரிவு ‘பாகவதப் பிரிவு’ எனப்பட்டது. இந்தப் பாகவதப்பிரிவே பிற்கால வைணவமாக வளர்ந்தது என்பர். வைணவர்கள் திருமாலே உயர்ந்த கடவுள் என நம்பினர். அவர்கள் அற உணர்வு, அன்பு உணர்வு, அகிம்சை உணர்வு, தியானம் ஆகியவற்றைக் கடைபிடிக்க வேண்டும் எனவும், பலியிடுதல் கூடாது

எனவும் வலியுறுத்தினார்கள். எளியவர்களும் பின்பற்றத் தக்கதாக வைதீக சமயம் மாறத் தொடங்கியது.

வைணவ சமயத்தைப் போன்றே வைதீக சமயத்தில் மற்றொரு பிரிவு தோன்றியது. இப்பிரிவினர் சிவனை வழிபட்டனர். இவர்கள் சைவர்கள் எனப்பட்டார்கள். சைவர்கள் சிவனே உயர்ந்த கடவுள் எனக் கொண்டனர். சைவ சமயத்தினை இந்நாட்டில் இருந்தவர்கள் மட்டுமின்றி, வெளிநாட்டிலிருந்து படையெடுத்து வந்த குஷாணர்கள் முதலியவர்களும் பின்பற்றினார்கள். குஷாணர் காசுகளில் சிவனின் வடிவம் இருப்பதைக் காணலாம். சிவன் ஆரியரின் கடவுள் என்றும் எனவே, வெளிநாட்டுப் படையெடுப்பாளர்கள் சிவனை வழிபட்டனர் என்றும் சிலர் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், அக்கருத்து ஏற்புடையதாக இல்லை. ஏனெனில், சிந்துவெளி முத்திரையில் சிவனுக்குரிய அடையாளங்கள் கொண்ட வடிவங்கள் யோக முத்திரையில் இருப்பது போல் கிடைத்துள்ளன. எனவே, அதற்கு முன்னரே சிவ வழிபாடு இந்தியாவில் காணப்பட்டது என்பது தெளிவாகும்.

மேலும், அந்நிய ஆட்சியாளர்களில் சிலர் வைணவத்தைத் தழுவினர். காக்கும் தெய்வமான விஷ்ணுவை வழிபட்டனர். கிரேக்கத் தூதுவரான ஹெலியோடோரஸ் விஷ்ணு பக்தன் ஆவான். அவன் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு மத்தியில் மத்தியப் பிரதேசத்தில் விதிசாவுக்கு அருகில் வாசுதேவரைப் பெருமைப்படுத்தும் வகையில் ஒரு தூபியை அமைத்தான். குஷாண மன்னர்களில் பலர் விஷ்ணு பக்தர்களாக இருந்தார்கள். குஷாண மன்னனான வாசுதேவனை இவ்வகையில் முக்கியமாகக் குறிப்பிடலாம். அவனுடைய பெயரே கிருஷ்ணருடைய மற்றொரு பெயராகும். கிருஷ்ணர் விஷ்ணுவின் அவதாரமாக வழிபடப்பட்டு வந்தவராவார்.

இதுகாறும் கூறியவற்றில் வைதீகத் தாக்கத்தின் பரவலுக்கான வரலாற்றுக் காரணங்களை ஆராய்ந்ததிலிருந்து வட இந்திய அரசியல் வரலாற்றில், கி.மு. ஆறு முதல் நான்காம் நூற்றாண்டு வரையிலான மௌரியருக்கு முற்பட்ட வட இந்தியாவின் நிலை பற்றியும், அங்கு நிலவிய ஆரியரின் அரசுகள் பற்றியும், மகதம் உட்பட நிலவிய பதினாறு பெரிய அரசுகள் பற்றியும், இறுதியில் மகதப் பேரரசின் தோற்றமும் வளர்ச்சியும் எவ்வாறு இருந்தது என்பது பற்றியும், அங்கு நிலவிய இரு வம்சங்கள் பற்றியும், மகதத்தில் நந்தர்கள் ஆட்சியைத் தொடர்ந்து மௌரியர் ஆட்சி ஏற்பட்ட விதம் குறித்தும், மௌரியருக்கு முற்பட்ட வடஇந்திய சமூக வரலாறு பற்றியும், கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.மு. நான்காம் நூற்றாண்டு வரையில் சமூகத்தில் நிலவிய நான்கு வருணங்கள் பற்றியும், சமூகத்தில் பெண்களுக்கும்,

சூத்திரர்களுக்கும் இருந்த நிலை பற்றியும், பொருளாதார நிலை பற்றியும், வைதீக சமயத்தில் நிகழ்ந்த கலப்புப் பற்றியும், உருவ வழிபாடு, உயிர்ப்பலி, இறைச்சி, வைதீக பக்தி மார்க்கம் தோன்றிய நிலை பற்றியும் விரிவாக அறியமுடிகின்றது. இனி மௌரியர் காலத்துச் சமூக வரலாற்றைப் பின்வருமாறு காணலாம்.

அடிக்குறிப்புக்கள்:

1. இர.ஆலாலசுந்தரம், இந்திய வரலாறு, முதல் தொகுதி, ப.223.
2. மேலது., ப. 223.

8. மௌரியர் ஆட்சிக்காலச் சமூக வரலாறு

(கி.மு. 4 முதல் 1-ஆம் நூற்றாண்டு வரை)

மௌரியர் காலத்து அரசியலையும் சமூகத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்குக் கௌடில்யரது அர்த்த சாஸ்திரமும், கிரேக்கரின் குறிப்புகளும், அசோகருடைய கல்வெட்டுகளும் பெரிதும் துணைபுரிகின்றன. பிற்காலத்தைச் சேர்ந்த வேறு சில இந்திய நூல்களும் ஓரளவு பயன்படுகின்றன.

மௌரியர்கள் காலத்தில் சமூகமானது வைதீகப் பிராமண முறைப்படி நான்கு பெரும் சாதிகளாகப் (வருணங்கள்) பிரிக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு சாதிக்கும் உரிய கடமைகள் இன்னின்ன என்று நன்கு வரையறுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வருணம் அல்லது சாதிக்கும் நான்கு ஆசிரமங்கள் குறிக்கப்பட்டன. அந்தந்தச் சாதிக்கும் ஆசிரமத்துக்கும் உரிய கடமைகள் ‘சுவதர்மம்’ எனக் கௌடில்யரால் வழங்கப்படுகிறது. அவரவரது சுவதர்மத்தை அவரவர் முறையாகப் பின்பற்றுகிறார்களா என்பதைக் கண்காணிப்பதே ஓர் அரசனின் முக்கியக் கடமை என அவர் கூறுகிறார்.

1. பல்வேறு சாதிகள்:

சாதி (வருண) முறையும் ஆசிரம முறையும் பண்டைய இந்து சமுதாயத்தின் இரண்டு முக்கியமான அம்சங்களாயிருந்தன. அவற்றுள் ஆசிரம முறையானது பொதுவாக அனைவராலும் பின்பற்றப்பட்டது என்று கூறமுடியாது. பிரம்மச்சரியமும், கிரஹஸ்தமும் பொதுவாக அனைவராலும் பின்பற்றப்பட்டனவாயினும், மற்ற இரண்டு ஆசிரமங்க ளான வானப்பிரஸ்தமும், சந்நியாசமும் அதிகம் பின்பற்றப்பட்டன என்று கூறுவதிற்கில்லை. சதுர் ஆசிரம முறையானது நூல்களில் விரிவாகப் பேசப்பட்டதே ஒழிய, சமுதாயத்து நடைமுறையில் மிகுதியாகக் காணப்படவில்லை.

சாதிய முறைகள் மௌரியர் காலத்தில் நன்கு வேரூன்றிவிட்டன. ஒருவன் தனது சாதியிலிருந்து மற்றொரு சாதியில் பெண் கொள்வதற்கோ, தனது சாதித் தொழிலை விடுத்துப் பிற சாதித் தொழிலை மேற்கொள்வதற்கோ அனுமதிக்கப்படவில்லை என்று கிரேக்க எழுத்தாளர்கள் மௌரியர் காலத்து நிலையைப் பற்றிக் கூறுகின்றனர். ஆயினும், வைதீக சமயத்துக்கு விரோதமான சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கும், கிரேக்கர் முதலான அந்நியர்களின்

வருகையும், கலப்பும் மேல் மட்டடத்தில் இச்சாதி விதிகளை ஓரளவு தளர்த்தின. இந்திய மன்னர்களும் பிரபுக்களும் கிரேக்கப் பெண்களை மணந்தனர். அதே போல் கிரேக்க மன்னர்களும் பிரபுக்களும் இந்தியப் பெண்களை மணந்திருக்கக் கூடும். விவசாயம், கால்நடை வளர்ப்பு, வணிகம் ஆகியவை வைசியர், சூத்திரர் ஆகியோரது தொழில்கள் என்று அர்த்த சாஸ்திரம் கூறுகிறது. இவ்விரு சாதிகளுக்கும் தொழில் அடிப்படையில் இருந்து வந்த வேற்றுமைகள் ஓரளவு மறைந்திருக்கக் கூடும் என்பதை இது உணர்த்துகிறது. கிரேக்கரின் குறிப்புகளும் இதை உறுதிப்படுத்துகின்றன. இவ்விரு சாதிக்கும் இடையிலிருந்த வேற்றுமைகள் குறைந்து, விவசாயி, இடையன், வணிகன் என்ற சாதிகள் ஏற்பட்டுவிட்டன என்று அவை உணர்த்துகின்றன. அதேபோல் மருத்துவத் தொழில் செய்தாரும் தனிச் சாதியராக அமைந்தனர்.

இந்திய மக்கள் ஏழு சாதிகளாகத் தொழிலடிப்படையில் பிரிக்கப்பட்டனர் என்று மெகஸ்தனிஸ் கூறுவது கவனிக்கத்தக்கது. 1. தத்துவஞானிகள், 2. குடியானவர்கள் (விவசாயிகள்), 3. இடையர், வேடர், 4. வணிகர், கைத்தொழில் செய்வோர், 5. போர் வீரர்கள், 6. மேற்பார்வை செய்யும் அதிகாரிகள், 7. அரசனுக்கு அறிவுரை கூறுவோர் ஆகியோர் அவ்வேழு பிரிவினர். அரசாங்க அதிகாரிகளுள் கீழ் மட்டடத்தில் இருந்தவர் ஒரு சாதி எனவும், மேற்பார்வை செய்யும் மேல் நிலையில் அறிவுரை கூறும் அதிகாரிகளாக இருந்தோர் மற்றொரு சாதி எனவும், மெகஸ்தனிஸ் கூறுவது சிறப்பாகக் கவனிக்கத்தக்கது. அமாத்திய அல்லது அமைச்சகுலம் என்று பாலி நூல்கள் இந்த மேல் மட்ட அதிகாரிகளைக் குறிப்பிடுகின்றன. இவ்வாறு, ‘நால்வருண’ (சதுர் சாதிப்) பிரிவுகள் மௌரியர் காலத்தில் மேலும் விரிவடைந்து பல்வேறு சாதிகள் ஏற்பட்டன என்பது தெரிகிறது.

2. பெண்டிர் நிலை:

பிந்திய வேத காலத்துப் பெண்களின் நிலையிலிருந்து மௌரியர் காலத்துப் பெண்களின் நிலை அதிகம் வேறுபட்டிருக்கவில்லை என்பதைப் பல சான்றுகளும் தெரிவிக்கின்றன. பிரம்மம், பிரசாபத்தியம், ஆர்ஷம், தெய்வம், கந்தர்வம், ஆசுரம், இராட்சசம், பைசாசம் என்னும் எண் வகை மணங்கள் கொள்கையளவில் மேற்கொள்ளப் பெற்றன. மண முறிவு அனுமதிக்கப் பெற்றது. என்றாலும் மிகுதியாக நடைமுறையில் இல்லை. மகளிருக்கும் மறுமணம் செய்து கொள்ள உரிமையிருந்ததாயினும் அவர்கள் தங்கள் கணவரது சகோதரரையே மணக்க முடியும். பலதார மணமும், சதி அல்லது இறந்த கணவனைப் பிரிந்து வாழ விரும்பாத மனைவி

தற்கொலை புரிந்து கொள்ளும் மரபும் நடைமுறையில் இருந்தன. நகர்ப்புறங்களில் கணிகையர் பலரிருந்தனர். விபசாரம் விலக்கப் படவில்லை. இசை, நாட்டியம், நாடகம் முதலிய நுண்கலைகள் கணிகையரது தனிச் செல்வமெனக் கருதப்பட்டன. பிற்காலத்தில் இதே காரணத்தால், குலமகளிர் இந்நுண்கலைகளைப் பயிலுதல் விரும்பத் த்தகாதது என்றும் கருதப்பட்டது.

3. சமயநிலை:

மௌரியர் காலத்தில் மூன்று முக்கியமான சமயங்கள் இருந்தன. முதலாவது வைதீக சமயம், இரண்டாவது பௌத்த சமயம், மூன்றாவது சமண சமயம். மௌரிய அரச குலத்தை நிறுவியவரான சந்திரகுப்த மௌரியர் வைதீக சமயத்தையே ஆரம்பத்தில் சேர்ந்தவராயிருந்தார். தமது இறுதிக் காலத்தில் இவர் சமண சமயத்தைத் தழுவினார் என்று சமண சமய நூல்கள் கூறுகின்றன. அவரை அடுத்து ஆண்ட பிந்துசாரரும் வைதீக சமயத்தையே தழுவியிருந்தார் என்பதை எல்லாச் சான்றுகளும் தெரிவிக்கின்றன. பாட்டனாரையும் தந்தையையும் போல் வைதீக சமயத்தையே தழுவியிருந்த அசோகர் கலிங்கப் போருக்குப் பின்னர்ப் பௌத்த சமயத்தைத் தழுவினார். பிற்கால மௌரிய அரசர்கள் வைதீக, பௌத்த, சமண சமயங்கள் ஆகிய மூன்றையுமே பின்பற்றினார்கள். என்றாலும், பொதுவாக மௌரியர் காலத்தில் பெரும்பாலான மக்களால் பின்பற்றப்பட்டு வந்த சமயம் வைதீக சமயமேயாகும். அசோகரது முயற்சி காரணமாகவே பௌத்த சமயம் பரவலாகப் பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(i) வைதீக சமயம்:

வேத காலத்துத் தெய்வங்களான இந்திரன், வருணன் ஆகியோர் மௌரியர் காலத்திலும் வழிபடப்பட்டு வந்தனர். அதே சமயம் இதிகாச காலமுதல் முக்கியத்துவம் பெறத் துவங்கியிருந்த விஷ்ணு, கிருஷ்ணன் ஆகிய தெய்வங்களும் வழிபடப்பட்டன. யமுனைச் சமவெளியில் - மதுராபுரிப் பிரதேசத்தில் கிருஷ்ணன் பெரிதும் வழிபடப்பட்டான். சிவனும் அதிகமான மக்களால் வழிபடப்பட்டான். இவற்றையெல்லாம் மெகஸ்தனிஸ் விட்டுச் சென்ற குறிப்புகள் காட்டுகின்றன. கங்கை நதியுங்கூடத் தெய்வமாக அக்காலம் முதல் வழிபடப்பட்டது. மௌரிய அரசர்களே சிவன், ஸ்கந்தன், விசாகன் போன்ற தெய்வங்களின் விக்கிரகங்களைச் செய்து, விற்பனை செய்தனர் என்று பதஞ்சலி தெரிவிக்கிறார். (ஸ்கந்தன், விசாகன் போன்ற தெய்வங்கள் குஷாணர்கள் காலத்தில் மிகவும் செல்வாக்கோடு

திகழ்ந்தன. ஹுவிஷ்கரது நாணயங்களின் மீது அவை பொறிக்கப் பட்டிருந்தன.)

யாகங்கள் நடத்துதல், பலியிடுதல் ஆகியவை இக்காலத்தில் தொடர்ந்து செய்யப்பட்டன. அரசர்களும் மக்களும் இவற்றில் பங்கு கொண்டார்கள். பொதுவாக மது அருந்தும் வழக்கத்தை மேற்கொள்ளாத பலருங்கூட இத்தகைய விழாக்களின் போது அதை அருந்தினர் என்று கிரேக்கர் எழுதுகின்றனர். இத்தகைய சடங்குகளின் போது உயிர்களைப் பலியிடுவதை நிறுத்துவதற்கு அசோகர் முயற்சிகள் மேற்கொண்டார். மௌரியருக்குப் பிறகு சுங்க வம்சத்தின் ஆட்சியில் வைதீக சமயம் புதிய விறுவிறுப்போடு இயங்கி வந்தது. அசுவமேதம், வாஜபேயம் போன்ற யாகங்கள் மிகவும் ஆடம்பரமாகச் செய்யப்பட்டன. அக்காலத்திலேயே கூட, உயிப்பலி நிறைந்த யாகச் சடங்குகளைத் தவிர்த்துப் பௌத்த, சமண சமயத்தினரின் தாக்குதல்களிலிருந்து தப்பித்துக் கொள்ள சிலர் எண்ணினர். எனவே, யாகங்களில் பலிகளைக் குறைத்து, அவற்றுக்குப் புதிய பொருள்களைக் கற்பிக்க அவர்கள் முயன்றார்கள். ஆனால், இம்முயற்சிகள் அப்பொழுது மிகவும் சிறய அளவிலேயே இருந்து வந்தன.

சிவன், அபராஜிதா, ஜெயந்தன், வைஜயந்தன், வைசிரவணன் (குபேரன்), ஸ்ரீதேவி, அசுவினிகள் முதலிய பல தெய்வங்களுக்குக் கோயில்கள் கட்டப்பட்டிருந்தன என்பதைக் கௌடில்யர் கூறுகிறார். விக்கிரக வழிபாடு இருந்து வந்ததை எல்லாச் சான்றுகளும் தெரிவிக்கின்றன. கடல், ஆறு, தீ, மண், மரம், காடு, மலை, திசைகள், வானம், மழை, பல்வேறு விலங்குகள், பாம்பு முதலியவையும் வணங்கப்பட்டன. அவற்றுக்கென விழாக்களின் போது கொடிகள் கட்டப்பட்டன. மந்திரம், தாயத்து, பேய், பிசாசு, ஆவிகள், நிமித்தம் பார்த்தல் முதலிய பலவற்றிலும் மக்கள் நம்பிக்கைக் கொண்டிருந்தனர்.

(ii) பிறசமயங்கள்:

அசோகர் பௌத்த சமயத்தைப் பின்பற்றினார். சந்திரகுப்த மௌரியர், சம்பிரதி போன்றோர் சமண சமயத்தைப் பின்பற்றினர் என்று கூறப்படுகின்றனர். மௌரியருக்குப் பின்னர் வந்த காரவேலர் (சமணர்), மினாண்டர், கனிஷ்கர் (பௌத்தர்) போன்ற பல அரசர்கள் இச்சமயங்களைத் தழுவினர். இவர்களன்றி ஆஜீவகர்களும் அப்பொழுது நிறைய இருந்தார்கள். அசோகர், தசரதர் போன்ற மௌரிய அரசர்கள் இப்பிரிவைச் சேர்ந்த துறவிகளுக்குக் குகைகள் வெட்டிக் கொடுத்தல் போன்ற பல உதவிகளைச் செய்தனர். பிந்துசாரர் கூட அவர்களுக்கு உதவியதாகக் கதைகள் உள்ளன. வைதீக சமயம் நீங்கலாக மற்ற

இச்சமயங்கள் பெரும்பாலும் ஔத் (ழுரழூா), பீகார், ஒரிசா போன்ற பகுதிகளிலேயே அதிகம் காணப்பட்டன. சமண சமயமானது விரைவிலேயே மேற்கு இந்தியாவில் குஜராத், சௌராஷ்டிரம், கத்தியவார் ஆகிய இடங்களுக்குச் சென்று அடைக்கலம் புகுந்தது.

IV. மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற்ற பல போர்களின் விளைவாக விரிந்து பரந்து வளர்ச்சியடைந்து வந்த மகதப் பேரரசு கலிங்க வெற்றியுடன் தனது போர்களை நிறுத்திக் கொண்டது. கி.மு. 232-இல் அசோகரின் மறைவுக்குப் பிறகு அது வீழ்ச்சி அடையத் தொடங்கியது. மௌரியப் பேரரசின் சிதைவுக்கும் நலிவுக்கும் வீழ்ச்சிக்கும் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் பிராமணிய எதிர்ப்பு.

1. பிராமணிய எதிர்ப்பு:

அசோகர் கடைப்பிடித்து வந்த கொள்கையின் விளைவாக பிராமணிய எதிர்ப்பு தலைதூக்கிற்று. அசோகர் சகிப்புத் தன்மை (அஹிம்சை) கொள்கையைப் பின்பற்றினார் என்பதிலும், பிராமணர் களையும் மதிக்கும்படி அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார் என்பதிலும் ஐயமில்லை. ஆனால் விலங்குகளையும் பறவைகளையும் கொல்வதை அவர் தடை செய்தார். பெண்கள் அளவுக்கு அதிகமாக சமய வினைமுறைகளில் ஈடுபடுவதை எதிர்த்தார். இது பிராமணர்களின் வருவாயைப் பாதித்தது. வேள்விகள், யாகங்கள் போன்ற சடங்கில் பௌத்த சமயத்தினரும் அசோகரும் எதிர் மறையான போக்கைக் கடைப்பிடித்தனர். இதனால் பிராமணர்களுக்குப் பெரும் பொருளாதார இழப்பு ஏற்பட்டது. பல்வேறு வகையான யாகங்களில் பரிசுப் பொருள்களும் தட்சணைகளும் பெற்று வாழ்க்கை நடத்தி வந்தவர்கள் அவர்கள். எனவே, அசோகர் சகிப்புக் கொள்கையைப் பின்பற்றி வந்த போதிலும் பிராமணர்கள் அவரை வெறுத்து வந்தார்கள். அவருடைய சகிப்புத் தன்மைக் கொள்கை அவர்களுக்கு மனநிறைவு அளிக்கவில்லை என்பது தெளிவு. தங்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய, தற்போது தாங்கள் அனுபவித்து வருகிற சலுகைகளையும் நலன்களையும் பாதுகாக்கக் கூடிய ஒரு கொள்கையையே அவர்கள் விரும்பினார்கள். மௌரியப் பேரரசின் இடிபாடுகளிலிருந்து தோன்றிய சில அரசுகள் பிராமணர்களால் ஆளப்பட்டு வந்தன. மத்தியப் பிரதேசத்தையும், மேலும் கிழக்கே சற்று தள்ளி மௌரிய பேரரிசன் எஞ்சிய பகுதிகளையும் ஆண்டு வந்த சுங்கர்களும், கன்வர்களும் பிராமணர்களே

ஆவர். இதேபோன்று, மேற்கு தக்காணத்திலும் ஆந்திரத்திலும் நீண்ட காலம் நீடித்திருந்த ஓர் அரசை நிறுவிய சாதவாஹனர்களும் தங்களைப் பிராமணர்கள் என்று கூறிக் கொண்டனர். அசோகர் புறக்கணித்த வேத வேள்விகளை இந்தப் பிராமண அரச குலத்தினர் செய்து வந்தனர்.

2. பொருளாதார நெருக்கடி:

இராணுவத்துக்கு அளவுக்கதிகமாக செலவு செய்ததாலும், அதிகார வர்க்கத்துக்குப் பெருந்தொகையை ஊதியமாக வாரி வழங்கியதாலும் மௌரியப் பேரரசு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாயிற்று. கிடைக்கும் சான்றுகளை எல்லாம் ஒருங்கிணைத்துப் பார்க்கும் பொழுது பண்டைக் காலத்தில் மௌரியர்கள் தான் மிகப் பிரம்மாண்டமான இராணுவத்தையும், ஏராளமான அதிகாரிகளையும் பராமரித்து வந்தார்கள் என்பது புலப்படுகிறது. மக்கள் மீது பல்வேறு விதமான வரிகள் விதிக்கப்பட்ட போதிலும் இந்த மாபெரும் கட்டுமானத்தை வைத்துப் பேணுவது என்பது மிகக் கடினமாகவே இருந்தது. அசோகர் பௌத்தத் துறவிகளுக்கு ஏராளமான மானியங்களை வாரி வழங்கியதால் அரசுக் கருவூலம் காலியாகி விட்டதாகத் தோன்றுகிறது. செலவுகளைச் சமாளிக்கும் பொருட்டு கடைசிக் கட்டத்தில் அவர்கள் தங்கப் படிமங்களை உருக்க வேண்டியதாயிற்று.

3. அரசியல் மற்றும் நிர்வாகக் குழப்பங்கள்:

கலிங்கப் போருக்குப்பின் அசோகர் ஆக்கிரமிப்புப் போர்களைக் கைவிட்டார். மேலும், நாடுபிடிக்கும் போர்களில் ஈடுபட வேண்டாம் என்று தம் வாரிசுகளுக்கும் தம் ஆணைகள் (Edicts) மூலம் கூறினார். இதனால், அசோகரது ஆட்சியின் பிந்திய 29 ஆண்டுகளில் (எட்டாவது ஆண்டில் கலிங்கப்போர் நடந்தது தவிர) மௌரியப் படையானது போர்கள் ஏதுமின்றி இருந்ததால் அதன் திறமை குன்றிவிட்டது என்றும், அரசரிடம் இருந்த விசுவாசம் குறைந்து விட்டது என்றும் சில ஆசிரியர்கள் கருதுகின்றார்கள். இவர்களுள் முக்கியமானவர் H.C. இராய் சௌத்திரி என்பவராவர். இதனால் தான் படைகளின் முன்னிலையிலேயே பிரஹத்ரதர் என்னும் கடைசி மௌரிய அரசரைக் கொல்வது படைத்தலைவரான புஷ்யமித்திரருக்கு எளிதாயிற்று என்பது இவர்களது கருத்து.[1]

அசோகரது காலத்தில் மௌரியப் பேரரசு அளவுக்கு மீறி விரிவடைந்திருந்தது. அன்றிருந்த போக்குவரத்து சாதனங்களைக்

கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால் அவற்றை மட்டும் கொண்டு அவ்வளவு பெரிய பேரரசைத் தொடர்ந்து நீண்ட காலம் ஆளுவது என்பது மிகவும் கடினம் என்பது வெளிப்படை. பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வெவ்வேறு மொழிகளைப் பேசிய மக்களைக் கொண்ட அப்பேரரசு ஒரு சிறிது காலமே நீடித்திருக்க முடியும். பிந்துசாரரின் காலத்திலும் அசோகரின் ஆட்சியிலும் தட்சசீலத்தில் நடைபெற்ற கிளர்ச்சிகள் இந்த உண்மையையே வலியுறுத்துகின்றன. அசோகரது மரணத்துக்குப் பின்னர் மௌரியப் பேரரசு சீர்குலைந்தது இந்தக் காரணத்தினால்தான் என்றும் கருதலாம்.

மேலும், மௌரியப் பேரரசு பல்வேறு சிற்றரசுகளையும் உள்ளடக்கியிருந்தது. அச்சிற்றரசுகள் மௌரியப் பேரரசரைத் தம்முடைய தலைவராக ஏற்றுக் கொண்டு அவருக்குத் திறை செலுத்தி வந்தன. இந்தியாவில் நிறுவப்பட்ட பேரரசுகள் பலவும் இவ்விதத்திலேயே அமைந்திருந்தன. மத்திய அரசின் வலிமை குன்றிய உடனேயே இச்சிற்றரசுகள் தத்தமது சுதந்திரத்தை மீண்டும் அடைய எண்ணி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டன. இதேபோல் அசோகருக்குப் பின் மௌரியப் பேரரசிலும் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் பலரும் கருதுகின்றார்கள்.

மௌரிய வம்சத்தின் சீர்குலைவுக்கு இன்னொரு காரணத்தையும் கூறலாம். மௌரிய அரசுக்கு வாரிசாக மூத்தப் பிள்ளையாகப் பிறக்காத அசோகர் தம்முடைய சகோதரர்களோடு போரிட்டு அரியணையைக் கைப்பற்றினார். இதே உதாரணத்தை அசோகரின் பிள்ளைகளும் பின்னர்ப் பின்பற்ற முயன்றிருக்கக் கூடும். அசோகரது ஆட்சியின் கடைசிப் பத்தாண்டுகளில் எந்த ஆணைகளும் வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை. அதுவரை ஏராளமான ஆணைகள் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டன. ஆனால், திடீரென்று அவை ஏன் நின்றுபோக வேண்டும்? அசோகரது ஆட்சியின் கடைசி ஆண்டுகளில் குழப்பங்கள் நிலவியதை ஒருவேளை இது காட்டுகிறதோ? எனினும், இது பற்றி உறுதியாக எதையும் கூற இயலவில்லை. ஆயினும், அவரது மரணத்துக்குப் பின் மௌரியப் பேரரசு பிளவுண்டு, ஒவ்வொரு பகுதியும் அவருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரால் ஆளப்பட்டு வந்தது என்பதை ஊகித்தறிய முடிகிறது. மௌரிய மன்னர்களின் இந்தப் பலவீனத்தைக் கண்டுதான் கிரேக்க மன்னர்களும் இந்தியாவுக்குள் மீண்டும் படையெடுத்து வந்தார்கள். இந்நிலையில் தான் புஷ்ய மித்திர சுங்கன் கி.மு.185 - இல் மௌரிய வம்சத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தான். அவன் ஒரு பிராமணன் என்றாலும் பிரஹத்ரதன் என்னும் கடைசி மௌரிய மன்னனின் தளபதியாக

இருந்து வந்தான். அவன் பிரஹத்ரதனைப் படுகொலை செய்து பாடலி புத்திரத்தின் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டான். சுங்கர்கள் பாடலிபுத்திரத்தையும், மத்திய இந்தியாவையும் ஆண்டு வந்தார்கள். பிராமணிய வாழ்க்கை முறையை மீண்டும் உயிர்ப்பிப்பதற்காக அதற்குப் புது வாழ்வு அளிப்பதற்காக அவர்கள் பல வேத வேள்விகளை நடத்தினார்கள். அவர்கள் பௌத்தர்களைப் பெரிதும் கொடுமைப் படுத்தியதாக, அடக்கு முறைகளுக்கு ஆட்படுத்தியதாகக் கூறப்படுகிறது. அவர்களுக்குப் பிறகு கன்வர்கள் ஆட்சிப் பீட மேறினர். இவர்களும் பிராமணர்களேயாவர்.

மேற்கூறிய செய்திகளின் மூலம் கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து கி.மு. ஒன்றாம் நூற்றாண்டு வரையிலான மௌரியர் ஆட்சிக் காலச் சமூக வரலாற்றில் நிலவிய பல்வேறு சாதிகளின் நிலை குறித்தும், அச்சமூகத்தில் வாழ்ந்த பெண்களின் நிலை பற்றியும், வைதீக- சமண- பௌத்த சமயங்களின் நிலை பற்றியும் இறுதியாக மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள் குறித்தும், அது வைதீக சமயம் பரவுதற்கு எவ்வாறு வழி கோலியது என்பது பற்றியும் விரிவாக அறியமுடிகின்றது.

இனி, வடக்கிலிருந்த மகதப் பேரரசு (மௌரிய அசோக ஆட்சிக்குப் பின்) சுங்க வம்சத்தின் வைதீக சக்திகளின் ஆதிக்கமாகத் திகழ்ந்த வரலாற்றைப் பின்வருமாறு காணலாம்.

அடிக்குறிப்பு:

1. ஆர்.எஸ்.சர்மா, பண்டைக்கால இந்தியா, ப. 235.

9. வடக்கிலிருந்த பேரரசுகள் - வைதீக சக்திகளின் ஆதிக்கம்

(மௌரிய அசோக ஆட்சிக்குப் பின் (கி.மு.2,1-ஆம் நூற்றாண்டு)

I. சுங்கவம்சம்

மௌரியர்களுக்குப் பின்னர், சுங்க வம்சத்தினர் ஆட்சிக்கு வந்தனர். சுங்கர் குலத்தில் மொத்தம் பத்து அரசர்கள் 112 ஆண்டுகள், அதாவது கி.மு.185 முதல் கி.மு.73 வரை ஆட்சி செய்தார்கள். சுங்கர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு உதவுகின்ற சான்றுகளில் புராணங்கள், பாணர் (Bana) எழுதிய ஹர்ஷ சரிதம், பதஞ்சலி முனிவர் எழுதிய மகாபாஷ்யம் ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கனவாக விளங்குகின்றன. வைதீக சமயச் சான்றுகளில் மட்டுமின்றிச் சமண சமயச் சான்றுகளிலிருந்துங்கூடச் சில செய்திகள் கிடைக்கின்றன. மிருதுங்கன் எழுதிய ‘தெராவளி’ என்னும் நூலிலிருந்தும் சில செய்திகள் கிடைக்கப் பெற்றுள்ளன. புஷ்யமித்திர சுங்கர் நிகழ்த்திய அஸ்வமேத யாகங்களைப் பற்றிக் காளிதாசர் எழுதிய ‘மாளவிகாக்கினி மித்திரம்’ என்னும் நூல் விளக்குவதோடு, அக்கினி மித்திரன் என்னும் சுங்க அரசன் விதர்ப்ப தேசத்து அரசரோடு போரிட்டதையும் விளக்குகிறது. கணதேவரின் அயோத்திப் பட்டயங்கள் புஷ்யமித்திர சுங்கரால் முடிக்கப்பட்ட இரண்டு அஸ்வமேத யாகங்களைப் பற்றி விளக்குகின்றன.

‘திவ்வியவதனம்’ (Divyavadana) எனப்படும் நூல், திபெத் நாட்டைச் சேர்ந்த தாராநாத் என்பவரால் வெளியிடப்பட்ட பௌத்த சமய நூலாகும். இந்நூலில் சுங்க வம்சத்து அரசர்கள் சமயக் கொலை புரிந்தனர் என்ற செய்திகள் காணப்படுகின்றன. சுங்க வம்சத்தின் முதல் அரசரான புஷ்யமித்திர சுங்கர் எவ்வாறு ஆட்சிக்கு வந்தார்? மெரியப் பேரரசின் கடைசி அரசரான ‘பிரஹத்ரதர்’ என்பவர் வலிமையற்ற அரசராக விளங்கினார். அவரது ஆட்சிக்கு எதிராக நாட்டில் பலத்த எதிர்ப்பு இருந்தது. அந்த எதிர்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு அவரிடம் தளபதியாயிருந்த புஷ்யமித்திர சுங்கர் படைவீரரின் முன்னால், பட்டப் பகலில் பிரஹத்ரதரைக் குத்திக் கொலை செய்தார். அதன் பின்னர் ஆட்சித் துறையில் ஏற்பட்ட குழப்பத்தினைப் பயன்படுத்திக் கொண்டு தாமே அரசரானார்.

1. பூர்வீகம் (புஷ்யமித்திர சுங்கர்):

சுங்க வம்சத்தவர் யார்? என்பது குறித்துப் பலவிதமான கருத்துகள் நிலவுகின்றன. பாணினியினுடைய கருத்துப்படி சுங்கர்கள் பிராமணக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்றும், அவர்களுடைய கோத்திரம் 'பரத்வாஜா கோத்திரம்' என்றும் சொல்லப்படுகிறது. இக்காலத்தில் பிராமணர்கள், ஷத்திரியத் தொழிலையும் மேற்கொள்ளத் தொடங்கினார்கள். துரோணாச்சாரியார், பரசுராமன் முதலிய பிராமணர்கள் தளபதிகளாகவே இருந்தனர். இக்கருத்தினை, கே.பி. ஜெயஸ்வால் ஏற்றுக் கொண்டு சுங்கர்கள் பிராமணர்கள் என்றும், புஷ்யமித்திரர் புரோகிதர் குடும்பத்தைச் சார்ந்தவர் என்றும் கூறியுள்ளார்.[1] பிற்கால மௌரியர்கள் வலிமையற்றவராக இருந்தமையால், பிரஹத்ரதர் புஷ்யமித்திரரால் கொலை செய்யப்பட்டார்.

தாராநாத்தின் 'திவ்வியவதனம்', புஷ்யமித்திரர் மௌரிய வம்சத்திலிருந்து தோன்றியவர் என்று குறிப்பிடுகிறது. வரலாற்றாசிரியர்கள் சிலர் 'மித்திரா' என்று சுங்கர்களின் பெயர் முடிவதைக்கொண்டு, இராணியர்கள் என்று அவர்களைக் கருதினர்.[2] மேற்கூறிய கருத்துகள் பல நிலவுகின்றமையால், சுங்கர்களின் தோற்றம் குறித்து தெளிவாக ஏதும் அறிந்து கொள்ள இயலவில்லை. புஷ்யமித்திர சுங்கர் 36 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினார். நாட்டின் ஆட்சிப்பொறுப்பில் புஷ்யமித்திர சுங்கர் மட்டுமின்றி அவர் மகனும் பேரனுங்கூடக் கலந்து கொண்டனர்.

(i) யவனப் போர்கள்:

புஷ்யமித்திர சுங்கர் இரண்டு யவனப் போர்களை அவரது வாழ்க்கையில் நடத்தினார் என்பதனைக் கிரேக்கச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன. 'கார்கி சமிதை' என்னும் நூலில் புஷ்யமித்திரசுங்கர் காலத்தில் 'சகேதர்', 'பாஞ்சாலம்', 'சேதுரா' ஆகிய பகுதிகளில் யவனர்கள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. யவனத் தலைவரும் போரிட்டிருக்கலாம் அல்லது திரும்பிச் சென்றிருக்கலாம் என்று கூறப்படுகிறது. புஷ்யமித்திரர் தமது தலைநகரை அந்நியப் படையெடுப்பினால் இழந்தார் என்று கூறுவதற்கில்லை. டிமெட்ரியஸ் என்பவரே படையை நடத்தி வந்த கிரேக்க அரசர் என்று வரலாற்றாசிரியர் கருதுகின்றனர்.[3]

இரண்டாவது யவனப் படையெடுப்பைப் பற்றிக் காளிதாசர் எழுதிய 'மாளவிகாக்னிமித்திரம்' என்னும் நூலிலிருந்து அறியலாம். புஷ்யமித்திரர் வயதானவராய் இருந்தமையால், அவர் பேரன் வசுமித்திரர் போருக்குப் படையை நடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இப்போர், சிந்து நதிக்கரையில் நடைபெற்றதென்று கூறப்படுகிறது. மினாண்டர் என்பவரே தோற்கடிக்கப்பட்ட கிரேக்கத் தலைவராவர். அலெக்ஸாந்தரை விட அதிகப் பகுதிகளை கைப்பற்றியவர் மினாண்டர் என்று கூறப்படுவதோடு, அவரது நாட்டின் எல்லை மதுராவரை பரவியிருந்தது என்றும் கூறப்படுகிறது. வின்சென்ட் ஸ்மித், மினாண்டர் காலத்தைக் கி.மு. 155-53 வரை என்று கணித்துள்ளார்.[4] அக்காலம் புஷ்யமித்திரர் காலத்தோடு பொருந்துகிறது.

(ii) விதர்ப்பப் போர்:

காளிதாசரின் மாளவிகாக்னிமித்திரத்தில், அக்னி மித்திரருக்கும் விதர்ப்ப நாட்டு அரசனுக்குமிடையே நடை பெற்ற போர் பற்றிய செய்திகளை அறியமுடிகின்றது. விதிர்ப்ப நாட்டு அரசரான யஜ்ன சேனன், பிரஹத்ரதர் என்ற அரசனின் உறவினர் என்று கூறப்படுகிறது. மாதவசேனன் என அழைக்கப்பட்ட யஜ்னசேனனின் உறவினன் இரகசியமாக அக்னி மித்திரரைச் சந்தித்து வந்ததை அறிந்து, யஜ்ன சேனன் மாதவ சேனரைச் சிறையிலடைக்கவே, அக்னிமித்திரர் அவரை விடுவிக்க வேண்டினார் என்றும், அவரது வேண்டுகோளை யஜ்ன சேனன் மறுக்கவே விதர்ப்ப நாட்டிற்கும் அக்னிமித்திரருக்கும் இடையே போர் நடைபெற்றது என்றும் கூறப்படுகிறது. இப்போரில் யஜ்னசேனன் தோல்வியடைந்தான். விதர்ப்ப நாட்டை யஜ்னசேனனுக்கும், மாதவசேனனுக்கும் பிரித்துக் கொடுத்தான்.

'காரவேலன்' என அழைக்கப்பட்ட கலிங்க தேசத்து அரசன், புஷ்யமித்திரரின் காலத்தில் இரண்டுமுறை மகத நாட்டைத் தாக்கியதாக வின்சென்ட் ஸ்மித் குறிப்பிட்டுள்ளார். முதலாவது படையெடுப்பு கி.மு.165-லும் இரண்டாவது படையெடுப்பு கி.மு. 161-லும் நடைபெற்றதாகக் கூறியுள்ளார்.[5] இப்போரில் புஷ்யமித்திரர் கலிங்க அரசனிடம் தோற்றதாகக் கூறப்படுகிறது.

எனினும், இக்கருத்து ஆர்.பி.சந்தா, ஆலன் ஆகிய வரலாற்றா சிரியர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர்களால் தோற்கடிக்கப் ப்பட்டவர் புஷ்யமித்திர சுங்கர் அல்லர் என்று அவர்கள் கூறினார்கள்.[6] பேராசிரியர் இராப்சனின் கருத்துப்படி, புஷ்யமித்திரர் முதலாம் சதகர்னி என்பவரிடம் உஜ்ஜயினியைப் பறிகொத்ததாகக் கூறப்படுகிறது[7] ஆனால், சமீபத்திய ஆராய்ச்சியில் பேராசியர் இராப்சனின் கூற்றுத் தவறு என்பது நிரூபிக்கப்பட்டது.[8] மேலும், சாகலா (இன்றைய சியால்கோட்) எனப்படும் பகுதியை மினாண்டர் புஷ்யமித்திரரிட மிருந்து கைப்பற்றினார் என்ற இராப்சனின் கருத்தினை ஏற்றுக் கொள்வதற்கு ஆதாரமில்லை என்கிறார் கி.ரா.அனுமந்தன்.[9] யுகபுராணத்தில் சாகலா அரசனோடு போர் நிகழ்த்தியதாகக் கூறப்படுகிறது.

(iii) பரி வேள்விகள் (அஸ்வமேத யாகம்):

அயோத்திப் பட்டயத்தில் புஷ்யமித்திரர் இரண்டு பரிவேள்விகளைச் (அஸ்வமேத யாகம்) செய்தார் என்று கூறப்பட்டுள்ளது. மாளவிகாக்னிமித்திரம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ள பரிவேள்வி, புஷ்யமித்திரரின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் செய்யப்பட்டது. அவ்வேள்விக்கு மகாபாஷ்யம் என்னும் நூலை எழுதிய பதஞ்சலி முனிவர் புரோகிதராகப் பணியாற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. முதலாவது பரி வேள்வி எப்பொழுது செய்யப்பட்டது என்று தெரியவில்லை.

பௌத்த சமயச் சான்றுகளில் திபெத்திய அறிஞர் தாரநாத்தின் ‘திவ்வியவதன’ நூலில் புஷ்யமித்திரர் பௌத்த சமயத்திற்கு எதிராக நடந்து கொண்டார் எனவும், பௌத்த சமயக் கட்டிடங்களை இடித்துத் தள்ளினார் எனவும், பௌத்த துறவிகளைக் கொலை செய்தார் எனவும் கூறினார். வின்செென்ட் ஸ்மித், தராநாத்தின் கருத்துகளை முழுவதும் தவறு என்று தள்ளிவிட முடியாது என்று கருதுகிறார். எனினும், பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் புஷ்யமித்திரர் பௌத்த சமய எதிர்ப்பாளராகத் திகழ்ந்தார் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ளவில்லை. இராய் சௌத்ரி பார்ஹுத் என்னுமிடத்தில் புஷ்யமித்திரர் காலத்தில் இருந்த ஸ்தூபிகள் இன்றும் அவர்கள் பௌத்த சமயத்திற்கு எதிராக நடக்கவில்லை என்பதையே காட்டுகின்றன என்றுரைத்தார்.[10] புஷ்யமித்திரர், பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்காகச் சிலரை கொலை செய்யவில்லை. அரசியல் ரீதியாகச் செயல்பட்டுத் தலையிட்டமையால் அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் இராய் சௌத்ரி கருதுகின்றார்.[11]

(iv) புராண இதிகாசங்களின் ஆதிக்கம்:

சுங்க வம்சத்தினரின் காலத்தில் வைதீக சமயம் உச்ச நிலையை அடைந்தது. பிராமணர்களும், அவர்கள் மேற்கொண்ட வைதீகச் சடங்குகளும் சிறப்புப் பெற்றது சுங்கவம்சத்தினர் காலத்தில்தான். பதஞ்சலி முனிவர் சுங்கர்களின் காலத்தில் இருந்த சபைகளைப் பற்றிப் பேசுகின்றார்.

சுங்கர்களின் வைதீக சமய இலக்கியங்கள் வளம் பெற்றவை. வடமொழி நன்கு பேணப்பட்டு வந்தது. பதினெண் புராணங்களும் இன்றைய நிலையில் வகுக்கப் பெற்றது இவர்கள் காலத்திலேயேயாகும். மகாபாரதம், இராமாயணம் முதலிய இதிகாசங்கள் நன்கு விரிவாக எழுதப்பட்டு மக்களிடையே பரவிய காலமும் இதுவேயாகும்.

2. அக்னிமித்திரர்:

கி.மு. 148-இல் புஷ்யமித்திரர் இறந்ததும் அக்னிமித்திரர் ஆட்சிக்கு வந்தார். அவர் எட்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் ஆட்சிகால நிகழ்வுகள் குறித்து ஏதும் தெரியவில்லை. அவரது பட்டயங்களோ, நாணயங்களோ கிடைக்கப்பெறவில்லை. அக்னிமித் திரருக்குப் பின்னர் 'சூஜயஸ்தா' என்பவர் ஏழு ஆண்டுகள் ஆட்சி செலுத்தினார். அவருக்குப்பின்னர் 'அமிர்தர்' என்பவர் ஆட்சிக்கு வந்தார். 'ஆந்திரகா, 'புலிந்தகா, 'கோஷா' ஆகியோர் அக்னிமித்திரரின் பின்தோன்றல்கள் என்று புராணங்கள் கூறுவதை ஏற்றுக் கொள்வதற் கில்லை. அக்னிமித்திரருக்குப் பின்னர். 'வஜ்ரமித்திரர்' ஒன்பது ஆண்டுகளும், அவருக்குப் பின்னர்ப் 'பாகவதர்' 32 ஆண்டுகளும் ஆட்சி செலுத்தினர். கடைசி அரசர் 'தேவபூதி' எனப்படுபவராவர். வாசுதேவர் எனப்படும் அமைச்சரின் தூண்டுதலால் தேவபூதி கொல்லப்பட, 'வாசுதேவர், ஆட்சிக்கு வந்து கி.மு. 73-இல் 'கன்வ வம்சத்தை' நிறுவினார். இவ்வாறாக வைதீக சத்திகளின் ஆதிக்கமாகத் திகழ்ந்த சுங்க வம்சத்தின் ஆட்சி முடிவுற்றது.

II. கன்வ வம்சம்:

சுங்கப் பேரரசைத் தொடர்ந்து, கன்வர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். கன்வர்களின் பாரம்பரியத்தைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்ள முடியவில்லை. புராணங்களில் 112 ஆண்டுகள் சுங்க வம்சத்தின் ஆட்சி நடைபெறும் என்றும், அதைத் தொடர்ந்து கன்வர்களின் ஆட்சி நடைபெறும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாணர் எழுதிய ஹர்ஷ சரிதத்தில் வாசுதேவர் என்ற அமைச்சரின் சதியினால், கடைசிச் சுங்க அரசன் கொலைசெய்யப்பட்டதாக அறியமுடிகின்றது. ஆர்.ஜி. பண்டார்கர் என்னும் வரலாற்றாசிரியர், சுங்கர்களிடம் பணிபுரிந்த வர்களே கன்வர்கள் என்றும், பின்னர் அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினார்கள் என்றும் கூறியதோடு, மராத்திய பேஷ்வாக்களுக்கு அவர்களை ஒப்பிட்டுப் பேசுகின்றார்.[12] எனினும், வின்சென்ட் ஸ்மித், இராய் சௌத்ரி முதலியவர்கள் பண்டார்கரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

கன்வ வம்சத்து எந்த அரசரைப் பற்றியும் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு விளக்கமான சான்றுகள் இல்லை. சில நாணயங்கள் பூமி மித்திரன் என்னும் அரசனால் வெளியிடப்பட்டவை என்று கூறுப்படுகின்றவற்றைச் சான்றாகக் கொள்ளலாம். சிலர் சூசர்மன் என்பவனே கன்வ வம்சத்துக் கடைசி அரசன் என்று குறிப்பிடுகின்ற கூற்றினை ஏற்றுக்கொள்வதற்கில்லை. சுங்கர்கள் ஆட்சி செய்த

பகுதிகளைவிட மிகக் குறைவான பகுதிகளையே கன்வர்கள் ஆட்சி செலுத்தினார்கள். கடைசிக் கன்வர் மகதத்தின் மீது படையெடுத்து வந்த ஆந்திரர்களிடம் அடிபணிந்த காகவர்மர் ஆவர். கன்வர்களுக்குப் பிறகு மகதத்தின் ஆதிக்கம் மறைந்தது. குப்தர்கள் ஆட்சி தொடங்கும் வரையிலும் மகதம் மங்கியிருந்தது.

புராணங்களில், கன்வர்களைத் தூக்கி எறிந்து விட்டு ஆந்திரர்கள் அல்லது சாதவாஹனர்கள் ஆட்சிக்கு வந்தனர் என்று குறிப்பிடப் பட்டுள்ளதாயினும், அதற்குக் காரணமான சாதவாஹன அரசன் யார் என்பது தெரியவில்லை. மகத நாட்டைச் சில காலம் ஆட்சி செய்து விட்டுத் தக்காணப் பகுதிகளை ஆந்திரர்கள் ஆளத் தொடங்கினர் என்றும், மகதநாடு கிறிஸ்துவ சகாப்தத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகள் சிற்றரசர்கள் பலவற்றால் ஆளப்பட்டது என்றும் கூறப்படுகிறது. அக்காலத்தில் மகதநாடு பற்றிய வரலாறு தெளிவாகத் தெரியவில்லை.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து மௌரிய அசோக ஆட்சிக்குப் பின் வடக்கிலிருந்த மகதப் பேரரசு சுங்க வம்சத்தின் வைதீக சக்திகளின் ஆதிக்கமாகத் திகழ்ந்த வரலாறு பற்றியும், சுங்க வம்சம் வைதீக சமயத்திற்கு ஆற்றிய பணிகள் குறித்தும், கன்வ வம்சம் பற்றியும் விரிவாக அறிய முடிகிறது. இனி, வைதீக ஆதரவாளர்களான சாதவாஹனர்களின் ஆதிக்கத்தைப் பின்வருமாறு காணலாம்.

அடிக்குறிப்புக்கள்:

1. கி.ர.அனுமந்தன், இந்திய வரலாறு, முதல் தொகுதி, ப. 164.
2. மேலது., ப.164.
3. ந.சுப்ரமண்யன், இந்திய வரலாறு, ப. 98.
4. கி.ர.அனுமந்தன், இந்திய வரலாறு, முதல் தொகுதி, ப.165.
5. மேலது., ப.165.
6. மேலது., ப.165.
7. மேலது., பக். 165-166.
8. மேலது., ப.166.
9. மேலது., ப.166.
10. மேலது., ப.166.
11. மேலது., ப.168.

10. சாதவாஹனர்களின் ஆதிக்கம் (வைதீக ஆதரவாளர்கள்)

மௌரியர்களுக்குப் பிறகு வடக்கே ஆட்சிபீடமேறிய சுதேச மன்னர்களில் சுங்க வம்சத்தினரும், அவர்களைத் தொடர்ந்து கன்வர்களும் மிக முக்கியமானவர்களாவர். தக்காணத்திலும் மத்திய இந்தியாவிலும் மௌரியர்களின் ஆட்சி மறைந்த பின்னர் நூறு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு சாதவாஹனர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். சாதவாஹனப் பேரரசு கி.மு. சுமார் 230 முதல் ஏறத்தாழ நான்கு அல்லது நாலரை நூற்றாண்டுகள் நீடித்தது. மேற்கு இந்தியாவை ஆண்ட சாகர்களோடு *(Sakar)* நடைபெற்ற நீண்ட போர்கள் காரணமாக இந்த அரசு இறுதியில் நிலை தளரலாயிற்று. கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இப்பேரரசு ஆண்ட பிரதேசத்தில் பல சிற்றரசுகள் தலை தூக்கின. மேற்குத் தக்காணத்தில் சிறிய அரசாக ஆரம்பத்தில் உருவான சாதவாஹன அரசு நாளடைவில் வளர்ச்சியுற்றுத் தக்காணம் முழுவதையும் கைப்பற்றியது. பின்னர் வட இந்தியாவின் பல பிரதேசங்களையுங் கூட அது தன்னுடன் சேர்த்துக் கொண்டது. மகதத்தையும் கூட அது வென்றது என்று ஒரு சிலர் கருதுகின்றனர்.

1. சாதவாஹனர்கள் யாவர்:

கல்வெட்டுகளிலும் நாணயங்களிலும் சாதவாஹனர்கள் என்றும் சாதகர்னிகள் என்றும் அழைக்கப்படுகின்ற இம்மன்னர்களும், புராணங்களில் ஆந்திரர்கள் அல்லது ஆந்திரப் பிரித்தியர்கள் என்று அழைக்கப்படுபவர்களும் ஒருவரே என்று வரலாற்று ஆசிரியர்கள் அனைவரும் முடிவு செய்கின்றார்கள். புராணங்கள் எழுதப்பட்ட காலத்தில் ஆந்திர நாட்டில் மட்டுமே இவர்கள் காணப்பட்டதால் அவை ஆந்திரர்கள் என்று இவர்களை வழங்கின எனக் கருத இடமுண்டு. ஆந்திரப் பிரித்தியர்கள் *(Andhra Bhrityas)* என்ற சொல் 'ஆந்திர ஊழியர்கள்' என்று பொருள்படும். மௌரியப் பேரரசில் முன்பு ஊழியம் செய்ததால் இவர்களுக்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கக் கூடும்.

சாலிவாஹனர்கள் என்றும் பண்டைய நூல்களில் இவர்கள் வழங்கப்படுகின்றார்கள். இவர்கள் ஆந்திர ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. 'ஜாதி' என்ற சொல் இனம் அல்லது மக்களை இங்குக் குறிக்கிறது என்று கொள்ள வேண்டும். தம் நெறிகளுக்குக் கட்டுப்படாத தம் புதல்வர்களை விசுவாமித்திரர் விரட்டி விட்டார் என்றும், அவர்களாலேயே ஆந்திரர், புந்திரர்,

சபராக்கள் போன்ற பல தாஸ்யூக் குலங்கள் தோற்றுவிக்கப்பட்டன என்றும் அயிதரேயப் பிராமணம் கதை சொல்கிறது.

தமது அரசின் தென்கோடியில் ஆந்திரர், பாரிந்தர் (Parindas) போன்றோர் வாழ்ந்தார்கள் என்று அசோகர் தமது கல்வெட்டில் கூறுகிறார். அசோகரது மரணத்துக்குப்பின் இவர்கள் மேற்குத் தக்காணத்துக்குச் சென்று தமது அரசை அங்கு நிறுவினார்கள் என்று கருதலாம். முன்பு மௌரியர்களுக்கு அடங்கி வாழ்ந்த போஜர்கள். இரதிகர்கள், பாரிந்தர்கள், பெதனிகர்கள் (Petenikas) முதலியோர் ஆந்திரர்களது இம்முயற்சியில் ஒத்துழைத்தனர் என்று தெரிகிறது. பின்னர் அவர்களுக்குச் சாதவாஹனப் பேரரசில் பட்டங்களும் பதவிகளும் நிறைய அளிக்கப்பட்டன.

2. பெயர்க்காரணம்:

சாதவாஹனர் என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது என்பது உறுதியாகத் தெரியவில்லை. அவர்கள் சாதவாஹன குலத்தைச் (kula) சேர்ந்தவர்கள் என்று கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. சாதவாஹன குலத்து முதல் அரசர் ஆந்திர ஜாதியைச் (Jati) சேர்ந்தவர் என்று புராணங்கள் கூறுகின்றன. சாதவாஹனர் என்பது அவர்களுடைய மூதாதை ஒருவரது பெயரால் ஏற்பட்ட குலப்யெராக இருக்கக் கூடும் என்றும் சிலர் ஊகிக்கின்றனர். ஆந்திர ஜாதி என்பது ஆந்திரர் என்ற பொருளில் புராணங்களில் வழங்கப்படுகிறது என்றும் கருதலாம். ஆந்திர நாட்டில் சாதவாஹனர்கள் ஆண்ட காலத்தில் எழுதப்பட்ட புராணங்கள் அவர்களை ஆந்திரர் என அழைத்தன போலும் என்று சிலர் கருதுகின்றனர்.

முதல் சாதவாஹன அரசரான சிமுகரின் முன்னோரைப் பற்றி எதுவுமே தெரியவில்லை. 'ராஜா சிமுக சாதவாஹனர்' என்று நானாகாட் (Nanaghat) கல்வெட்டு அவரைக் குறிப்பிடுகிறது. சாதவாஹன குலத்தில் அல்லது சாதவாஹனர் என்பாரின் வழியில் அவர் தோன்றியவர் என்று அது குறிப்பிடுகிறது என்று கருதவும் இடமேற்படுகிறது.

சாதவாஹனர்கள் பிராமணர்கள் என்பர் சிலர். நாகர்களுடன் கலப்புற்ற பிராமணர்களின் வழியில் அவர்கள் வந்தவர்கள் என்றும், சாகர்களோடும் கலப்புற்றவர்கள் என்றும் பண்டை நூல்களும் கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன. ஆந்திரரல்லாத சாதவாஹனர் பின்னர்ப் பிராமணக் கலப்பினால் பிராமணராயினர் என்று கருதலாம்.

3. சாதவாஹன அரசு அமைக்கப்பட்ட இடம்:

ஆந்திரர்கள் 1,00,000 காலப்படைகளையும், 2,000 குதிரை வீரர்களையும் 1,000 யானைகளையும் கொண்ட பெரும் படை ஒன்றைப் பெற்று, மதில் சூழ்ந்த முப்பது நகரங்களிலும் எண்ணற்ற கிராமங்களிலும் கிழக்குத் தக்காணத்தில் வாழ்ந்த மக்கள் என்று கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிளைனி எழுதுகிறார்.[1] கிழக்குக் கடற்கரையில் கிருஷ்ணா நதியின் கரையில் அமைந்துள்ள ஸ்ரீகாகுளமே (Srikakulam) ஆந்திரர்களின் தலைநகரமாயிருந்தது என்று பின்னர்ப் பல நூல்களும் எழுதின. இவற்றை அடிப்படையாகக் கொண்டு சாதவாஹனர்கள் கோதாவரி கிருஷ்ணா நதிகளின் கழிமுகப் பகுதியிலேயே தமது ஆதிக்கத்தை ஆரம்பத்தில் நிறுவினர் என்ற முடிவுக்குச் சிலர் வந்தனர். இந்த முடிவு தவறானது என்பதைப் பல்வேறு சான்றுகளும் காட்டுகின்றன.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் கிழக்குக் கரையில் ஆந்திரர் ஆண்டதாகவே கூறவில்லை. கிருஷ்ணா நதியின் கழிமுகப் பகுதியில் பட்டிப்ரோலுவில் காணப்பட்ட கல்வெட்டுகள் (கி.மு.சுமார் 200) குபிரகர் (Kuoirake) என்ற அரசர் அப்பகுதியில் ஆண்டதாகக் கூறுகின்றன. இவர் யார் என்பதைப் பற்றி இதுவரை அறியமுடியவில்லை. ஆயினும் இவர் சாதவாஹன அரசர் அல்லர் என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது. அதே சமயத்தில், சாதவாஹன அரசர்களின் கல்வெட்டுகளும் நாணயங்களும் மேற்குத் தக்காணத்திலேயே காணப்படுகின்றன. அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள அரசர்களின் பெயர்கள் புராணங்களில் தரப்பட்டுள்ள சாதவாஹன அரசர்கள் பட்டியலில் உள்ள முதற் சில மன்னர்களோடு ஒத்துள்ளன. அக்கல்வெட்டுகளும், நாணயங்களும் இன்றைய மகாராஷ்டிரத்தில் பூனா மாவட்டத்திலுள்ள நாசிக் (Nasik), கார்லே (Karle), நானாகாட் (Nanaghat) ஆகிய இடங்களிலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே, ஆரம்பத்தில் சாதவாஹனர்கள் தமது அரசை மேற்குத் தக்காணத்திலேயே நிறுவினர் என்பது உறுதியாகின்றது.

தம்முடைய சமகாலத்தவரான சாதவாஹன மன்னர் சாதகர்னியின் அரசு, தம் அரசுக்கு மேற்குப் புறத்தில் அமைந்திருந்தது என்று கலிங்க மன்னர் காரவேலர் கூறுவதையும் இங்குக் கவனிக்க வேண்டும். மேலும் அயிதரேயப் பிராமணம், அசோகரது பதின்மூன்றாவது கல்வெட்டு, பௌத்தர்களின் வினய நூல்கள், ஜாதகக் கதைகள் முதலியவையும் ஆந்திரர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. அவை குறிப்பிடும் இடங்கள் ஆந்திரர்கள் மேற்குத் தக்காணத்தில் வாழ்ந்தார்கள் என்பதையே சுட்டுகின்றன.

இவ்வாறு ஆரம்பத்தில் மேற்குத் தக்காணத்தில் அமைக்கப்பட்ட சாதவாஹன அரசு பின்னர்க் கிழக்கு நோக்கி விரிவடைந்து, இன்றைய ஆந்திரப் பகுதியையும் உள்ளடக்கிக் கொண்டது என்பது தெரிகிறது. பிளைனியின் காலமான கி.பி. முதலாம் நூற்றாண்டின் பின் பகுதியில் அவ்வரசு வலிமை குன்றி, இன்றைய ஆந்திர நாட்டையே நிலைக் களனாகக் கொண்டிருந்தது போலும். ஆரம்பத்தில் பிரதிஷ்டானம் தான் அவர்களது தலைநகராயிருந்தது என்றே பல சான்றுகளும் உணர்த்துகின்றன. அதை அடுத்திருந்த பகுதியிலேயே சாதவாஹன அரசு ஆரம்பத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். பின்னர் தெற்கிலும் வடக்கிலுமாக மகாராஷ்டிரம் முழுவதிலும் பரவிப் பின்னர் மாளவத்திலும், இன்றைய மத்தியப் பிரதேசத்திலும் கூட அது பரவியது. இன்றைய ஆந்திரத்தின் பல பகுதிகள் வாசிஷ்டிபுத்திர புலுமாயியின் காலத்தில்தான் சாதவாஹன அரசில் சேர்ந்தன. எனவே, கிழக்குக் கரையிலிருந்தே ஆந்திர அரசு வளர்ச்சியுற்றது என்ற முடிவு தவறானது என்பது தெளிவாகிறது.

4. சாதவாஹனர் காலம்:

சாதவாஹன வம்சம் பதவிக்கு வந்த காலம் பற்றியும் கருத்துவேறுபாடுகள் உள்ளன. புராணங்கள் கூறுகின்ற கணக்கீடு பின்வருமாறு: சந்திரகுப்த மௌரியர் அரியணை ஏறிய பின் 137 ஆண்டுகள் கழித்துச் சுங்க வம்சம் பதவிக்கு வந்தது. சுங்க அரசர்கள் 112 ஆண்டுகள் ஆண்டபின், கன்வர்கள் 45 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்கள். கடைசிக் கன்வ அரசரான சூசர்மரை அவருடைய அமைச்சரான சிமுகர் (சாதவாஹன அரசை நிறுவியவர்) கொலை செய்து விட்டு அரசரானார். சந்திரகுப்தர் அரியணையேறிய காலம் கி.மு.324 என்று வைத்துக் கொண்டால், சிமுகர் அரசரானது அதற்கு 137+112+45=294 ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது கி.மு.30 ஆம் ஆண்டுவாக்கில் அவர் அரசரானார் என்றாகிறது.

ஸ்மித், கோபாலாச்சாரி போன்றோர் இதை ஏற்றுக்கொள்ள வில்லை. அசோகரது மரணத்துக்குப் பின்னர் விரைவிலேயே 'ஆந்திரப் பிரித்தியர்கள்' சிமுகரின் தலைமையில் தனியரசு ஒன்றை அமைத்துக் கொண்டனர் என்று அவர்கள் கூறுகின்றனர்.[2] அதாவது கி.மு.235-ஆம் ஆண்டு வாக்கில் இது நிகழ்ந்தது என்று தெரிகிறது. காரவேலரது ஹாதிகும்பாக் கல்வெட்டு (கி.மு.இரண்டாம் நூற்றாண்டு) ஒரு சாதவாஹன அரசர் அக்காலத்தில் ஆண்டதைக் குறிப்பிடுகிறது. அது குறிப்பிடும் ஸ்ரீ சாதகர்னி சாதவாஹன வம்சத்து ஆறாம் அரசரான இரண்டாம் சாதகர்னியே என்று கருதப்படுகிறார். ஹாதிகும்பாக்

கல்வெட்டை ஆராய்ந்த இராப்சன் (Sapson) சிமுகர் கி.மு.225 வாக்கில் அரசரானார் என்று முடிவு செய்கிறார்.[3]

புராணங்கள் கூறுகின்ற முரணான பல்வேறு தகவல்களையும் ஆராய்ந்த பின் சாதவாஹன அரசர்கள் மொத்தம் முப்பது பேர்கள் என்றும், அவர்கள் சுமார் 460 ஆண்டுகள் ஆண்டிருக்கக் கூடும் என்றும் ஸ்மித்தும், கோபாலச்சாரியும் முடிவு செய்கின்றனர்.[4] சுமார் கி.மு.230-ஆம் ஆண்டிலிருந்து சுமார் கி.பி. 230-ஆம் ஆண்டு வரையில் சாதவாஹனர் ஆண்டனர் என்று தோராயமாக எடுத்துக் கொள்ளலாம்.

5. சாதவாஹன அரசர்கள்:

சாதவாஹன வம்சத்தில் மொத்தம் முப்பது அரசர்கள் இருந்தார்கள் என்றும், அவர்கள் அனைவரும் சேர்ந்து 460 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்கள் என்றும் மத்சயபுராணங் கூறுகின்றது. இன்று கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு இவ்வரசர்களின் வரலாற்றை முழுமையாக அறியமுடியவில்லை. (இவர்கள் மொத்தம் 17,18 அல்லது 19 அரசர்களே என்றும், இவர்கள் மொத்தம் 300 ஆண்டுகள் ஆண்டனர் என்றும் வாயு புராணம் கூறுகிறது. இவற்றுள் மத்சய புராணம் கூறுவதே பொருத்தமானது என்று அறிஞர் கொள்ளுகின்றனர்.)

சாதவாஹன அரசர்களுள் முதன்மையானவர் சிமுகர் (Simuka). சிசுகர் (Sisuka), சிப்பிரகர் (Sipraka), சிந்துகர் (Sindhuka) என்றும் இவரைப் புராணங்கள் குறிக்கின்றன. கடைசிக் கன்வ அரசரான சூசர்மரைக் கொன்றவர் இவரே என்று புராணங்கள் கூறுவது தவறு என்று தெரிகிறது. கல்வெட்டுகளும், நாணயங்களும் சாதவாஹனர்கள் கி.மு. சுமார் 230-ஆம் ஆண்டு வாக்கில் மௌரிய பேரரசிலிருந்து பிரிந்து தனியாட்சியைத் துவக்கினர் என்பதை உணர்த்துகின்றன. எனவே, கன்வ அரசரைக் கொன்றவர் இவராக இருக்க முடியாது என்பது தெளிவு. இவர் இருபத்து மூன்று ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். பிற்காலத்தில் கொடிய மன்னராக இவர் மாறினார் என்றும், எனவே அரியணையிலிருந்து அகற்றப்பட்டுக் கொல்லப்பட்டார் என்றும் சமண நூல்கள் கூறுகின்றன. அவருக்குப் பின் அரசரானவர் அவருடைய தம்பியான கண்ணர் (Kanha) அல்லது கிருஷ்ணர் என்பவர். இவர் கி.மு. 207 முதல் 189 வரை ஆண்டார் என்று தோராயமாக வைத்துக் கொள்ளலாம். பிரதிஷ்டானத்திலிருந்து (அவுரங்காபாத் மாவட்டம்) நாசிக் (பூனா மாவட்டம்) வரையில் சாதவாஹன அரசு இவரது காலத்தில் விரிவடைந்தது.

இவ்வம்சத்தின் மூன்றாம் அரசரான முதலாம் சாதகர்னி (Satakarni I, கி.மு. சுமார் 189-172) சிமுகரின் பிள்ளை. இவர் வலிமை

பொருந்திய அரசர். மேற்கு மாளவத்தை இவர் வென்றார். வட இந்தியாவை ஆண்ட சுங்கப் பேரரசரும் கூட இவரால் தோற்கடிக்கப்பட்டார். தம்முடைய வெற்றிகளைக் கொண்டாடுவதற்காகப் பல வேள்விகளை இவர் செய்தார் என்று இவருடைய அரசியான நாகனிகாவின் (*Naganika*) கல்வெட்டு ஒன்று கூறுகிறது. பல அசுவமேத யாகங்களையும், இராஜசூய யாகங்களையுங் கூட இவர் செய்தார். சிமுகர், முதலாம் சாதகர்னி, நாகனிகா, இளவரசர் சர்மூவர் ஆகியோருடைய உருவங்கள் கல்லில் பொறிக்கப்பட்டு நானாகாட்டில் காணப்படுகின்றன. இரதிகர்களின் தலைவர்களுள் ஒருவரான மகாரதியின் மகளே நாகனிகா என்று தெரிகிறது. இவரது காலத்தில் சாதவாஹன அரசு உஜ்ஜயினி, விதிசா ஆகியவை வரையில் பரவியிருந்தது. 'தட்சிணாபதத்தின் அரசர்' (*Lord of Dakshinapatha*) என்றும், 'யாராலும் தடுக்க வொண்ணாத சக்கரத்தைப் பெற்றவர்' என்றும் தம் கணவரது மரணத்துக்குப் பின் அவரைப் பற்றித் தம் கல்வெட்டில் கூறுகிறார் நாகனிகா.

முதலாம் சாதகர்னிக்குப் பின்னர் அவருடைய இளம் பிள்ளைகளான வேதிஸ்ரீ, சதிஸ்ரீ (*Satisri*) ஆகியோர் ஆண்டதாகத் தெரிகிறது. நாகனிகாவே இவர்களின் பாதுகாவலராக இருந்து ஆண்டு வந்தார் என்று தெரிகிறது. இருப்பினும், முதலாம் சாதகர்னிக்குப் பின்னர் அரியணையேறிய நான்காம் ஐந்தாம் அரசர்களைப் பற்றிப் புராணங்கள் வேறு பெயர்களைத் தருகின்றன. இந்த வம்சத்தின் ஆறாம் (அல்லது ஏழாம்) அரசர் இரண்டாம் சாதகர்னி கி.மு. சுமார் 172-இல் அரியணையேறிய இவர் 56 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். சாதவாஹன அரசர்களுள் அதிக காலம் ஆட்சி புரிந்தது இவரேயாவர். எனவே, காரவேலரது ஹாதிகும்பாக் கல்வெட்டில் குறிக்கப்படும் சாதகர்னி இவராகத்தான் இருக்கக் கூடும்.

தாம் அரசரான பின் இரண்டாவது ஆண்டிலேயே பெரும்படையொன்றை மேற்கு நோக்கிச் சாதகர்னியின் அரசுக்குள் அனுப்பி வைத்ததாகக் காரவேலர் கூறுகின்றார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் மீண்டுமொரு முறை இவ்வாறே படைகளை அனுப்பிப் பிரதிஷ்டானத்தை ஆண்ட ஆந்திர அரசருக்குக் கட்டுப்பட்ட மராட்டிய நாட்டில் இருந்த இரதிகர்கள், விதர்ப்பத்திலிருந்த போஜர்கள் ஆகியோரைத் தோற்கடித்ததாகவும் அவர் கூறுகிறார்.[5] இப்படையெடுப்புகளைப் பற்றி இதற்குமேல் ஒன்றும் தெரியவில்லை. இரண்டாம் சாதகர்னியின் காலத்திலும் சாதவாஹன அரசு வலுவுடனேயே திகழ்ந்தது. சுங்கர்களிடமிருந்து மாளவம் முழுவதும் இவர் காலத்தில் கைப்பற்றப்பட்டது. மத்தியப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதியையும் இவர் வென்றிருக்கக் கூடும். இவருக்கு அடுத்த அரசரான

ஆபீலகரின் (*Apilaka*) நாணயங்கள் அப்பகுதியில் காணப்படுகின்றன. ஒருவேளை ஆபீலகரே அப்பகுதியை வென்றிருக்கவும் கூடும் எனக் கருதவும் இடமேற்படுகிறது. இவ்வம்சத்தின் பதினேழாம் அரசரான ஹாலர் (*Hala*) என்பவர் மகாராஷ்டிரப் பிராகிருதத்தில் 'சத்தசாயி' (*Sattasai*) என்ற 700 கவிதைகளைக் கொண்ட தொகுதி ஒன்றை இயற்றினார். கி.பி.20-24 இல் இவர் ஆண்டிருக்குக் கூடும் என்று கணக்கிடுகின்றனர்.

(*i*) சாகர்களின் படையெடுப்பு:

இரண்டு நூற்றாண்டுகளாக வளர்ந்து கொண்டு வந்த சாதவாஹனப் பேரரசு கி.பி. முதலாம் நூற்றாண்டின் பின் பாதியில் பல தோல்விகளைக் கண்டது. கி.மு.75-ஆம் ஆண்டில் சிஸ்தானத்தைச் (*Sistan*) சேர்ந்த சாகர்கள் (*Sakas*) சிந்து நதியின் கழிமுகப் பகுதியைக் கைப்பற்றினார்கள். இதனால், இப்பகுதியைச் 'சகத்வீபம்' என்று இந்திய ஆசிரியர்களும் 'இந்தோ - சைத்தியா' (*Indo-Scythia*) என்று கிரேக்கரும் அழைக்கலாயினர். இந்தச் சக சத்ரப்புகள் (*Satraps*) மேற்குத் தக்காணத்திலும் தமது ஆதிக்கத்தை நிறுவினார்கள். இதனால், சாதவாஹனர்களின் ஆதிக்கமும் வளர்ச்சியும் சுமார் அரை நூற்றாண்டுக் காலம் தடைப்பட்டன. ஹாலருக்குப் பின் வந்த நான்கு சாதவாஹன மன்னர்களும் சேர்ந்து மொத்தம் பின்னிரண்டு ஆண்டுகளுக்கும் குறைவாகவே ஆட்சி புரிந்தார்கள். சாதவாஹன அரசில் ஏற்பட்டிருந்த குழப்பத்தைக் காட்டுவதற்கு இதுவே ஒரு சான்றாகும்.

'மேற்குச் சத்ரப்புகள்' (*Western Satraps*) என்று அழைக்கப் படுகிற இந்த ஷகராத (*Kshaharate*) அரசர்களுள் முதலாமவர் பூமகர் (*Bhumaka*) என்பவர். அவருடைய நாணயங்கள் பல கிடைத்துள்ளன. அவ்வரசர்களுள் மிகவும் முக்கியமானவர் நாகபாணர் (*Nahapana*) என்பவராவர். இவர் சிறந்த வீரராகக் கருதப்படுகிறார். இவரது அரசு குஜராத், கத்தியவார், வடக்கு மகாராஷ்டிரம், கொங்கணம், தெற்கு மகாராஷ்டிரத்தின் சில பகுதிகள் ஆகிய இடங்களில் பரவியிருந்தது என்பதைக் கல்வெட்டுகளும், நாணயங்களும் தெரிவிக்கின்றன.

தம்முடைய நாணயங்களின் வழியாக 'இராஜன்' என்ற பட்டத்தை இவர் சூட்டிக் கொண்டதாக அறிவிக்கிறார். இவரது தலைநகர் மின்னகரம் (*Minnagara*) என்று அழைக்கப்பட்டது. உஜ்ஜயினிக்கும் புரோச்சுக்கும் இடையிலான தொகாத் (*Dohad*) என்ற பட்டணமாகவே அது இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. பெரிப்புளூசின் ஆசிரியர் நாகபாணரைப் பற்றி எழுதுகிறார். சாதவாஹனர்களின் துறைமுகமான கல்யாணுக்குச் (*Kalyan*) சென்ற கிரேக்கக் கப்பல்கள்

புரோச்சுக்குத் (Broach - Barygeza) திருப்பிவிடப்பட்டன என்று அவர் எழுதுகிறார்.[6] கி.பி. 40 முதல் 80 வரையிலான காலத்தில்தான் சாதவாஹனர்களுக்குச் சொந்தமான பல பகுதிகளை ஷகராத மன்னர்கள் இவ்வாறு பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று வரலாற்றாசிரியர்கள் முடிவு செய்கின்றார்கள்.

6. கௌதமிபுத்திர சாதகர்னி:

சாதவாஹன அரசர்களுள் 23-ஆம் மன்னரான கௌதமி புத்திர சாதகர்னியின் ஆட்சியில் சாதவாஹனர் மீண்டும் தமது ஆதிக்கத்தை வலுவோடு நிறுவினார். சாதவாஹன வம்சத்திலேயே மிகவும் திறமை மிக்கவராக இவர் காணப்படுகிறார். கி.பி. சுமார் 80-ஆம் ஆண்டிலிருந்து 104 வரை இவர் ஆண்டார். ஷகராத அரசர்களைத் தோற்கடிப்பதற்கெனத் தமது ஆட்சியில் முதல் பதினாறு ஆண்டுகளில் தேவையான ஏற்பாடுகளையெல்லாம் செய்த பின், அவர்கள் மீது தாக்குதல் தொடுத்துப் பெருவெற்றி பெற்றார் இவர். சாகர்கள், பகலவர்கள் (Pahlavas), யவனர்கள் ஆகியோரை அழித்தவர் என்று இவர் வருணிக்கப்படுகிறார். நாகபாணரைத் தோற்கடித்து விரட்டி விட்டு, அவருடைய வெள்ளி நாணயங்களை மீண்டும் அச்சிட்டு இவர் வெளியிட்டார்.

வடக்கு மகாராஷ்டிரம், கொங்கணம், நர்மதை நதிச் சமவெளி, சௌராஷ்டிரம், மாளவம், மேற்கு இராஜஸ்தானம் முதலிய பகுதிகளைச் சாகர்களிடமிருந்து மீண்டும் சாதகர்னி கைப்பற்றினார். வடக்கில் விதர்ப்பமும், தெற்கில் பனவாசியும் (Banavasi) இவருடைய நாட்டு எல்லைகளாயிருந்தன. கிழக்கில் கலிங்கத்தின் ஒரு பகுதியும் இவரது அரசில் இருந்திருக்கக் கூடும். ஆனால், ஆந்திரம் இவரது ஆட்சியில் இருந்தது என்பதற்கான சான்றுகள் ஒன்றுமில்லை.

தமது வாழ்வின் கடைசிச் சில ஆண்டுகளில் இவர் நோய்வாய் பட்டதாலோ, போரில் அதிகக் கவனம் செலுத்தியதாலோ இவருடைய அன்னையான கௌதமிபாலஸ்ரீ நிர்வாகத்தில் பெரும்பங்கேற்றுத் தம் மகனோடு ஒத்துழைத்தார் என்பது புலனாகிறது. இந்த அம்மையாரின் நாசிக் (Nasik) கல்வெட்டு மூலமாகக் கௌதமிபுத்திர சாதகர்னியின் சாதனைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளமுடிகிறது. அடுத்த அரசரும் கௌதம புத்திர சாதகர்னியின் மகனுமான இரண்டாம் புலுமாயி (Pulumayi- II) என்பவரது ஆட்சியின் பத்தொன்பதாவது ஆண்டில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டது.

7. இரண்டாம் புலுமாயி:

இரண்டாம் புலுமாயி இருபத்து நான்கு ஆண்டுகள் ஆண்டார். இவர் வாசிஷ்டிபுத்திர புலுமாயி என்றும் அழைக்கப்பட்டார். கிழக்கு ஆந்திர நாட்டை வென்றவர் இவரேயாவர். கோதாவரி, குண்டூர் மாவட்டங்களிலும் சோழ மண்டலக் கடற்கரையின் தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூர் வரையிலும் இவருடைய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு, கிழக்கில் இவர் போர்களில் ஈடுபட்டிருந்த நேரத்தைப் பயன்படுத்திச் சாகர்கள் மேற்கில் பல பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார்கள். மாளவம், மேற்கு இராஜஸ்தானம் ஆகிய பிரதேசங்களை இவ்வாறு சாதவாஹனர் இழந்தனர்.

இந்தப் போர்களின் விளைவாகவே புலுமாயிக்கு அடுத்த அரசரான அவருடைய தம்பி வாசிஷ்டிபுத்திர சாதகர்னி என்பவர் சக அரசரான மகாஷத்ரப ருத்ரதாமன் *(Mahakshatrapa Rudradam)* என்பவரின் மகளைத் திருமணம் செய்து கொண்டார். ஆயினும் தம் மருமகனுக்குப் பின் அரியணையேறிய சாதவாஹன மன்னரை உருத்ரதாமன் இரண்டு முறை தோற்கடித்து வடக்குக் கொங்கணத்தையும் நர்மதைச் சமவெளியையும் பறித்துக் கொண்டார்.

(i) சைவ, வைணவ சமயங்களின் நிலை:

சாதவாஹன ஆட்சியாளர்கள் தம்மை பிராமணர்கள் என்று கூறிக் கொண்டார்கள். பிராமணியம் வெற்றி வாகை சூட அரும்பாடு பட்டனர். தொடக்ககாலம் முதலே அரசர்களும் அரசியர்களும் அஸ்வமேதம், வாஜபேயம் போன்ற வேத வேள்விகளை செய்து வந்தார்கள்.

கிருஷ்ணன், வாசுதேவன் போன்ற பல வைணவ தெய்வங்களை அவர்கள் வழிபட்டனர். வேள்விகளை நடத்தித் தருவதற்கான தட்சணைகளைப் பிராமணர்களுக்குத் தாராளமாக வழங்கினார்கள். சாதாவாஹன அரசர்களுள் ஒருவனான கௌதமிபுத்திரன் பிராமணர்களை ஆதரிப்பதில் நிகரற்றவன் என்றும் வர்ணாசிரம தர்மத்தை தவறாது கடைப்பிடித்தவன் என்றும் குறிப்பிடப்படுகிறான்.

(ii) பிராமணர்களுக்குத் தலைமையிடம் (கடவுளுக்கடுத்து)

மௌரியர் ஆட்சி மறைந்து சுங்கர், சாதவாஹனர் போன்ற வைதீக வம்சங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு வைதீக வேள்விகள் மறுபடியும் நடைமுறைக்கு வந்தன. பிராமணர்களுக்குக் கடவுளுக் கடுத்தத் தலைமையிடம் கொக்கப்பட்டது.

பிராமணர்களுக்குப் பெருமளவுக்கு நிலங்களை மானியமாக வழங்கியது குப்தர் காலத்தில்தான். இது பிராமணர்களின் ஆதிக்கம் தொடர்ந்து நீடித்தது என்பதையே காட்டுகிறது. வைசியர்களான குப்தர்களை சத்திரியர்கள் எனப் பிராமணர்கள் போற்ற ஆரம்பித்தார்கள். அதுமட்டுமின்றி, குப்த மன்னர்கள் தெய்வாம்சங்கள் பொருந்தியவர்கள் என்று அவர்களைத் தலைமீது தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடவும் தலைப்பட்டனர். இவையாவும் குப்த மன்னர்களின் நிலையை முறைமைப்படுத்த உதவின. பதிலுக்கு, இம்மன்னர்கள் பிராமணிய அமைப்பின் மாபெரும் ஆதரவாளர்களாயினர். எண்ணற்ற நிலமானியங்கள் கிடைத்ததன் காரணமாக பிராமணர்கள் மேன்மேலும் செல்வந்தர்களாயினர். எனவே, அவர்கள் பல்வேறு சலுகைகளையும் உரிமைகளையும் கோர ஆரம்பித்தனர். சுமார் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் நாரதர் இயற்றிய தரும நூலில் இவை பட்டியலிட்டுக் கூறப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு, பிராமணர்களின் அதிகாரம் வளர்ச்சி அடைந்ததற்கு முக்கிய காரணம், அவர்கள் நிலமானியம் பெற்றதேயாகும். பிராமணர்களுக்கு நிலம் வழங்குவதன் தேவையைத் தர்ம சாஸ்திரங்களும், இதிகாசங்கள், புராணங்கள் ஆகியவற்றின் நீதிநெறிப் பகுதிகளும் சிறப்பித்துக் கூறுகின்றன. "கி.மு. நான்காம் நூற்றாண்டு முதலே பிராமணர்களுக்கு நிலமானியம் கொடுக்கும் வழக்கம் இருந்து வருவதாக ஆரம்பகால புத்த நூல்கள் தெரிவிக்கின்றன"[7] என்று குறிப்பிடுகின்றார் ஆர்.எஸ்.சர்மா. இச்சூழல், குப்தர்கள் காலத்தில் பல்கிப் பெருகியதைச் சான்றுகள் வழித் தெளிவாக அறியமுடிகின்றது.

சாதவாஹனர் காலத்தில் வைதீக சமயம் முன்னேற்றம் அடைந்தது. சாதவாஹன அரசர்களுள் பெரும்பாலானோர் வைதீக சமயத்தைப் பின்பற்றினார்கள். அந்தச் சாதவாஹன மரபின் மூன்றாம் அரசன் வேத வேள்விகள் பலவற்றைப் பிராமணர்களைக் கொண்டு செய்தான். தன் மகனுக்கு வேதிஸ்ரீ என்னும் பெயரையும் வைத்தான். ஹாலன் தொகுத்த 'சப்தசதி' என்னும் நூல் சிவபெருமானை வாழ்த்துகின்ற ஒரு பாடலோடு தொடங்குகிறது. கௌதமி புத்திர சதகர்னி பார்ப்பனர்க்குப் பேராதரவு தந்தான். அவன் இராமன், கேசவன், அர்ச்சுனன் முதலிய இதிகாசத் தலைவர்களைப் பின்பற்ற முயன்றான். அந்தக் கால வைதீக சமயத்தில் இந்திரன், வாசுதேவன், சூரியன், சந்திரன், சிவன், விஷ்ணு, கிருஷ்ணன், கணேசன், பசுபதி ஆகிய தெய்வங்கள் இடம்பெற்றன. கௌரி கோயிலும், நீர் நெருப்பு விரதமும் சப்தசதியில் குறிக்கப்பட்டுள்ளன.

8. ஸ்ரீ யக்ஞ சாதகர்னி:

கடைசி முக்கியமான சாதவாஹன அரசரும் அந்த வம்சத்து மன்னர்களிலேயே ஏராளமான நாணயங்கள் மூலம் நன்கு அறியப்படுபவரும் ஸ்ரீ யக்ஞ சாதகர்னிதான். இவர் கி.பி. சுமார் 170 முதல் 199 வரை, மொத்தம் 29 ஆண்டுகள் ஆண்டார் என்று தெரிகிறது. தமது வம்சத்துக்குப் பகைவர்களான சாகர்களோடு போரிட்டு மேற்கில் தம் முன்னோர் இழந்த பல பகுதிகளை இவர் வென்றார் என்பது நன்கு புலனாகிறது. இவ்வாறு வெல்லப்பட்ட மேற்குப் பிரதேசத்தின், சத்ரப்புகள் வெளியிட்டிருந்ததைப் போலவே புதிய வெள்ளி நாணயங்களை இவர் அச்சிட்டு வெளியிட்டார். இவை, வடக்கு மகாராஷ்டிரத்திலும் மத்தியப் பிரதேசத்திலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கிழக்குக் கடற்கரையில் கிடைப்பவை இவருடைய செம்பு, ஈய நாணயங்கள் மட்டுமே. அவை ஆயிரக்கணக்கில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கிழக்குத் தக்காணத்தில் கண்டெடுக்கப்பட்ட இந்நாணயங்களின் மீது குதிரை, யானை, புத்த ஆலயங்கள் ஆகியவற்றின் வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சில நாணயங்களின் மீது இரண்டு பாய்மரங்களோடு கூடிய கப்பல்களின் உருவங்களும் காணப்படுகின்றன. இவர் கப்பற்படையொன்றையும் வைத்திருந்தார் என்பது இதன் மூலம் ஊகிக்கமுடிகிறது. ‘திரிசமுத்திராதிபதி’ (முக்கடலை ஆண்டவர்) என்று சாதவாஹன மன்னர்களைப் பாணபட்டர் வருணிப்பதுங் கவனிக்கத்தக்கது.

இவருடைய கல்வெட்டுகள் மேற்கில் கான்ஹேரி (Kanhari) நாசிக் ஆகிய இடங்களிலும், கிழக்கில் சின்ன கஞ்சத்திலும் காணப்படுகின்றன. மேற்குக் கடற்கரையையும் கிழக்குக் கடற்கரையையும் சேர்த்துக் கடைசியாக ஆண்ட சாதவாஹன மன்னர் இவர்தான் என்பது தெரிகிறது. இவருக்குப் பின் சாதவாஹன அரசு நிலை தளர்ந்து வீழ்ச்சியுறலாயிற்று.

9. சாதவாஹன அரசின் வீழ்ச்சி:

ஸ்ரீ யக்ஞ சாதகர்னிக்குப் பின் விஜயன், ஸ்ரீசந்திரன், கர்ணன், கும்பன், உருத்திர சாதகர்னி போன்ற பல அரசர்கள் ஆண்டனர். இவர்களின் நாணயங்களும், கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. இவர்களுள் கடைசி மூன்று அரசர்களும் மத்தியப் பிரதேசம், கிழக்குத் தக்காணம் ஆகிய பகுதிகளில் ஆட்சி புரிந்தார்கள் என்பது தெரிகிறது. ஆயினும், புராணங்களில் தரப்பட்டுள்ள பட்டியலில் இவர்களின் பெயர்கள் காணப்படவில்லை. அப்பட்டியல்கள் தாயரிக்கப்பட்ட பின்னரே இவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள் என்று எண்ணவும்

இடமேற்படுகிறது. தக்காணத்தின் மற்றப் பகுதிகளில் சாதவாஹன வம்சத்தைச் சேர்ந்த பலர் குறுநில மன்னர்களாக ஆண்டு வந்தார்கள். இந்த முறையில் சாதவாஹன அரசின் வீழ்ச்சி ஏன், எவ்வாறு ஏற்பட்டது என்பதை அறிந்து கொள்ள இயலவில்லை.

10. புதிய அரசுகளின் தோற்றம்:

ஸ்ரீயக்ஞ சாதகர்னியின் மரணத்துக்குப் (கி.பி.199) பின் சாதவாஹன அரசு சிதைவுறலாயிற்று. சாகர்களின் இடையறாத தாக்குதல்களினால் மெலிந்து போயிருந்த சாதவாஹன அரசு, பல்வேறு மாநில ஆளுநர்களின் தலைமையில் பல சிற்றரசுகளாகப் பிளவுண்டு போயிற்று. சாதவாஹன அரசின் வடமேற்குப் பகுதியை ஆபீரர்களும் *(Abhiras)*, தெற்கில் சூட்டுகளும் *(Chutus)*, ஆந்திரப் பிரதேசத்தில் இஷ்வாகுகளும் *(Ikshuvakus)*, தென்கிழக்கில் பல்லவர்களும் *(Pallavas)* குறுநில மன்னர்களாய், சுதந்திரமாகத் தத்தமது அரசுகளை நிறுவலாயினர். மத்தியப் பிரதேசத்தில் மட்டுமே பழைய சாதவாஹன வம்சத்தினர் ஆண்டனர். ஆனால், ஒரு சில ஆண்டுகளிலேயே அதாவது கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் முன்பாதியிலேயே வாகாடகர்கள் இப்பகுதியையும் கைப்பற்றிக் கொண்டார்கள். கி.பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளில் தக்காணத்தில் வலிமை மிக்க அரசாக விளங்கியது வாகாடகர்களின் அரசுதான்.

மேற்கூறியவற்றிலிருந்து வைதீக ஆதரவாளர்களான சாதவாஹனப் பேரரசின் ஆதிக்கத்தில் சாதவாஹனர் யார் என்பது பற்றியும், அவர்களுக்கு இப்பெயர் வந்த காரணம் பற்றியும், அப்பேரரசு அமைக்கப்பட்ட இடம் குறித்தும், அவர்களின் காலவரையறை பற்றியும், சாதவாஹனப் பேரரசர்களின் நிலை குறித்தும், அவர்களின் அரசியல், சமூக வரலாறு பற்றியும், அவர்கள் மேற்கொண்ட படையெடுப்புகள் குறித்தும், அதில் பெற்ற வெற்றிகள் பற்றியும், இறுதியாக அப்பேரரசு வீழ்ச்சியுற்ற நிலை குறித்தும், அவர்களுக்குப் பின் தோன்றிய அரசுகள் பற்றியும் சான்றுகளுடன் விரிவாக அறியமுடிகின்றது.

அடிக்குறிப்புக்கள்:

1. கி.ர.அனுமந்தன், இந்திய வரலாறு, முதல் தொகுதி, ப.264.
2. மேலது., ப. 264.
3. இர.ஆலாலசுந்தரம், இந்திய வரலாறு, முதல் தொகுதி, ப.312.
4. கே.ஏ.நீ லகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு, முதல் தொகுதி, ப.150.

5. மேலது., ப.152.

6. ஆர்.எஸ்.சர்மா, பழங்கால இந்தியாவில் அரசியல் கொள்கைகள் நிலையங்கள் சில தோற்றங்கள், ப.231.

முடிவுரை

இதுவரை இந்நூலில் வைதீகம்/சங்ககாலம்: ஒரு வரலாற்றுப் பார்வை என்னும் தலைப்பில் வைதீகத் தாக்கத்தின் பரவலுக்கான அரசியல் - பொருளாதார - வரலாற்றுக் காரணங்கள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் கண்ட முடிவுகளின் தொகுப்பு பின்வருமாறு:

1.'சங்ககால அரசுருவாக்கச் சூழல்' என்ற முதல் அலகில் 'அரசியல்-பொருளாதாரம்' என்னும் தலைப்பில் இனக்குழுச் சமுதாய வாழ்வு முறையில் தொடங்கிப் பொருளாதார அடித்தளத்திற்கேற்ற போர் முறைகள் நிலவிய நிலை, உடைமைப் பண்பும் நிலவுடைமையும் நில எல்லைப் பெருக்கமும் வளர்ந்து வர்க்க வேறுபாடுகளும், வருணப் பாகுபாடுகளும், வேலைப் பிரிவினைகளும் தோன்றிய சூழல், அரசருள் படித்தர நிலைகள் ஏற்பட்டு வேந்தர் மேலோங்கிய நிலை, வேளாண் பொருளாதாரம் வளர்ந்த சூழலில் வணிகப் பொருளாதாரம் அதைவிட மேலோங்கிய நிலை ஆகியவற்றை விளக்கி, வைதீகத் தாக்கத்தின் செல்வாக்கை எடுத்துக்காட்டி, அரசு உருவான சங்க காலச் சமுதாய சூழல் என்பன தரவுகளோடு நிறுவப்பட்டுள்ளன.

2.'தமிழகத்தின் சங்க கால வட அரசியல் எல்லை' என்ற இரண்டாவது அலகில் சங்க இலக்கியத்திலிருந்து அறியக்கூடிய விளக்கமான அரசியல் செய்திகளுக்கு முற்பட்ட தமிழகத்தில் நிகழ்ந்தவற்றைப் பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளன. கி.மு. நான்காம் நூற்றாண்டில் மெகஸ்தனிஸும், கௌடில்யரும் பாண்டியர் அரசைப் பற்றி அறிந்திருந்தனர் என்பதும், கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் பிந்துசாரர் தென்னகத்தைப் படையெடுத்துத் தாக்கிய காலத்தில் தமிழ் வேந்தர்கள் ஒரு தற்காப்பு ஒப்பந்தம் செய்து கொண்டு இராணுவ ஒற்றுமையால் மௌரியர் படையெடுப்பை முறியடித்தனர் என்பதும் சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளன. மேலும், கி.மு.மூன்று அல்லது இரண்டாம் நூற்றாண்டில் சாதவாஹனர் தமிழ் நாட்டின் மீது தாக்குதல் நடத்தியபோது சேரமன்னர் தலைமையில் ஐம்பெரும் வேளிரும் சேர்ந்து அத்தாக்குதலை முறியடித்ததோடு சாதவாஹனரையும் தோற்கடித்தனர் என்பதும், கி.மு.இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காரவேலர் தமிழக வேந்தரது தற்காப்புக் கூட்டணியைத் தகர்த்துவிட்டார் என்பதும் தரவுகளோடு விளக்கப்பட்டுள்ளன.

3. 'மூவேந்தர் அரசு ஒற்றைப் பேரரசாக மாறாமை' என்ற மூன்றாவது அலகில் மூவேந்தர்களின் அரசியல் வரலாறு வரலாற்று

ஆதாரங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. சேர வேந்தரது அரசியல் வரலாறு பற்றியும், பதிற்றுப்பத்துப் பதிகங்களால் தெரியவரும் சேரமன்னர்களின் குல முறை வரலாறுகளும், சேர வேந்தர்களது வெற்றி, கொடைகள் குறித்தும், அவ்வேந்தர்களிடையே நிலவிய உறவு முறைகள் குறித்தும், அவர்கள் காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர்கள் பற்றியும் விளக்கமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. தமிழகத்துச் சோழர்களைப் பற்றி முதன் முதலில் கேள்வியுறுவது அசோகர் கல்வெட்டுகளில்தான். அவர்கள் தோற்றம் சேர, பாண்டியர்கள் தொடக்க வரலாற்றினைப் போலவே வரலாற்றின் முன்பகுதி இருளில் மறைந்துள்ளது என்பதும், சங்க காலச் சோழர் வரலாறு சங்க இலக்கியத்திலும், பிற்காலச் சோழர் வரலாறு கலிங்கத்துப் பரணி, மூவருலா முதலிய நூல்களாலும் எண்ணிறந்த கல்வெட்டுகளாலும் புலனாகின்றது. சிங்களத்து மகாவம்சமும் இடைக் காலப் பேரரசுச் சோழர் வரலாற்றை அறிய உதவுகின்றது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. முடியுடை மூவேந்தருள் பாண்டியரே மிகவும் தொன்மையானவர் என்பதும், மெகஸ்தனிஸ் கௌடில்யர் என்போர் பாண்டியரைப் பற்றித் தமது குறிப்புகளில் கூறியுள்ளதும், அவர்களது குலமுறை குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

4.'பாரதப் போரும் உணவு வழங்குதலும்' என்ற நான்காவது அலகில், சங்ககால அரசு உருவாக்கச் சூழலையும், தமிழக ஆட்சியின் நில எல்லையையும், வேந்தர் தம் ஆற்றலையும், பாரதப் போர் நடந்த காலம், உதியஞ்சேரலின் காலம், குருஷேத்திரத்திற்கும் தமிழகத்திற்கும் இடைப்பட்ட தொலைவு, வடநாட்டில் அன்று நிலவிய பேரரசுகள் என்னும் இவற்றுடன் இணைத்துப் பார்ப்பதும், பாரதப்போரில் உதியஞ்சேரல் பெருஞ்சோறு கொடுத்தான் என்னும் கதைச் செய்தி வெளிப்படுத்தும் பழமை போற்றும் மரபு உத்தியை மட்டுமல்லாது மூவேந்தர் அரசு தனித்தப் பெரும் ஒற்றைப் பேரரசாக மாறா நிலையையுமே காட்டுகிறது என்பதும் இந்நூல் வழி விளக்கப் பட்டுள்ளது.

5.'மூவேந்தரும் இமயமும் இலச்சினைப் பொறிப்பும்' என்ற ஐந்தாவது அலகில், சங்க காலம் போர்கள் மலிந்த காலம். தலைமைகள் ஒவ்வொன்றும் தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டு வளரத் தலைப்பட்ட நிலையில் குறுநில மன்னர் மூவேந்தர்க்குள்ளும், மூவேந்தர்கள் இடையேயும், குறுநில மன்னரிடையேயும் போர்கள் பல நிகழ்ந்துள்ளமை இயல்பே. இத்தகைய பல்வகைப்பட்ட போர்களும் அன்றைய தமிழக எல்லைக்குள் நடந்தவை. தமிழக எல்லைக்குள்ளேயே இத்தகு பல்வகைப் போர்களும், தமிழகத்தில் ஒரு

நிலையான தனித்த ஒற்றைப் பேரரசு நிலவவில்லை என்பதை மூவேந்தரும் இமயமும் இலச்சினைப் பொறிப்பும் என்ற பழமரபு கதையோடு பொருத்தி விளக்கப்பட்டுள்ளன.

6. 'வட இந்திய அரசியல் வரலாறு (கி.மு.6-4 ஆம் நூற்றாண்டு)' என்னும் ஆறாவது அலகில் 'மௌரியருக்கு முற்பட்ட வட இந்தியா' என்னும் தலைப்பில் கி.மு.ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கங்கைச் சமவெளியில் பல சிறு முடி அரசுகளும் சில குடியரசுகளும் ஆண்டு வந்தன. கோசலமும், மகதமும், அவந்தியும் ஒன்றன் பின் ஒன்றாகப் பேரரசு நிலையில் இருந்து வந்தன. இறுதியில் அந்நூற்றாண்டில் மகதம் ஏனைய எல்லாவற்றையும் விட அதிக வலுவெய்தி வடஇந்தியாவிலேயே முக்கிய அரசாகிப் பல நூற்றாண்டுகள் தொடர்ந்து அந்நிலையில் இருந்தது என்பதையும், புராணங்களும், பௌத்த வரலாறுகளும் முதல் மகத அரசியல் வம்சத்தைப் பற்றிக் கூறும் வெவ்வேறு வகையான கருத்துக்களையும், முதல் மகதப் பேரரசின் குலமுறைப் பட்டியல் பற்றியும் நந்தர்களைப் பற்றியும் விரிவாகச் சான்றுகளுடன் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

7.'மௌரியருக்கு முற்பட்ட வட இந்திய சமூக வரலாறு' என்னும் ஏழாவது அலகில் இவ்விரு நூற்றாண்டு காலத்தில், நாட்டில் பொதுவான முன்னேற்றம் எல்லாத் துறைகளிலும் காணப்பட்டது. கிராமப்புறங்களில் விவசாயமே முக்கியத் தொழிலாக விளங்கியது. வணிகர் குலம் 'சிரேஷ்டி' (செட்டி) குலம் எனப்பட்டது. சாதிப் பிரிவினைகள் சமூகத்தில் இறுகத் தொடங்கிவிட்டமையால், ஒவ்வொருவரும் குலத்தொழிலையே பின்பற்றினர். நெடுநாளாக நடைபெற்று வந்த பண்டமாற்று முறை மாறி நாணய முறை நடைமுறைக்கு வந்தது. ராஜக்ருகம், பாடலிபுத்ரம், காசி, கௌசாம்பி, சாகேதா முதலிய நகரங்கள் புகழ் பெற்று விளங்கின என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

வேத பிற்காலத்தில் பல எதிர்ப்புச் சமயங்களின் தாக்குதல்களால், வைதீக சமயமே உருமாறத் தொடங்கிவிட்டது. சமஸ்கிருத மொழி சமயத் தலவைர்களது தனிமொழியாக விளங்கிற்று. வேதங்கள் மாற்ற முடியாத புனிதத் தன்மை எய்தின. வேதங்களை உருவேற்றுதலே சிறந்த புண்ணியச் செயலாகக் கருதப்பட்டது, ஆரியர் சமய ஏற்பாட்டில் பழைய இயற்கைக் கடவுளரின் பெருமை மறைந்து, பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலிய புதுப் பெருங்கடவுளர் தோன்றலாயினர். சடங்குகள் அளவிறந்து பல்கின. உண்மைத் தத்துவத்தை வெற்றுச் சடங்குகள் மூடி மறைக்க முற்பட்டன என்ற தகவலும் இதில் நிறுவப்பட்டுள்ளன.

பௌத்த சமயத்தினை முன் மாதிரியாகக் கொண்டு வைதீக சமயத்திலும் பக்திநெறி கடைப்பிடிக்கப்பட்டது என்பதும், வேதங்களையும் மற்ற நூல்களையும் நன்கு கற்றவர்கள் ஒரு பக்கமும், அவற்றைப் படித்துத் தத்துவ நுணுக்கங்களையெல்லாம் படித்தறிய முடியாத பாமர மக்கள் மறுபக்கமுமாக இந்தப் பக்திநெறி தோன்றியது. இக்காலத்தில் தோன்றிய புராண நூல்கள் அனைத்தும் பக்தி மார்க்கத்தை வளர்க்கப் பெரிதும் பயன்பட்டன என்பதும், விஷ்ணுவை வணங்கியவர்கள் வைணவர்கள் என்றும், பாகவதர்கள் என்றும் அழைக்கப்பட்டு ஒரு பிரிவைத் தோற்றுவித்தனர். விரைவிலேயே சிவனை வழிபட்டவர்கள் சைவர்கள் என்று மற்றொரு பிரிவாக அமைந்தனர். சுங்கர்களுக்கும் குப்தர்களுக்கும் இடையில் ஆட்சி புரிந்த பல அந்நிய குலத்தினருள் பலர் வைணவப் பிரிவையோ, சைவப் பிரிவையோ பின்பற்றினார்கள் என்பதும் இப்பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே இராஜஸ்தானத்தில் உதயப்பூருக்கு அருகில் வாசுதேவனுக்குக் கோயில் ஒன்றிருந்தது என்பதைக் கல்வெட்டொன்று காட்டுகிறது. இரண்டாம் கத்பீசஸ், வாசுதேவர் ஆகிய குஷாண அரசர்கள் சிவனை வழிபட்டார்கள் என்ற தகவலும் நிறுவப்பட்டுள்ளன.

வேறு பற்பல தெய்வங்களையும் மக்கள் வணங்கினர். பிரம்மன், கார்த்திகேயன், தேவி போன்றவற்றையும் யஷர்கள், நாகம், நதிகள், சூரியன், வருணன் போன்றவற்றையும் மக்கள் வழிபட்டனர். இந்தியா முழுவதிலும் இருந்த பல்வேறு இடங்கள் புனிதமானவை என்று கருதப்பட்டன. அப்புண்ணிய இடங்களுக்கு யாத்திரை செல்லும் வழக்கம் வளர்ந்து வந்தது. பலவிதமான நோன்புகளையும் கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டது. திருவிழாக்கள், சடங்குகள் கொண்டாடப்பட்டன என்ற கூடுதல் தகவல்களும் சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளன.

இச்சமயச்சடங்குகள் பிறப்பிலிருந்து இறப்பு வரை மனிதனது வாழ்வைத் தங்கள் பிடியில் இறுக்கிக் கொண்டன. சிராத்தம் முதலிய முன்னோர் வழிபாட்டு நெறிகள் வகுக்கப்பட்டன. கிருஹ்ய சூத்திரங்களில் இச்சடங்குகளின் விரிவு கூறப்படுகிறது. பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நான்கு ஆசிரம நிலைகள் ஒவ்வொரு ஆரியனுக்கும் விதிக்கப்பெற்றன. ஆயினும் இவ்வழியைப் பின்பற்றினோர் சிலரேயாவர் என்பதும் விளக்கப்பட்டுள்ளன.

மேலும், வைசிய, சூத்திரர்களைவிட பிரம்ம, ஷத்திரியர்கள் சாதியில் உயர்ந்தவர்கள் என்னும் கருத்து உருவாயிற்று. சூத்திரர்களையும், மகளிரையும் வைதீக சடங்காசாரங்களிலிருந்து விலக்கிவிடும் மரபு சிறிது சிறிதாக உறுதிப்படலாயிற்று. சமூகத்தில் மகளிர் நிலைமை மேலும் மேலும் சீர்கெடலாயிற்று. அவர்கள் வேதங்களை ஓதுதலினின்றும், பூணூல் அணிந்து கொள்வதிலிருந்தும் விலக்கப்பட்டார்கள். அக்காலத்தில் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய சில மகளிர் பொது விதிக்கு விலக்கு எனக் கொள்ள வேண்டும். இந்நிலையிலிருந்து மநுஸ்மிருதி காலத்தில் மகளிர் வேதங்களைக் கற்றல் கூடாது என்னும் நிலைமை வந்தெய்தியது. இக்காலத்திலேயே கிருஹ்ய, சிரௌத சூத்திரங்களையும் தர்ம சாத்திரங்களையும் இயற்றினார்கள். அவர்கள் இயற்றிய கிருஹ்ய சூத்திரங்களே வைதீக சமயம் நாளடைவில் மிகவும் இறுகித் தனித்து விட்டமைக்குக் காரணம் என்பதும் சான்றுகளுடன் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன.

8.‘மௌரியர் ஆட்சி காலச் சமூக வரலாறு (கி.மு. 4 முதல் 1-ஆம் நூற்றாண்டு வரை)’ என்னும் எட்டாவது அலகில் ஏற்கனவே சமூகத்தில் இறுகிவிட்ட சாதிக் கட்டுப்பாடு இக்காலத்தில் பல படியாக வளர்ந்து விட்டது. சாதி உட்பிரிவுகள் தோன்றலாயின. பிராமணர்கள் அரசாங்க வரி தருவதில்லை. அவர்கள் எக்குற்றத்தைச் செய்தாலும் அவர்களுக்குக் கொலைத் தண்டனையோ உடலை ஒறுக்கும் தண்டனையோ இடப்படுவதில்லை. பிராமணர்களுடைய சமுதாய உயர்நிலை மநுதர்ம சாத்திரத்தால் நிலை நிறுத்தப்பட்டது. அதே தர்ம சாத்திரத்தால் சமூகத்தில் மகளிருடைய நிலைமை இழிந்தது. பலதாரமணமும், சதி அல்லது இறந்த கணவனைப் பிரிந்து வாழ விரும்பாத மனைவி தற்கொலை புரிந்து கொள்ளும் மரபும் நடைமுறையில் இருந்தன என்பதும் இப்பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

மேலும், மௌரியர் ஆட்சியின் முற்பகுதியில் சமணத்தின் வளர்ச்சியும், பிற்பகுதியில் பௌத்தத்தின் பரவுகையும் நிகழ்ந்தன. வைதீக சமயம் சமயச் சீர்த்திருத்த மாற்று இயக்கத்தில் இறங்கிப் பழைய வைதீக சமயத்தைப் புதுக்கடவுள் மூலம் வலுவாக்கிற்று. சிவன், விஷ்ணு, பிரம்மா முதலியோர் இந்திரன், அக்னி, வருணன் ஆகியோரது உயர்ந்த நிலைகளில் அமரலாயினர். ஸ்கந்தமூர்த்தி தோன்றி முருகனோடு இணையும் நிலையிலிருந்தார். ஆனால், விக்நேசுவரர் அது வரையில் உருவாக்கப்படவில்லை என்பதும் சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளன.

‘மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்’ என்பதில் அசோகர் கடைபிடித்து வந்த கொள்கையின் விளைவாக பிராமணிய எதிர்ப்புத் தலைதூக்கிற்று. விலங்குகளையும், பறவைகளையும் கொல்வதை அவர் தடை செய்தார். பிராமணர்கள் தாங்கள் அனுபவித்து வருகிற சலுகைகளையும் நலன்களையும் பாதுகாக்கக் கூடிய ஒரு கொள்கையையே விரும்பினார்கள் என்பதும், ராணுவத்துக்கு அதிகமாக செலவு செய்ததாலும், அதிகாரவர்க்கத்திற்குப் பெருந்தொகையை ஊதியமாக வாரி வழங்கியதாலும் மௌரியப் பேரரசு பொருளாதார நெருக்கடிக்கு இலக்கானது என்பதும், மாகாணங்களில் நடைபெற்று வந்த அடக்குமுறை, ஒடுக்குமுறை ஆட்சி மௌரியப் பேரரசு உடைந்து நொறுங்குவதற்கு ஒரு முக்கியமான காரணமாக இருந்தது என்பதும் இவ்வலகில் விரிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

9. ‘வடக்கிலிருந்த பேரரசுகள் - வைதீக சக்திகளில் ஆதிக்கம் (மௌரிய அசோக ஆட்சிக்குப்பின் (கி.மு.2-1-ஆம் நூற்றாண்டு) ’ என்ற ஒன்பதாவது அலகில் ‘சுங்க வம்சம்’ என்னும் தலைப்பில் மௌரியர்களுக்குப் பின்னர், சுங்க வம்சத்தினர் ஆட்சிக்கு வந்தனர். சுங்க வம்சத்தினர் 112 ஆண்டுகள், அதாவது கி.மு. 185 முதல் கி.மு.73 வரை ஆட்சி செய்தனர் என்ற தகவல் இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சுங்கர்கள் பிராமணர்கள் என்பதும், புஷ்ய மித்திரர் புரோகிதர் குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதும், பிற்கால மௌரியர்கள் வலிமை யற்றவராக இருந்தமையால் பிருகத்ரதாவிடம் படைத் தளபதியாக இருந்த புஷ்ய மித்திர சுங்கர் படைவீரர்களின் முன்னால், பட்டப் பகலில் பிருகத்ரதாவை கொலை செய்த நிகழ்வும், அதன் பின்னர் ஆட்சித்துறையில் ஏற்பட்ட குழப்பத்தினைப் பயன்படுத்திக் கொண்டு புஷ்யமித்திரர் சுங்க வம்சத்தின் முதல் அரசரான நிகழ்வும் இதில் சான்றுகளோடு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

மேலும், புஷ்ய மித்திர சுங்கர் நிகழ்த்திய இரு யவனப் போர்களும், விதர்ப்ப நாட்டிற்கும் அக்னி மித்திர சுங்கருக்கும் நடைபெற்ற விதர்ப்பப் போரும், புஷ்ய மித்திர சுங்கரால் முடிக்கப்பட்ட இரண்டு அஸ்வமேத யாகங்களும், பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்கள் அரசியல் ரீதியாகச் செயல்பட்டுத் தலையிட்டமையால், அவர்கள் புஷ்யமித்திர சுங்கரால் கொலை செய்யப்பட்டனர் என்ற தகவலும் இதில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

மநு, யாஞ்ஞ வல்கியர் முதலியோரது தர்மசாத்திரங்களைப் போல நாரதர், பிருகஸ்பதி என்பவர்கள் இயற்றிய லௌகிக நூல்கள் பல எழுந்தன. புராணங்கள் என்பவை கடவுளர் முதலியோரது செயல்களை விரித்துக் கூறும் புனை நூல்களாயினும், அவற்றில்

காணப்பெறும் அரசகுல வரலாறுகள் ஓரளவு வரலாற்றுப் பயனுடையவை என்பதும், சுங்கர்களின் வைதீக சமய இலக்கியங்கள் வளம்பெற்றதும், 18 வகை புராணங்கள் இவர்கள் காலத்தில் வகுக்கப்பெற்றதும், மகாபாரதம், இராமாயணம் முதலிய இதிகாசங்கள் இவர்கள் காலத்தில் நன்கு விரிவாக எழுதப்பட்டு மக்களிடையே பரவிய காலமும் இதுவேயாகும். மேலும், இவர்கள் காலத்தில்தான் 18 வகைப் புராணங்களும் இறுதியாக இயற்றி முடிக்கப்பட்டன. வைதீக சமய புராணங்களில் முக்கியமானவை பதினெட்டாகும். அவற்றில் வாயு, மத்ஸ்ய, விஷ்ணு, பாகவத புராணங்கள் முக்கியமானவையாகும். குப்தர்களின் காலத்தில்தான் பாகவத தருமத்தின் தோற்றமும் வளர்ச்சியும் நிகழ்ந்தது. மேலும், இந்து சமயப் பிரிவுகளான, சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், சௌரம், காணாபத்யம் போன்ற சமயங்களும் தோற்றம் பெற்றன.

'கன்வ வம்சம்' என்னும் தலைப்பில் சுங்கப் பேரரசைத் தொடர்ந்து, கன்வர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். கடைசி சுங்க வம்ச அரசரான தேவபூபதி, வாசுதேவர் என்னும் அமைச்சரின் தூண்டுதலால் கொல்லப்பட, வாசுதேவர் ஆட்சிக்கு வந்து கி.மு.73-இல் கன்வ வம்சத்தை நிறுவனார் என்பதும், கன்வ வம்சத்து எந்த அரசரைப் பற்றியும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியாத காரணங்களும் இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

10. 'சாதவாஹனர்களின் ஆதிக்கம் (வைதீக ஆதரவாளர்கள்)' என்னும் பத்தாவது அலகில் கன்வர்களுக்குப் பின்னர், இந்திய வரலாற்றில் சிறப்பான ஓர் இடத்தை வகிப்பவர்கள் சாதவாஹனர்களே என்பதும், தக்காணத்தில் எழுச்சியுற்ற சாதவாஹனப் பேரரசு கி.மு. சுமார் 230 முதல் ஏறத்தாழ நான்கு அல்லது நாலரை நூற்றாண்டுகள் நீடித்தது என்பதும் விளக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுகளிலும் நாணயங்களிலும் சாதவாஹனர்கள் என்றும் சாதகர்னிகள் என்றும் அழைக்கப்படுகின்ற இம்மன்னர்களும், புராணங்களில் ஆந்திரர்கள் அல்லது ஆந்திரப் பிரித்தியர்கள் என்று அழைக்கப்படுபவர்களும் ஒருவரே என்று வரலாற்றாசிரியர்கள் அனைவரும் முடிவு செய்கின்றனர் என்பது சான்றுகளுடன் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. சாதவாஹனர் என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது என்பது உறுதியாகத் தெரியவில்லை என்பதும் அதுகுறித்து நிலவும் பல கருத்துக்களும் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன. சாதவாஹனர்கள் பிராமணர்கள் என்றும், நாகர்களுடன் கலப்புற்ற பிராமணர்களின் வழியில் அவர்கள் வந்தவர்கள் என்றும், சாகர்களோடு கலப்புற்றவர்கள் என்றும் பண்டைய நூல்களும், கல்வெட்டுகளும் தெரிவிக்கின்ற செய்தியும் இதில் தரப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் சாதவாஹனர்கள் தமது அரசை மேற்குத் தக்காணத்திலேயே நிறுவினர் என்ற உறுதியான தகவலும் தம்முடைய சமகாலத்தவரான சாதவாஹன மன்னர் சாதகர்னியின் அரசு, தம் அரசுக்கு மேற்குப்புறத்தில் அமைந்திருந்தது என்று கலிங்க மன்னர் காரவேலர் கூறும் தகவலும், இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. புராணங்கள் கூறுகின்ற முரணான பல்வேறு தகவல்களையும் ஆராய்ந்த பின், சாதவாஹன அரசர்கள் மொத்தம் முப்பது பேர்கள் என்றும், அவர்கள் சுமார் 460 ஆண்டுகள் ஆண்டிருக்கக் கூடும் என்றும் வரலாற்றறிஞர்கள் முடிவு செய்கின்றனர். எனவே, சுமார் கி.மு.230-ஆம் ஆண்டிலிருந்து சுமார் கி.பி. 230-ஆம் ஆண்டு வரையில் சாதவாஹனர் ஆண்டனர் என்று தோராயமாக எடுத்துக் கொள்ளலாம் என்பதும் இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

சாதவாஹன மரபினைத் தோற்றுவித்தவர் சிமுகர் என்பவர் ஆவார். கல்வெட்டுகளும், நாணயங்களும் சாதவாஹனர்கள் கி.மு. சுமார் 230 ஆம் ஆண்டில் மௌரியப் பேரரசிலிருந்து பிரிந்து தனியாட்சியைத் துவக்கினர் என்பதை உணர்த்துகின்றன. சிமுகருக்கப் பிறகு இவ்வம்சத்தின் மூன்றாம் அரசரான முதலாம் சாதகர்னி, தம்முடைய வெற்றிகளை கொண்டாடுவதற்காகப் பல அஸ்வமேத யாகங்களையும், இராசசூய யாகங்களையும் செய்தார் என்பதும், இவருக்கப் பின் இவரது பிள்ளைகள் அரசாண்டனர் என்பதும், இரண்டு நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்த சாதவாஹனப் பேரரசு கி.பி. முதலாம் நூற்றாண்டின் பின்பாதியில் சாகர்களின் படையெடுப்பால் பல தோல்விகளைக் கண்டது என்பதும் இதில் நிறுவப்பட்டுள்ளன.

சாதவாஹன அரசர்களுள் 23-ஆம் மன்னரான கௌதமி புத்திர சாதகர்னியின் ஆட்சியில் சாதவாஹனர் மீண்டும் தமது ஆதிக்கத்தை வலுவோடு நிறுவினர் என்பதும், சாதவாஹன வம்சத்திலேயே மிகவும் திறமைமிக்கவராக இவர் காணப்பட்டார் என்பதும், சாகர்கள், பகலவர்கள், யவனர்கள் ஆகியோரை அழித்தவர் என்பதும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

மௌரியர் ஆட்சி மறைந்து சுங்கர், சாதவாஹனர் போன்ற வைதீகப் பேரரசுகள் ஆட்சிக்கு வந்த பிறகு வைதீக வேள்விகளும், சடங்காசாரங்களும் மறுபடியும் நடைமுறைக்கு வந்தன. பிராமணர்களுக்குக் கடவுளுக்கடுத்தத் தலைமையிடம் கொடுக்கப்பட்டது. என்பதும், பிராமணர்களுக்குப் பெருமளவுக்கு நிலங்கள் மானியமாக வழங்கப் பட்டன என்பதும், எண்ணற்ற நிலமானியங்கள் கிடைத்ததன் காரணமாகப் பிராமணர்கள் மேன்மேலும் செல்வந்தர்கள் ஆனார்கள் என்பதும், சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் புலுமாயி இருபத்து நான்கு ஆண்டுகள் ஆண்டவர். இவரே கிழக்கு ஆந்திர நாட்டை வென்றவர் என்பதும், கடைசி முக்கிய சாதவாஹன அரசரும் அந்த வம்சத்து மன்னர்களிலேயே ஏராளமான நாணயங்கள் மூலம் நன்கு அறியப்படுபவரும் ஸ்ரீ யக்ஞ சாதகர்னிதான் என்பதும், தமது வம்சத்துப் பகைவர்களான சாகர்களோடு போரிட்டு மேற்கில் பல பகுதிகளை இவர் வென்றார் என்பதும் வெள்ளி, செம்பு, ஈய நாணயங்களை இவர் வெளியிட்டார் என்பதும், இந்த நாணயங்களில் குதிரை, யானை, புத்த ஆலயங்கள், இரண்டு பாய்மரக் கப்பல்கள் ஆகிய உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன என்பதும், இவருக்குப் பின் சாதவாஹன அரசு நிலை தளர்ந்து வீழ்ச்சியுற்றதால் புதிய பல அரசுகளின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்தது என்பதும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

வைதீகம்/சங்ககாலம்: ஒரு வரலாற்றுப் பார்வையை முன்வைக்கும் ஆய்வு நூலாக அமைந்துள்ளது. இது மேன்மேலும் பரந்துபட்ட விரிவான ஆய்வாகப் பல்துறை நோக்கும் இணைந்த ஆய்வுநூலாய் விரிய வேண்டும் என்பதே இதன் எதிர்கால இலக்கு.

துணைநூற்பட்டியல்

மூலநூல்கள்:

1. அகநானூறு' (களிற்றுயானை நிரை), சோமசுந்தரனார். பொ.வே., (உ. ஆ.), (கழக வெளியீடு, சென்னை:1970).

2. அகநானூறு' (மணிமிடைப் பவளம், நித்திலக் கோவை), சோமசுந்தரனார். பொ.வே., (உ.ஆ.), (கழகவெளியீடு. சென்னை: 1977).

3. ஐங்குறுநூறு, துரைசாமிப்பிள்ளை. ஔவை.சு., (உ.ஆ.), (அபிராமி பதிப்பகம், அண்ணமலை நகர்: 1978).

4. கலித்தொகை, சோமசுந்தரனார். பொ.வே., (உ.ஆ), (1969) (கழக வெளியீடு, சென்னை: இரண்டாம் பதிப்பு 1978).

5. குறுந்தொகை' (முதல்தொகுதி), நாகராசன்.வி., (உ.ஆ.), (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 2004).

6. குறுந்தொகை, (இரண்டாம் தொகுதி), நாகராசன்.வி., (உ.ஆ.), (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 2004).

7. குறிஞ்சிப்பாட்டு, (இரண்டாம் தொகுதி). நாகராசன்.வி., (உ.ஆ.), (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 2004).

8. சிறுபாணாற்றுப்படை, (முதல் தொகுதி). மோகன்.இரா., (உ.ஆ.,). (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 2004).

9. தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியம்' (அகத்திணையியல், புறத்திணையியல்), (கழக வெயீடு, சென்னை: 1947).

10. நற்றிணை, பாலசுப்பிரமணியன்.கு. வெ., (உ.ஆ.), (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 2004).

11. நெடுநல்வாடை,'(இரண்டாம் தொகுதி), நாகராசன். வி,, (உ.ஆ.), (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்., சென்னை: 2004).

12. பட்டினப்பாலை,' (இரண்டாம் தொகுதி), நாகராசன்.வி., (உ.ஆ.), (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 2004).

13. பதிற்றுப்பத்து, ஆலிஸ்.அ., (உ.ஆ.), (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 2004).

14. பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், (1904), சாமிநாதையர். உ.வே., (கு.உ.), (உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை: எட்டாம் பதிப்பு 1994).

15. பரிபாடல் மூலமும் பரிமேலழகருரையும், சாமிநாதையர். உ.வே., (தொ.ஆ.), (உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை: 1995).

16. புறநானூறு,' (முதல் தொகுதி), பாலசுப்பிரமணியன். கு.வெ., (உ.ஆ.), (நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 2004).

17. புறநானூறு,' (இரண்டாம் தொகுதி), பாலசுப்பிரமணியன். கு.வெ., (உ.ஆ.), (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 2004).

17. பெரும்பாணாற்றுப்படை,' (முதல் தொகுதி), மோகன். இரா., (உ.ஆ.), (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 2004).

18. பொருநராற்றுப்படை,' (முதல் தொகுதி), மோகன். இரா., (உ.ஆ.), (நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 2004).

19. மதுரைக்காஞ்சி,' (இரண்டாம் தொகுதி), நாகராசன்.வி., (உ.ஆ.), (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 2004).

20. மலைபடுகடாம்,' (இரண்டாம் தொகுதி). நாகராசன். வி., (உ. ஆ.),(நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 2004).

21. முல்லைப்பாட்டு,' (முதல் தொகுதி), மோகன். இரா., (உ.ஆ.), (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 2004).

ஏனைய நூல்கள்:

1. அநுமந்தன் கி.ர,மங்கள முருகேசன். ந.க.(1973) 'இந்திய வரலாறு-கி.பி.1206 வரை'(தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை: மறுபதிப்பு 1984).

2. அப்பாத்துரை. கா., 'தென்னாட்டுப் போரக்களங்கள், (மணிவாசகர் பதிப்பகம், சென்னை: 2001).

3.. ஆலாலசுந்தரம்.இர., 'இந்திய வரலாறு-கி.பி.6-ம் நூற்றாண்டு வரை, (முதல்பாகம்), (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை: 1977).

4. இராகவையங்கார்.மு., 'சேரவேந்தர் செய்யுட் கோவை, (திருவாங்கூர்ச் சர்வகலா சாலை,திருவனந்தபுரம்: 1947).

5. இராசமாணிக்கனார்.மா., 'கால ஆராய்ச்சி, (அலமு பதிப்பகம், சென்னை: 2003).

6. எங்கெல்ஸ்.பி. குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் (முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ:1978).

7. கிருஷ்ணசாமி ஐயங்கார். எஸ். சேரன் வஞ்சி (எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி சென்னை: 1956).

8. கேசவன்.கோ,, ‘மண்ணும் மனித உறவுகளும், (சென்னை புக் ஹவுஸ், சென்னை: 1979).

9. சர்மா. ஆர்.எஸ்., (2001), ‘பண்டைக்கால இந்தியா, (நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை: 2005).

10. சர்மா. ஆர்.எஸ். (மூ.ஆ.) சோமலெ(மொ.ஆ.) பழங்கால இந்தியாவில் அரசியல் கொள்கைகள் நிலையங்கள் - சில தோற்றங்கள் (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை: 1989).

11. சிவத்தம்பி. கா,, ‘பத்துப்பாட்டின் கவிதையியல் - சங்க இலக்கியம் கவிதையியல் பின்புலம் சிந்தனை மதிப்பீடு, (உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை: 1998).

12. சீனிவாச அய்யங்கார். பி. டி., ‘தமிழர் வரலாறு, (முதல் தொகுதி), (கழக வெளியீடு, சென்னை: 1989).

13. சுப்ரமண்யன். ந., (1964), ‘இந்திய வரலாறு, (நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை: ஐந்தாம் பதிப்பு 2004).

14. சுப்ரமண்யன். ந., (1964), ‘தமிழக வரலாறு(கி.பி.1565 வரை), (என்னெஸ் பப்ளிகேஷன்ஸ் மதுரை: 1979).

15. சுப்ரமண்யன். ந., ‘சங்க கால வாழ்வியல், (நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை: 1986).

16. நாகசாமி. இரா, ‘யாவரும் கேளிர்,, (வாசகர் வட்டம் சென்னை: 1979).

17. நீலகண்ட சாஸ்திரி, ‘தென்னிந்திய வரலாறு, (முதல் பகுதி), (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை: 1979).

18. பாலசுப்பிரமணியன். கு.வெ, (மீரா பதிப்பகம் புதுக்கோட்டை: 1986

19. புருஷோத்தம். V.P., ‘சங்ககால மன்னர் கால நிலை வரலாறு,, (ஐந்திணை பதிப்பகம் சென்னை: 2000

20. வித்தியானந்தன் சு,, தமிழர் சால்பு, (பாரி புத்தகப் பண்ணை சென்னை: 1971).

21. வையாபுரிப்பிள்ளை. எஸ், ‘இலக்கிய சிந்தனைகள் நூற் களஞ்சியம் (தொகுதி ஒன்று), (வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், சென்னை: 1989).

மாநாட்டுக் கட்டுரை:

1. ஐராவதம் மகாதேவன், 'சங்ககாலத் தமிழ் - பிராமியக் கல்வெட்டுக்கள் (தொகுதி ஒன்று), (இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு, சென்னை: 1989).

இதழ்கள்:

1. இராகவையங்கார். மு. (க.ஆ.) இ(தொ.ஆ.), சேரவேந்தர் தாய வழக்கு (க.த.), செந்தமிழ் 27:10, (மதுரைத் தமிழச் சங்க வெளியீடு: 1929).
2. இராமசாமிப் புலவர். சு.அ. (க.ஆ.), உணாக்கொடை வழங்கிய உதியஞ் சேரல் (க.த.), (செந்தமிழ்ச் செல்வி 24:10, (திங்கள் இதழ்: 1950).
3. பத்திராதிபர். (ப.ஆ.), அருச்சுனனும் பாண்டிய மரபும் (க.த.), செந்தமிழ் 8:10, (மதுரைத் தமிழ்ச். சங்க வெளியீடு: 1910).
4. பத்திராதிபர். (ப.ஆ.), பாண்டவர் காலம் (க.த.), செந்தமிழ் 3:10, (மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு: 1905)

ஆய்வேடு:

1. பூங்குன்றன்.ர.(முனைவர்ப் பட்ட ஆய்வேடு, கல்வெட்டியல் துறை.), பண்டைத் தமிழகத்தில் அரசு உருவாக்கம், (தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்காவூர்: 1999).

ஆங்கில நூல்கள்:

1. *Dutt.R.C., Ancient India (2000 BC - 800 AD), E poch of Indian History, (Butala and Co., Delhi;1980).*
2. *Sathiyanathaiyar. S., A Political and Cultural History of india, Aol.I, Anncient India, (S. Viswanathan Printers and Publishers Pvt.Ltd., Aadra: Seprint 1980)*
3. *Sivaraja pillai. K.N., The Chronology of the Early Tamils, (University of Madras, MADRAS:1932).*

முனைவர் வி. தமிழ்மொழி
M.A., M.A., M.Phil., Ph.D.,,

நகரமயமாகிப்போன வாழ்க்கைச் சூழலில் சங்ககாலத் திணைநிலைத் தெய்வங்கள், தம் திணைச் சமூக இயல்பு களுடன், வட ஆரிய - வைதீக - பார்ப்பனப் பண்பாட்டு நெறியின் தாக்கத்தால் உள் நுழைந்த வடபுலப் புராண - இதிகாசங்களுடன் இணைக்கப்பட்டு ஆற்றல் வாய்ந்த தெய்வங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. எதையும் படைக்க வல்ல ஆற்றல் வாய்ந்தனவாகக் காட்டப்பட்ட தெய்வங்களுடன் மன்னர் இணைத்துப் பேசப் பெற்றனர். அதனால்தான் மன்னர் ‘இறைவன்’ என அழைக்கப்பட்டனர்.

பல்வேறுபட்ட அரசர்களும் குறிப்பிட்ட நில எல்லைகளுக்கு உட்பட்டு ஒருகாலத்தில் ஆங்காங்கே ஆண்டிருந்த போதிலும், அரசு தனக்குரிய எல்லா இயல்புகளுடனும் முழுப் பரிமாணத்தோடும் உருவாகி வந்ததைச் சங்கப்பாக்கள் உறுதிசெய்கின்றன. மருத வேளாண் பொருளாதாரமும் நெய்தல்நிலப் பகுதியின் வணிகப் பொருளாதாரமும் வேந்தர்களால் மிகுதியும் கவனத்தில் கொள்ளப்பட்டன. இவ்விருவகைப் பொருளாதாரக் கவனத்துடன் நில எல்லைப் பெருக்கத்திற்கான, மருத நில விளைவயல் பெருக்கத்திற் கான போர்களில் ஈடுபட்டு வைதீக நெறிக்கும் அந்தணர்க்கும் முக்கியத்துவம் அளித்த மூவேந்தர் சமூகங்களில், வைதீகத் தாக்கத்தின் பரவலுக்கான அரசியல் - பொருளாதார காரணங்களுள் ஒன்றான அரசு உருவாக்கச் சூழலை அழுத்தமாகக் காணமுடிகின்றது.